காவ்யா

# விந்தன் இலக்கியத்தடம்



தொகுப்பாசிரியர் : மு. பரமசிவம்

# விந்தன் இலக்கியத் தடம்

தொகுப்பாசிரியர்:

**மு. பரமசிவம்**

காவ்யா

# *விந்தன் இலக்கியத் தடம்*

கட்டுரைகளின் தொகுப்பு

தொகுப்பாசிரியர் **மு. பரமசிவம்**

உரிமை ஆசிரியருக்கு

முதல் பதிப்பு 2003

வெளியீடு - காவ்யா

எண் 14, முதல் குறுக்குதெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம்,

சென்னை - 600 024 ✆ 24801603

ஒளி அச்சு கிறிஸ்ட் கம்ப்யூட்டர்ஸ், சென்னை - 24

அச்சாக்கம் · மணி ஆப்செட், சென்னை - 5

அட்டை முத்து

பக்கங்கள் vi + 186 = 192

விலை ரூ 100 00

# விந்தன்

## *வாழ்க்கைக் குறிப்புகள்*

செங்கற்பட்டு மாவட்டம் நாவலூர் என்னும் சிற்றூரில் 22 09 1916இல் ஜானகியம்மாள் - வேதாசலம் தம்பதிகளின் முதல் மகனாகப் பிறந்தார் (வி கோ)விந்தன் - உடன் பிறப்பு சாமிநாதன் என்கிற இளவல் மட்டுமே

சென்னை சூளை பட்டாளம் பகுதியில் வாழ்ந்து வளர்ந்தவர்

ஆரம்பப் பள்ளியுடன் கல்வியை முடித்துக் கொண்டு, கருமான் பட்டறை வேலை, ஓவியக் கல்லூரியில் ஓவியம் பயிலுதல் ஆகியப் பணிகளில் ஈடுபட்டு தம் இருபதாவது வயதில் 1936இல் டாக்டர் மாசிலாமணி முதலியார் நடத்திய தமிழரசு அச்சகத்தில் அச்சுக் கோர்ப்பவராகச் சேர்ந்தார். தமிழரசு பத்திரிகையில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எழுதிய தமிழுக்கு அமுதென்று பேர் என்ற கவிதையை முதன் முதலில் அச்சுக் கோர்த்தவர் விந்தன் அவர்களே

1942, இல் கல்கி, அச்சகத்தில் அச்சுக் கோர்ப்பவராகப் பணியில் சேர்ந்தவர், அப்பத்திரிகையில் பத்து ஆண்டுகள் துணையாசிரியராக வேலை பார்த்தார் பல புகழ் பெற்ற சிறுகதைகளை எழுதியதோடு ‘பாலும் பாவையும்’ என்ற புகழ் பெற்ற நாவலையும் எழுதினார்

1946,இல் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சிக் கழகம் அளிக்க முன் வந்த பரிசை விந்தனின் சிறுகதை தொகுப்பான முல்லைக் கொடியாள் என்னும் நூலுக்கு முதன் முதலாக அளித்து பாராட்டியது

நாற்பதாண்டு இலக்கிய வாழ்க்கையில் விந்தன் பெற்ற ஒரே பரிசு தமிழ் வளர்ச்சிக் கழகம் அளித்த பரிசு தான் முதலும் கடைசியுமாகும்!

பத்து ஆண்டுகள் சினிமாத் துறையில் இருந்தவர் ஏழு திரைப்படங்களுக்கு வசனம் எழுதியதோடு ஏழு பாடல்களையும் எழுதியுள்ளார். அவற்றில் குறிப்பிடத்தக்கவை வாழப்பிறந்தவள், அன்பு, கூண்டுக்கிளி

1954இல் 'மனிதன்' என்னும் மாத இதழை நடத்தினார் 1958, இல் புத்தகப் பூங்கா என்ற பதிப்பகத்தை தொடங்கினார் அப்பதிப்பகத்தின் வெளியீடான ஜெயகாந்தனின் (ஒரு பிடி சோறு) என்னும் சிறுகதைத் தொகுப்புதான் அவரை ஆனந்த விகடனுக்கு அடையாளம் காட்டியது

பத்தாண்டுகள் தினமணி கதிர் பத்திரிகையில் துணை ஆசிரியராக இருந்தார் மில்டர் விக்கிரமாதித்யன் ஓ மனிதா! பாட்டினில் பாரதம், எம்கே டி பாகவதர் கதை, எம் ஆர். ராதா வாழ்க்கை வரலாறு, ஆகியவற்றை எழுதியுள்ளார். முதன் முதலில் பாகவதர் வரலாற்றை எழுதியவர் விந்தன் அவர்களே!

விந்தன் இருதாரங்களை மணந்தவர். இரு பெண்கள், ஆறு ஆண்கள் ஆக எட்டு குழந்தைகளுக்கு தந்தையாவார்

சிந்தனையாளர் விந்தன் மணிவிழா காண விருந்த காலத்தில் (30 6.1975) அன்று இயற்கை எய்தினார்.

# பொருளடக்கம்


1. பேராசிரியர் கல்கி - விந்தனின் 'முல்லைக் கொடியாள்'

2. மு. வரதராசனார் - விந்தனின் 'ஒரே உரிமை'

3. கி. சந்திரசேகரன் - விந்தனின் 'சமுதாய விரோதி'

4. கா. அப்பாத் துரையார் - விந்தன் ஒரு புதிர்

5. க. கைலாசபதி - விந்தன் 'அகலிகை'

6. கார்த்திகேசு சிவத்தம்பி - தற்கால தமிழ் இலக்கியத்தில் விந்தன்.

7. சாலை இளந்திரையன் - ஆபிசாப்பியாசம்-ஓர் ஆய்வு

8. அகிலன் - புகழுரை

9. எஸ். தோத்தாத்ரி - ஒரு மதிப்பீடு

10. வல்லிக் கண்ணன் - கட்டுரையாளர் விந்தன்

11. சிட்டி & சிவபாத சுந்தரம் - விந்தனின் சிறுகதைகள்

12. சு. சமுத்திரம் - விந்தன்

13. தி.க. சி. - பாரதி பாதையில் விந்தன்

| | | |
|---|---|---|
| 14. தி. தயானந்தன் பிரான்சிஸ் | - | விந்தன் |
| 15. ஸவீட்லின் பிரபாகரன் | - | மாட்டுத் தொழுவம் |
| 16. மங்கையர்க்கரசி மயில்வாகனன் | | விந்தன் சிறுகதைகளில் பெண்கள் |
| 17. திருமதி, கஸ்தூரி ராஜா | - | செந்தமிழ் நாட்டிலே விந்தன் |
| 18. நீல. பத்மநாபன் | - | கண் திறக்குமா? |
| 19. பூவை எஸ். ஆறுமுகம் | - | விந்தனின் ‘பாலும் பாவையும்’ |
| 20. கலைப் பித்தன் | - | எனக்குப் பிடித்த புத்தகம்- ‘பாலும் பாவையும்’ |
| 21. விடுதலை கி. வீரமணி | - | விந்தனின் ‘பசி கோவிந்தம்’ |
| 22. சா. சந்தசாமி | - | விந்தன் சிறுகதைகள் |
| 23. தமிழ்வயான் | - | எனக்குப் பிடித்த கதை |
| 24. சாவி | - | முல்லைக் கொடியாள். |
| 25. கவி. கா. மு.ஷெரீப் | - | விந்தன் ஓர் பேனா ஆயுதம் |
| 26. டி. கே. சீனிவாசன் | - | விந்தனை வணங்குகிறேன். |
| 27. ஆர்.வி. | - | விந்தன் கோபக்காரக் கலைஞன் |

1

# விந்தனின் முல்லைக் கொடியாள்

**- பேராசிரியர் கல்கி**

*இந்தப் புத்தகத்திலடங்கிய சிறுகதைகளை ஏற்கெனவே அவைகள் பத்திரிகையில் வெளியான காலத்தில் அவ்வப்போது நான் படித்திருக்கிறேன்.*

*முன்னுரை எழுதும் அவசியத்தை முன்னிட்டு இப்போது இன்னும் ஒரு தடவை படிக்கலாமென்று எண்ணினேன். ஆனால் அதற்கு யோசனைகளும் புனராலோசனைகளும் செய்து பெரிதும் தயங்கினேன்.*

*விந்தன் கதைகளைப் படிப்பதென்றாலே எனக்கு எப்போதும் மனதிலே பயம் உண்டாகும்; படித்தால் மனதிலே என்னென்ன விதமான சங்கடங்கள் உண்டாகுமோ, எப்படிப்பட்ட வேதனைகளுக்கு ஆளாக நேருமோ என்றுதான் பயம்!*

*ஒரு காலத்தில் தமிழ்நாட்டில் சிறிய கதைகளும் பெரிய கதைகளும் பெரும்பாலும் ஒரு சாதியாரைப் பற்றியே வந்து கொண்டிருந்தன. எழுதுகிறவர்களும் படிக்கிறவர்களும் பெரும்பாலும் பிராமணர்களாயிருந்தபடியால் அந்தச் சாதியாரைப் பற்றியே கதைகள் எழுதப்பட்டன. அந்தக் கதைகளில் கையாளப்பட்ட தமிழ் நடை பிராமணக் குடும்பங்களில் வழங்கும் தமிழாகவே இருந்தது.*

*மற்ற சாதிக்காரர்கள் அதிகமானபோது பிராமணக்கதை, பிராமணத் தமிழ் ஆகியவற்றைக் குறித்து வாசகர்களிடையே புகார்கள் எழுந்தன.*

*இதன் பேரில், மற்ற சாதியாரைப் பற்றிய கதைகள் பல வரத் தொடங்கின. பிராமண எழுத்தாளர் கஷ்டப்பட்டு வேறு சாதியாரைப்*

பற்றிக் கதைகள் எழுதும்போது அவர்கள் வர்ணிக்கும் நடை, உடை பாவனைகள் அவ்வளவு சரியாயிருப்பதில்லை. மிக்க சிரமம் எடுத்துக் கவனித்து எழுதினாலும் சில சமயம் 'ராபனா' என்று குட்டை உடைக்கும்படியாகத் தவறுகள் நேர்ந்துவிடும்.

இன்னொரு அபாயமும் அதில் ஏற்படுவதாயிற்று. கதை என்றால், அதில் நல்ல பாத்திரங்களும் வருவார்கள், துஷ்ட பாத்திரங்களும் வருவார்கள்.

பிராமணர்களைப் பற்றி யார் என்ன எழுதினாலும் அதைப்பற்றிச் சாதாரணமாக ஆட்சேபம் ஏற்படுவதில்லை. அவர்களை என்ன பாடுபடுத்தி எப்படி வதைத்து எழுதினாலும் கேள்வி முறையிராது. ஒரு பிராமண கதாபாத்திரத்தைத் தலை மொட்டையடித்துக் கழுதைமேலேற்றி வைத்து ஊர்வலம் விட்டால், கதை படிப்பவர்களில் சிலர் அருவருப்படைவார்கள்; சிலர் சிரிப்பார்கள். ஆனால் யாரும் சண்டைக்கு வரமாட்டார்கள்.

ஆனால் ஒரு செங்குந்தரையோ, ஒரு வன்னிய குலத்தாரையோ, ஒரு கவுண்டரையோ, ஒரு விசுவ குலத்தாரையோ, ஒரு அரிஜன சகோதரரையோ கதையில் பொல்லாதவனாகச் செய்திருந்தாலும் பரிகாசம் செய்திருந்தாலும் வந்தது மோசம்; அந்தக் குலத்தைச் சேர்ந்தவர்கள் கதையைப் படிக்க நேர்ந்துவிட்டால் ஆசிரியரோடு துவந்த யுத்தம் செய்ய வந்துவிடுவார்கள்.

இதன் காரணமாக மற்ற சாதிகளைச் சேர்ந்த எழுத்தாளர்கள்கூடத் தத்தம் சமூகக் குடும்ப வாழ்க்கைகளைப் பற்றிக் கதை எழுதத் தயங்கிப் பிராமணத் தமிழில் பிராமணக் குடும்பங்களைப்பற்றிக் கதைகள் எழுதினார்கள்!

அதெல்லாம் ஒரு காலம். அந்தக் காலம் போய், தமிழ்நாட்டு இலக்கிய உலகத்தில் சாதிப் பிரச்னை ஒருவாறு தொலைந்தது. எந்தச் சாதியைப் பற்றியும் பயமில்லாமல் கதை எழுதலாம் என்ற நிலைமை ஏற்பட்டது. அந்தச் சமயத்தில் நவயுக மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் தோன்றினார்கள். ருஷியக் கதைகளையும் மற்ற மேனாட்டுக் கதைகளையும் படித்தார்கள். அந்தக் கதைகளைப் போல் இந்த நாட்டு ஏழை எளியவர்களையும் உழைப்பாளி மக்களையும் பற்றிக் கதை எழுதத் தொடங்கினார்கள்.

மிராசுதார்களையும், தாசில்தார்களையும், ஐ.ஏ.எஸ். காரர்களையும், வக்கீல்மார்களையும் கைவிட்டு விட்டு, ஏழைக் குடியானவனையும் ஆலைத் தொழிலாளியையும் ரிக்ஷா வண்டிக்காரனையும் சுமை கூலிக்காரனையும் பற்றிக் கதை எழுதத் தொடங்கினார்கள். ஆனால் எவ்வளவுதான் அனுதாபத்துடனும் இலக்கியப் பண்புடனும் எழுதினாலும் அந்தக் கதைகள் கதை என்ற முறையில் நன்றாயிருக்குமே தவிர, அவற்றில் உண்மை ஒளி தோன்றுவதில்லை.

பாடுபட்டு அறியாதவன் பாட்டாளி துயரத்தைப் பற்றியும், சேற்றில் இறங்கி அறியாதவன் குடியானவனுடைய கஷ்டத்தைப் பற்றியும் என்னதான் கண்ணீரில் பேனாவைத் தோய்த்துக்கொண்டு எழுதினாலும் அந்தக் கதைகளில் மற்ற எல்லாச் சிறு கதை இலட்சணங்களும் இருக்கலாம்; உள்ளத்தை ஊடுருவித் தைக்கும்படியான இதயம் ஒன்றிய ஈடுபாடு இருப்பதில்லை.

அப்படிப்பட்ட உண்மை ஒளி வீசும் சிறு கதைகளை எழுதுவதற்கு ஏழை எளியவர்களிடையே யிருந்தும் உழைப்பாளி மக்களிடையேயிருந்தும் ஆசிரியர்கள் தோன்ற வேண்டும்; அவர்களுடைய எழுத்தில் இலக்கியப் பண்பும் பொருந்தியிருக்க வேண்டும்.

மேற்கூறிய இலட்சணங்கள் பொருந்திய கதை ஆசிரியர்களில் ஒருவர் ஸ்ரீ.வி. கோவிந்தன். உழைப்பாளி மக்களிடையே பிறந்து வளர்ந்து உழைத்துப் பண்பட்டவர். ஏழை எளியவர்கள், தொழிலாளிகள், பாட்டாளிகளின் சுக துக்கங்களை இதயம் ஒன்றி அனுபவித்து உணரும் ஆற்றல் பெற்றவர்.

அந்த உணர்ச்சிகளை உயிருள்ள தமிழ் நடையில் சித்திரித்து இலக்கியப் பண்பு வாய்ந்த சிறு கதைகள் பலவற்றை அவர் திறம்பட எழுதியிருக்கிறார்.

ஏழை எளியவர்களின் வாழ்க்கையில் உள்ள சுக சந்தோஷங்களைப் பற்றியும் அவர் எழுதுகிறார். அவர்களுடைய துன்ப துயரங்களைப் பற்றியும் எழுதுகிறார்.

ஆனால் படிப்பவர்களின் உள்ளத்தில் துன்பமும் வேதனையும்தான் அதிகமாக நிலை பெற்று உறுத்திக் கொண்டிருக்கும்.

அவருடைய கதா பாத்திரங்கள் அனுபவிக்கும் கஷ்டங்களுக்கெல்லாம் நாம்தான் காரணமோ என்று எண்ணி எண்ணித் தூக்கமில்லாமல் தவிக்க நேரும்.

அவ்விதம் வாசகர்களின் மன அமைதியைக் குலைக்கக்கூடிய இயல்பு வாய்ந்த கதைகள்தான் உண்மையான இலக்கியம் என்று தற்காலத்து இலட்சிய புருஷர்களும் இலக்கிய மேதாவிகளும் சொல்கிறார்கள்.

இது உண்மையானால் 'விந்த'னுடைய சிறு கதைகள் உண்மையான இலக்கியம் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

'விந்தன்' கையாளும் தமிழ் நடை மிகவும் எளிமையான நடை; ஆனால் பெரிதும் சக்தி வாய்ந்த நடை.

பொருள் விளங்காத பழைய சங்கத் தமிழ்ச் சொற்களையோ, பொருள் இல்லாத புதிய மறு மலர்ச்சிச் சொற்களையோ உபயோகித்து, அவர் வாசகர்களைத் துன்புறுத்துவதில்லை. வரிக்கு வரி, வாக்கியத்துக்கு வாக்கியம் எதுகை மோனைகளைப் போட்டு நம்மைத் திணற அடிப்பதில்லை; 'பேச்சுத் தமிழ்' என்ற பெயரால் படிக்க முடியாத கொச்சைத் தமிழைக் கையாண்டு நம்மைக் கொல்லுவதுமில்லை.

தாம் எழுதுவது படிப்பவர்களுக்கு விளங்க வேண்டும் என்னும் நோக்கத்தையே பிரதானமாகக் கொண்டு நடு நிலைமையான பேச்சுத் தமிழ் நடையைக் கையாளுகிறார்.

மனிதனுக்கு மனிதன் செய்யும் அநீதியையும் கொடுமையையும் எடுத்துக் காட்டும்போது 'விந்த'னுடைய தமிழ்நடையின் சக்தி உச்ச நிலையை அடைகிறது.

உதாரணமாக இதைப் பாருங்கள்.

"செட்டியார் கடைக்கு வந்து இறங்கும் அரிசி மூட்டை, சர்க்கரை மூட்டை முதலியவைகளையெல்லாம் சின்னசாமி கடை வாசலிலிருந்து தன் முதுகில் சுமந்து கொண்டு போய்க் கடைக்குள் அடுக்குவான். மூட்டைக்கு காலணா வீதம், எந்தக் காலமாயிருந்தாலும் சரிதான் - சமாதான காலமாயிருந்தாலும் சரிதான் எண்ணிக் கொடுத்துவிடுவார் செட்டியார். ஆனால் என்றைக்காவது

*ஒருநாள் சின்னசாமி அறுபத்து நாலு மூட்டைகளுக்கு மேல் தூக்கி அடுக்கி விட்டு, ஒரு ரூபாய்க்கு மேல் கூலி வாங்க வந்து விட்டால் செட்டியாரின் கண்களிலிருந்து ஏனோ இரண்டு சொட்டுக் கண்ணீர் கீழே விழும்.*

*"இந்தத் துக்க நிவர்த்திக்காக அவன் கூலியிலிருந்து திருப்பதி தேவஸ்தானத்தின் தர்ம உண்டிக்கென்று செட்டியார் இரண்டணாவைப் பலவந்தமாக எடுத்துக்கொள்வார். 'இக லோகத்தில்தான் அவன் தன்னுடன் சமத்துவமாக வாழாவிட்டாலும், பரலோகத்திலாவது வாழட்டுமே!' என்பது செட்டியாரின் பரந்த நோக்கம்!"*

*செட்டியாருக்குக் கண்ணீர் வருகிறது. நமக்கோ கோபம் கோபமாக வருகிறது. ஆத்திரம் பொங்கி வருகிறது.*

*விந்தன் கதைகளைத் தமிழ் மக்கள் ஆர்வத்துடன் வரவேற்றுப் படித்து மேலும் மேலும் கோபமும் ஆத்திரமும் அடைவார்களென்றும், அதன் பயனாய்ச் சமூகத்திலுள்ள அநீதிகளையும் கொடுமைகளையும் ஒழிக்க ஊக்கங் கொள்வார்கள் என்றும் நம்புகிறேன்.*

1946

# 2

## விந்தனின் ஒரே உரிமை

**- டாக்டர் மு. வரதராசனார்**

*'பொழுது' என்ற ஒன்று இருப்பதை என்றைக்கு மனிதன் தெரிந்துகொண்டானோ அன்றைக்கே பொழுதுபோக்கும் வழிகளையும் தெரிந்துகொண்டான்.*

*கலை என்று சொல்லப் படுகின்றவையெல்லாம் முதலில் பொழுது போக்குக்காகத் தோன்றியவைகளே.*

*கலைகளில் சிறந்த கதையும் இப்படித் தோன்றியதே.*

*கதை சொல்லிக் குழந்தையைத் தூங்க வைக்கும் தாயார், கதை சொல்லிக் குழந்தையின் மனத்தைத் திருத்தி வாழ்க்கையைப் பண்படுத்தவும் முயல்வதுபோல், பொழுது போக்குக்காகத் தோன்றிய கலைகளையே வாழ்க்கைப் பண்பாட்டுக்காகவும் சான்றோர் கையாளத் தொடங்கினார்கள்.*

*அது முதற்கொண்டே, புற்றீசல் போல் பொழுது போக்குக்காகத் தோன்றிய கலைகள், விண் மீன்கள் போல் அழியாத வாழ்வு பெறலாயின. கல்லிலும் சொல்லிலும் பிறவற்றிலும் நிலைத்து நின்று தலைமுறை தலைமுறையாக நூற்றாண்டு நூற்றாண்டாக வாழ்வு பெற்றன.*

*சொல் வடிவாக வாழும் கலைகளுக்குத் தனிப்பட்ட பெரிய ஆற்றல் உண்டு. வாழ்வுக்காகக் கொண்ட வில்லையும், வாழ்க்கைப் பண்பாட்டுக்காகக் கொண்ட சொல்லையும் ஒப்பிட்டுத் திருவள்ளுவர் ஒரு சிறந்த உண்மையை உணர்த்துகிறார். வில்லைக் கருவியாகக் கொண்டவர்களின் பகையானாலும் கவலையில்லை; சொல்லைக் கருவியாகக் கொண்டவர்களின் பகை பொல்லாதது என்கிறார்.*

**"வில்லே ருழவர் பகைகொளினும், கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை!"**

என்று அறிவுரை கூறுகிறார். இந்த அறிவுரை அரசனுக்குக் கூறப்பட்டது என்று விட்டுவிடக் கூடாது.

அரசன் என்று ஒருவன் இல்லாத குடியரசு முறைக்கும் இந்த அறிவுரை பொருந்தும். சமூகம் என்ற அமைப்புக்கும் இந்த அறிவுரை பொருத்தமுடையதே. கவிதையாலும் கதையாலும் கலைத் தொண்டு செய்யும் சொல்லாளரின் - எழுத்தாளரின் பகையைக் கொண்ட அரசன் அழிவது போலவே, அவர்களின் பகையைத் தேடிக் கொண்ட சமூக அமைப்பும் அழியும். இன்றுள்ள சமூக அமைப்பு நீடிக்காது, விரைவில் மாறிவிடும் என்பவதற்குச் சோதிடம் கேட்கவேண்டியதில்லை; சொல்லேருழவராகிய இன்றைய தமிழ் எழுத்தாளர்களின் கவிதைகளையும் கதைகளையும் படித்தால் போதும்; 'திருவள்ளுவரின் அறிவுரையைக் கேட்டுத் திருந்தாத சமூக அமைப்பே! நீ நிலைகுலைந்து அழியப்போகிறாயே!" என்று இரக்கம் பிறக்கிறது.

'விந்தன்' எய்யும் சொல்லம்புகள் குறி தவறாமல் பாய்கின்றன. சமூகத்தை அவர் சிற்சில இடங்களில்தான் நேராகத் தாக்குகிறார். பல இடங்களில் அவர் அம்பு தொடுப்பதே இல்லை. இன்றிருக்கும் நிலைமையை எடுத்துக் காட்டி, பேசாமல் கதை சொல்லுகிறார்.

அவர் படைக்கும் பாத்திரங்களும் பெரும்பாலும் அப்பாவிகளே. அவர்களுக்குச் சமூகத்தின் மேல் வயிற்றெரிச்சல் தோன்றுவதே இல்லை. ஆனால் நமக்கு மட்டும் வயிற்றெரிச்சல் தோன்றுகிறது; ஆத்திரம் பொங்குகிறது. நாயோடு போட்டி போட்டுப் பிழைக்கும் சோலையப்பன், மாம்பழம் விற்று வயிறு வளர்க்கும் அம்மாயி, விளக்கெண்ணெய் வியாபாரம் செய்யாத நாடார் கடை மாணிக்கம் பிள்ளை - இவர்களுடைய மனங்கள் எல்லாம் அமைதியான மனங்கள். ஆனால் அவர்களைப் பற்றிப் படிக்கும் மனங்கள் புரட்சி மனங்களாக மாறுகின்றன.

சில இடங்களில் ஆசிரியர் கையாளும் உவமைகளும் சமூகக் கேட்டுக்குக் காரணமானவர்களை வம்புக்கு இழுப்பதைப் பாருங்கள்!

'தேர்தலில் வெற்றிபெற்று அதிகாரத்துக்கு வந்துவிட்டவர்களைப்போல, போடா, போ!' என்று எரிச்சலுடன் அவனைப் பிடித்துத் தள்ளிவிட்டான் சங்கர். (ப-51)

அவளைக் கண்டதும் அவன் முகம் மலர்ந்தது - சூரியனைக் கண்ட தாமரையைப் போல அல்ல; சோற்றைக் கண்ட ஏழையைப்போல். (ப-83)

அவர் தம்முடைய காரியங்களையெல்லாம் முடித்துக் கொண்டு, நைவேத்தியத்துக்காகக் காத்துக் கொண்டிருக்கும் கல்லுப்பிள்ளையாரைப்போல் உட்கார்ந்திருந்தார். (ப-91)

ஆசிரியரின் கதைகளில் கறவை மாடு குடும்பத்துக்குக் கார்டியன் ஆகிறது; கிளி கைது செய்யப்படுகிறது; குப்பைத் தொட்டிக்கும் வேலைக்காரியின் வயிற்றுக்கும் உள்ள வேற்றுமை மறைந்துபோகிறது; சந்தர்ப்பங்களைத் தானே ஏற்படுத்திக் கொள்வதில் தமிழ் நாட்டு மாமியார் நெப்போலியனுக்கு நிகர் ஆகிறாள்; வாழ்வதற்காகப் பிரார்த்தனை செய்வதைவிடச் சாவதற்குப் பிரார்த்தனை செய்வது கட்டாயமாகிறது; கூடைக்காரியாக வியாபாரம் செய்கிறவள் அரிச்சந்திரனைப் பின்பற்ற விரும்பித் தோல்வி அடைந்த பின் புதிய வழி காண்கிறாள்.

பொருளாதார ஏற்றத் தாழ்வு என்ன என்ன தீமை செய்கிறது. என்பதை ஆசிரியர் பல இடங்களில் படம் பிடித்துக் காட்டுகிறார். குழந்தைகளின் வாழ்க்கை முதல் காதலர்களின் வாழ்க்கை வரையில் எல்லோருடைய வாழ்க்கையையும் பொருளாதார நிலைமை எப்படி எப்படி ஆட்டி வைக்கிறது என்பதை அவருடைய கதைகள் தெளிவாக்குகின்றன. காதல் எதன்மேல், எதுவரையில் என்றெல்லாம் கதைகள் விளக்குகின்றன.

கவிதையிலே காவியத்திலே கதைகளிலே சாகாத காதல் வாழ்க்கையிலே பணப் போரில் சாவதை ஆசிரியர் எடுத்துக் காட்டுவது போற்றத்தக்கது.

வாழ்க்கையில் உள்ள இத்தகைய உண்மைகளை மறைப்பது குற்றம் என்று ஆசிரியர் உணர்ந்து எழுதுவதற்காக, உலகம் அவருக்கு நன்றி கூற வேண்டும்.

*இப்படிப்பட்ட சிறந்த கதைகளைத் தெளிவான எளிய தமிழில் உணர்ச்சி, வேகத்துடன் எழுதிக் கலைத்தொண்டு புரியும் 'விந்தன்' முயற்சி மேன்மேலும் வளரவேண்டும். அவர் ஓயாமல் படித்துவரும் இந்த 'உலகம்' என்னும் புத்தகம் நாள்தோறும் புதிய புதிய உண்மைகளை அவருக்கு உணர்த்திக் கொண்டே இருக்க வேண்டும்.*

1950

# 3

## விந்தனின் 'சமுதாய விரோதி'

- கி. சந்திரசேகரன்

*சிறுகதை யுகம் இது, எழுத்தாளன் என்ற பெயருக்குத் தகுதியைத் தேடித்தருவது சிறுகதை சிருஷ்டி ஒன்றே என்பது இவரின் கருத்து.*

*கவனித்தோமானால், கலை அம்சங்கள் பெற்றிருப்பது எதுவாயினும், அது இலக்கியமேதான் என்பது தெளிவுபடும். நாவல்கள் மட்டும் குறைந்ததா? அல்லது கட்டுரை, நாடகம் முதலியவைதாம் தாழ்ந்தவையா? இல்லை, ஒரு சிறு கடிதமானாலும் வாழ்க்கைத் தத்துவம் அதில் ததும்பினால் அதைவிட ரசிக்கக்கூடிய இலக்கியமுண்டோ?*

*தமிழகத்தில் இன்று மலிந்து கிடப்பவை சிறு கதைக் கோவைகள்தாம். இருப்பினும் ஒன்று போல் எல்லாமே நம்மைக் கவராது போகா என்ற எண்ணமும் தோன்றுவதாலேயே, புதிய புத்தகங்கள் வெளி வருவதை நாம் ஆசையுடன் வரவேற்கிறோம்.*

*முகத்தைச் சுளிக்காது எதிர் கொண்டழைக்கத் தகுந்தவைகளில் விந்தன் தரும் புத்தகமும் சேர்க்கப்பட வேண்டியது என்ற நம்பிக்கை எனக்கு ஏற்படுவது போல் வாசகர்களுக்கும் ஏற்படும். ஆழ்ந்த மனச் சுழல்களில் நம்மைச் செருகும் தன்மை பெற்ற இங்குள்ள கதைகளில் சில.*

*ஒரு முறைக்கு இரு முறையாக அவைகளின் கருத்து நம்மைத் துடிக்க வைப்பதற்குக் காரணம் அதுவே அபிப்பிராயத்தின் தொனிவிசேஷம்* (Suggestion)

சில சமயம் நம் உள்ளங்களைத் தொட்டு விடுகின்றது. சில வேளைகளில் உலுக்கியும் விடுகின்றது! இதற்குச் சான்று வருந்தும் உயிர்கள் போன்ற சின்னஞ் சிறுகதைகளே.

தனக்கென்ற தனி பாஷையோ, அல்லது திடுக்கிடும் சம்பவமோ, நண்பருடைய கற்பனைத்திறனை வீணாக்கவில்லை; மனித இனத்தை இழிவாக்கும் நிகழ்ச்சியோ அல்லது இந்திய நாகரிகத்தின் சீர்குலைவுக்கு வழி செய்யும் உணர்ச்சி மாறாட்டமோ இங்கு இல்லை. புதுமைக்கென வெறி பிடித்தலையும் கருத்துக் கோளாறுகளும் காணவில்லை.

எல்லாவற்றையும் விட மற்றவர்களிடம் சகஜமாய்க் காணப்படும் நிரந்தரமின்மையின் சின்னங்கள் எதையும் நண்பர் இதுவரை பெறாது இருத்தலே அவருக்கு மேன்மை அளிக்குமென நான் நம்புகின்றேன்.

இலக்கியச் சேவையை அவர் தொடர்ந்து செய்ய வேண்டுமென்றும் விரும்புகின்றேன்.

1953

# 4

# விந்தன் ஒரு புதிர்

**பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார்**

கலைகளிலே ஒரு கலை, இலக்கியம், அதுவே கலைகளிலே சிறந்தது. கவின்கலைகள் என்ற தலை சிறந்த கலைகளிலேகூட அது முதன்மையானது.

ஏனெனில் தூரிகையை மையில் குழைத்துத் திரையில் தீட்டுகிறான் ஓவியன்; விரல்களை நரம்பில் தடவிப் பண் எழுப்புகிறான் இசைக் கலைஞன்; இலக்கியக் கலைஞனாகிய எழுத்தாளனோ, தன் உள்ளத்தின் உணர்ச்சிகளையே, கற்பனைகளையே தூரிகையாக, விரல்களாகக் கொண்டவன். வாழ்நத மனித இனத்தின் பட்டறிவால் உருவாகியுள்ள மொழியே அவனுக்கு மை, நரம்புகள். அவன் எழுதும் திரையோ வெறும் தாள்கள், ஏடுகள் அல்ல; வாசகரின், ஆண் பெண்களாகிய வாழும் மனிதரின் உள்ளங்கள்!

இலக்கியக் கலையின் தனிச் சிறப்புக்கு இன்னும் ஒரு காரணம் உண்டு. கலையின் இலக்கணம் முழுவதும் கைவரப் பெற்ற கலை இலக்கியம்.

கலை, இலக்கியம் ஆகிய இரண்டின் இலக்கணங்களில் ஒன்று அல்லது ஒரு கூறு கலை என்ற சொல்லில், கலிப்பு, களிப்பு என்ற அதன் வேர்ச் சொல்லில் அடங்கியுள்ளது. அது இன்பம், இன இனபம், இனவாழ்வுக்கு உகந்த இன்பம் தரவேண்டும். இந்தப் பண்பு இல்லாவிட்டால் அது அறிவேடு, நீதிநூல், சமய சாத்திரம், அறிவு நூல் ஆகலாம். தொழில் கலைத்தொழில்கூட ஆகலாம்; கலையோ, இலக்கியமோ ஆக மாட்டாது.

கலை, இலக்கியம் ஆகியவற்றின் இலக்கணங்களில் மற்றொன்று அல்லது மற்றொரு கூறு இலக்கியம் என்ற சொல்லில்,

இலக்கு அல்லது வாழ்வின் குறிக்கோள் என்ற அதன் வேர்ச் சொற் பொருளில் சுட்டப்பட்டுள்ளது. அது நீதி புகட்டாமலே, கொள்கை விரிக்காமலே ஆய்வாராய்வுகளில் இறங்காமலே, குடும்ப, சமுதாய, இன வாழ்வுகளுக்குரிய இனக்குறிக்கோள் நோக்கிய நேர்பாதை எது என்று காட்ட வேண்டும்; தவறான பாதை எது என்று உணர்த்தி விட வேண்டும்.

இந்த இரண்டு பண்புகளும் தனித்தனிப் பண்புகளாய் இயங்கக்கூடாது. இரணடும் இழைந்து கலையில், இலக்கியத்தில் ஒரே பண்பாய், இலக்கணமாய் இழைய வேண்டும்.

திருவள்ளுவரின் தெய்வத் திருமுறை இதே இருமைப் பண்பையும் மையப் பண்பாக்கி நமக்குக் காட்டுகிறது.

இலக்கியம் சின்னஞ் சிறுவர் தாமாக விரும்பித் தேடித் தின்ன ஆலாய்ப் பறக்கும் தின்பண்டமாக இனிக்க வேண்டும். இது இன்பக் குறிக்கோள். அதே சமயம் அது தெருவில் ஆதாயம் நாடி அற்ப வணிகர் விற்கும் மோசமான தின்பண்டமாயிருக்கக் கூடாது. நல்ல உணவுடன் உணவாக, நல்லுணவாகப் பெற்றோர் செய்துதரும் உணவுப் பொருளின் நல் ஊட்டத் தன்மையும் அதில் இருக்க வேண்டும். இதுவே பொருள் குறிக்கோள்.

இந்த இரண்டும் மட்டும் இருந்தால் கூடப் போதாது. நல்ல மருத்துவன் அல்லது அனுபவ மிக்க குடும்பப் பாட்டி உணவுடன் உணவாக, தின்பண்டத்துடன் தின்பண்டமாகப் பொதிந்து தரும் இனிமை பூசிய அல்லது இன்னும் சிறப்பாக இனிமைச் சுவையேயுடைய நன்மருந்து (tonic) ஆகவும் அது அமையவேண்டும். இது அறக்குறிக்கோள்.

இந்த மூன்று குறிக்கோள்களும் ஒன்றாய் இணைந்து இழைந்து திரண்ட இலக்கே வீடு அல்லது பேரின்பம் அல்லது கடவுள் - மனித இன நலமாகிய இனவாழ்வுக் குறிக்கோள் இதுவே.

கலை, வாழ்வுக்காக என்று கூறுபவரும் இன்று உண்டு. கலை, கலைக்காகவே, அதற்கு வேறு குறிக்கோள் கிடையாது என்று கூறுபவரும் உண்டு. ஆனால் இரு கருத்துக்களும் முரண்பட்டவைபோல் தோற்றுகின்றனவேயன்றி, உண்மையில் முரண்பட்டவையல்ல.

*ஏனெனில் கலை நுகர்வோர் விரும்பும் குறிக்கோள், நுகர்பவரை விரும்பி நுகர வைக்கும் குறிக்கோள் இன்பம் ஒன்று மட்டுமே. மற்ற இரண்டு குறிக்கோள்களும் - பொருட் குறிக்கோளும், அறக் குறிக்கோளும் பெற்றோர் நிலையில் உள்ள, ஆசிரியர், பாட்டி, மருத்துவர் நிலைகளில் உள்ள படைப்பெழுத்தாளன் தெரிந்தோ தெரியாமலோ, கருதியோ கருதாமலோ மேற்கொண்ட அல்லது இயல்பாகக் கொண்ட குறிக்கோள்கள் ஆகும்.*

*மிகச் சிறந்த கலைஞன், எழுத்தாளன் என்பவன் தெரிந்து, கருதி மேற்கொண்டவன் அல்லன். (அவனை நாம் அறிஞன், அறிவுக் கலைஞன் என்று கூறலாம்; கலைஞன் எழுத்தாளன் என்று கூற மாட்டோம்) தெரியாமல், கருதாமல் தன்னியல்பாக மேற்கொள்ளும் தாய்நிலையிலுள்ளவனையே நாம் தெய்வீகக் கலைஞன் என்று கூறுகிறோம்.*

*கலை, கலைக்காக என்று கூறுபவரில் பலர் இத்தெய்வக் கலை மரபில் வந்தவர்கள்; அவர்கள் தம்மை யறியாமல் கலை கலைக்காக என்று கூறும் கூற்றின் பின்னணிப் பொருள் இதுவே.*

*எழுத்தாளர் விந்தன் ஒரு விந்தையான மனிதர். விந்தையான எழுத்தாளர். அவர் எழுத்துச் சுடும், ஆனால் சுவைக்கும், திடீர் திடீர் என அவர் 'நறுக்' 'நறுக்' என்று குட்டுவார். ஆனால் முன் துவர்த்துப் பின் இனிக்கும் நெல்லிக்காய் போல, அது குட்டியவுடன் அதிர்ச்சி தந்து வலிக்கும்; ஆனால் தடவத்தடவ இனிக்கும்.*

*அவர் பொழுது போக்குக்காக - தனது பொழுது போக்குக்காகவோ வாசகரின் பொழுது போக்குக்காகவோ எழுதுவதில்லை; ஒரு குறிக்கோளுடன்தான் எழுதுவார்! அவரது எழுத்தில் ஆடம்பரத்தையோ ஆரவாரத்தையோ காணமுடியாது! அழகுச்சொற்கள், அவசியமற்ற கவர்ச்சிகரமான வருணனைகள் இருக்கமாட்டா. வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்றே பேசுவார், எழுதுவார். ஆனாலும் வாசிப்பவர்கள் வாசித்துக் கொண்டுதான் இருப்பார்கள். மந்திர வாதியைக் கண்டு அஞ்சியபடியே, விடாது பின்பற்றிச் செல்லும் சிறுவர்போல், மீண்டும் மீண்டும் அவர் படைப்பையே நாடுவார்கள்!*

**எழுத்தாளர் உலகில்**
**விந்தன் ஒரு புதிர்!**

எழுத்தாளர் விந்தனின் புகழ் சான்ற 'பாலும் பாவையும்' என்ற புதினத்தை அறிமுகப்படுத்தும் இராணி முத்து, வெளியீட்டு வாசகங்களின் கருத்துப் பிழிவுகளே இவை!

ஆனால் எழுத்தாளன் விந்தன் ஒரு புதிரா?

திருவள்ளுவரின் திருக்குறள் ஒரு புதிரானால், எழுத்தாளர் விந்தனும் ஒரு புதிர்தான்!

எழுத்தாளர்கள் பொதுவாக, தெய்வீக எழுத்தாளர்கள் சிறப்பாக அறம் அல்லது அறிவுரை என்ற கசப்புப் பண்டத்தை மறைத்து அல்லது பின் வைத்து, பொருள் அல்லது அறிவுரையைச் சிறிது மறைத்து, அல்லது அடுத்து வைத்து, இன்பம் அல்லது காதல் நாடகத்தைத்தானே முனைப்பாக முன்வைப்பார்கள்! இப்படி வைப்பதுதான் இக்காலத்துக்குச் சரி என்று கருதிப் பண்டாரகர் மு.வ. தம் வள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் என்ற ஆய்வேட்டில் அவ்வரிசையை மாற்றியே அமைத்துள்ளார்.

ஆயினும் பண்டாரகரும் நாமும் வாழும் இந்தக் காலத்தில்தான் திருவள்ளுவரின் இன்பநாடகம் படித்தறிந்தவர்களையோ, பொருளுணர்வுக் கருத்துக்களைப் படித்தறிந்தவர்களையோ விட, அவரது அறத்துப்பாலின் அறவுரைகளைப் படித்துப் பாராட்டுபவர் மிகுதி என்பதைப் பண்டாரகர் மு.வ எண்ணிப் பார்க்கவில்லை, நாமும் எண்ணிப் பார்ப்பதில்லை!

இனிப்பும் துவர்ப்பும் உவட்டி, நாக்குச் செத்துப் போன நிலலயில் மக்கள் காரமும் கசப்புமே தேடுகிறார்கள். போலிகளையே மெய் என்று நம்பி, உண்மையான மெய்யை, அதாவது வாய்மையைப் புறக்கணித்துப் பொய் என்று ஒதுக்கும் நம் பகட்டு நாகரிக உலகுக்கு ஒரு வள்ளுவர், ஒரு தந்தை பெரியார், ஒரு விந்தன் வந்து, மெய்ம்மை பொய்ம்மைகளை, நன்மை தீமைகளை, இன்ப துன்பங்களைத் தலைகீழாகத் திருப்பி வைத்துக் காட்டி, அந்த அதிர்ச்சியின் மூலமே உண்மையான மெய்ம்மை, உண்மையான நன்மை, உண்மையான ஆத்திரம், உண்மையான இன்பம் ஆகியவற்றைக் காட்டி விடுகின்றனர்!

குட்டின இடத்தைத் தடவுவோருக்கு, குட்டே இனிமை தருகிறது என்ற புதிரின் விளக்கம் இதுவே! திருவள்ளுவரின்

மாணவனும், தந்தை பெரியாரின் சீடனும் அறிந்த இந்த அனுபவத்தையே, எழுத்தாளர் விந்தனின் வாசகரும் அனுபவிக்கிறார்கள்!

செந்தமிழில் வைதாரையும் வாழ வைப்பான் இறைவன் என்று தமிழ்ப் பக்திக் கவிஞர்கள் பாடியுள்ளனர்.

செந்தமிழ் அழகு மொழி, இன்ப மொழி, அன்பு மொழி! வைபவர்கள் உள்ளத்தில் இன்ப நினைவுகள், அழகு நயங்கள் இல்லாத நேரங்களில் கூட, அவர் பயின்ற மொழி அப்பண்புகளின் மரபில் வந்த செந்தமிழாய் இருந்தால், அப்பண்புகள் அவர் நாவினைக் கடந்து, உள்ளத்தினைக் கடந்து, இறைநல வாய்மை அழகும் இன்பநடமும் அவருக்கு ஊட்டி விடும் என்பதே இதன் கருத்து.

எழுத்தாளர் விந்தன் தமிழகத்தின் டிக்கன்ஸ். ஆங்கில நாட்டு டிக்கன்ஸும், தமிழ் நாட்டு விந்தனும், விந்தனைப் போலவே எழுத்தாளர் வ.ரா.வும் மேற்கூறிய செந்தமிழில் வைதார் மரபு வகுப்பைச் சார்ந்தவர்கள் என்னலாம்.

டிக்கன்ஸ், வ.ரா., விந்தன் ஆகிய மூவருமே அழகு நாடியவர்கள், இன்பம் நாடியவர்கள் அல்லர்; அழகு தமிழ் அல்லது அழகு மொழியில் பழகியவர்கள் அல்லர். ஆனால் அழகு, இன்பம் அவர்கள் மொழியை, அவர்கள் தமிழை நாடிற்று. மூவருமே திட்டமிட்ட கலைத்திட்டம் உடையவர்கள் அல்லர்; ஆனால் கலைத்திட்டம் அவர்கள் படைப்புகளில் எப்படியோ வந்து விழுந்து விடுகிறது.

**மூவரின் ஒற்றுமைகள் இவை,**
**வேற்றுமைகளும் உண்டு.**

**டிக்கன்ஸ்**

டிக்கன்ஸிடமோ, அவர் மொழியிலோ, படைப்புகளிலோ கூட, அழகுணர்ச்சி, மெருகு, திட்பம் ஆகியவை கிடையாது.

ஆனால், இந்த இல்லாமையே, வாசகரிடம் அவர் கொண்ட நேச பாசத் தொடர்பு முறைக்கு ஆற்றல் தந்து விடுகிறது.

அவர் உள்ளத்திலும் மொழியிலும் இல்லாத பண்புகள் படைப்பின் பின்னணியிலிருந்து எழுந்து, வாசகர் உள்ளத்தில்

இளநகை, இளஞ்சின, இளஉவர்ப்பு உவப்பு, கலைகளை உண்டு பண்ணிவிடுகின்றன. இவற்றின் மூலம் சமுதாய வாழ்வையே அவர் தலைமுறைக்குள் மாற்றிவிடும் ஆற்றல் அவர் புகழ்பெற்ற படைப்புகளுக்கு ஏற்பட்டுள்ளது.

**எழுத்தாளர் வ. ரா.**

எழுத்தாளர் வ.ரா.வுக்கு நல்லதோ, கெட்டதோ எந்த உணர்ச்சியும் கிடையாது. அவர் ஒரு புகைப்படக் கருவி போன்றவர். காட்சிகளைத் தேர்ந்தெடுக்கும் திறனும், வரிசைப்படுத்தி முன்வைத்து விடும் திறனும் மட்டும் அக்கருவிக்குப் பின்னணியிலுள்ள கலையுள்ளத்துக்கு உண்டு. இந்நிலையில் அவர் உணர்ச்சியின்மையே காற்றலையில்லாத இடத்தின் சுடர்போல, அவர் படைப்புகளுக்கு அழகு நயமும் உணர்ச்சியாற்றலும் தந்து அவற்றைப் பேச வைத்துச் செயலாற்றிவிடுகிறது

**விந்தன்**

எழுத்தாளர் விந்தனிடம் அழகுணர்ச்சி, திட்டமிடுந்திறன், நகைச்சுவை ஆகிய எந்த மென்மை நயமுடைய உணர்வுகளும் கிடையாது. ஆனால் இவை தவிர, மற்ற வன்மைத் திறமுடைய கோபம், வெறுப்பு, கேலிநகை, இகழ்ச்சி ஆகிய எல்லா உணர்ச்சிகளும் உண்டு. டிக்கன்ஸ் வாசகருடன் மேற்கொண்டுவிடும நேசபாசத் தொடாபு, வ.ரா. மேற்கொள்ளும் புகைப் படங்களின் இளநகைத் தொடர்பு ஆகிய இரண்டையுமே அவர் மேற்கொள்வதில்லை.

ஏதிலா அயலார் - நகரத்தாரை வலிந்து பேச்சுக்கு இழுக்கும் நாட்டுப்புறத்தார் பாணியிலேயே அவர் வாசகரை அடிக்கடி வம்புக்கிழுத்துப் பேசுபவர் ஆகியுள்ளார். ஆனால் இவையே எழுதுபவர், வாசிப்பவர் என்ற வேற்றுமை வேலியை மறக்க வைத்து, வாசகரைத் தாமே நேரில் காண்பவராக, கேட்பவராக, கதை உறுப்பினருடன் ஓர் உறுப்பினராக இயங்க வைத்துவிடுகிறது

கவர்ச்சி நாடாத உணர்ச்சிகளை உடைய எழுத்தாளராகிய விந்தனின் எழுத்தில் இயல்பாக ஏற்பட்டுவிடும் கவர்ச்சி, திட்டமிடாத கலைஞனாகிய விந்தனின் கலைப்படைப்புகளில் இயல்பாக ஏற்பட்டுவிடும் திட்டப் பண்பு ஆகியவற்றின் மறைதிறவு இதுவே!

பாலும்பாவையும் என்ற அவரது புகழ்சான்ற படைப்பில் அகல்யா ஆணினத்துக்குப் பெண்ணினம் விடுக்கும் அறை கூவலென்றால், கனகலிங்கம் அதனை ஏற்றுப் போட்டியிட்டு வெற்றி நாடும் ஓர் ஆணினப் பண்புருவாகவே அமைகிறான். ஆனால் எழுத்தாளர் விந்தன் அவனைக்கூடத் தன்னைக் கடந்த ஒரு கண்காணா இலக்கு நேக்கிச் சென்று வெற்றி இலக்குச் சற்று முன்பே காலிடறி நின்று விடும் குறைபாடுடைய மனிதனாகத்தான் படைத்திருக்கிறார் என்று காணலாம்.

தமிழகத்தின் தொடக்க காலப் புதின ஆசிரியர்கள் பெரிதும் பொழுது போக்கு நோக்குடனேயே கதை எழுதினார்கள். ஆனால் அவர்களுக்கு ஓர் இரண்டாவது நோக்கமும் இருந்தது. ஒரு மனச்சான்றும் இருந்தது.

முதல் நோக்கத்துக்குக் குந்தகமில்லாமலே தம் புதினத்தில் கதை முடியுமுன் ஓர் இடைப்பட்ட அத்தியாயத்தை ஒரு தனி அறவுரைக்கொரு சமய அல்லது அரசியல் அல்லது சீர்திருத்தக் கட்டுரைக்கோ ஒதுக்கி வைத்து, அந்த இரண்டாம் நோக்காகிய மனச்சான்றையும் நிறைவேற்றிக் கொண்டார்கள்

வாசகர்களுக்கும் இது அவ்வளவு தொல்லைதரவில்லை. அநத அத்தியாயம் வந்தவுடன் அவர்களும் அதை ஒதுக்கி விட்டு முன்பின் அத்தியாயங்களையே படித்துவிட்டுத் தமது பொழுது போக்குக் கதை இன்பத்துக்குத் தடை வராமல் பார்த்துக் கொண்டார்கள்.

இந்த இரு திசைப்பட்ட ஏய்ப்பு - எதிா ஏய்ப்புக்கு விந்தன் படைப்புகளில் தேவையேயில்லை. விந்தனின் மனசசான்று வேறு, கலைப் படைப்பு வேறு என்ற நிலை கிடையாது; அவர் மனச்சான்றே கலைப் படைப்பாய் அவர் கதையில் அமைந்துள்ளது

எழுத்தாளர் விந்தனின் மிக நெருங்கிய எழுத்துலக உறவினர்களான டிக்கன்ஸ், வ.ரா. போன்றோருக்கு இல்லாத பல முனைப்பான தனித் தன்மைகள் விந்தனுக்கு உண்டு

முதலாவதாக அவர் இலக்கு மற்ற இருவருக்கும் உரியவையான, சிறு சிறு அளவான திருத்தஙகள் அதாவது சமுதாயச் சீர்திருத்தஙகளோ, அல்லது பழக்கவழக்க மாறுபாடுகளோ, அல்லது

நம்பிக்கைகளில் மாற்றங்களோ அல்ல. மிகப் பெரிய மாற்றங்கள் என நாம் கருதும புரட்சிகள் கூட அல்ல. அவருடைய பேருணர்ச்சிகள் சமுதாய முழுவதையும் மாற்றியமைக்கும் விரிவாட்சியை மட்டுமன்றி, குடும்பத்தின் ஆண் பெண் உறவுகளை மாற்றியமைக்கும் ஆழத்தையும், மனித இனத்தையே மாற்றியமைத்துவிட எண்ணும் ஆழ்கடல் உயரமுள்ளடங்கிய பாரித்த அளவையும் கொண்டிருந்தன.

ஓ, மனிதா! என்ற மகுடமிட்ட அவரது தொடக்க காலச் சிறு கதைத் தொகுப்பு, மனிதன் என்ற அவரது வெளியீடு ஆகியவை தம் பெயராலேயே இந்த ஆழ அகல உயர வீச்சைக் காட்டுபவையாயுள்ளன.

மனிதனின் அறிவும் உணர்ச்சியும் உடைய ஒரு விலங்கு அல்லது பறவை நிலையில் நின்று அவர் மனித இனத்தின் வாழ்க்கையையே அலசுவார்! மனித இனத்தின் பேராளாய் நின்று சமயவாதிகள் வருணித்துள்ள கடவுளைக் கூண்டில் ஏற்றி விசாரணை நடத்துவார்.

ஆணின் அறிவராய்ச்சியையும் ஆணின் உணர்ச்சிகளையும் ஒருங்கே கொண்ட ஒரு பெண்ணைப் படைத்து, அப்பெண்ணின் நிலையிலிருந்து ஆணினத்தையே சந்திக்கு இழுப்பார்.

இன்னொரு நாயை அல்லது மனிதனை அல்லது குதிரையைக் கண்டுதான் நாய் குரைக்கும். கோபுரத்தைக் கண்டு குரைக்காது. எவரது விருப்பு வெறுப்புகளும் சமநிலை அளவிலுள்ளவர்களிடமோ, தனி மனிதர் அல்லது குழுக்கள் அல்லது கட்சிகளிடமோதான் செயல்படுமே தவிர, எல்லையற்றப் பரந்த வெளிகளிலோ, அனைவரையும் பாதிக்கும் செய்திகளிலோ செயல்பட மாட்டா

எழுத்தாளன் விந்தனின் உணர்ச்சிகளும் சரி, படைப்புகளின் நோக்குகளும் சரி -இந்த எல்லைக ளெல்லாம் கடநதவை. அவை கடல் போன்ற பரப்பு, நிலவுலகம் துளைக்கும் சுரங்கம் போன்ற ஆழம், மலை, வானம் போன்ற பேரகற்சியுடையவை. இத்தன்மையே அவரிடம் எவருக்கும் உள்ளுவர்ப்பற்ற நிலைக்கு, கவர்ச்சிக்கு உரிய மறைதிறவு ஆகும்.

குழந்தைகளும வியப்பார்வத்துடன் வாசிக்க வல்ல ஆங்கில வசை இலக்கிய ஆசிரியர் சுவி'ப்ட் (Swift) என்பாரைப் போல அவர்

மனித இனமளவு நின்று எவருக்கும் அச்சம் தராமலே பூத நகை நகைத்துக்கொண்டு நிற்கிறார்.

இளநகை, சிறுதிற உணர்ச்சியலை, பண்பு நயமுடைய வசை ஆகியவற்றால் சமுதாய நலம் விளைக்கும் கலைஞரைப்போல, எழுத்தாளர் விந்தனின் பெருநகை, பெருந்திற உணர்ச்சிகளும் வாசகரைக் கவர்வதுடன் நில்லாமல், அவர்களை மாற்றியமைக்கவே உதவிவிடுகின்றன.

பதக்குக் குடித்தவனுக்கு உழக்குத் தேறுவது உறுதி என்ற நெறிப்படி, அவருடைய பாரித்த உணர்ச்சிகளும் படிப்படியான, ஆனால் உறுதி வாய்ந்த கருத்து மாற்றம், பண்பு மாற்றம், மரபு மாற்றங்களும் வாசிப்பவர் உள்ளங்கள் தோறும், வாசிப்பவர் சமுதாய முழுவதும் ஏற்படுத்திவிட வல்லவையாய் உள்ளன.

எழுத்தாளர் விந்தனை ஒரு கொள்கைப் பரப்பு எழுத்தாளன் அல்லது ஒரு குறிக்கோள பரப்பு எழுத்தாளன் என்று கூறுவதைவிட ஒரு கருத்துப் பரப்பு எழுத்தாளன் என்று கூறுவதே முறை ஆகும்.

ஏனெனில் கொள்கைப் பரப்பு எழுத்தாளர், குறிக்கோள் பரப்பு எழுத்தாளர் சமய மொழி நாடு என்றோ, கட்சி வகுப்பு என்றோ, கொள்கை கோட்பாடு என்றோ பிரிவுற்றுக் கிடக்கும் எத்தனையோ குழுக்களுக்குள்ளாக ஒருகுழு சார்ந்து நின்று மற்றொன்றை அல்லது மற்றவற்றை எதிர்ப்பவராக அமைவதே இயல்பு. அவர் ஊட்டும் உவப்பு உவர்ப்புகளும் மனமாற்றங்களும் இதுபோல ஒரு திசையில் உவப்பும் மறுதிசையில் உவர்ப்பும், ஒரு பக்கம் மாற்றமும் மறுபக்கம் எதிர்மாற்றமும ஆகவே இருத்தல் கூடும்.

பேராசிரியர் கல்கி இதனாலேயே அவர் எழுத்தாற்றலைக் குறிப்பிடும்போது அதன் மறைதிறவு அதன் கட்சி வகுப்பு முதலியவை கடந்த சார்பற்ற தன்மையே எனக் குறிப்பிட்டுள்ளார். அவர் குறிக்கோள்கள் அவருக்கு உரிய தனிக் குறிக்கோள்கள். அவர் கருத்துகளும் அப்படியே,

அவர் 'நறுக்,' 'நறுக்' என்ற குட்டுக்கள் வாசக அன்பர்கள் எவரையும் பண்படுத்தாததன் புதிர் விளக்கம் இதுவே. அவர் குறிக்கோளும் கருத்தும் மனித இனமளாவிய ஒரு வள்ளுவக் குறிக்கோள், வள்ளுவக் கருத்தே யாகும்.

வறுமையிடையேயும் சமுதாயத்தின் அடித்தட்டுக்குரிய தொழிலாளரிடையேயும் வாழ்நதவர் விந்தன். ஆனால் இதுகூட, அவர் சமுதாய நோக்கை இனநோக்கை விரிவுபடுத்தி உள்ளார்ந்த மனித இன, உயிரின நேச பாசத்தை வளர்த்ததேயன்றி வகுப்பு வேறுபாட்டுணர்வை உண்டுபண்ணவில்லை.

'அலிபாபாவும் நாற்பது திருடரும்' என்ற அரபிக் கதையில் வரும் மார்ஜியானா, ஒரு வீட்டின் வாயிற் கதவில் இடப்பட்ட சுண்ணக் குறியைத் தெருவெங்கும் இட்டு வேறுபாட்டடையாளத்தை அழித்தது போல, எல்லா விருப்பு வெறுப்புணர்ச்சிகளையும் குறுகிய எல்லைகளில் தேங்காமல் பாரித்த பேரகல் இன எல்லையளாவ நோக்கியதன் மூலமே எவரையும் தனிப்பட்ட முறையிலோ நாடு வகுப்பு மொழி கொள்கை முறையிலோ, பாலின வேறுபாட்டடிப் படையிலோகூட புண்படுத்தாது, வெறுப்பூட்டாது, சினம் கொள்விக்காது எல்லாரையும் ஒரே உணர்ச்சி ஒருமைப்பாட்டில் ஆட்கொள்ள அவரால் முடிந்தது.

இறுதியாக, விந்தனின் திட்டமிடாத கலை வரம்பு கருதாத போக்கிலேயே அவரையும் அறியாமல் ஓர் ஆழ்ந்த திட்டமும் வரம்பும் கலைத் திட்பமும் வந்து அமைந்து விடுவதனை வாசகர் காணலாம் ஆனால் இதிலும் ஒரு புதிர் உண்டு பொதுநிலை எழுத்தாளர்களிடமும் மிக உயரிய கலை எழுத்தாளர்களிடமும் காணப்படும் கலை நோக்கை விட, கதை நோக்கை விட, அவரிடம் கருத்து நோக்கும் கருததுக் கொந்தளிப்புமே மிகுதியாயிருந்ததால், மேலே கூறப்பட்ட உள்ளார்ந்த கலை அமைதி வரம்பையும் அறவே மீறி அவர் புயலார்ந்த கருத்துகள், அணைகளையும் கரைகளையும் உடைத்து அவரையும் இழுத்துச் சென்றுவிடும் இடங்கள் உண்டு.

கனகலிங்கததினிடம் அகல்யா கற்பு பற்றி, ஆண் பெண் தொடர்பு பற்றிச் சொற்பெருக்காற்றும் இடங்களில் சிலபல இத்தகையவையேயாகும். சேசுப்பியர் போன்ற இயற்பெருங் கவிஞர்களிடத்தில் இத்தகைய இலக்கண மீறல்கள், கலை மீறல்கள் கூட, ஒரு புதிய கலை நுட்பத்தை, இலக்கண மரபைப் படைத்துவிடுகின்றன என்று ஆய்வாளர் கூறுவர்.

விந்தன் வகையில் இம்மீறல்கள் இவ்வாறு எளிதில் விளக்கக் கூடியவையல்ல. ஏனெனில் அவை நாடகப்பாங்குடையவை

இம்மீறல்கள் அவர் படைத்த மரபு மீறிய பண்புருக்களின் மரபு மீறிய தன்மையில் இழைந்த மரபு மீறல்கள் ஆகிவிடுவன ஆகும். அந்த இடங்களில் கதை வாசகன் சலிப்படைவது உண்மை. ஆனால் அவன் சலிப்பு கதை மீதன்று - அப்பண்புருமீதேயாகும்.

எழுத்தாளர் விந்தன் இவ்வகைப் பண்புருக்களை சிறப்பாகக் கனகலிங்கம் போன்றவர்களைப் படைக்காதிருக்கலாம். காசத்தையும் கழுதையையும் தேர்நதெடுத்து மனித இனத்தை அலசும்படி செய்யாமல் இருந்திருக்கலாம். ஆனால் இவை அவை அவர் பூதநகைக்குரிய ஆழ்ந்துயர்ந்த இடங்கள் - பூதநகை பெரும் பூதநகையாக விரிவுறத் தொடங்கிய இடங்கள்.

ஒதெல்லோ நாடகத்தில் சேக்சுப்பியர் அயோகோ படைப்பில் தன் கலையாற்றலையே தாண்டிப் பறந்து தளர்ந்து முறிந்ததுபோல, இங்கும் எழுத்தாளர் விந்தன் தன் இயல்பான ஆற்றலின் வீச்சுக் கடந்து தளர்ந்து பின்னடைந்தார் என்று கூறலாம்

ஆனால் கல்லில் உயிரையே வருவித்து, காண்பவர் அது கல் என்பதையே மறக்கடித்துவிடும் ஆற்றல் பெற்ற கலைஞன், ஏலாமையாலோ வாலாமையாலோ, கல்லை ஒரு சிறு மூலையில் கல்லாக விட்டுவிட்டிருந்தால், அது முற்றிலும் அவன் தோல்வியை மட்டும் காட்டாது - கல்லை உயிராக்கிய அவன் கலைப் படைப்புக்கும் கடவுட்படைப்பான இயல் நிலையிலுள்ள கல்லுக்கும் உள்ள நெடுந்தூரத்தைக் காட்சியாளர் மறந்துவிடாமல் எடுத்துக்காட்டவும் அதுவே உதவி விடுகிறது.

வாசகர் உலகுக்கு விந்தன் ஒரு கலைப்புதிர். ஆனால் கலைப்பண்புணர்வு மூலம் விளங்கிக் கொள்ளத்தக்க புதிரேயாவர். அதே சமயம் எழுத்தாளர் உலகுக்கு அவர் இன்னொரு வகையான புதிர் -

> **'வாணிபம் செய்வார்க்கு வாணிபம் பேணிப்**
> **பிறவும் தமபோற் செயின்'**

என்ற வள்ளுவர் வாசகம் விளக்கும் புதிரேயாகும்.

மேலையுலகின் சிறந்த கலைப்படைப்புகளை ஒதுக்கிவிட்டு, காலத்தில் மிதக்கும் பணம் ஈட்டும் வாணிகக் கலைக்

குப்பைகளையே கீழையுலகம் பொதுவாக, தமிழகம் சிறப்பாக இன்று கலையிலும் எழுத்திலும் திரையும் பின் பற்றி வருகிறது. இந்த நிலையில் தலை சிறந்த இயற் கலைஞர்கள் இந்தியாவிலும் தமிழகத்திலும் தோன்றாமல் இல்லை.

ஆனால் ஒரு மரமும் தோப்பாகாது; ஒரு பிள்ளையும் பிள்ளையாகாது.

தமிழகத் தேசியமரபும், இந்தியத் தேசிய மரபும் படைப்பாளரிடமும் மாற வேண்டும், வாசகரிடையேயும் மாற வேண்டும். யார் முதலில் மாறுவது என்பது இங்கு முக்கியமல்ல. ஏனெனில் கீதையில் கண்ணபிரான் கூறியதுபோல, படைப்பாளனாகிய என் படைப்பிலும் அவலங்கள் நேர்ந்துவிடுகின்றன. ஆனால் படைப்பின் அவலம் என்னையும் சில சமயம் தாக்கிவிடுகிறது.

பள்ளி கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், கலைக்கூடங்கள் தற்காலத் திரைப்படங்களின் அவல வாழ்வைப் பின்பற்றி விடுகின்றன.

ஏழ்மையிலுள்ள மக்கள் செல்வர்களின் நல்வாழ்வையன்று, அவல வாழ்வைப் பின்பற்ற எண்ணி வருகின்றது.

இந்நிலைகள் மாற ஒரு விந்தன் போதாது, ஒரு விந்த மரபே இமய மரபாக வளரவேண்டும்.

1982

## 5

# விந்தனின் அகலிகை

- க. கைலாசபதி

ஆங்கில மொழியில் outsider என்றொரு சொல்லுண்டு. புறம்பானவர், தொழில் துறை சார்ந்தவரல்லாதவர், தீக்கை பெறாதவர், குழாத்தில் கலந்துறவாடத் தகுதியற்றவர் என்றெல்லாம் அகராதி இச்சொல்லிற்குப் பொருள் கூறும்.

அரசியலிலிருந்து, இலக்கியம் வரையுள்ள பல துறைகளிலே சிற்சில சமயங்களில் பொதுவாகப் 'புறம்பானவர்' அல்லது தீட்சை பெறாதவர் (முறையாகப் பயிற்றப்படாதவர் என்பது பொருள்) எனக் கருதப்படுவோர் திடீரெனப் புகுந்து பாராட்டத்தக்கவற்றைச் செய்வதுண்டு.

தகுதி பெற்றவர்கள் தடம்பட்ட வழியிற் சென்று கொண்டிருக்க, இவர்கள் பயிற்சி காரணமான தடையுணர்ச்சி எதுவுமின்றித் துணிவுடன் புதுவது காண்பதுண்டு.

தமிழிலே மறுமலர்ச்சி எழுத்தாளர் பலர் வறுமையில் வாடியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள யாவரும் பிறப்பாலும் சமூக அந்தஸ்தாலும் உயர்ந்தவர்களே.

ஒரு காலத்தில் பிராமண சமூகத்தவரே பிரபல எழுத்தாளராயும் விளங்கினர். (ஈழத்திலே இப்போக்குக்குப் பல விதிவிலக்குகள் உண்டு). இத்தகைய சூழ்நிலையில், அதிகம் கல்வியின்றி நகரத்திலே உடலுழைப்பாளியாய் வாழ்க்கையைத் தொடங்கி, இலக்கிய ஆர்வத்தினாலும் விடாமுயற்சியாலும் பெயர் வாங்கிய எழுத்தாளர் இருவரைக் குறிப்பிடலாம். இவருள் மூத்தவர் 'விந்தன்' எனப்படும் வி.கோவிந்தன்; இளையவர் ஜெயகாந்தன்

இருவரும் எழுதத் தொடங்கிய பொழுது சமூகத்திலே உள்ள ஏழை எளியவர்கள், தாழ்த்தப்பட்டோர், ஒதுக்கப்பட்டவர்கள், முதலியோரது சுகதுக்கங்களையும் பொதுவாக 'மனிதனுக்கு மனிதன் செய்யும் அநீதியையும் கொடுமையையும்' எடுத்துக் காட்டினர்.

அச்சுக் கோக்கும் தொழிலாளியாய் இருந்து, பின் பத்திரிகைத் தொழிலிற் புகுந்து, 'கல்கி'யில் பத்தாண்டுகள் துணை ஆசிரியராய்ப் பணிபுரிந்து, பின் சுதந்திர எழுத்தாளரான விந்தன் எழுதிய குறிப்பிடத்தக்க நூல்களில் ஒன்று பாலும் பாவையும்.

'பாலும் பாவையும்' பல வழிகளிற் குறிப்பிடத்தக்கது. அவற்றுள் ஒன்று அ'து ஓர் இலக்கியப் பரிசோதனை என்பது. பல படைப்புக்கள், இதிகாசத்திலும் புராணங்களிலும் வழங்கி வரும் அகலிகை கதையை எடுத்துச் சிறுநிற மாற்றங்கள் செய்து புதுவிளக்கம் கூறியுள்ளன. ஆனாலும் பாலும் பாவையும் தற்காலச் சமூகக் கதையொன்றாகும்.

இந்திரன், அகல்யா, தசரதகுமாரன் என்பன இதில் வரும் மூன்று பாத்திரங்களுக்குரிய பெயர்கள் என்பதைத்தவிர பழைய அகலிகை கதைக்கும் இதற்கும் தொடர்பு எதுவும் இல்லை.

கனகலிங்கம், ராதாமணி, சியாமளா, பரமசிவம் முதலிய வேறு பாத்திரங்களும் நாவலில் வருகின்றனர். பழைய புராணக் கதையைத் தெரியாத ஒருவர் இதனை அசல் சமூகக் கதையாகவே படித்து விடுவார். ஆனால் பழைய அகலிகை கதை தெரிந்தவர்க்கு, இந்நாவலின் பொருள் ஆழம் நிறைந்ததாயும் நூதனமானதாயும் இருக்கும். இதனைச் சிறிது விளக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

இதர படைப்புக்களிலே அகலிகை, கௌதமர் முதலானோர் பௌராணிக உலகிலேயே நடமாடுகின்றனர்

சாபம், கல்லாதல் முதலிய இயற்கையிகந்த நிகழ்ச்சிகளும் இந்திரன் தேவர்கள் முதலிய தெய்வப்பிறவிகளும் இடம்பெறுவதால் அவை சமகால உலகத்தைச் சார்ந்தனவாக அன்றிக் காலங்கடந்த காலத்தே கானகமொன்றில் நடநத நிகழ்ச்சிகளோடு தொடர்புடையவாயுள்ளன

அதனால், எமது எழுத்தாளர்கள் எத்துணைச் சமகால நோக்குடன் எழுதினாலும், அப்படைப்புக்களில் வரும்

பாத்திரங்களுக்கும் எமக்கும் கால இடைவெளி மிகுதியாக உள்ளது. இதிகாசப் பாத்திரங்கள் எவ்வளவுதான் நவீன மொழியிற் பேசினாலும் கற்பனைப் படைப்புக்களாகவே இருப்பன. அவற்றுக்கும் எமது காலத்துக்கும் குறிப்பிடத்தக்க தொடர்பு காண்பது இயலாது. அது மட்டுமல்ல.

பழைய நிலமானியச் சமுதாயத்தில் வழுக்கி விழுந்தவர் நிலை வேறு. எமது முதலாளித்துவ சமுதாயத்தில் வழுக்கி விழுந்தவர் நிலைமை வேறு. எனவே அகலிகையை வழுக்கி விழுந்தவளாக நோக்கினாலும் பயனுள்ள முடிவு கிடைக்கப்போவதில்லை.

பன்னெடுங் காலமாகப் பெண்ணினத்துக்குக் கொடுமை இழைக்கப்பட்டதைத் தவிர, அதன் தன்மையும் முறைகளும் காலத்துக்குக் காலம் மாறுகின்றன. இவற்றை உணர்ந்த நிலையில் பாலும் பாவையும் எழுதியுள்ளார் விந்தன். இத்தகைய நாவல்களைச் சிலர் 'இலட்சிய நாவல்கள்' என்பர் அது எவ்வாறாயினும், வ.ரா. எழுதிய நாவல்களின் வழி வந்தது பாலும் பாவையும் என்பதை மறுப்பதற்கில்லை.

அகல்யை கல்லூரி மாணவி, சகமாணவரான தசரதகுமாரன், இந்திரன் ஆகிய இருவரில் அறியாத தசரத் குமாரனைக் கைவிட்டு, அறிந்த ரசிகன் இந்திரனுடன் காந்தர்வ விவாகஞ் செய்ய ஓடிப் போகிறாள். வெறுங்கையாக வந்த அகலிகையை இந்திரன் கை விட்டுச் செல்கிறான்.

கனகலிங்கம் பலத்த தர்மவிசாரத்துக்குப் பின்பு அகலியைக் காதலிக்க மறுத்துக் கொல்வதைவிடக் காதலித்தே கொல்லலாம் என்று கேலியாகக் கூறிக்கொண்டு காப்பாற்ற முன்வருகிறான்.

ஆள்மாறாட்டத்தின் பயனாகக் கனகலிங்கம், அகல்யையின் சித்தப்பாவின் சூழ்ச்சியாற் சொல்லப்படுகிறான். இக்கட்டான சமயத்தில் 'அகல்யாவின் சாபத்தைப் போக்க வந்த சாட்சாத் ஸ்ரீராம பிரானைப் போல, தசரத குமாரன் கையில் கோதண்டம் இல்லாமல்' எதிரே வந்து, வாழ்நாளிலேயே முதன்முறையாகத் துணிந்து அவளைக் காப்பாற்ற முன்வருகிறான்.

ஆனால் வீட்டுக்குப் போனதும், 'கெட்ட பாலை எடுத்துச் சாக்கடையிலே கொட்ட வேண்டியதுதான்' என்று தத்துவம் பேசும்

சமையற்காரன் சொல்லைக் கேட்டுவிட்டு மனம்மாறியவனாய், அகல்யாவை இழுத்துக் கொண்டு போய் வீட்டுக்கு வெளியே விட்டுவிட்டுக் கதவைச் சாத்தித் தாளிட்டு விடுகிறான். மனமிடிந்த அகல்யை ஆழ்கடலை நோக்கி ஓடுகிறாள்.

இதுதான் நாவலின் சுருக்கம். இதற்கும் புராணங்களில் வரும் அகலிகை கதைக்கும் ஒப்புமை மிகக் குறைவு என்பது வெளிப்படை. ஆயினும் நாவலைப் படிக்கும்பொழுது பழைய அகலிகை அடிக்கடி நினைவில் வெட்டும்படி ஆசிரியர் எழுதியிருக்கிறார். என்றாலும் பழைய கதை எவ்விதத்திலும் வாசகனுக்குச் சுமையாக அமையவில்லை; மாறாக, பழைய கதைபற்றிய அறிவு ஒரு வகையான உணர்வு இன்பத்தைக் கூட்டுகிறது.

இத்தகைய பரிசீலனை நூல்கள் பல இந்நூற்றாண்டில் மேனாட்டிலே தோன்றியுள்ளன. அவற்றோடு நாம் இங்கு ஆராயும் நாவலைத் தொடர்புபடுத்தி முடிச்சுப்போட வேண்டிய அவசியமில்லை. எனினும் அவைபற்றிய சில குறிப்புகள் இன்றியமையாதவை.

பிரபல ஐரிஷ் எழுத்தாளர் ஜேம்ஸ் ஜோய்ஸ் (James Joyce, 1882 - 1941) எழுதிய 'கலைஞனின் இளமைக்காலச் சித்திரம்' (A Portrait of the Artist as a young man), யூலிசிஸ் (Ulysses) என்பன இவ்வகையான புத்தாக்கங்களுக்குச் சிறந்த உதாரணங்கள்.

பண்டைய கிரேக்க மகாகவி ஹோமர் பாடிய ஒதீசி (Odyssey) காவியத்தின் பாட்டுடைத்தலைவன் யூலிசிஸ். துரோயப் போருக்குப்பின் பல்லாண்டுகள் அலைந்து திரிந்து பல அருஞ்செயல்கள் புரிந்து இறுதியில் தன் மனைவியைச் சேருகிறான் யூலிசிஸ்.

மகனாய், தந்தையாய், கணவனாய், காதலனாய், போர்வீரனாய், மன்னனாய், பல கோணங்களிலிருந்து அவனை நாம் ஒதீசி காவியத்திற் காணக்கூடியதாயுள்ளது. எனவே அவனை ஒரு முழுமையான மனிதனாகச் சிலர் கொள்வர்.

ஜோய்ஸ், யூலிசிஸ் என்ற தமது நாவலில் லியோபோல்ட் புளும் (Leopold Bloom) என்ற பாத்திரத்தைச் சிருஷ்டித்து நவீன காலத்தில் வாழும் முழுமையான மனிதன் ஒருவனைச் சித்திரித்தார். 'எனது நூல் ஒரு நவீன ஒதீசியாகும்.' என்றார் ஜோய்ஸ்.

'இது புதுவகையான போலியாக்கம் imitation என்கிறார் டயிச்செஸ்.

புளூம் என்ற நவீன கதாநாயகன் நெருக்கம் நிறைந்த டப்ளின் நகரத்திலே ஒருநாள் பொழுதில் பெறும் அனுபவங்களே நாவலின் உள்ளடக்கம்.

1904ஆம் வருடம் ஜூன் மாதம் 16ஆம் திகதி காலை எட்டு மணிக்கு நாவல் தொடங்குகிறது; அடுத்த நாட் காலை இரண்டு மணிக்கு முடிவடைகிறது.

ஹோமரின் காவியத்திலே தெய்வச் சீற்றத்தினால் யூலிசிஸ் பத்தாண்டுகள் அலைந்து திரிகிறான். நாவலில் ஒரு நாளில் கதாநாயகனது 'அருஞ்செயல்கள்' முடிவடைகின்றன. அத்தகைய உருவ வேறுபாடுகள் பல இருப்பினும் இரு நூல்களுக்கும் ஒப்புமையும் உண்டு. பழைய கதையை ஆங்காங்கு நினைப்பூட்டும் சொற்களையும் சொற்றொடர்களையும் கையாண்டுள்ளார் ஜோய்ஸ்.

இன்னொரு உதாரணம் மட்டும் பார்க்கலாம்.

புகழ்பெற்ற அமெரிக்க நாடகாசிரியர் ஒநீல் (Engene O' Neill 1888 - 1953) உருவகக் குறியீடுகளைப் பயன்படுத்தி நாடகங்கள் எழுதியவர்.

அவர் எழுதிய Mourning Becomes Electra என்ற துன்பியல் நாடக மூன்றின் தொகுதி, பண்டைய கிரேக்க துன்பியல் நாடக மேதை ஈஸ்கிலஸ் இயற்றிய Oresteia என்ற பழ மரபுக் கதை நாடக மூன்றின் தொகுதியின் புத்துருவாகும்.

துரோயப் போருக்குப்பின் திரும்பிய கிரேக்கப் பெருந்தலைவனை அவன் மனைவி கிளைட்டெம்னெஸ்டிரா தனது சோரநாயகன் இகிஸ்தஸ் என்பானின் உதவியுடன் கொலை செய்கிறாள்.

இரண்டாவது பகுதியில், கொலையுண்ட அகமெம்னோன் மகன் ஒறெஸ்டீஸ், தனது தங்கை எலெக்டிராவின் தூண்டுதலினால் தாயையும் அவள் சோர நாயகனையும் கொன்றுவிடுகிறான்.

மூன்றாவது பகுதியில் ஒறெஸ்டீசைக் கொலைப் பாவம் தொடர்ந்து பற்ற அவன் அலைந்து திரிவதும், இறுதியில் அதென்ஸ்

நகர மன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு விடுதலை பெறுவதும் நடைபெறுகின்றன.

இம்மூன்று நாடகங்களுக்கும் அடிப்படை ஏதுவாக அக்குடும்பத்துக்கு விதிக்கப்பட்ட சாபம் இயங்குகிறது.

மேற்கூறிய பண்டைக் கிரேக்க இதிகாசக் கதையிலே, தெய்வம், கொலைப்பாவம், விதி, சாபக்கேடு முதலியன பற்றிய ஆழ்ந்த நம்பிக்கை பிரிக்கவியலாப் பண்பாக உள்ளது.

எனினும் அவற்றை நீக்கி, துரோயப் போருக்குப் பதிலாக, அமெரிக்க உள் நாட்டு யுத்தத்தை (1861-1865) பகைப்புலமாகக் கொண்டு நவீன நாடகமொன்றை (மூன்றின் தொகுதி) எழுதினார் ஓநீல்.

'கிரேக்கர்கள் விதி எனக் கொண்ட பொருளுக்கு ஏறத்தாழச் சமமாகும் உளவியல் உந்துதலின் அடிப்படையிலே, தெய்வம் உண்டென்றும், அறம் நின்று கொல்லும் என்றும் நம்பாத அறிவுடைய நவீன நாடகப் பிரியர்கள் ஏற்றுக் கொள்ளும் வகையிலும் அதனைப் பார்த்து மன முருகும் வகையிலும் அமைந்த நாடகத் தொகுதி'

என்று ஒரு திறனாய்வாளர் இப்புத்தாக்கத்தை மதிப்பிட்டிருக்கிறார்.

ஜோய்ஸ், ஓநீல் முதலியோரது படைப்புக்களுடன் பாலும் பாவையை ஒப்பிட வேண்டுவது அவசியமில்லை. ஆயினும் அது பிறமொழிகளில் இருப்பதையொத்த நவீன நூல் என்பதை உணர்த்த இக்குறிப்புக்கள் அவசியமாயிற்று. அது மட்டுமல்ல.

ஜோய்ஸ், 'கலைப் படைப்பு, தன்னளவிற் பூரணமானது. புற உலகின் ஒப்புமை உணர்வை வேண்டாது தனித்து இயங்கவல்லது' என்ற கோட்பாட்டிற்கியைய இலக்கியஞ் சமைத்தவர்.

சிக்கலான உத்திகளுக்கு முதலிடம் கொடுத்தவர். தமது நாவலையே ஒரு ஐதீகமாகக் கருதியவர். அத்தகையவரது, வேலைப்பாடுகள் நிறைந்த பெரு நாவலுக்கும் கல்கியில் தொடர் கதையாக வந்த நாவலுக்கும் குண வேறுபாடுகள் பலவுண்டு.

விந்தன், வ.ரா., பாரதியார் ஆகியோர் மரபையொட்டி, இழுக்கை ஒழுக்கவும், ஒழுக்கத்தை வளர்க்கவும், நமக்கும் நாட்டுக்கும் நன்மை பயக்கவும் குறிக்கோளோடு எழுதியவர். இது

காரணமாகவே அவரைப் பிரசார நாவலாசிரியர் பிரிவிற் சேர்த்து விடுகிறார் அகிலன். 'ஒரு கேள்வி' என்ற முன்னுரையில் விந்தன் கூறுகிறார்.

'சர்ச்சைக்குரிய எத்தனையோ விஷயங்களில் தம்முடைய அபிப்பிராயத்தை அழுத்தந் திருத்தமாக வெளியிட்டிருக்கும் பாரதியார்கூடக் கற்பைப் பற்றிக் குறிப்பிடும் போது ஆணுக்கும் பெண்ணுக்கும் அதைப் பொதுவில் வைப்போம் என்று பட்டும் படாமலும் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்.

ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவாக அது எப்படியிருக்கும்? அப்படியிருக்க ஆண்கள் விடுவார்களா? இயற்கைதான் அதற்கு இடங் கொடுக்குமா?

'கற்பு என்பது ஆண்களால் கடைப்பிடிக்க முடியாத விஷயமாயிருக்கும்போது, பெண்கள் மட்டும் அதைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று சொல்வதில் - இன்றும் சொல்வதில் - அர்த்தமில்லை.'

ஆசிரியர் பெண்ணுரிமை விஷயத்தில் எவ்வளவு தூரம் தொடர்புற்றிருக்கிறார் என்பதை மேலேயுள்ள கூற்றுக் காட்டுகிறது. இதனாலேயே நவீன அகலிகை கதையான பாலும் பாவையும் அதே பொருளில் எழுந்த பல புதுமெருகுக் கதைகளிலும் சிறந்து விளங்குகிறது. அதன் சிறப்பியல்புகள் சிலவற்றை இனிக் கவனிப்போம்.

பாலும் பாவையில் ஆசிரியர் வேண்டுமென்றே இராமாயணப் பாத்திரங்களையும் கதாசம்பவங்களையும் குறிப்பிடுகிறார். இதனால் இதிகாசமும் நவீன கதையும் ஒன்றையொன்று ஒட்டவும் வெட்டவும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

ஆசிரியர் பழைய கருத்துக்களைக் கொள்ளும் போதும், தள்ளும் போதும் நின்று நின்று நாம் கவனிக்குமாறு இசைவுப் பொருத்தங்களை உணர்த்திச் செல்கிறார்.

வேறொரு நூலுக்குத் திரு.கி. சந்திரசேகரன் எழுதியுள்ள முகவுரையிற் கூறுவது இவ்விடத்திற் பொருத்தமாக் காணப்படுகிறது.

'ஆழ்ந்த மனச்சுழல்களில் நம்மைச் செருகும் தன்மை பெற்றவை இங்குள்ள கதைகளில் சில. ஒரு முறைக்கு இருமுறையாக அவைகளின் கருத்து நம்மைத் துழாவ வைப்பதற்குக் காரணம் அதுவே. அபிப்பிராயத்தின் தொனி விசேஷம் (suggestion) சில சமயம் நம் உள்ளங்களைத் தொட்டுவிடுகின்றது. சில வேளைகளில் உலுக்கியும் விடுகின்றது.'

சந்திரசேகரன் விதந்து கூறும் தொனி விசேஷம் பாலும் பாவையிலும் நிறைய உண்டு. அகல்யா கூறுகிறாள் :

'வந்தான்; ஆனால் அவன் மகா சாது; பெயர் தசரத குமாரன். சாட்சாத் தசரத குமாரனோ சீதா தேவிக்காகச் சிவதனுசை முறித்தான்; மாரீசனை வதைத்தான்; இராவணனுடன் போரும் தொடுத்தான்.

எங்கள் தசரத குமாரனோ ஒருமுறை என்னுடன் வந்து 'மாட்டினி ஷோ' பார்க்கக்கூட விரும்பவில்லை - அவ்வளவு பயம்! என்னைப் பார்த்து பெருமூச்சு விடுவதோடு தன் காதலை அவன் நிறுத்திக் கொண்டான்.

'இளமையின் இதயத் துடிப்பை அறியாத அவனுடைய நடத்தை எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை...'

பழைய அகலிகை இரு அச்சிலே மட்டுமே வார்க்கப்பட்டவள்.

வான்மீகியின் சித்திரிப்பின்படி இந்திரனைக் கூடுவதில் பெருமகிழ்ச்சியடைந்தவள். நெஞ்சறிந்து இன்பத்தை ஏற்றவள்.

பிந்திய காவியங்களிலே ரிஷிபத்தினியான அகலிகை கற்புக் கனலியாகச் சித்திரிக்கப்பட்டிருக்கிறாள். இ'து இக்காலத்துக்குப் போதிய குணச்சித்திரிப்பு அல்ல.

நன்மை, தீமை என்ற இருமுனைப் பாகுபாடு இலட்சிய காவியங்களுக்கு ஏற்புடையதாக இருக்கலாம். சிக்கல்கள் நிறைந்த நவீன வாழ்க்கைக்குப் பொருந்துவதொன்றன்று.

விந்தனின் அகல்யா கற்பு, கற்பின்மை என்ற நிலைகளை அதிகம் எண்ணாமல் எப்படியாவது வாழ வேண்டும் என்றே ஆசைப்படுகிறாள். அகல்யா சிந்திக்கிறாள் -

'இந்த நிலையில் நான் இன்னும் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பதற்குக் காரணம் என்னவாயிருக்கும்? உயிரின்மீதுள்ள ஆசையா? - ஆம், உயிரின் மீதுள்ள ஆசைதான்.'

பிறிதொரு சந்தர்ப்பத்திலே மனத்திலே உறுதி பிறக்கிறது.

'அந்தத் துரோகிக்காக நான் ஏன் உயிரைவிட வேண்டும்? அதனால் நான் அடையப் போகும் நன்மைதான் என்ன? - மற்றவர்களைப் போல நானும் சமூகத்தின் அனுதாபத்தை வேண்டுமானால் பெறலாம். செத்துத்தான் அந்த அனுதாபத்தைப் பெற வேண்டுமென்றால் எனக்கு அது வேண்டாமே!.... ஆம்! சமூகத்துக்கும் நான் பலியாகமாட்டேன். அந்தச் சண்டாளனுக்கும் பலியாகமாட்டேன். இரு தரத்தாரும் எனக்கு வேண்டுமானால் பலியாகட்டும்.'

கல்லாகி நின்று சமூகத்தின் அனுதாபத்தைப் பெற்ற, பெற விரும்பிய அகலிகைக்கும் இந்த அகல்யாவுக்கும் வேறுபாடு அதிகம். இவள் கனகலிங்கத்தைக் கைக்குள் போட்டுக் கொள்ளப் படாதபாடு படுகிறாள்; அவனை மயக்கப் பார்க்கிறாள், ஓரளவு உறுதி பெற்று மீண்டும் வாழ்க்கையைத் தொடங்கும்பொழுது சமூகம் குறுக்கிடுகிறது.

'இதோ போகிறாள் பார். இவள்தான் அகல்யா' என்று அவளைச் சுட்டிக் காட்டினாள் அவர்களில் ஒருத்தி.

'எனக்குத் தெரியுமே! யாரோ ஒருவனுடன் ஓடிப்போய்விட்டாள் என்று சொன்னார்களே. அவள் தானே இவள்?' என்றாள் இன்னொருத்தி.

'ஆமாம்; ஆனால் ஓடிப்போகவில்லையாம். நடந்துதான் போனாளாம்' என்றாள் மற்றொருத்தி, களுக்கென்று சிரித்துக்கொண்டே.

'எனக்கு யாரோ பறந்து போனாள் என்று சொன்னார்களே, என்றாள் வேறொருத்தி, கலகல வென்று நகைத்துக்கொண்டே.'

இந்தக் கட்டம் புதுமைப் பித்தனின் சாபவிமோசனத்திலும் சுருங்கிய வடிவில் வருவது நினைவிருக்கலாம்.

ரிஷிபத்தினிகள் ஏறத்தாழ இவ்வாறுதான் பழிச் சொற்களை வீசினார்கள். எவ்வளவுதான் உயிராசை இருந்த போதும் இறுதியில், 'கடைசி நம்பிக்கையும் இழந்து கதியற்று, இனித் தனக்குச் சாவதைத் தவிர வேறு வழியே கிடையாது' என்ற நிலைக்கு வருகிறாள்.

'எச்சில் இலைக்கு நேரும் கதிதான் இனி நமக்கும் நேரும் போலிருக்கிறது' என்று ஏங்குகிறாள்.

நாவலின் முடிவிலே நிர்க்கதியாய், 'வா வா என்று கை தூக்கி வரவேற்கும் அலை கடலை நோக்கி' ஓடுகிறாள். அதாவது சமூகத்தின் அனுதாபத்தைச் செத்துத்தான் பெற வேண்டும் என்ற முடிவுக்கு வருகிறாள்.

'நல்லவர்கள் வாழ்வதில்லை, நானிலத்தின் தீர்ப்பு' என்று முடிவுரை கூறி நாவலை முடிக்கிறார் விந்தன்.

கூட்டு மொத்தமாகப் பார்க்கும்போது இதிகாசப் பாத்திரங்களையும் நிகழ்ச்சிகளையும் நுட்பமான முறையில் ஏளனத்துக்குக்குரியனவாக்கி விடுகிறார் ஆசிரியர். அதற்கு அவரது தொனி விசேஷங்கள் பெரிதும் பயன்படுகின்றன.

ஒரு கட்டத்தை மாத்திரம் இங்குக் கவனிப்போம். கனகலிங்கத்தைக் கொலை செய்வித்தது தனது சித்தப்பா என்றறிந்த அதிர்ச்சியுடன் தனது வீட்டை விட்டு மெதுவாக வெளியேறும் அகல்யா, தெருவில் விழுந்து விட்டாள். இனி விந்தனின் வருணனையைப் பார்க்கலாம்.

'அதே சமயத்தில் தன்னை மறந்து வந்து கொண்டிருந்த யாரோ ஒருவன் அவள் மேல் இடறி விழுந்தான்.'

'ஐயோ!' என்று அகல்யா முனகினாள்.

'மன்னியுங்கள்' என்று பல்லை இளித்துக் கொண்டே அவன் எழுந்து நின்றான்.

'அகல்யா தலைநிமிர்ந்து அவனைப் பார்த்தாள். என்ன ஆச்சரியம்! அவளுக்கு எதிரே ரிஷிபத்தினியான அகல்யாவின் சாபத்தைப் போக்க வந்த ஸ்ரீராமனைப்போலத் தசரத குமாரன் கையில் கோதண்டமின்றி, பக்கத்தில் லக்ஷ்மணன் இன்றி நின்று கொண்டிருந்தான்.

'அவனைக் கண்டதும் எந்தவிதமான உணர்ச்சியையும் வெளியே காட்டிக் கொள்ளாமல், 'நீங்களா' என்றாள் அவள் தலையைக் கீழே குனிந்துகொண்டே.

'ஆமாம்! நான்தான்' என்று சொல்லிக் கொண்டே தசரத குமாரன் முதன் முறையாகத் துணிந்து அவளைக் கைகொடுத்துத் தூக்கினான். இருவரும் தனிமையை நாடிக் கடற்கரைக்குச் சென்றார்கள்.'

இதிகாசக் காட்சிகளையும் தற்காலச் சம்பவங்களையும் ஒன்று கலந்து வேடிக்கை காட்டுகிறார் ஆசிரியர்.

அகலிகை சாப விமோசனம் இராமாயணத்திலே சிறியதொரு நிகழ்ச்சியாயினும், இராமனைப் பொறுத்த வரையில் அவன் பெருமைக்கு எடுத்துக்காட்டாய் இலங்குவது.

'கண்ட கல்மிசைக் காகுத்தன் கழல் துகள் கதுவ' பண்டை வண்ணமாய் அகலிகை நின்றாள் என்பார் கம்பர்;

'கான் உற்ற காகுத்தன் கால் படலும், ஆங்கொரு கல், மான் ஒத்த கண்ணணங்காய்' மாறுவதாக வெள்ளக்கால் பாடுவார்;

'துன்பம் துடைக்கும் இராமரது தூய திருவடித்துகள் பட்டதுமே, கல்லிலிருந்து அத்தவப் பெண்ணாகிய' அகலிகை வெளிப்பட்டாள் என்பார் துளசிதாசர்.

இத்தனை மகத்துவம் வாய்ந்த காட்சியை, அற்புதமான நகைச்சுவையுடன் கையாண்டிருக்கிறார் விந்தன்.

அகலிகைக்கு 'மறுபடியும் புதிய வாழ்வைக் கொடுக்க வந்த தெய்விகப் புருஷன் காலில் விழுந்து நமஸ்கரிக்கிறாள்' அகலிகை என்கிறார் புதுமைப்பித்தன்.

இங்கே பயந்தவனான தசரதகுமாரன், 'மன்னியுங்கள்' என்று பல்லை இளித்துக்கொண்டுதான் எழுந்து நிற்கிறான்.

இராமன் கால்துகள் கதுவச் சாப விமோசனம் பெற்ற அகலிகை எங்கே, கையாலாகாதவனான தசரதகுமாரன் வந்து முட்டி மோதிக்கொள்ளும் அகல்யா எங்கே?

இரண்டு காட்சிகளுக்கும் உள்ள மாறுபட்ட தன்மை தொனி விசேஷம் நிறைந்தது.

கோதண்டம், லக்ஷ்மணன் முதலிய சொற்கள் நவீன தசரத குமாரனுக்குப் புதிய அர்த்தத்தைப் பெய்கின்றன. கோதண்டமேந்திக் குவலயத்தைக் காக்க வந்த ரகுவீரனே அன்று அகலிகைக்கு விமோசனம் அளித்தான்.

இங்கோ சலன புத்திக்காரனான தசரதகுமாரன் தனது மார்பை அழுத்திப் பிடித்துக் கொள்ளும் நோஞ்சலன்; பேமானி.

அதே சமயத்தில் பாலும் பாவையில் வரும் தசரத குமாரனுக்கும் இராமாயண நாயகனுக்கும் ஒப்புமை இல்லாமலுமில்லை. அதை உய்த்து உணர வைத்துள்ள விந்தனது இலக்கியத் திறன் குறிப்பிடத்தக்கது.

தசரத குமாரன் தயங்கித் தயங்கி அகல்யாவைத் தன் வீட்டுக்கு அழைத்துச் செல்கிறான்.

'ரொம்ப நேரங் கழித்து வந்திருக்கிறீர்களே! பால் கெட்டு போய்விட்டதே' என்று சொல்லிக் கொண்டு வருகிறான் சமையற்காரன்.

அகல்யாவுக்குத் தான் மூன்றாவது ஆசாமி என்று பிறர் கருதக்கூடும் என்பது அவனது உள்மனக் கவலை. அம்மன நிலையில், சரி கெட்டுப் போன பாலை என்ன செய்யப் போகிறாய்?" என்று கேட்டு வைத்தான்.

சமையற்காரனது பதில் தசரத குமாரனது முடிவைத் தீர்மானிப்பதாயிருந்தது.

'என்ன ஸார் இது? - கெட்டுப்போன பாலை என்ன செய்யப் போகிறாய்' என்று காலேஜ் ஸ்டூடென்ஸ் கேட்கிற மாதிரி கேட்கிறீர்களே! எங்கேயாவது கெட்ட பால் நல்ல பாலாகுமா ஸார்? எடுத்துச் சாக்கடையிலே கொட்டவேண்டியது தானே!, என்றான் சமையற்காரன்.

குற்றமற்ற இக்கூற்றைக் குத்தல் பேச்சாகக் கருதிய தசரத குமாரனுக்குச் சுருக்கென்றது. அடுத்த செயலாகக் கெட்ட பாலாகிய அகல்யாவைச் சாக்கடைக்கே தள்ளிவிடுகிறான்.

*இதைப் படிக்கும்பொழுது தொனி விசேஷத்தால் எமக்கு இராமன் சீதையுடன் நடந்து கொண்ட விதம் நினைவில் தோன்றுகிறதல்லவா?*

*இராவண வதத்தின் முடிவில், யுத்த பூமியிலே அக்கினிப் பரீட்சை வைத்ததே இராமனுக்குப் பெரும் இழுக்கு.*

*அதன் பின்னரும் அயோத்தியில் பொறுப்பற்றவர்களின் வீணுரையைக் கேட்டு, இராமன் சீதையைக் காட்டுக்கு அனுப்பிவிட்டான் என்று உத்தரகாண்டம் கூறும்.*

*இராமன் 'வண்ணானின் மொழி கேட்டு வனம் விடுத்த சீதை' என்று ஈழநாட்டுப் புலவர் ஒருவர் பாடியிருக்கிறார்.*

*'வண்ணான் சொன்னதைக் கருத்திற் கொண்டு வைதேகியை வனத்துக்கு அனுப்பிவிடும் விஷ்ணு அவதாரமாம் இராமனுக்கும், சமையற்காரன் வார்த்தைகளைக் கருத்திற் கொண்டு அகல்யாவைக் கரகரவென்று இழுத்துக் கொண்டு போய் வீட்டை விட்டுத் துரத்திவிடும் தசரத குமாரனுக்கும் என்ன வித்தியாசமிருக்கிறது? ஒன்றுமேயில்லை. காவியத்திலும், நாவலிலும் ஆண் திமிர் ஒன்றுதான்.*

*'எல்லாம் ஈசுவர லீலை' என்று நன்மைக்கும் தீமைக்கும் பேதம் பாராட்டாமல் சமாதானம் கூறும் ராஜாஜியே இராமாயணத்தில் இராமன் பற்றிய இக்கதைக்குப் பெரிதும் முயன்று விளக்கம் கூறுகிறார்.*

*இராமன் சீதையைக் காட்டுக்கு அனுப்பியதாகக் கூறும் பழங்கதை பாமரர்களிடையில் வழங்கியதொன்று என்று அதன் முக்கியத்துவத்தைக் குறைக்க முயன்று விட்டு,*

*'இந்தத் துயரக் கதை நம்முடைய தேசத்துப் பெண்மணிகளின் கடல்போன்ற துக்கத்தில் தானாக உதித்த ஒரு கற்பனை... இந்தப் பரீட்சை என் புத்தியில் ராமனுடைய குணத்துக்கு அவ்வளவு பொருத்தமாக இல்லை. படிக்கும்போது கஷ்டமாக இருக்கிறது. துன்பம் என்ன! இன்பம் என்ன! - எல்லாம் ஈசுவரலீலை.'*

*இராமாயணத்திலே அறத்தின் நாயகன் நடாத்திய அக்கினிப் பிரவேசம் முதலியவற்றைப் படிக்கும் போது மனத்துக்குக் கஷ்டமாக இருக்கிறது என்று ராஜாஜி கூறுவது போலவே விந்தனின் கதைகள் பற்றிக் கூறியிருக்கிறார் கல்கி. அவர் சொன்னார் :*

'விந்தன் கதைகளைப் படிப்பதென்றால் எனக்கு எப்போதும் மனதிலே பயம் உண்டாகும். படித்தால் மனதிலே என்னென்ன விதமான சங்கடங்கள் உண்டாகுமோ, எப்படிப்பட்ட வேதனைகளுக்கு ஆளாக நேருமோ என்றுதான் பயம்!'

வான்மீகியிலிருந்து விந்தன் வரை இந்திய இலக்கியங்களிற் சித்திரிக்கப்பட்டுள்ள அகலிகையை மாத்திரமன்றிப் பிற பெண்கள் பலரையும் பார்க்கும்போது எமக்குக் கஷ்டமாகத்தானிருக்கிறது.

ஒருவகையில் பார்க்கப்போனால், வான்மீகி தொடங்கிய இடத்துக்கு விந்தன் (கூடிய சிக்கல்களோடும் பிரச்சினைகளோடும்) வந்திருக்கிறார் என்று தோன்றுகிறது. இக்கூற்றைச் சிறிது விளக்கியுரைக்க வேண்டும்.

ஆதி கவியாகிய வான்மீகி வீரயுகக் கதையொன்றைப் பாடினார். அதில் மனித இயல்புகள் பெரும்பாலும் அறிவியல், தெய்வீக வரையறைகளுக்குள் கட்டுப்படாமல் சித்திரிக்கப்பட்டன. காலப்போக்கில் கருத்து முதல் வாதமும் அதன் வெளிப்பாடான பல சிந்தனை வடிவங்களும் பெருகப் பெருக இராம கதையும் உருமாற்றம் பெற்றது.

ராஜாஜி ரகுவீரன் பற்றிக் கூறியிருப்பது காவியம் முழுவதற்கும் ஏற்புடையதே :

'வால்மீகி ரிஷியின் காவியத்தில் இராமனுடைய நடவடிக்கைகளை ஈசுவர அவதாரமாக வைத்து எழுதவில்லை... மொத்தத்தில் வால்மீகி ராமாயணத்தில் காணப்படும் ராமன் ஒரு சிறந்த ராஜகுமாரன்; வீர புருஷன்; அபூர்வமான தெய்விக நற்குணங்கள் பெற்றவன். அம்மட்டே; கடவுளாக வேலை செய்யவில்லை!'

கம்பன், துளஸிதாஸர் ஆகியோர் இறையவதாரமாக இராமன் வணங்கப்பட்ட காலத்தில், இலட்சிய நோக்கிற் பாத்திரங்களைப் படைத்தவர்கள்.

ஒரு சிறு உதாரணம் மாத்திரம் போதும்.

வான்மீகியார் வாலியின் மனைவி தாரையைக் குரங்கு ஒழுக்கமே கொடுத்து உருவாக்கினார். கம்பனோ அவளைக்

கற்பரசியாக்கிக் காட்டினார். பிற பாத்திரங்களும் அவ்வாறே இலட்சிய வடிவம் பெற்றன.

இப்பொதுப் பண்புக்கியைய, வான்மீகியார் காட்டும் அகலிகை மனமறிந்து சந்தர்ப்பம் கிடைத்தபோது சோரநாயகனைக் கூடியவள். வான்மீகியின் வருணனை இயற்கை நவிற்சியுடையதாய்க் காணப்படுகிறது. அந்த வகையில் ப.ரா. கூறியிருப்பது போல 'வான்மீகியின் அகல்யா வழுக்கி விழுந்த ஒரு சகோதரி.'

பின்வந்த பக்திக் கவிஞரெல்லாம், 'பாபி' யான அகலிகை இராமனது பாதத் தாமரைகள் பட்டுப் பவித்திரமானதைக் கூற முனைந்தவராதலால், 'வழுக்கி வி ழுந்த', பிரச்சினையை வழுவவிட்டனர்.

மறுமலர்ச்சி (மணிக்கொடி) எழுத்தாளர்கள் வழுக்கி விழுந்தவளது மனநிலையைத் துருவித் துழாவினரேயன்றி அதனை ஆழ்ந்த கவனத்துக்குரிய சமூகப் பிரச்சினையாக அணுகினார் அல்லர். அவ்வாறு அவர்கள் செய்ய இயலாமைக்குக் காரணமும் கண்டோம்.

இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் களமமைத்துக் கதையெழுதிய விந்தன் காட்டும் கதாநாயகி அகல்யா, 'நெஞ்சறிந்து பழி ஏற்றுக் கொண்டவள்.' அவள் வழுக்கி விழுந்தமைக்குச் சமாதானம் கூறிச் சமாளிக்க முயலவில்லை ஆசிரியர்.

அப்படிச் செய்திருந்தால், அவர் படைப்பு, பிந்திய இராமாயணங்களின் நையாண்டிப் போலியாக (Parody) மட்டும் அமைந்திருக்கும். வழுக்கி விழுந்த பின் வாழ முயல்பவள் அவள். அது காரணமாகவே புதுப் புதுப் பிரச்சினைகள் தோன்றுகின்றன. வழுக்கி விழுவதிலும் ஆண்கள் தரம் பார்ப்பதைச் சித்திரிக்கிறார் விந்தன் :

'சிறிது நேரம் மௌனமாக இருந்த பிறகு, காந்திஜியின் தத்துவத்தில் உங்களுக்கு நம்பிக்கையுண்டா?' என்று கேட்டுப் பேச்சை மாற்றினாள் அகல்யா.

'உண்டு' என்றான் கனகலிங்கம்.

'வகுப்பு வெறியின் காரணமாகக் கற்பழிக்கப் பட்ட பெண்களை அவர்களுடைய கணவன்மார்கள் மீண்டும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அவர் சொல்லவில்லையா?'

'சொன்னார்.'

'அதே மாதிரி நானும் ஏதோ ஒரு வெறியால் கற்பழிக்கப்பட்டவள்தானே! - என்னை நீங்கள் ஏன் ஏற்றுக்கொள்ளக்கூடாது?' என்று கேட்டு, அவள் அவனை மடக்கினாள்.

'இப்பொழுதான் பிடி கிடைத்தது அவனுக்கு. நீ சொல்வது ரொம்ப சரி; ஆனால் அவர்களுக்கும் உனக்கும் வித்தியாசம் இருக்கிறதே' என்றான்.

'அவள் குறுக்கிட்டு, 'என்ன வித்தியாசம்?' என்று கேட்டாள்.

'தங்களுடைய விருப்பத்துக்கு விரோதமாக அவர்கள் கற்பழிக்கப்பட்டார்கள்; நீ அவ்வாறு கற்பழிக்கப்படவில்லை?' என்றான் அவன்.

அகல்யாவின் மென்மையான உள்ளத்தில் இது சுருக்கென்று தைத்தது. அதனால் ஏற்பட்ட வேதனையைத் தாங்க முடியாமல் அவள் 'கலகல'வெனக் கண்ணீர் உதிர்த்தாள்.'

வழுக்கி விழுந்தவள் மீண்டும் வாழ முற்படும்போது குறுக்கிடும் தடைகளுக்கு இது ஓர் உதாரணம்.

கண்கண்ட பிரச்சினைகளுக்கும் காவியத்திற் கண்ட அகலிகை கதைக்கும் இயைபுண்டு எனக் காட்டியதில் விந்தன் நியாயமான அளவு வெற்றி யீட்டிருக்கிறார். ஆனால் விந்தனது முயற்சியும் ஓர் எல்லைக்குள் நின்றுவிட்டது என்றே கூறவேண்டும்.

அகல்யா தற்கொலை செய்து கொள்வது உள்ளத்தை உருக்குவதாயிருப்பினும், ஆசிரியர் எழுப்பும் கேள்விகளுக்கு ஏற்ற விடையாக, முடிவாக அது அமையவில்லை. அல்லது ஆசிரியர் கேள்விகளைத் தக்கபடி எழுப்பவில்லை என்றும் கூறலாம்.

விந்தன் காட்டும் அகல்யா அவள் விரும்பும் விதத்தில் வாழ இயலுமா? 'நானிலத்தின் தீர்ப்பு' என்பதன் அர்த்தம் என்ன? இவற்றுக்கு நாம் விடை காண்பது இன்றியமையாதது.

அடியும் முடியும் - 1970

# 6

## தற்காலத் தமிழ் இலக்கியத்தில் விந்தன்

- கார்த்திகேசு சிவத்தம்பி

*விந்தன் எனும் புனைகதை ஆசிரியர் (சிறுகதை, நாவல் ஆசிரியர்) பற்றி நோக்கும்போது முனைப்புடன் தெரியும் முக்கிய உண்மை, அவர் மறைந்த காலத்தின் பின்னர் தோன்றிய இலக்கிய வரலாற்று நூல்கள், குறிப்புகளில் அவர் பெயர் இடம் பெறாததும், பெற வேண்டிய அளவு இடம் பெறாததுமாகும்.*

*தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் விந்தனின் இடத்தைப் பற்றி மதிப்பிடும் குறிப்பினைக் கொண்ட எனது 'தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்' முதலில் விந்தன் வாழ்ந்த காலத்திலேயே வெளிவந்தது.*

*உண்மையில் இலக்கிய ஆசிரியர் ஒருவரின் மறைவின் பின்னரே, அவர் பற்றிய கணிப்பினைப் பின்னோக்காகப் பார்த்து நன்கு செய்யலாம். அப்படி இருந்தும் விந்தன் 'மறைப்பு' விரும்பியோ விரும்பாமலோ நடந்தேறியேயுள்ளது.*

*விந்தனின் சிறுகதைகளுக்கான மதிப்பீடு ஒரு நூலிலாவது இருக்கின்றது என்ற திருப்தியுணர்வுடன் மேற்சென்று அவரது நாவல் துறை முக்கியத்துவத்தினை நோக்கினால், பாலும் பாவையும் என்ற (தொடர் கதையாக வெளிவந்த) நாவல் பற்றிய குறிப்பு எதனையும், சிட்டியும் சிவபாதசுந்தரமும் எழுதிய 'தமிழ் நாவல் - நூற்றாண்டு வரலாறும் வளர்ச்சியும்' எனும் நூலில் காண முடியவில்லை.*

*உயர்கல்வி மட்டங்களில் நடைபெறும் சிற்சில ஆராய்ச்சிகளிற் காணப்படும் தகாத செல்வாக்குகளுக்கு ஆட்படாத ஓர் விமரிசன நூல் என்ற வகையில் இந்த நூலின் ஆசிரியர்களின் கவனத்தைப்*

'பாலும் பாவையும்' ஈர்க்க ஏன் தவறியது என்பது மிக முக்கியமான ஒரு வினாவாகும்.

'கல்கி' கிருஷ்ணமூர்த்தி காலத்திலும் அவருக்குப் பின் வந்த காலத்திலும், ஜனரஞ்கப் பத்திரிகைகளில் எழுதிய பல்வேறு ஜனரஞ்சக எழுத்தாளர்களுள், பத்தொடு பதினொன்றாக எண்ணப்படும் அளவுக்கு மாத்திரமே இலக்கிய மதிப்புள்ள ஓர் ஆசிரியரா விந்தன்? - எனும் வினா தவிர்க்க முடியாதபடி எழுகின்றது.

விந்தன் தானே தனியனாக நின்று மனிதன் சஞ்சிகையை நடத்திய காலத்தை விட்டு நோக்கினாலும், கல்கியிலும், தினமணிக் கதிரிலும் விந்தன் பயன்படுத்தப்பட்ட முறைமையை நோக்கும் பொழுதும் அவரைச் சாதாரண சஞ்சிகை எழுத்தாளன் என்று கைகழுவி விட முடியுமா?

மேலும், பாலும் பாவையும் அத்துணை மிகமிகச் சாதாரண தொடர்கதை நாவலா?

விந்தனுக்கு 'நிலைத்த புகழை'த் தேடிக் கொடுத்ததே பாலும் பாவையும் தான் என்று கூறப்படுவதுண்டு. கல்கியில் தொடர் கதையாக வெளிவந்து பின் நூலாக வெளிவந்த இந்நாவல், 1968ஜுலைக்கு முன் ஒன்பது பதிப்புக்கள் பெற்றிருந்தது. 1969க்கு முன்னரே கன்னடத்தில் மொழி பெயர்க்கப்பட்டிருந்தது.

தமிழ் நாவலின் நூறாண்டு வளர்ச்சியில் முக்கியமானவர்கள் என்று தாம் கருதிய (இலக்கிய ஆர்வலர்களுக்கு அதுவரை தெரியாதிருந்த) பலரை எடுத்துக் கூறிய சிட்டி, சிவபாதசுந்தரம், விந்தனை - அதுவும் அவர்கள் இருவருமே பெரிதும் போற்றும் கல்கியால் மிக்கச் சிறப்புடன் புகழப் பெற்ற விந்தனை எவ்வாறு தவற விட்டனர் என்பதே சுவாரசியமான ஒரு வினாவாகும்.

இந்த வினாவுக்கான விடையின் நேரடித் தேடலுக்கு முன், சிறிது இடை நின்று, சிறுகதை இலக்கிய வரலாற்றின் அடிப்படையில் விந்தனுக்குரிய முக்கியத்துவத்தினை மீள் வலியுறுத்தல் செய்து கொள்வது முக்கியமாகும்.

'தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்' என்ற நூலில் விந்தன் பற்றிய மதிப்பீடு பின்வருமாறு அமைந்துள்ளது.

*தி.மு.க.வினரால் இலக்கிய நாயகர்களாக்கப்பட்டவர்களின் உண்மையான மனக் குமைச்சல்களையும் அவர்களின் இன்னல்களையும் விந்தன், தி.மு.க.வினர் எடுத்துக் காட்டாத முறையில் திறம்படவும் மனத்தைத் தைக்கும் வகையிலும் எடுத்துக் கூறினார்.... பொருளுடைமையே சமூக பேதங்களுக்குக் காரணம் என்ற கோட்பாட்டினை நம்பிய விந்தன், வர்க்க பேதங்களையும் அது தோற்றுவிக்கும் வறுமை நிலையையும் கண்டித்தார்.*

*சாதாரணமாக நிகழும் ஒரு சம்பவத்தினை விவரித்து அதன் அடியுண்மையை எடுத்துக் காட்டிய யதார்த்தத்தை இலக்கிய வழக்கினுள் மீண்டும் புகுத்தினார்.*

*தொழிலாளியாக வாழ்ந்த அவரது சொந்த அனுபவம், அவரது கதைகளுக்கு உயிரூட்டிற்று.*

*(மூன்றாம் பதிப்பு - பக். 92)*

*....... 1953க்குப் பின்னர் ஏற்படும் சிறுகதை வளர்ச்சியில் முன்னோடியாக விளங்கினார்.*

*1953க்குப் பின்னர் ஏற்படும் சிறுகதை வளர்ச்சியென இங்கு குறிப்பிடப்படுவது, ஜெயகாந்தன், சுந்தரராமசாமி போன்றோரது ஆக்கங்களினால் தோற்றுவிக்கப்பட்ட சிறுகதை வளர்ச்சிக் கட்டமாகும்.*

*விந்தனது எழுத்துக்களை விளங்கிக் கொள்வதற்குப் பின்வரும் குறிப்பு மிகமிக முக்கியமானதாகும்.*

*எழுத்தாளர்களில் பலர் வசிப்பது சென்னையாக இருந்தாலும், அவர்களுக்குச் சொந்த ஊர் என்று வேறொரு ஊர் இருக்கும். ஆனால் விந்தனுக்கு அப்படியல்ல. அவர் பிறந்தது, வளர்ந்தது, வாழ்ந்தது எல்லாமே சென்னைதான்.*

*ராணி முத்து - ஜூலை 1969. (பாலும பாவையும் நாவல் மறு பிரசுரம்) எழுத்தாளர் அறிமுகம், பக். 11.*

*இந்நூற்றாண்டின் ஐந்தாம், ஆறாம் தசாப்தங்களில் புனைக் கதைத் துறையில் ஏற்பட்ட முக்கிய விருத்திகளிலொன்று முற்றிலும் நகர்நிலைப்பட்ட வாழ்க்கையைச் சித்திரிக்கும் ஆக்கங்கள் தோன்றியமையே.*

முதலாளித்துவ வளர்ச்சிப்போக்கில் தொழிலுற்பத்தி மையங்களின் வளர்ச்சியும், அத்தகைய வளர்ச்சியில் நகரங்கள் (townships) பெறும் இடங்கள், இப்படியான நகரங்களில் அடிநிலை மக்களின் பாட்டாளிகளாக்கப்படுவது (proletarianization) மிக முக்கியமான ஆரம்பநிலைக் கட்டங்களாகும். இத்தகைய அபிவிருத்திகளின் பின்னரே உண்மையான வர்க்கப்பிரக்ஞை ஏற்படும். (Class conseionsess)

இலக்கிய வளர்ச்சியைப் பொறுத்தவரையில், முதலாளித்துவ வளர்ச்சியின் பின்னர் அத்தியாவசியப் படுத்தப்பெறும் யதார்த்தவாதம் (Realism) வர்க்க உணர்வு முனைப்புப்படுத்தப்படும் நிலையில், அதாவது உண்மையான வர்க்க நிலைப்பட்ட போராட்டம் நடக்கும் வரையில், விமர்சன யதார்த்தவாதமாகவே (Critical Realism) இருக்குமென்பர். சோஷலிச யதார்த்தவாதம் இதன் பின்னரே வரும். சிலர் அது சோஷலிசப் புரட்சியின் பின்னரே வரும் என்பர்.

விந்தன், கடைநிலைப்படுத்தப்பட்ட நகரத்துப் பாட்டாளிகள், கீழ் - மத்தியதர வர்க்கத்தினரையே தனது கதைப்பொருளாகக் கொண்டமையாலும், அந்தக் குழுவினர் தமது குழுமத்தின் தனித்துவத் தேடல் பற்றிய இன உணர்ச்சிவாத அரசியல் வழி செல்வதை ஏற்றுக் கொள்ளாதிருந்தமையாலும், தன்னை அறியாமலே விமர்சன யதார்த்தவாதியாக வேண்டிய நிலமையேற்பட்டது.

இனவாத அரசியலின் அகப்போலித்தன்மையை அறிந்து கொள்வதற்கான வாய்ப்புக்கள் அவர் வாழ்க்கையிலே இருந்தன. பிற்காலத்தில் தமிழ் அரசுக் கழகம், தி.மு.க. போன்ற கட்சிகளின் முக்கியஸ்தர்களாக முகிழ்ந்தோருட் சிலர் இவருடன் ஆரம்ப காலத்தின் அச்சுக் கோப்பாளர்களாக இருந்தனர் என அறியக் கிடக்கின்றது.

விந்தனின் இலக்கியப் பண்புகளென எடுத்துக் கூறப்படத்தக்க, மேற்பூச்சுள்ள பள பள வாழ்க்கையின் அடிப்படையான போலித் தன்மையை இனங் கண்டறியும் திறன், சமூகத்தின் பொருளாதார சமமின்மையை அழுத்தம் திருத்தமாகக் காட்டும் திறன் ஆகியவை அவர் எடுத்துக் கொண்ட கதைக் களத்தின் அடியாகவே வருவன என்பது நுண்ணியதாக ஆராயும்பொழுது தெரியவரும்.

விந்தனுடைய சிறுகதைகளையோ பாலும் பாவையும் நாவலையோ ஆராயும்பொழுது, மேற்குறிப்பிட்ட இரண்டையும் பற்றி எழுதும் பொழுதே அவரது முழு இலக்கியத் திறனும் வெளிவந்துள்ளது என்பதும் தெரியவரும். இந்த அமிசங்களை முனைப்புடன் சித்திரிக்கத்தக்க அங்கத உணர்வும், அதற்கான நடையாட்சியும் அவரிடமிருந்தன. நோக்கும் ஆற்றலும் காரண காரியத் தொடர்பாய் இணைந்திருந்தமையால் இலக்கியச் சுவை தானாகவே தெரிய நின்றது.

ஆனால் விந்தனிடத்திருந்த வேறு சில இயல்புகள் மேலே எடுத்துக் கூறப்பட்ட இயல்புகளின் தர்க்கரீதியான மலர்ச்சிக்கு இடம் கொடுக்கவில்லை. அந்த இயல்புகள் யாவை?

விந்தனின் வாழ்க்கை வரலாறு பற்றிய தெளிவான தகவல்கள் எதுவும் இலக்கிய உலகுக்குத் தரப்படாத இன்றைய நிலையில், விந்தனது வாழ்க்கைச் சம்பவங்களை மாத்திரம் ஆதாரமாகக் கொண்டு பின்வரும் இரு இயல்புகளை முக்கியமானவையெனக் கூறலாம்.

1. தனது அறிவுணர்வினாற் சரியென்று கொண்டவற்றினை நடைமுறைப் படுத்தும் எந்த ஒரு இயக்கத்திலும் நிலையாக நிற்காமை.

2. தனது அறிவுணர்வினாற் சரியெனக் கொண்டவற்றிற்கு முரணாக இலக்கிய நிறுவனங்களிற் கடமையாற்றியமை.

இந்த இயல்புகள் காரணமாக அவரது திறமைகள் பூரணமாக வளர்க்கப்படவில்லை. மேலும் வாழ்க்கை வாய்ப்பு அதிக மற்ற சூழலிலே தோன்றியமையால் தமது சமூக நிலைப்பாட்டினை அறிவு பூர்வமாக விளங்கிக் கொள்வதற்கும் மேலே வளர்த்தெடுப்பதற்குமான கல்விப் பிண்ணணியும் அவரிடத்திருக்கவில்லை.

புதுமைப் பித்தனிடத்தும் சுயேச்சையான போக்குக் காணப்பட்டது உண்மைதான். புதுமைப்பித்தனிடத்தும் நம்பிக்கைவரட்சி காணப்பட்டதுண்மைதான்.

புதுமைப்பித்தனும் விந்தனும் தங்கள் சாதனைகளை முற்று முழுதாக நிலைநாட்டும் (தவறான) நோக்குடன் சினிமாவுக்குட் புகுந்தவர்கள்.

புதுமைபபித்தன உயிரோடு மீளவில்லை விந்தன் உயிரோடு மீண்டது உண்மையே

ஆனால் அதன் பின்னர், அவர் ஆக்க இலக்கிய ஆற்றல மிகக் குறைந்தே இருந்தது இறுதிக்காலத்தில் அவா நடைச் சித்திரஙகளை எழுதுவதிலேயே தமது திறமையை வெளிக்காட்டிக் கொள்ளக்கூடியதாக இருந்தது.

ஆனால் புதுமைப்பித்தனிடம் இறுதிவரை ஸ்தாபனத்துககு பணிந்து போகாத திறன் இருந்தது, அத்துடன் தனது சமூக நிலைப்பாடு பற்றியும் இலக்கியத் தெளிவு இருந்தது விந்தனிடத்து இவை காணப்படவில்லை அதனால் விநதன் திறமைகளைக கல்கி நிறுவனமும் தினமணி நிறுவனமும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தின.

புதுமைப்பித்தன் வாழ்நத காலத்துக்கும் விந்தன் வாழ்ந்த காலததுக்குமுள்ள ஒரு முக்கிய வேறுபாடுண்டு புதுமைப்பித்தன் காலத்தில் முற்போக்கு இலக்கியவாதம் முனைப்புக் கொள்ளாத காலமாகும். ஆனால் விந்தன் காலத்தில் முற்போக்கு இலக்கிய இயக்கங்கள் ஓரளவேனும் இயங்கி வந்தன சரஸ்வதி, தாமரை போன்ற சஞ்சிகைகள் தொழிற்பட்டன. இடதுசாரி அரசியற் கட்சிகளும் அக்காலத்தில் இலக்கிய வளர்ச்சியில் ஆர்வம் காட்டின

விந்தனது சுயேச்சையான போக்கு அவரது இலக்கியத்திறமைகளை வளராது தடுத்தன

நகர்ப்புறத்து பாட்டாளி மக்களின் வாழ்க்கையை விமர்சன யதார்த்தப் பாணியிற் சித்திரிக்கும் இலக்கியச் செல்நெறியின் ஆரம்பகாலப் பயில்வாளர்களுள் ஒருவராக இருந்தமை காரணமாக விந்தனுக்கு இலக்கிய வரலாற்றில் இடமுண்டு

ஆனால இலக்கிய வரலாற்றாசிரியர்களே அவரை மறக்கச் செய்யுமளவிற்குத் தன்னைத் தானே சாதாரணமாக்கிக் கொண்டமை காரணமாக அவரது ஆரம்ப கால இலக்கியச் சேவைகள் மறக்கப்படலாயின.

இத்தகைய ஒரு பின்னணி காரணமாகத்தான் அண்மைக் காலத்தில் வெளிவந்த இலக்கிய மதிப்பீட்டு முயறசிகள் விந்தன்

பற்றிய ஆய்வுகளுக்கு இடமளிக்கவில்லை என்பது இப்பொழுது புலனாகின்றது.

விந்தன் தன் நடவடிக்கைகளினால் தனது பணநிலைமையோ, இலக்கியச் சிறப்பையோ வளர்த்துக் கொள்ளவில்லையெனலாம். இதுதான் விந்தன் வாழ்க்கையின் சோக அமிசமாகும்.

விந்தன் வாழ்க்கை, இலக்கியத் தொழிலாளிகட்குப் பாடங்கள் பல புகட்டுவதாக உள்ளது.

ஆக்க இலக்கிய கர்த்தன், தனது திறமை பற்றிய சுய மதிப்பீடுடையவனாக இருக்கும் அதே வேளையில் தன்னுடைய இலக்கிய நோக்குப் பற்றிய தெளிவு, தன்னுடைய படைப்புக்களின் பயன்பாடு பற்றிய தெளிவு ஆகியன பற்றிய விளக்கமுடையவனாகவும் இருத்தல் வேண்டுமென்பதை விந்தன் வாழ்க்கை வரலாறு எடுத்துக்காட்டுகின்றது.

தமிழில் ஆக்க இலக்கியம் வணிகமயப்பட்டிருக்கும் இன்றைய கட்டத்தில், அவ்வணிகமயப்பாடு காரணமாக வெகுசன இலக்கியத்துக்கும் (Mass literature) மக்கள் இலக்கியத்துக்குள்ள வேறுபாடுகள் வேண்டுமென்றே குழப்பியடிக்கப்பெறும் இன்றைய கட்டத்தில், இலக்கியத்தின் காத்திரமான பணிகளில் நம்பிக்கையுடையோர் தமது தேவைகளின் குவிமையத்தை (focus) சந்தேகமற நிர்ணயித்துக் கொள்ளுதல் அத்தியாவசியம்.

எழுத்தை வணிகமாக்கும் நிறுவனங்கள், அன்றாடக் காய்ச்சிப் பத்திரிகைக்காரர்களை அமர எழுத்தாளர்களாக்கவும், ஆற்றல் வாய்ந்த எழுத்தளர்களை வெறும் பத்திரிகைக்காரர்களாக்கவும் முயன்றுள்ளன. இதில் ஓரளவு வெற்றியும் ஈட்டியுள்ளன.

விந்தன் தனது பாலும் பாவையும் நாவலின் இறுதியில் நல்லவர்கள் வாழ்வதில்லை, நானிலத்தின் தீர்ப்பு எனக் கூறியுள்ளார் என எண்ணுகிறேன். நல்லவர்கள் வாழ்வதையே நானிலத்தின் தீர்ப்பாக்கும். துணிவுடன் இலக்கிய கர்த்தாக்கள் முனைந்து எழுதாதவரையில் அது நடந்தே தீரும்.

1982

7

# ஆபிசாப்பியாசம் - ஓர் ஆய்வு

**- டாக்டர் சாலை இளந்திரையன்**

**'பண்பாடும் பழம்பாட்டும்**
**இருக்கட்டுங்காண்.**
**பசிப்பாட்டுக்கு என்ன பதில்**
**சொல்லுகின்றீர்?'**

*என்று பண்பாட்டுக் காவலர்களை நோக்கிக் கேட்டவர்கள் சிறுகதை உலகில் சிலர்; மிகச்சிலர் (அதாவது அந்தரங்க சுத்தியோடு என்று சொல்லுவார்களே, அந்த உள்ளத்தூய்மையோடு கேட்டவர்கள்.) அந்த மிகச் சிலரில் குறிப்பிடத்தக்க ஒருவர் திரு. விந்தன்.*

*சமூகத்தையும் அதன் உள்ளோட்டத்தையும் உணராமலே, கதைகள் படித்துக் கதை எழுதுவோர் பலர்; சமூகத்தைக் கண்டும், கண்டதைக் கலையாக்காமல், பணத்தின் மேலும் பாராட்டின் மேலும் கடைக்கண்ணை ஓட்டுபவர்களும் பலர்; பொருளாதாரப் பிரச்னையா? அதைப்பற்றி எழுதுவது பிரச்சாரமன்றோ? என்று தீண்டாமை பாராட்டும் பெருமக்களும் பலர் உண்டு.*

*மனித வாழ்க்கையில் ஆட்டிப் படைக்கிறது பொருளாதார ஏற்றத் தாழ்வு. அதைக் கண்டிருந்தும், அதைப் பற்றி எழுதாமல் சாக்குப் போக்குச் சொல்வது போலித்தனம் என்பதை ஏனோ பலர் உணரவில்லை.*

*இப்போலி பேனாக்களின் வரிசையில் தம் பேனாவையும் சாத்திவிட விரும்பாத விந்தன், நாகரிகம், பக்தி என்னும் போர்வைகளைக் கிழித்தெறிந்து, அவற்றுள் அழிந்து கருகும்*

ஆயிரமாயிரம் மனிதப் பிராணிகளை மக்களின் பார்வையில் கொண்டு நிறுத்தினார். அல்ல, அல்ல; மக்களின் பார்வையை அந்த அப்பாவி உயிர்களின் பக்கமாகத் திருப்பினார்!

விந்தனின் கதைகள், புதிய சமூகப் பொருளாதாரக் கண்ணோட்டத்தின் பல்வேறு வடிவங்கள். நிலவிவரும் சீர்கேடுகளை உடன் வைத்துக் கொண்டே, நாகரிக வாழ்வு வாழ்வதாகப் பேசி வரும் பெரிய மனிதர்களின் கூட்டத்தில் தைரியமாக எழுந்து நின்று,

'நீங்கள் வாழ்வது நாகரிகத்தின் மேலல்ல; நரகத்தின்மேல்!'

என்று இடித்துரைக்கும் சொற்கணைகளே விந்தனின் கதைகள். ஆனால் டாக்டர் மு.வ. அவர்கள் கூறியுள்ளது போல, 'விந்தன் படைக்கும் பாத்திரங்கள் பெரும்பாலும் அப்பாவிகளே. ஆயினும் அவர்களைப் பற்றிப் படிக்கும் மனங்கள் புரட்சி மனங்களாகவே மாறுகின்றன!'

இந்த அப்பாவிகளில் ஒருவர்தான் வாத்தியார் வைத்திய லிங்கம். அவரைப் படம் பிடிப்பது ஆபீசாப்பியாசம்.

மாதா கோவில் மணி ஒன்பது அடிப்பதுதான் தாமதம், வாத்தியார் வைத்தியலிங்கம் தலைப்பாகையை எடுத்துத் தம் தலையில் வைத்துக் கொண்டு 'சரி, நான் போகிறேன்' என்பார் தம் மனைவியிடம். 'அபசகுனம் மாதிரி போகிறேன். போகிறேன் என்கிறீர்களே? போய் வருகிறேன் என்று சொல்லுங்கள்' என்று திருந்துவாள் அவள்.

'ஆமாம், நான் போய்விட்டால் உலகமே அஸ்தமித்து விடுமாக்கும்?' என்பார் வாத்தியார் வெறுப்புடன்.

பள்ளிக்கூடத்தை நோக்கி நடையைக் கட்டுவார் வைத்தியலிங்கம். வழியெல்லாம் அவருக்குத் தெரிந்தவர்கள், அவரிடம் படித்தவர்கள் இப்படி எத்தனையோ பேர் அவரைச் சந்திப்பார்கள். ஒவ்வொருவரும், நாள்தோறும் கேட்கும் அந்தக் கேள்வியை - 'சௌக்கியந்தானே?' என்னும் கேள்வியை விடாமல் கேட்டு வைப்பார்கள் வாத்தியாரும் சளைக்காமல், சம்பிரதாயத்துக்காக 'சௌ...க்...கி..யந்...தான்' என்று ஒரு பச்சைப் பொய்யைச் சொல்லிவிட்டு மேலே நடப்பார்.

இடையே கோயில்கள் வேறு குறுக்கிடும். வாத்தியார் வைத்தியலிங்கம் பிள்ளையைவிட எத்தனையோ விதத்தில் உயர்ந்தவர்கள் பலர். காரிலும் மற்ற வாகனங்களிலும் அதே ரஸ்தாவில்தான் சென்று கொண்டிருப்பார்கள். அவர்களெல்லாம் தங்களைக் குறுக்கிடும் கோயில்களைப் பற்றிக் கவலைப்படுவது கிடையாது நமது வைத்தியலிங்கமோ. எந்தக் கோயிலைக் கணடாலும் சரி உடனே தமது பாதரட்சைகளைக கீழே விட்டு விட்டு, பவ்வியமாக ஒரு கும்பிடு போட்டுவிட்டுத்தான அப்பால செல்வாா

இதில் ஆச்சரியம் என்னவென்றால், கோயிலுக்குக் கோயில் நின்று தொழுது சென்ற வாத்தியாா பூலோகத்தில நரகத்தைக் கண்டார்; தொழாமலே சென்றவர்களோ சொர்க்கத்தைக் கணடாா்கள்.

ஆயினும் வாததியார் வைத்தியலிங்கம் எத்தனையோ விதத்தில் கொடுத்து வைத்தவர்.

தங்களுடைய பிள்ளைக்குக் கல்யாணம் ஆகும் வரை தாங்கள் இருந்தால் போதுமென்று பகவானை அல்லும் பகலும் அனவரதமும் பிரார்த்தனை செய்து கொண்டு வந்த அவருடைய பெற்றோர், அவருக்கு ஏழாவது குழந்தை பிறந்துங்கூட உயிருடன் இருந்தார்கள்

கல்யாணம் பண்ணிக்கொண்டு புக்ககம் போன தங்கை, அண்ணாவை நீண்ட நாட்கள் பிரிந்திருக்க மனமில்லாமலோ என்னவோ.. அடுத்த வருஷமே விதவைக் கோலத்துடன் பிறந்தகம் வந்து சேர்ந்துவிட்டாள். அவருடைய மனைவி மஙகளமும் சீதனமாக ஒன்றும் கொணடு வராமல் போகவில்லை. தன்னுடன் பெற்றோரை இழநத இரண்டு தங்கைமாரைக் கட்டி கட்டியாகக் கொண்டு வந்திருந்தாள்.

ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் அவர் ஏனோ கொடுத்து வைக்கவில்லை அதாவது, அவருக்குப் பிறந்த ஏழு குழநதைகளில், நாலாவதாகப் பிறந்த பையன் மட்டும் தான் உயிரோடு இருந்தான். அவனுக்கு இப்போது ஆறாவது வயது நடநது கொண்டிருந்தது ஆக எட்டு ஜீவன்களும் வாத்தியார் வைத்தியலிங்கத்தின் வரும்படியை எதிர்பார்த்துத் தங்கள் காலத்தைக் கழித்து வந்தன.

இந்த லட்சணத்தில்தான் தன்னுடைய ஏகபுத்திரனான ஜயச்சந்திரனுக்கு நல்ல முறையில், அட்சாரப்பியாசம் செய்து வைக்க

வேண்டுமென்று விரும்பினாள் மங்களம். எதிர் வீட்டுக் குழந்தைக்கும் பக்கத்து வீட்டுக் குழந்தைக்கும் கோலாகலமாக அட்சராப்பியாசம் நடக்கும்போது, தன் பிள்ளைக்கும் அதை நடத்திட வேண்டுமென்று அவள் துடிப்பதில் வியப்பில்லையே! எப்படியும் தாயல்லவா? கருவேப்பிலைபோல் ஒன்றே ஒன்று!

வழக்கம் போல் தன் கணவரிடம் ஆரம்பித்தாள் மங்களம். 'ஆமாம், நம் ஜயச்சந்திரனுக்கு ஐந்து வருஷங்ள் பூர்த்தியாகி ஆறாவது வருஷங்கூடப் பிறந்துவிட்டதே! இன்னும் எப்போதுதான் அவனுக்கு நீங்கள் அட்சராப்பியாசம் செய்து வைக்கப்போகிறீர்கள்?'

'சரிதான் போடி, அது ஒன்றுதான் குறைச்சல் நமக்கு.'

'என்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்? இருப்பது ஒரு குழந்தை.'

'நான் மட்டும் இரண்டு என்றா சொல்லுகிறேன்?'

'உங்கள் பரிகாசமெல்லாம் இருக்கட்டும்; கேட்கிற கேள்விக்குப் பதில் சொல்லுங்கள்.'

'என்னடி, உனக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது? வயிற்றுச் சோற்றுக்கே வரும்படி போதாமல், மாதம் பிறந்தால் பத்தும் இருபதுமாகக் கடன் வாங்கிக் காலத்தள்ள வேண்டியதிருக்கிறது; அட்சராப்பியாசம் என்கிறாயே?'

'ரொம்ப அழகாய்த்தான் இருக்கிறது. ஊர்ப்பிள்ளைகளெல்லாம் உங்களைக் கொண்டு படிக்க வேண்டும்; உங்கள் பிள்ளைமட்டும் தற்குறியாகத் திரிய வேண்டுமாக்கும்?'

'அதற்கென்ன, அப்படியா விட்டு விடுவேன்? பெற்றெடுத்த தோஷத்துக்காக அவனுக்கு அட்சராப்பியாசம் செய்து வைக்காவிட்டாலும் ஆபீசாப்பியாசமாவது செய்து வைக்க மாட்டேனா?'

'அதென்ன, ஆபீசாப்பியாசம்?'

'சரியாப் போச்சு. தயவு செய்து நீ கொஞ்சம் நேரம் "பசாமலிரேன். அதைப்பற்றி அப்புறம் பேசிக் கொள்ளலாம். இப்போது வீட்டுச் செலவுக்கு இந்த மாதம் யாரிடம் இருபது ரூபாய் மேற்கொண்டு கடன் வாங்கலாம் என்று யோசித்துக்

கொண்டிருக்கிறேன். எனக்குத் தெரிந்தவர்களிலே ஒருவர் கூட பாக்கி இல்லை; எல்லோரிடமும் வாங்கியாகிவிட்டது. புதிதாக யாரையாவது பிடிக்க வேண்டும். யாரைப் பிடிப்பது என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருக்கிறேன். இந்தச் சமயத்தில் வந்து நீ என் கழுத்தை அறுக்கிறாயே' என்று எறிந்து விழுந்தார் வாத்தியார்.

'உங்களுக்கு ஏன் பெண்டாட்டியும் பிள்ளையும் என்று எனக்குத் தெரியவில்லை' என்றாள் அவள்.

இந்தச் சம்பவம் நடந்து ஏறக்குறைய ஒரு மாதம் ஆகியிருக்கும். என்றுமில்லாத திருநாளாய் அன்று வாத்தியார் பள்ளிக்கூடத்திலிருந்து வரும்போதே ஆனந்த பரவசத்துடன் வந்தார். அந்தக் கோலத்தில் அவரைக் கண்ட மங்களம் 'என்ன விசேஷம்?' என்று உற்சாகத்துடன் கேட்டுக் கொண்டே சமையலறையிலிருந்து வெளியே வந்தாள்.

'ஏதாவது விசேஷம் இல்லாமல் நான் இப்படி இருப்பேனா? நீயுந்தான் இத்தனை வருஷங்களாக என்னுடன் குடித்தனம் செய்து கொண்டு வருகிறாயே, என்னைப் பற்றிக் கொஞ்சமாவது தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறாயா? வாழ்க்கையில் என்றைக்காவது ஒருநாள் நான் சந்தோஷமாயிருக்கிறேனென்றால், அன்று எங்கேயாவது பத்தோ இருபதோ கடன் வாங்கியிருப்பேன்...!'

'பேசுகிறீர்களே நீங்களும் ஓர் ஆண்பிள்ளை மாதிரி. பையனின் அட்சராப்பியாசத்திற்காகத்தான் ஏதாவது ஏற்பாடு செய்துவிட்டீர்களாக்கும் என்று நான் கேட்க வந்தால்...?'

'கவலைப்படாதே, அதற்கும் ஏற்பாடு செய்துவிட்டேன்!'

'என்ன, பணத்திற்கா?'

'ஆமாம், அப்படித்தான் வைத்துக் கொள்ளேன்.'

'எவ்வளவு?'

'மாதம் பதினைந்து ரூபாய்.'

'என்ன பிதற்றுகிறீர்கள்? 'மாதம் பதினைந்து ரூபாய் வாங்கி அட்சராப்பியாசமா?'

'அட்சராப்பியாசம் என்னடி, அட்சராப்பியாசம். இதோ பார், அடேய் சந்தர்! சந்தர்...!'

'என்ன அப்பா' என்று கேட்டுக்கொண்டே அங்கே வந்தான் பையன். 'கோடி வீட்டுக் கோடீஸ்வர அய்யரை உனக்குத் தெரியுமா?'

'தெரியுமே!'

'நாளையிலிருந்து நீ அவருடன் போ. அவர், தம் ஆபீசில் உனக்கு ஒரு வேலை வாங்கிக் கொடுப்பார். என்ன வேலை தெரியுமா? மானேஜர் மேஜையின்மேல் இருக்கும் மணி டங் என்று ஒலித்ததும், அவருக்கு முன்னால் நீ போய் பய பக்தியுடன் நின்று, 'ஏன் சார்?' என்று கேட்க வேண்டும்; அவர் வருவதற்கு முன்னால் நீ போய் பய பக்தியுடன் நின்று, 'ஏன் சார்?' என்று கேட்க வேண்டும்; அவர் வருவதற்கு முன்னால் அவருடைய மேஜை, நாற்காலி முதலியவற்றைத் துடைத்து வைக்க வேண்டும். என்ன தெரிந்ததா?'

'தெரிந்தது அப்பா!'

பையன் போய்விட்டான். அவன் போனதும் மங்களம் இடுப்பில் ஒரு கையை வைத்துக்கொண்டு, 'இதுதான் அட்சராப்பியாசமா? இல்லை, கேட்கிறேன்!' என்று இன்னொரு கையை வாத்தியாருக்கு முன்னால் நீட்டிக் கேட்டாள்.

'யார் சொன்னது? இது ஆபீசாப்பியாசண்டி ஆபீசாப்பியாசம்' என்றார் சிரித்துக்கொண்டே.

- இதுதான் 'ஆபீசாப்பியாசம்!'

'தந்தை மகற்கு ஆற்றும் நன்றி, அவையத்து முந்தியிருப்பச் செயல்' என்று படித்திருக்கும் நமக்குத் தமது ஒரே மைந்தனின் படிப்பைப் பற்றி வைத்தியலிங்கம் செய்த முடிவு புதுமையாக, புலப்படாததாகக் கூட இருக்கிறது. இல்லையா? ஆனால் ஆசிரியராக வாழ்வு முழுதும் பணியாற்றி வந்திருக்கும் நமது வைத்தியலிங்கம் மேற்படி குறளைப் படிக்காமலும் உணராமலுமா இருந்திருப்பார்?

படித்திருந்தால், உணர்ந்திருந்தால் இப்படிச் செய்வாரா? 'பிச்சைப் புகினும் கற்கை நன்றே' என்பதை உணராத தந்தை, - தமது மகனுக்குச் செய்ய வேண்டிய கடமையை மறந்த தந்தை! என்று ஆகாய - லட்சியவாதிகள் குரல் எழுப்புவார்கள். ஆமாம், இந்தப் புத்தக

- லட்சியவாளர்கள் எப்போதுமே 'செய்யலாமா?' என்று கேள்வி கேட்பார்சள் - கூடாது என்றும் தாங்களே பதில் சொல்லிக் கொள்வார்கள்!

அவர்தான் செய்து விடடாரே? ஏன செய்தார்? - இதுதான் நியாயமாக எழ வேண்டிய கேள்வி இந்தக் கேள்வியைத்தான் எழுப்புகிறது ஆபீசாபபியாசம் ஆனால் எவவளவு நயமாக எழுப்புகிறது பாருங்கள்.

கோயிலுக்குக் கோயில் நினறு தொழுது செனற வாத்தியார் (வைத்தியலிங்கம்) பூலோகத்தில் நரகத்தைக் கண்டார். ஆனால் கோயிலை இடி! சாமியாவது மண்ணாவது? எனக்கு வாழ்வு தராத தெய்வங்களை நான் ஏன் குமபிட வேண்டும்! என்று வீர முழக்கம், நாத்திக முழக்கம் செய்தாரா. வைதகியலிங்கம்? இல்லை; ஏன்?. அவர் ஒரு அப்பாவி.

கடன் வாங்குகிற நாள்தான் அவருடைய வாழவிலேயே மகிழ்ச்சியான நாள்.

என்றைக்காவது ஒரு நாள் நான் சந்தோஷமா இருக்கிறேனென்றால், அன்று எங்கேயாவது பததோ இருபதோ கடன வாங்கியிருப்பேன் என்று அவரே சொல்லுகிறார்.

ஆனால் அந்த அப்பாவி என்ன செய்கிறார்? நான் படிததேன்; பலர் பலரைப் படிப்பித்தேன. என் தொழிலை மீ உயர் தொழில் எனறு பாராட்டினார்கள்; உஙகளால் அலலவோ நாங்கள் உயர்நதோம் என்று பலர் சொன்னார்கள்

ஆயினும் எனன? எல்லோருக்கும் வாரி வாரி (அறிவை) வழஙகும் என் வாழ்வு பட்டினி வாழ்வாக, கடன் வாஙகும வாழவாக, கட்டிய மனைவியும 'நீர் ஓர் ஆண்பிள்ளையா?' -என்று கேடகும் வாழ்வாக அல்லவா அமைந்துள்ளது!

என் மகன் படித்தால் அவனுக்கு மட்டும் இநதச் சமூகம் வாழ்வளிக்கும் என்று நான் எப்படி நமப முடியும்? யான பட்ட பாடு என் மகனும் ஏன் பட வேணடும்? வெறும் பேரையும் பட்டத்தையும் சூட்டி வயிற்றைக் காயப் போடும் இரடடைப் போக்கு சமூகப் பெரியவர்களுக்கு நாகரிகமாக இருககலாம ஆனால எங்களுக்கு அது உயிர்வதையாக அல்லவோ இருக்கிறது இந்த நிலையையா

என் மகனுக்கும் ஏற்படுத்திவிட்டுப் போகச் சொல்லுகின்றீர்கள்? அதுவா ஒரு தந்தையின் கடமை என்று நினைக்கின்றீர்கள்?

இத்தனை கேள்விகளையும் வாத்தியார் வைத்தியலிங்கம் நம்மை நோக்கிக் கேட்கவில்லை. அவர் செய்த ஒரு செயல் - அவனுக்கு அட்சராப்பியாசத்துக்குப் பதிலாக அவர் செய்ய வைத்த - ஆபீசாப்பியாசம் இத்தனை கேள்விகளையும் நம்முள் எழுப்புகிறது.

இந்த அரிய சாதனைதான் - விந்தனின் வெற்றிக் கருத்துக்களைப் பிறர் நெஞ்சில் கொண்டு கொட்டுவது பிரச்சாரம்; கருத்துக்கள் அவரவர் நெஞ்சிலேயே மலர்ந்து எழும்படிச் செய்வது கலை. சிறந்த சிறுகதைக் கலைஞர் என்று விந்தன் புகழ்பெற்று விளங்குவது இதனாலேதான்.

'ஆபீசாப்பியாசம்' விந்தன் கதைகள் என்னும் பெரும்பானைச் சோற்றில் ஒரு சோறு. ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்த்தால் போதுமல்லவா?

சிறுகதைச் செல்வம்

# 8

## புகழுரை

**- அகிலன்**

*பெரும்பாலும் ஆங்கிலம் படித்த மத்திய தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களே பத்திரிகைகளில் சிறு கதைகளையும் கட்டுரைகளையும் எழுதிக் கொண்டிருந்த காலம் அது. கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஆனந்த விகடன் ஆசிரியப் பொறுப்பிலிருந்து விலகித் தமது பத்திரிகையான கல்கியை நடத்தி வந்தார்.*

*அப்போதுதான் தமிழ் வாசகர் உலகத்துக்கு விந்தன் எழுத்தாளர் என்ற முறையில் அறிமுகமானார். கல்கியில் குழந்தைகள் பகுதிக்கு அவ்வப்போது எழுதி வந்த விந்தன், தமது பாலும் பாவையும் என்ற நாவலின் வாயிலாகத் தமிழ் வாசகர் உலகையே வியப்புறச் செய்தார் என்று கூற வேண்டும்.*

*'யார் இந்த விந்தன்?' என்று பலரைக் கேட்க வைத்த நாவல் அது. கதையின் கருப்பொருள், எழுத்து, நடை, உருவம் எல்லாவற்றிலும் ஒரு புதுமை தெரிந்தது. அந்த நாவலில் இலக்கியப் படைப்புக்கு வேண்டிய உயிர்த் துடிப்புக் காணப்பட்டது.*

*அவரைப் பற்றி விசாரித்ததில் சில தகவல்கள் கிடைத்தன. அப்போது இளைஞராக இருந்த அவர் திரு. மாசிலாமணி முதலியார் நடத்தி வந்த தமிழரசு ஆனந்த போதினி முதலிய பத்திரிகைகளில் அச்சுக்கோப்பவராகப் பணியாற்றினாராம். ஆனந்த விகடனிலும் அதே வேலையில் இருந்து விட்டுப் பிறகு கல்கி அச்சகத்தில் அச்சுக்கோப்பு வேலைக்கு வந்திருக்கிறார்.*

*பலரது எழுத்துக்களை ஆர்வத்தோடு படிப்பதில் ஆர்வம் காட்டிய அவர், அந்தக் காலத்தில் தாமே ஓர் எழுத்தாளராக மலரப் போவதை அறிந்திருப்பாரோ என்னவோ!*

கல்கி பத்திரிகை அவர் வளர்ச்சிக்கு ஏற்ற நாற்றங்காலாக அமைந்தது. அதிலேயே அவர் சிறு கதைகளும் எழுத முற்பட்டார்.

கல்கியில் வெளி வந்த அவர் கதைகள் தொகுக்கப் பெற்று முல்லைக் கொடியாள் என்ற பெயரில் நூலாகவும் வெளி வந்தது. தமிழ் வளர்ச்சிக் கழகத்தாரின் முதற்பரிசைப் பெற்றது. அவருடைய அந்த முதல் சிறுகதைத் தொகுப்பு.

மேல் மட்டத்தாரையும் நடுத்தர வர்க்கத்தாரையும் விட்டு விட்டு ஏழை எளிய மக்களின் வாழ்க்கைப் பிரச்னைகளைத் தம் கதைகளுக்குக் கருவாகக் கொண்டிருந்தார் விந்தன். பெரும்பாலான வாசகர் கூட்டத்தை அவர் கவர்ந்ததற்கு முக்கியமான காரணம், அவருடைய கதைமாந்தர்கள் மற்ற எழுத்தாளர்களின் மாந்தர்களிலிருந்து வேறுபட்டதே ஆகும்.

இடைக் காலத்தில் மனிதன் என்று ஒரு பத்திரிகை நடத்தினார், மற்றவர்களால் புறக்கணிக்கப்பட்ட அடி மட்டத்து மக்களின் குரலாக அது ஒலிக்கத் தொடங்கியது. பொருளாதாரச் சுரண்டலாலும் சமூக எற்றத் தாழ்வாலும் அவதிப்படும் மக்களுக்குப் பரிந்து பேசும் வலிமை மிக்க கருவியாக மனிதன் விளங்கியது. ஆனால் வெறும் எழுத்தாற்றலையும் ஆர்வத்தையும் மட்டும் வைத்துக் கொண்டு பத்திரிகை நடத்த முடியுமா? பெரிய முதலீடு, இயந்திர வசதி, விளம்பர வாய்ப்பு, விற்பனைக்கான வழிமுறைகள் முதலியவற்றைக் கொண்டிருந்த தமிழ்ப் பத்திரிகை உலகோடு போட்டியிட்டு அவரால் வெற்றி பெற முடியவில்லை.

கடைசியில் அவர் தினமணி கதிர் பத்திரிகையில் சேர்ந்து பணியாற்றினார். அந்தக் காலத்தில் அவருடைய எழுத்துக்கள் - சிறுகதைகள், நாவல்கள் முதலியவை - மிகுதியாக வெளிவரவில்லை. என்றாலும் ஓரளவு பொருளாதாரப் பாதுகாப்புடன் அவர் வாழ்வதற்கு அந்த வேலை துணை புரிந்திருக்க வேண்டும்.

இன்று திரு. விந்தன் நம்மிடையே இல்லை. அவருடைய எழுத்துக்கள் இருக்கின்றன. அவற்றைப் பதிப்பித்து மக்களிடையே பரவச் செய்வதுதான் அவர் நினைவுக்கு நாம் செலுத்தும் சிறந்த அஞ்சலியாகும்.

1982

9

# ஒரு மதிப்பீடு

- எஸ். தோத்தாத்ரி எம்.ஏ.

'கோரிக்கை யற்றுக் கிடக்கு தண்ணே இங்கு வேரிற் பழுத்த பலா' என்றார் பாரதிதாசன். இந்த நிலை விந்தனுக்கு பொருத்தம். ஏனென்றால் இலக்கிய விமர்சகர்களின் கடைக்கண் பார்வைக்கு இலக்காகாத சிறுகதை ஆசிரியர்களுள் விந்தனும் ஒருவர். 1916ல் தோன்றி 1975ல் மறைந்தவர் விந்தன். சென்னையிலேயே முழுக்கவும் வாழ்நாளைக் கழித்தவர். ஒரு தொழிலாளக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர். அவர் மனிதன் என்ற பத்திரிகையை நடத்தியவர்.

கல்கி, விகடன் ஆகிய இதழ்களில் பல சிறுகதைகளை எழுதியுள்ளார். அவருடைய சிறுகதைகள் என்று இன்று தொகுப்புகள் மூலமாகக் கிடைக்கக் கூடியவை சுமார் 115 கதைகள் உள்ளன. இவற்றை விந்தன் காலச் சூழ்நிலைகளில் (எ) கண்டு ஆராய்ந்து எந்தெந்தப் போக்கு (பி)களை இவை பெற்றிருக்கின்றன என்பதைக் காண்பதே இக்கட்டுரையில் மேற்கொள்ளப்படுகிறது.

விந்தன் வாழ்ந்த காலம் என்பது தமிழ் நாட்டில் பல மாறுதல்கள் நிகழ்ந்து கொண்டிருந்த காலம். விந்தன் பிறந்த ஆண்டான 1916ல் தொடங்கி, அவர் மறைந்த ஆண்டான 1975 வரையுள்ள காலகட்டத்தின் சமூகப் போக்கினை நாம் நன்கு அறிவோம்.

சர்வதேச ரீதியில் முதலாளித்துவம் அதன் உச்சக்கட்டமான ஏகாதிபத்தியத்தை அடைந்த காலம் இது.

முதலாளித்துவ சமூக அமைப்பில் பலம் குன்றிய இடத்தில் சோஷலிசப் புரட்சி தோன்றிய காலம் இது. அது வெற்றி பெற்று ஒரு

பலம் பொருந்திய முதலாளித்துவ எதிர்ப்பு அணி உருவான காலமும் இதுவே. இந்தக் காலத்தில் முதலாளித்துவம் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக, பல நாடுகள் அவதிக்குள்ளாயின; இவற்றின் விளைவாகப் போரும் வாணிபப் போட்டியும் அதிகரித்தன. உலக அமைதி பல இராணுவ முகாம்கள் என்ற கொள்ளிவாய்ப் பிசாசுகளினால் சூழப்பட்டிருந்தது.

இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகளில், ஏகாதிபத்தியம், காலனி ஆதிக்கம் என்ற அவதாரம் எடுத்து ராமராஜ்யம் நடத்தியபடியால், இங்கு விடுதலைப் போராட்டம் மிகவும் தீவிரமடைந்தது.

காந்தியடிகளின் நாடு தழுவிய சத்தியாக்கிரகப் போராட்டம், திலகர் இந்தியச் சட்டம், தீவிர காங்கிரஸ் இயக்கம், 1942 ஆகஸ்ட் போராட்டம், கிரிப்ஸ் தூது கோஷ்டி என்ற பல்வேறு வடிவங்களில் அந்நிய எதிர்ப்புப் போராட்டம் நிகழ்ந்து கொண்டிருந்தது.

இந்தப் போராட்டத்தில் இந்திய உழைக்கும் மக்கள் தீவிரமான பங்கு பெற்றனர். அவர்கள் அதிகமாகப் பங்கு பெற பங்கு பெறத்தான் தேச விடுதலை இயக்கத்தின் வீச்சும், வலிவும் அதிகரித்தது. இந்தச் சக்திகளின் செயல்கள். இந்தியாவிற்கு விடுதலையைப் பெற்றுத் தந்தன என்பதில் ஐயமில்லை. விடுதலை பெற்ற பின்பு உள்ள பாரதம் என்பது நிர்மாணத் திட்டங்களில் முதலாளித்துவத்தையும், சோஷலிசத்தையும் ஒன்றாக்கிய ஒரு மூன்றாம் வழியை மேற்கொண்டு வருகிறது.

எனவே தற்பொழுதைய இந்தியாவின் பிரச்னைகள் என்பவை, இந்த இரண்டில் எதற்கு அதிக அழுத்தம் கொடுப்பது என்பதுதான்.

இந்தக் காலப் பகுதியை சமூக இயல் அடிப்படையில் காணும்பொழுது வர்க்க முரண்பாடுகள் தீவிரமான காலம் என்று கூறலாம். இந்த முரண்பாடுகள் தமிழகத்திலும் தீவிரம் பெற்று விளங்குகின்றன. இவற்றைத் தமிழ்ச் சிறுகதை ஆசிரியர்கள் எந்த அளவிற்குச் சுவீகரித்துக் கொண்டிருக்கின்றனர் என்பதைக் காணும் பொழுது விந்தனின் ஸ்தானம் நமக்குத் தெளிவாக விளங்கிவிடும்.

இந்த முரண்பாடுகளைப் பிரதிபலித்து என்ற அடிப்படையில் அணுகினால். இவை இருப்பதாகவே காட்டிக் கொள்ளாத

எழுததாளர்கள் உண்டு. முற்றிலும் கற்பனை வயப்பட்ட அல்லது அகலப்படுத்தப்பட்ட சிறு கதைகளைப் படைத்தவர்கள் ஏராளமாகத் தமிழ்ச் சிறுகதை உலகில் உள்ளனர்; இந்த முரண்பாடுகளைக் காணாமல் மேல் போக்காகத் தென்படும் சமூக நடப்புகளை உள்ளவாறே சித்திரிக்கும் சிறுகதையாசிரியர்களும் உள்ளனர்; இந்த முரண்பாடுகளினால் எழும் பிரச்சினைகளை வன்மையாகச் சாடி, கேலியும் கிண்டலும் செய்யும் எழுத்தாளர்களும் உள்ளனர்; இவற்றைச் சமூக ரீதியில் புரிந்து கொண்டு, எந்த வர்க்கம் முற்போக்கானதோ அதன்பால் நின்று எழுதும் சார்பு நிலை எழுத்தாளர்களுள்ளனர்.

இந்தப் போக்குகள் தமிழ்ச் சிறு கதையில் கடந்த 60 ஆண்டுகளாக இடம் பெற்று வரும் சமூக நிகழ்ச்சிகளின் பிரதிபலிப்பேயன்றி வேறில்லை. இதில் விந்தன் எந்தப் பிரிவை அல்லது அம்சத்தை மிகவும் அதிகமாகப் பிரதிபலிக்கிறார் என்பதைக் காண்போம்.

விந்தன் சிறுகதைகள், நாவல்கள் எல்லாமே, ஒரு குறிப்பிட்ட நோக்கிலிருந்து அவரால் படைக்கப்பட்டவை. அவரது நோக்கம் என்ன என்பதை அவருடைய வாழ்க்கைக் கண்ணோட்டத்திலிருந்தும், இலக்கிய நோக்கிலிருந்தும் நாம் கண்டுகொள்ள முடிகிறது.

வாழ்வின் கசப்பான அனுபவங்களை முழுவதுமாகப் பெற்றவர் என்ற காரணத்தினால் அவர் வாழ்வு நோக்கு என்பது மிகத் தெளிவாக உருவாகியுள்ளது.

அவர் சாதாரண மனிதனுக்காக இலக்கியம் படைக்கப் புகுந்தவர். இதன் அடிப்படையில் உலக இயக்கங்களை மிகப் பொதுவாக இரண்டு பிரிவுகளாகப் பிரித்துக் காணும் மனப்போக்கு அவரிடம் உள்ளது. உழைப்பவனுக்கும், வீணில் உண்டு களித்திருப்பவனுக்குமான போராட்டமாக உலகைக் காண்கிறார் விந்தன். அவர் கூறுகிறார் :

> 'ஒரே வார்த்தையில் சொல்லப்போனால் நம் உழைப்புக்கேற்ற மதிப்பு – அந்த மதிப்பைப் பெறுவதற்குத்தான் இன்று கடவுளுடன் நாம் போராடுகிறோம்; மதத்துடன் நாம் போராடுகிறோம்; கலையுடன் நாம் போராடுகிறோம்.

'இந்தக் கடுமையான போராட்டத்தில் நாம் வீழ்ந்தாலும் சரி, நம் சந்ததிகளாவது வாழவேண்டும்.'

(சமுதாய விரோதி - 7-8)

*இந்தப் போராட்டத்தில் விந்தன் மிகத் தெளிவாக ஒரு நிலை உள்ளவராகவே காணப்படுகிறார். எந்த ஒரு இடத்திலும் அவர் மார்க்சியத்தை ஏற்றுக் கொண்ட எழுத்தாளராகத் தன்னைக் காட்டிக் கொள்ளாவிட்டாலும் ஏழைகள், மத்திய வர்க்கத்தில் கடை நிலையில் உள்ளவர்கள் ஆகியோரின் உரிமைக் குரலை அவர் எதிரொலிக்கிறார். மேல் தட்டு மக்களின் வாழ்வை அவர் நிராகரிக்கிறார்.*

*'அய்யா, பொய்யும் புரட்டும் இல்லாத லோ சர்க்கிள் எனக்குப் போதும் - அவர்கள் வாழ்ந்தால் நான் வாழ்வேன்.'*

*(ஏமாந்துதான் கொடுப்பீர்களா? - 8)*

*இந்த முறையில் சமூகத்தில் தாழ்ந்த மட்டத்தில் வாழ்பவர்கள் சார்பில் நிற்பவராக விந்தனின் வாழ்வு நோக்கு அமைந்துள்ளது. இவ்வாறு கூறும்பொழுது அவரை ஒரு சோஷலிசவாதி என்று கூறிவிட முடியாது. இருந்த போதிலும் சோஷலிசக் கோட்பாடுகளை மனிதாபிமான நோக்கில் ஏற்றுக் கொண்டவராக விந்தன் விளங்குகிறார். அவருடைய 'காதலும் கல்யாணமும்' என்ற நாவலில், ஆப்த சகாயம் என்பவருடன் மணி என்ற வாலிபன் பேசுகையில் பின்வருமாறு கூறுகிறான் :*

*'சோற்றுக்கு இருக்கும் பலல்கள் கூட இப்போது அதைப்பற்றி 'சோஷலிசம்' பேச ஆரம்பித்து விட்டார்கள் என்பது உங்களுக்குத் தெரியாது போல் இருக்கிறது. ஏனெனில் அவர்களும் புரிந்துகொண்டுவிட்டார்கள்' (பக். 225)*

*இந்த மேற்கோள்கள் விந்தனுடைய வாழ்வு நோக்கைத் தெளிவாக்கப் போதுமானவை. வாழ்வு நோக்கில் விந்தன் ஒரு மனிதாபிமானியாகவும், அந்த நோக்கில் சமத்துவத்தை வரவேற்பவராகவும் காணப்படுகிறார்.*

*விந்தனுடைய இலக்கியக் கோட்பாடு இந்த வாழ்வு நோக்கின் அடிப்படையில் உருவானபடியால், அதன் அம்சங்கள் முற்போக்கு முத்திரை பெற்று விளங்குகின்றன. விந்தன் மணிக்கொடி*

காலத்திலேயே கதைகள் எழுதத் தொடங்கியவர். இருந்தாலும், அவர் இலக்கியத்தை இந்திர சபையின் ஊர்வசியாகக் காணவில்லை.

அதைச் சமூகம் என்ற மண்ணிலேயே காண்கிறார். அதை உபதேசம் செய்யும் ஒரு சாதனமாக அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் இலக்கியத்தின் மூலம் சமூக முரண்பாடுகளை, சிக்கல்களை தைரியமாக வெளிப்படுத்த அவர் தயங்கவில்லை. அவற்றை வன்மையாக விமரிசனம் செய்துவிடுகிறார்.

போலி இலக்கியங்களை, பொய்ம்மை மயக்கங்களைக் கண்டித்து, இலக்கியத்திற்கு நாம் ஒரு ஆரோக்கியமான இடம் அளிக்க வேண்டும் என்ற ஆவேசக் குரல் எழுப்புகிறார்.

அவர் கூறுகிறார்.

'போலியைச் சுட்டெரிக்கும் புதுமைகளை, வாழ்க்கையை அலசி அலசிப் பரிசீலிக்கும் ரசாயனங்களை சமுதாயத்தின் புற்று நோய்களுக்கு மின்சார சிகிச்சை அளிக்கும் குரூர வசீகரங்களைப் படம் பிடித்துக் காட்டி, மனித உள்ளத்தில் எங்கோ ஒரு மூலையில் செய்வதறியாது ஏங்கிக் கிடக்கும் மனிதாபிமானத்தை, தட்டி எழுப்பும் உணர்ச்சிமிக்க உயிரோவியங்களை, அந்த அபிமானத்திற்கு விரோதமாயிருந்த, இருந்து வருகிற, மனித மிருகங்களின் மேல் வெறுப்பைக் கக்கி, உங்கள் நல்வாழ்விற்கு வழிதேட முயலும் நவயுகக் கதைகளை இன்றுபோல் நீங்கள் என்றும் வரவேற்று வாழ்த்தித் தமிழை வளப்படுத்த வேண்டும் - தமிழ்நாட்டை மேம்படுத்த வேண்டும். இதுவே என் எண்ணம்; இதுவே என் இருபது வருடகால எழுத்து.'

(விந்தன் கதைகள் x)

இலக்கியத்தின் மேம்பாடான இலட்சியங்களை விந்தன் இங்கு வலியுறுத்துவதைக் காண்கிறோம். அதன் அடிப்படை மனித நேயமாக இருத்தல் வேண்டும் என்பது இங்குத் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது.

பொழுது போக்கிற்காக இலக்கியம் படைக்கிறேன் என்று கூறுபவர்களை விந்தன் மிகக் கடுமையாகச் சாடுகிறார். பொழுது போக்கு என்ற பெயரால் இன்றைய எண்ணிக்கையளவுப்

பத்திரிகைகள் சமூகச் சீரழிவிற்குத் துணை போவதை விந்தன் விமரிசனம் செய்கிறார்.

'பாவம் பொழுது தானாகவே போகக் கூடியது என்பது கூட இவர்களுக்குத் தெரியாது. அதனாலேயே அதைப் போக்கக் கதைகள் வேண்டும் என்கிறார்கள். குலுங்கும் கொங்கைகளும், குலுங்காத அல்குலும் அந்தக் காலத்து காவியங்களில் அரசர்களுக்காக இடம் பெற்றது போல, கதைக்குதவாத காதலும் கருத்துக்கொவ்வாத கல்யாணமும் இந்தக் காலத்துக் கதைகளிலே இவர்களுக்காக இடம் பெற வேண்டும் என்கிறார்கள்.'

இப்படிப்பட்ட கதைகளைப் பாஷாணம் என்று அழைக்கிறார் விந்தன் (விந்தன் கதைகள் XI)

இவையாவும் விந்தன் கொண்டுள்ள வாழ்வு நோக்கையும், இலக்கியக் கோட்பாட்டையும் புரிந்துகொள்ள போதுமானவை. இப்பொழுது நாம் கவனிக்க வேண்டியது அவருடைய சிறுகதைகள், இந்தத் தன்மைகளைப் பெற்று விளங்குகின்றனவா என்பதாகும்.

விந்தன் சிறுகதைகள் எல்லாவற்றிலுமே பொதுவாக இந்தப் பண்புகள் எல்லாவற்றையும் தெளிவாகக் காண முடியும். இருப்பினும், விந்தன் அவருடைய வாழ்க்கை நெருக்கடிகள் காரணமாகவும், அவர் பணியாற்றிய பத்திரிகைகளின் தன்மை காரணமாகவும், இந்தக் கூற்றுக்களுக்குப் புறம்பான கதைகளையும் எழுதியுள்ளார். இவை எல்லாவற்றையும் தகுந்த உதாரணங்களுடன் இப்பொழுது ஆராய்வோம்.

விந்தனுடைய கதைகளில் புதுமைப்பித்தனைவிட மிக அதிகமான அளவிற்கு ஒரு சத்திய ஆவேசமும், சமுதாய உணர்வும் இருப்பதைக் காணமுடியும். 'சமுதாய விரோதி' என்ற கதை இதற்கு மிகச் சிறந்த உதாரணம்.

சொந்தத் தகப்பனாக இருந்தும் கள்ளச் சாராயம் காய்ச்சுகிறான் என்றபடியால் அவனைப் போலீசார் வசம் ஒப்புவிக்கும் புஷ்பராஜின் கதை இது. புஷ்பராஜுக்கு ஏற்படும் தர்மாவேசம் விபீஷணனுக்கு ஏற்படும் ஆவேசத்தைப் போன்றது.

நியாயம் நிலைநாட்டப்பட வேண்டும், சமூக விரோதிகள் ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் மிக உறுதியான கதாபாத்திரமாக

புஷ்பராஜ் விளங்குகின்றான். இங்கு புஷ்பராஜ் அதர்மத்தை எதிர்த்துப் போராடும் ஒரு இதிகாசத்தன்மையுள்ள பாத்திரமாக விளங்குவதைக் காண முடிகிறது. புஷ்பராஜுக்கும், வேறு ஒருவருக்கும் நிகழும் உரையாடல் இதைத் தெளிவாக உணர்த்துகிறது.

'அவர் எனக்கு விரோதியில்லை.'
'பின்னே யாருக்குத் தம்பி விரோதி?'
'சமுதாயத்துக்கு விரோதி.'
'சொந்த அப்பாவைவிட, சமுதாயம் பெரியதா?'
'அப்பாவைவிட, அரசாங்கத்தைவிடப் பெரியது.'
(சமுதாய விரோதி பக். 30)

இதே வரிசையில் உள்ள பல கதைகளை விந்தன் எழுதியுள்ளார்.

சமுதாயத்தை ஏமாற்றித் திரியும் ஒரு கதாபாத்திரமாக **எங்கள் ஏகாம்பரம்** என்ற கதையில் ஏகாம்பரம் என்ற கதாபாத்திரம் இடம் பெற்றுள்ளது.

**காந்தீயவாதி** என்ற கதையில் இன்று உலவி வரும் போலி காந்தீயவாதியை விந்தன் அம்பலப்படுத்துகிறார்.

'காந்தீய வாதி' என்ற அவருடைய சிறு கதையின் கதாநாயகன், தோல் மணங்குடி துளசிரங்கராயர், ஊர்க் குழந்தைகளுக்குப் பட்டாசு தானம் செய்கிறேன் என்று அவருடைய வைப்பாட்டிக் குழந்தைகளுக்குக் கொடுக்கிறார். அத்தனை வைப்பாட்டிகள் அவருக்கு. அவருடைய சுயரூபத்தை குப்புலிங்கம் என்ற கதாபாத்திரம் மூலமாக விந்தன் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார்.

'நான் எட்டிப் பார்த்தேன். என்ன ஆச்சரியம், ஏழெட்டுப் பெண்களுக்கு நடுவே எங்கள் ஊர்க்காந்தி எழுந்தருளியிருந்தார். மேலே ஒரு துண்டும், கீழே ஒரு துண்டும் வழக்கமாக இருக்கும் பாருங்கள்; அவற்றைக்கூட மறந்து அவர் எளிமையின் உச்சிக்கே போய் வாய்மையையும், தூய்மையையும், பண்பையும், பாரம்பரியத்தையும் அங்கே வளர்த்துக் கொண்டிருந்தார்.'

(விந்தன் கதைகள் - பக். 32)

'அந்தரங்கக் காரியதரிசி' என்ற கதை, சினிமா உலகில் நிகழும் ஏமாற்று வித்தைகளைக் காட்டும் கதையாக அமைந்துள்ளது.

காரியதரிசி இந்தக் கதையில் ஒரு நாயைப்போல் நடத்தப்படுகிறான். மொத்தமாக இன்றைய சினிமாக் கம்பெனிகளில் பெண்மை எந்த அளவிற்கு வஞ்சிக்கப்படுகிறது என்பதை ஆசிரியரின் இக்கூற்று தெளிவாக்குகிறது.

இவ்வளவுதானா நீங்கள்! நேற்று இரவு யான் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக என்ற பெரு நோக்கோடு முன்பின் தெரியாத யாரோ ஒரு பெண்ணை முதலாளியிடம் அனுப்பியிருக்கிறார் அவருடைய அரும்பெரும் நண்பர் ஒருவர்.

அந்தப் பெண் அந்தரங்கக் காரியதரிசியிடம் வந்து 'முதலாளியைப் பார்க்கவேண்டும்' என்று சொல்லியிருக்கிறாள். அவளைப் பார்த்த அந்தரங்க காரியதரிசிக்கு அந்த நேரத்தில் எப்படி இருந்ததோ என்னவோ, நான்தான் முதலாளி என்று சொல்லி அவளை அகலிகையாகவும் தன்னை இந்திரனாகவும் பாவித்துக்கொண்டு அந்த இந்திரன் வேலையையும் செய்துவிட்டிருக்கிறார்.

(ஏமாந்துதான் கொடுப்பீர்களா - பக். 99)

இங்கு மிக அழகாக ஒரு காவிய நடையுடன், விந்தன் இந்த நாட்டுப் பெண்மை கடைச்சரக்காக மதிப்பிடப்படுவதை எடுத்துக் காட்டியுள்ளார்.

இதுபோன்ற பல கட்டங்களில் விந்தன் சமூக உணர்வு மிக்கவராகவும் அதன் குறைபாடுகளைக் கண்டு சாடுபவராகவும் காணப்படுகிறார். இது அவருடைய உலகு நோக்கு, இலக்கியக் கோட்பாடு ஆகியவற்றுக்குப் பொருத்தமான ஒரு அம்சமே ஆகும்.

விந்தன் சிறு கதைகளைப் படிப்பவர்கள், அவரிடம் இயல்பாகப் படிந்துள்ள மற்றொரு அம்சத்தையும் காணத் தவறமாட்டார்கள். அவர் வாழ்ந்த காலகட்டத்தில் மிகவும் தெளிவாக வளர்ந்து வெளித் தோன்றிய முதலாளித்துவ சமூகத்தில், அடக்குமுறைக்கு உள்ளான வர்க்கத்தினரின் உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் பல சிறுகதைகளை அவர் எழுதியுள்ளது அந்த அம்சமாகும்.

ஒரு வர்க்க சமூகத்தில் இடம் பெற்றுள்ள இரு வேறு பகைமை வர்க்கங்களை விந்தன் பல சிறு கதைகளில் எடுத்துக் காட்டுகிறார்.

எத்தனைபேர் என்ற கதை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

பெரியசாமி, சின்னசாமி என்ற இருவர் வைரவச் செட்டியாரின் வீட்டுக் காவல்காரர்கள். இவர்களை வைரவன் செட்டியார் நாயைவிடக் கேவலமாக நடத்துகிறார். பெரியசாமி திருடனால் கொல்லப்படுகிறான். வைரவன் செட்டியார் பெரியசாமியின் பிணம் கிடக்கும் பொழுதே வேறு ஒரு காவல்காரனுக்கு ஏற்பாடு செய்ய முயற்சிக்கிறார்.

கஸ்தூரி பவனத்தின் உரிமையாளரான வைரவன் செட்டியாரைக் கிண்டல் கலந்த யதார்த்தமான முறையில் அறிமுகப்படுத்துகிறார்.

(சமுதாய விரோதி - பக். 86-88)

கஸ்தூரி பவனம் அவருடைய சொந்த பங்களாதான். இக வாழ்க்கையிலுள்ள சுகங்களை அனுபவித்து அனுபவித்து அவர் அலுத்துப் போனவர். ஆனால் அதற்காகப் பரலோகம் சென்றுவிடவும் அவர் விரும்பவில்லை. இத்தனைக்கும், இந்த லோகத்தைவிட பரலோகம் எத்தனையோ விதத்தில் சிறந்தது என்று அவர் அறிந்திருந்தார். தாம் அறிந்த உண்மையைப் பிறருக்கு எடுத்துச் சொல்லிக்கொண்டு வந்தார். ஆனால் அவர் மட்டும் அந்த வழியைப் பின்பற்றவில்லை.

வைரவன் செட்டியாரை உணர்வுபூர்வமாக இந்த முறையில் அறிமுகப்படுத்தும் ஆசிரியர், உழைப்பாளி வர்க்கத்தின் அவலநிலையை மிக உருக்கமாக அதே கிண்டல் கலந்த யதார்த்த முறையில் சித்திரிக்கிறார். அவர் கூறுகிறார் :

'நாய்க்கு என்ன தெரியும்? எஜமானனைக் கண்டால் வாலைக் குழைக்கவும், அன்னியரைக் கண்டால் குரைக்கவும்தான் தெரியும்.'

'எஜமான் காரில் ஏறும்போதும், இறங்கும்போதும் கதவைத் திறந்துவிட முடியுமா? ஹாரன் சத்தம் கேட்டதும் அலறியடித்துக் கொண்டு ஓடிவந்து பங்களாவின் கேட்டைத் திறந்துவிட அதற்குத் தெரியுமா?'

'இரவில் தூங்குகிறாயோ, உன்னை வேலையிலிருந்து நீக்கிவிடுவேன் என்றும், நின்ற இடத்திலேயே நிற்காமல் போறாயோ விரட்டிவிடுவேன் என்றும் நாயைப் பயமுறுத்த முடியுமா?' இப்படிப் பல சௌகரியங்களை உத்தேசித்துதான் அவர் பெரியசாமியையும், சின்னசாமியையும் தமது பங்களாவில் காவல் காக்க வைத்துக் கொண்டார்.

**செய்ததும் செய்வதும்** என்ற மற்றொரு சிறுகதையில் உழைப்பவனுக்கும், சுரண்டுபவனுக்கும் உள்ள முரண்பாடு மிகத் தெளிவாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்தக் கதையில், ஏழைத் தொழிலாளி ஒருவன், 'எதிர் வீட்டில் இருக்கும் பாஸ்கர் விநாயகராவ் என்ன செய்துவிட்டார் இவ்வளவு வசதிகளை அனுபவிக்க?' என்று கேட்கிறான். அதற்கு விடையாக அவனுக்குக் கிடைக்கும் பதில், விநாயகராவ் அருடைய தந்தைக்கு மகனாப் பிறந்தது என்பதுதான். எந்தவித உழைப்பும் இல்லாமல் பரம்பரைச் சொத்தின் அரவணைப்பில் காலம் தள்ளுபவர்கள் இங்கு விமரிசனம் செய்யப்படுகின்றனர்.

இதே கருத்தை 'அந்தரங்கக் காரியதரிசி' என்ற கதையில் உழைப்பவர்களை நாயாகக் கருதும் அதிகார வர்க்கத் தன்மையின் மூலம் ஆசிரியர் விளக்குகிறார்.

'நாய் குரைத்திருக்கிறது - குரைக்காமல் என்ன செய்யும்? அன்னியர் யாராவது காலத்தில் வந்தால் குறைப்பது அதன் கடமை. அந்தக் கடமையை - தயவு தாட்சண்யமின்றி நிறைவேற்றியிருக்கிறது. மனிதரா ஆளுக்குத் தகுந்தாற்போல் வேஷம் போட? அதுதான் நாயாச்சே; வேஷம் போட முடியவில்லை.'

'மாடும் மனிதனும்' என்ற கதையில் பண்ணையார் மன்னார்குடி மாணிக்கம் பிள்ளை, பண்ணை அடிமைகளை மிகக் கேவலமாக நடத்துகிறார். இதை ஆசிரியர் நாயுடன் உவமித்துப் பின்வருமாறு கூறுகிறார் :

'அப்படியே அவர்கள் (அடிமைகள்) ஒதுங்கி நின்றனர். அதே சமயத்தில் ஒதுங்காமலும், பதுங்காமலும் நிமிர்ந்த நடையுடனும், நேர் கொண்ட பார்வையுடனும் எசமான் வீட்டு நாய் அவர்களுக்கிடையே நுழைந்தது.'

**புது அடிமை** என்ற கதையில் ஒரு நீக்ரோவும், இந்திய அடிமையும் சந்திக்கின்றனர். நீக்ரோவிற்குப் புசிக்க உணவு உண்டு. இந்திய அடிமைக்கு அது கிடையாது. ஆனால் அடிமை என்ற சொல்லுக்குப் பல விளக்கங்கள் அளிக்கப்படும்.

இந்த முறையில் வர்க்க வேறுபாட்டைப் பல கதைகளில் விந்தன் விரிவாகக் கையாண்டுள்ளார். இவற்றை அவர் அறிவுப் பூர்வமாக எந்த ஒரு இடத்திலும் ஏற்றுக் கொண்டதாகக் கூறவில்லை. இருப்பினும் அவருடைய இதயம் இத்தகைய ஒரு சமூக அமைப்பில் சுரண்டலுக்கு உள்ளானவர்கள் பக்கத்தில் சார்ந்திருப்பபதைக் காண முடிகிறது.

விந்தனுடைய படைப்புகளில் காணப்படும் மற்றொரு அம்சம், போலிகளைக் கிண்டல் செய்து விமரிசனம் செய்வதாகும். மேலே குறிப்பிட்ட சமூக வளர்ச்சியின் தவிர்க்க முடியாத ஒரு அங்கமாக ஏமாற்றும் மோசடியும் மிகவும் அதிகமாக இருப்பதை விந்தன் நன்கு உணர்கிறார். இந்த ஏமாற்றும் பேர் வழிகள் பல ரூபங்களில் தமிழ் நாட்டில் நடமாடுவதை அவர் காண்கிறார். அவரது பேனா அத்தகையவர்களைக் கேலிக்குள்ளாக்குகிறது.

இம்முறைகளில் ஏமாற்றுபவர்களில் ஒரு வகையினர் வள்ளுவரைப் பற்றுக் கோடாகக் கொண்டு திரியும் பேராசிரியர் பன்றி முகனார் என்பவர். 'எல்லோருக்கும் நல்லவர்' என்ற கதையின் நாயகர் இவர். எல்லோருக்கும் நல்லவராக இருக்க வேண்டும் என்பதற்காக ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு முறையில் பேசுகிறார். இதன் வினை இனியன் என்ற இளைஞன் தற்கொலை செய்து கொள்கிறான். பன்றி முகனாரை ஆசிரியர் அறிமுகப்படுத்தும் முறையே அலாதியானது.

"இழை நக்கி வள்ளுவனாரின் புண்ணியத்தால், இமாலயா பாங்க் பாஸ் புஸ்தகத்தின் ஏடுகளை ஒவ்வொன்றாக நக்கி யெடுத்து, பக்கத்துக்குப் பக்கம் பல்கிப் பெருகி வந்த எண்களைப் பார்த்துப் பார்த்துப் பரவசம் அடைந்து கொண்டிருந்தார் பேராசிரியர் பன்றிமுகனார்."

('விந்தன் கதைகள்' - பக்.132)

இதே போன்ற மற்றொரு தமிழ்ப் பண்டிதர் 'கவிஞர் ஒன்பார் சுவையார். இவர்கள் எல்லோரும் தமிழ் மொழியை மாசு

படுத்துபவர்கள்; அதன் பெயரைச் சொல்லி வயிறு வளர்ப்பவர்கள். இவர்களுக்கு வள்ளுவர் ஒரு காமதேனு. இதை விந்தன் இங்கு சுட்டிக் காட்டுகிறார். ஏமாற்று வேலையில் மற்றொன்று ஏழையைப்போல் நடித்து மக்களை ஏமாற்றித் திருட்டுத்தனம் செய்வது. இதை ஒரு கதையில் விளக்குகிறார்.

'கறார் கருப்பையா' என்ற கதையில் ரேஷன் கடை முதலாளி கள்ளத்தனமாக உணவுத் தானியங்களை விற்றான். ஆனால் ஊருக்கு வேதாந்த உபதேசம் செய்கிறான். அந்த முதலாளி, அவருடைய குமாஸ்தாவிடம் பின் வருமாறு கூறுகிறான்:

'உமக்குச் சந்தேகம் வந்துவிட்டதாக்கும். நல்ல ஆள் ஐயா நீர். அந்த வேதாந்தம் வாய் வேதாந்தம்; இந்த வேதாந்தம் வயிற்று வேதாந்தம்.'

'பெண் அடிமைத்தனம்' என்ற கதையில் சாமியார்களின் போலித்தனத்தையும், மக்களின் மூட நம்பிக்கைகளையும் கண்டிக்கிறார்.

"உண்டுறங்குவதே யல்லாது வேறொன்றும் கண்டிராத அடியார்கள், பூதங்களுக்கு இயற்கையாக உள்ள சோம்பேறித்தனத்தால் புண்ணியத்தைச் சாக்காக வைத்துக் கொண்டு எச்சில் இலையை எடுத்துப் போடும் வேலையைக்கூட அன்னதானம் செய்பவர்கள் தலையில் கட்டி விட்ட தந்திரத்தை அந்த அம்மாள் இந்த அணுகுண்டு சகாப்தத்தில்கூட அறியாமல் இருந்தது எனக்கு ஆச்சரியமாய்த்தா இருந்தது."

இத்தகைய முறையில் போலிகளையும், ஏமாற்றித் திரிபவர்களையும் வெளிப்படுத்திக் காட்டும் போக்கைப் பெற்றுள்ள விந்தன், பால் உறவு சம்பந்தமான கதைகளையும் எழுதாமல் இல்லை. அவருடைய காதல் கதைகள் என்பவை எண்ணிக்கை அளவில் குறைவானவை. அதே சமயத்தில் இக்கதைகளில் காதல் விவகாரங்களைக் கையாளும் பொழுது மிகவும் நாகரிகமான முறையிலேயே விந்தன் நடந்து கொள்கிறார்.

'புரியாத புதிர்'

'தாயிற் சிறந்த தொரு'

'அன்பு'

'மிஸ் நளாயினி 1970'

'நேற்று வந்தவள்'

'காதற் கதை'

'அவள் என்ன வானாள்'

'முன்னல்'

போன்றவை அவருடைய இத்தகைய கதைகளுக்கு உதாரணம். 'கவைக்குதவாத காதல்' என்று அவர் கூறியுள்ளார் இந்த நோக்கின்படியேதான் அவர் காதலையும் அணுகுகிறார். மேற்கூறப்பட்ட கதைகளில் தற்காலப் போலிக் காதலும் கேலிக்குள்ளாக்கப்படுகிறது.

உதாரணமாக, 'காதற் கதை' என்ற கதையில் ஒரு வாலிபன் குளத்தில் குளிக்கும் பெண்ணைத் தவறுதலாக, 'அவள் விழுந்து விட்டாள்' என்று எண்ணித் தூக்கப் போய் அவள் அவனை அடிக்கும் செயல் பற்றியது.

'மிஸ் நளாயினி 1970' என்பது ஒரு பெண்ணின் காதலுக்குச் சோதனை வைக்கும் கதை.

இதே தன்மை வாய்ந்தவைதாம் மற்ற கதைகளும், ஆண் - பெண் உறவை விந்தன் வியாபாரமாக்கவில்லை அதை அவருடைய விமரிசனப் பாணியிலே கையாளுகிறார்.

இந்த உதாரணங்கள் யாவும் விந்தன் சிறு கதைகள் பற்றிய ஒரு முடிவுக்கு வருவதற்குப் போதுமானவை.

விந்தனுடைய வாழ்வு நோக்கில் அவர், சுரண்டலுக்கு உள்ளானவர்கள், கஷ்டப்படுபவர்கள், ஏழைகள், ஆகியவர்கள் சார்பில் நின்று எழுதுகிறார். இதனால் அவரை ஒரு சார்பு நிலை எழுத்தாளர் என்று பெரும்பாலும் கூறலாம்

மனிதாபிமான நோக்கில் அவர் ஏழைகளைக் காண்கிறார்; உழைப்பவர்களைக் காண்கிறார். அந்த மக்களுக்கு எதிராக இருக்கும் இலக்கியங்களைச் சாடுகிறார்.

*மனித நேயத்தை வளர்ப்பதே அவருடைய இலக்கிய நோக்கு என்று கூறுகிறார். இந்த நோக்கின் பிரதிபலிப்பே அவருடைய சிறுகதைகள்.*

*அவற்றில் ஆழமான சமுதாய உணர்வைக் காணலாம். பணக்காரர்களைச் சாடும் போக்கைக் காணலாம்.*

*பணத்திற்காகச் சமூகத்தை ஏமாற்றுபவர்களைக் கண்டிக்கும் தன்மையைக் காணலாம். இவற்றைச் சுட்டிக் காட்டி வாசகர்களது சிந்தனையை உழைக்கும் மக்கள்பால் திருப்பும் ஒரு நிலையைக் காணலாம்.*

*இவற்றால்தான் கல்கி, விந்தன் கதைகளைப் பற்றிக் கூறும்போது,*

*'இவருடைய கதைகளைப் படித்தால் மனத்தை என்னவெல்லாமோ செய்கிறது'*

*என்று குறிப்பிட்டாரோ!*

தாமரை - 1978

10

# கட்டுரையாளர் விந்தன்

- வல்லிக்கண்ணன்

*எழுத்தாளர் விந்தன் என்றால், 'பாலும் பாவையும்' நாவலாசிரியர் என்ற நினைவுதான் வாசகர்கள் பலருக்கும் எழும். முல்லைக்கொடியாள். ஒரே உரிமை முதலிய சிறப்பான சிறுகதைகளின் ஆசிரியர் என்றும் அறியப்பட்டிருப்பவர் அவர்.*

*எழுத்தாளர் விந்தன் தனித்தன்மை உடைய சிந்தனைக் கட்டுரைகளும் எழுதியிருப்பவர் என்பது பரவலாக வாசகர்களுக்குத் தெரியாது.*

*விந்தன் சிறந்த கட்டுரையாளர் என்பதை மு.பரமசிவம் தொகுத்து, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் (CLS) வெளியிட்டுள்ள 'விந்தன் கட்டுரைகள்' என்ற புத்தகம் நன்கு எடுத்துக் காட்டுகிறது.*

*விந்தன் எழுத்துக்களில் சிந்தனை வேகம், அறச்சீற்றம், சிறுமைகளை எள்ளிச் சிரிக்கும் இயல்பு, கசப்பில் விளைத்த அங்கதம், உயிர்த்துடிப்பு, நேரில் பேசுவது போன்ற எளிய தெளிவான நடை, புதுமை நோக்கு நிறைந்திருக்கும். அவர் கட்டுரைகளிலும் இப்பண்புகள் கலந்து காணப்படுகின்றன.*

*"எதை எழுதினாலும் அதில் உயிர் இருக்க வேண்டும், உணர்ச்சி இருக்க வேண்டும் என்பது நான் எழுத ஆரம்பித்த போதே எடுத்துக்கொண்ட பிரதிக்ஞை. இவை யிரண்டும் இல்லாமல் எழுதுவதில்தான் என்ன பலன்? படிப்பதில்தான் என்ன பயன்?" என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். இக் குறிக்கோளை விந்தன் வெற்றிகரமாக நிறைவேற்றவும் செய்தார்.*

விந்தன் கட்டுரைகளில் மிக முக்கியமானது 'புகையிலையும் புதுமைப்பித்தனும்' என்பது. வழக்கமாக எல்லோரும் எழுதுவது போன்ற நினைவு நாள் கட்டுரை அல்ல அது. தமிழ்நாட்டில், திறமை மிகுந்த எழுத்தாளன் அனுபவிக்க நேர்கிற அவலங்களையும், அவன் எழுத்துக்களை வரவேற்று அவனுக்கு உரிய கவனிப்பும் மரியாதையும் அளிக்காத நாட்டு மக்களின் இயல்பையும், அவன் செத்ததற்குப் பிறகு நினைவு நாள் கொண்டாடுவதையும் எண்ணிக் கசப்புற்று, கோபத்தோடு அங்கதமாகச் சாடுகிற தன்மையில் இந்தக் கட்டுரை எழுதப்பட்டிருக்கிறது.

"உலகத்தில் மனிதன் இறப்பதற்கு எத்தனையோ வழிகளைக் கையாள்கிறான். விஷம் குடிப்பது - வெந்தழலில் தீய்வது - குளத்தில் விழுவது - கோபுரத்தின் உச்சியிலிருந்து கீழே குதிப்பது - தூக்குப் போட்டுக்கொள்வது - நாக்கைப் பிடுங்கிக் கொள்வது - கத்தியின் துணையை நாடுவது - காரிலோ, ரயிலிலோ மாட்டிக் கொள்வது - இப்படி எத்தனையோ வழிகள்.

புதுமைப்பித்தன் இறப்பதற்கு இந்த வழிகளையெல்லாம் கையாளவில்லை.

அவர் எழுதினார்.

ஆம். அவர் வாழ்வதற்காக எழுதவில்லை. சாவதற்காக எழுதினார்.

எனக்குத் தெரிந்தவரை அவர் செத்துப் போனதற்குக் காரணம் இதுதான்."

விந்தனின் கசப்பும் கோபமும் வேதனையும் எள்ளல் தொனியுடன் வரிக்கு வரி அதிகரித்துக்கொண்டே போகிறது.

புதுமைப்பித்தனின் புகையிலைப் பழக்கத்தை குறைகூறியவர்களுக்கு விளக்கம் தரும் விதத்தில் எழுதிவிட்டு, விந்தன் கருதுகிறார் -

"சாதாரணமாக, புகையிலை இரசிகர்கள் அதை ஏதாவது ஒரு விதத்தில்தான் உபயோகிப்பது வழக்கம். ஆனால் நம் புதுமைப்பித்தனோ இரண்டு விதங்களில் அதை உபயோகப்படுத்தினார். ஒன்று புகை. இன்னொன்று சாரம்.

இரண்டும் வாய்ப் பிரயோகங்கள். மூன்றாவதான மூக்குப் பிரயோகத்தையும் அவர் கையாண்டிருந்தால் எவ்வளவோ நன்றாயிருந்திருக்கும். இன்னும் கொஞ்சம் முன்னாடியே அவர் தம் துன்பத்திலிருந்து, துயரத்திலிருந்து, கஷ்டத்திலிருந்து, காசத்திலிருந்து, ஏன், இந்தப் பாழாய்ப் போன உலகத்திலிருந்தே விடுதலையடைந்திருக்கலாம். தமிழர்களும் இன்னும் கொஞ்சம் முன்னாடியே அவருக்காகச் சந்தோஷப்பட்டிருப்பார்கள்! நினைவு நாள் கொண்டாடியிருப்பார்கள்."

உலக இயல்பைச் சுட்டிக்காட்டுவதற்காக ஒரு அரபுக் கதை, ஔவைக் கிழவி அரசனுக்கு உணர்த்திய உண்மை என்றெல்லாம் விரிவாக எழுதிவிட்டு, விந்தன் தொடர்கிறார்.

உலக நியதிகளை நன்கு அறிந்து வைத்திருந்த புதுமைப்பித்தன் ஏன் கதை எழுதினார், கட்டுரை எழுதினார், கவிதை எழுதினாரென்றால் அதுதான் எழுத்தாளனின் குறும்பு, கிறுக்கு பைத்தியம்!

உலகத்தில் தொன்று தொட்டு இருந்து வரும் கொடுமைகளையும் கொடூரங்களையும் அநீதிகளையும் அக்கிரமங்களையும் விசித்திரங்களையும் விநோதங்களையும் முதல் முறையாகப் பார்த்தபோது புத்தர் பெருமானுக்கு ஞானப் பைத்தியம் பிடித்தது. போதி மரத்தை நாடினார். புதுமைப்பித்தனுக்கோ எழுத்துப் பைத்தியம் பிடித்தது. பத்திரிகைத் தொழிலைத் தேடினார்.

புத்தர் வாழ்க்கையின் துன்பங்களைக் கண்டு வெகுண்டு ஓடினார்.

புதுமைப்பித்தன் அவற்றை எதிர்த்து நின்று போராடினார்.'

இந்த ரீதியில் புதுமைப்பித்தன் பற்றியும், அவருடைய எழுத்துக்களின் தன்மை பற்றியும், அவற்றைத் தக்கபடி அனுபவித்து - அவற்றை எழுதிய மேதையைத் தக்கபடி உபசரிக்கத் தவறிவிட்ட தமிழர்கள் பற்றியும் விரிவாகவே விந்தன் அந்தக் கட்டுரையில் எழுதியிருக்கிறார்.

எழுத்தையும் எழுத்தாளர்களையும் தக்கபடி கவனிக்க இனியாவது ஒரு விதி செய்ய வேண்டும் என்று குறிப்பிடும் விந்தன், அந்தப் பொறுப்பை மத்தியதர வகுப்பார்தான் ஏற்பச் செயல்புரிய

வேண்டும் என அழுத்தமாகச் சொல்கிறார். பணக்காரார்கள் பற்றிய தனது கருத்தை சீற்றத்துடன் வெளிப்படுத்துகிறார்.

'ஏழைகளோ, பணக்காரர்களுக்காக எப்பொழுதுமே தியாக வாழ்க்கை நடத்திக் கொண்டிருப்பவர்கள். தங்களைப் பற்றியே அவ்வளவாகக் கவலைப்படாத அவர்கள் எழுத்தாளர்களைப் பற்றி எங்கே கவலைப்படப் போகிறார்கள்! - அவர்களுக்காக எழுத்தாளர்கள் தான் கவலைப்பட வேண்டும்' என்றும் தெரிவிக்கிறார்.

நடுத்தர வர்க்கத்தினர் செய்ய வேண்டிய காரியங்கள் குறித்தும் விந்தன் அக்கட்டுரையில் பயனுள்ள ஆலோசனைகள் கூறியிருக்கிறார்.

விந்தன் கட்டுரைகளிலேயே நீளமானதும் முழுமையானதும் இந்தக் கட்டுரை மட்டும்தான் என்று சொல்ல வேண்டும்.

'பாரதி வாழ்ந்த பாண்டி' என்பதும் சற்றே நீண்ட கட்டுரைதான். புதுச்சேரியையும் பாரதி நிவைுகளையும், பாரதியாரின் வாழ்வோடு சம்பந்தப்பட்டவர்களையும் இணைத்து சுவாரசியமாக எழுதப்பட்டுள்ள கட்டுரை இது.

பாரதிதாசன், கவிமணி, ஆசிரியர் கல்கி ஆகியோர் பற்றிச் சிறு சிறு நினைவுக் குறிப்புகள் எழுதியிருக்கிறார். அவற்றிலும் விந்தனுடைய தனித்த நோக்கும் எழுத்தாற்றலும் புலனாகின்றன.

மாக்ஸிம் கார்க்கியின் 'தாய்' நாவலை எனக்குப் பிடித்த புத்தகம் என்று பாராட்டி எழுதியுள்ளார் விந்தன். இந்தக் கட்டுரையிலும் விந்தனின் எள்ளல் மேலோங்கி நிற்கிறது.

'ஒரு பெண் எதற்காகப் பிறக்கிறாள்? ஏன் வாழ்கிறாள்? ஓர் ஆண்மகன் எதற்காகப் பிறக்கிறான்? ஏன் வாழ்கிறான்?

'அவர்கள் எதற்காகப் பிறக்கிறார்களோ, ஏன் வாழ்கிறார்களோ, அது எனக்குத் தெரியாது. ஆனால் நம்முடைய நாவல்களைப் பொறுத்த வரை, அவர்கள் காதல் செய்வதற்கென்றே பிறக்கிறார்கள் கடைசியில் கல்யாணமோ, தற்கொலையோ செய்து கொள்வதற்கென்றே வாழ்கிறார்கள்' என்று கட்டுரையை ஆரம்பித்து, அவருடைய இயல்பின்படி வளர்த்திருக்கிறார். 'தாய்' நாவலின கதை மாந்தரின் சிறப்பையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

பொதுவாக, தமிழ் நாவல்கள் எப்படிப் பிறக்கின்றன என்று, பத்திரிகைகளுக்காக நாவல்கள் எழுதும் எழுத்தாளர்களின் செயல் முறையைக் கிண்டல் செய்து 'நாவல் பிறக்கிறது' எனும் கட்டுரையை விந்தன் எழுதியிருக்கிறார்.

தமிழ் இலககியம் விமர்சகர்களையும் இக்கட்டுரையில் அவர் கண்டனம் செய்திருக்கிறார், நகைச் சுவையுடன் தன்னுடைய நாவல் எப்படிப் பிறக்கிறது என்பதை விவரித்துள்ளார்.

'இவ்வாறு பிறக்கும் நாவல்களெல்லாம் வளர்ந்து விடுகின்றனவா என்றால், அதுதான் இல்லை. காரணம்? அந்த மூன்று எழுத்துக்கள்தான் - வறுமை! எழுத்துக்கு வறுமை நண்பனா யிருக்கலாம். ஆனால் வாழ்வுக்கு அது பகைவனாக வல்லவா இருக்கிறது' என்று கூறித், தனது ஏக்கங்களையும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

'இந்த ஆசாபாசங்களுக்கு இடையே, அன்றாடம் பிரச்சினைகளுக்கு இடையே பிறந்தும் வளர முடியாத என்னுடைய நாவல்கள் - 'கடவுளே! சர்வ வல்லமையுள்ள காசால் தானா என்னையும் என்னுடைய நாவல்களையும் காப்பாற்ற முடியும்? உம்மால் முடியாதா?' - என்று கட்டுரையை முடிக்கிறார். அவருடைய விரக்திப் பெருமூச்சு வாசகர்களின் உள்ளத்தில் வேதனையை எழுப்பக்கூடியது என்பதில் சந்தேகம் இல்லை.

விந்தன் தனது நூல்களுக்கு எழுதிய முன்னுரை, முடிவுரை, என்னுரைகளும், பிறரது புத்தகங்களுக்கு எழுதிய அணிந்துரைகள் சிலவும் 'விந்தன் கட்டுரைகள்' நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. அவர் கதை எழுதுவதன் நோக்கம், அவற்றைப் படிக்கிற வாசகர்களின் இயல்புகள், தமிழ்நாட்டில் கதைகள் எழுதுகிறவர்களின் தன்மைகள் பற்றி எல்லாம் சூடாகவும், சுவையாகவும், உணர்ச்சிகரமாகவும் தமது எண்ணங்களை அவற்றிலே பதிவு செய்திருக்கிறார் விந்தன்.

'போலியைச் சுட்டெரிக்கும் புதுமைகளை, வாழ்க்கையை அலசி அலசிப் பார்க்கும் ரசாயனங்களை, சமுதாயத்தின் புற்றுநோய்களுக்கு மின்சார சிகிச்சையளிக்கும் புத்தம் புது முறைகளை, குரூர வசியங்களைப் படம் பிடித்துக் காட்டி, மனித உள்ளத்திலே எங்கோ ஒரு மூலையில் செய்வதறியாது ஏங்கிக்

கிடக்கும் மனிதாபிமானத்தைத் தட்டியெழுப்பும் உணர்ச்சி மிக்க உயிரோவியங்களை, அந்த அபிமானத்துக்கு விரோதமாயிருந்த - இருந்து வருகிற மனித மிருகங்களின் மேல் வெறுப்பைக் கக்கி உங்கள் நல்வாழ்வுக்கு வழிதேட முயலும் நவயுகக் கதைகளை இன்று போல் நீங்கள் என்றும் வரவேற்று வாழ்த்தித் தமிழை வளப்படுத்த வேண்டும்; தமிழ்நாட்டை மேம்படுத்த வேண்டும் இதுவே என் எண்ணம். இதுவே என் இருபது வருட கால எழுத்து' - இது இலட்சிய எழுத்தாளர் விந்தனின் இதய ஒலியாகும்.

'பழைய பாசி பிடித்த வழுக்குப் பாதையை விட்டு விலகிப் புதிய பாதையிலே நடக்கத் துணிந்த எழுத்தாளர் விந்தன், தமிழில் புதிய துறைக்கு வழிகோலும்' முயற்சிகளில் ஈடுபட்டதை இக்கட்டுரைகள் எடுத்துச் சொல்கின்றன.

தமிழ் வாசகர்களின் ரசனைத் தரத்தைச் சிதைத்துச் சீரழிக்கின்றவர்கள் மீது விந்தனுக்குள்ள எரிச்சலும் கோபமும் இவ் எழுத்துக்களில் வெளிப்பட்டிருக்கின்றன.

> 'அன்பு ஆசையாகி, ஆசை அன்பானதற்குக் காரணம் இவர்களே. காதல் காமமாகி, காமம் காதலானதற்குக் காரணம் இவர்களே. பாவம் புண்ணியமாகி, புண்ணியம் பாவமானதற்குக் காரணம் இவர்களே! கலை விபசாரமாகி, விபசாரம் கலையானதற்குக் காரணம் இவர்களே. இலக்கியம் பித்தலாட்டமாகி, பித்தலாட்டம் இலக்கியமானதற்குக் காரணம் இவர்களே! நாகரீகம் அநாகரீகமாகி, அநாகரீகம் நாகரீகமானதற்குக் காரணம் இவர்களே. பணம் பகவானாகி, பகவான் பணமானதற்குக் காரணமும் இவர்களே.
>
> இதுவரை 'பண்பு' என்னும் பட்டுத் திரைக்குப் பின்னால் ஒடி ஒளிந்து கொண்டிருந்த இந்தப் 'பக்காத் திருடர்கள்' இப்போது தமிழ் என்னும தங்கத் திரைக்குப் பின்னால் ஒடி ஒளிகிறார்கள்.
>
> எது எப்படியிருப்பினும் எனக்குத் தெரிந்த வரை இருப்பவன் வெளியே நல்லவனாய் இருக்கிறான். உள்ளே பொல்லாதவனாயிருக்கிறான்.
>
> இல்லாதவனோ, வெளியே பொல்லாதவனாயிருக்கிறான், உள்ளே நல்லவனாயிருக்கிறான்.

*அவனுக்கு வெளியே நல்லவனாயிருக்கச் சமூக நிலை இடங் கொடுக்கிறது. இவனுக்கு வெளியே நல்லவனாயிருக்கச் சமுக நிலை இடங்கொடுக்கவில்லை.*

*இந்த வித்தியாசம் ஒழிய வேண்டாமா? இரு சாராரும் உள்ளும் புறமும் ஒன்றாக வாழ வேண்டாமா? இலக்கியம் அதற்கு உதவ வேண்டாமா?*

இவ்விதம் தனது எண்ணங்களை எடுத்துக் கூறும் விந்தனின் உள்ளத்தையும் உயர் நோக்கங்களையும் புரிந்து கொள்வதற்கு அவருடைய கட்டுரைகள் உதவுகின்றன.

பொதுவான சில குணச்சித்திர விவரிப்புகளாக எழுதப்பட்டுள்ள இந்நாட்டு மன்னர்கள் என்பவையும், தனிப்பட்ட சில மனிதர்களின் சிறப்பியல்புகளை வர்ணிக்கும் ‘இதோ ஒரு சுயமரியாதைக்காரர்!’ வரிசையும் புதுமையும் நயமும் நிறைந்த சொற்சித்திரங்கள் ஆகும் வாழ்க்கையில் பிடிப்பும் தளராத தன்னம்பிக்கையும் உடையவர்களது மன உறுதியையும் அவர்களது உழைப்பின் உயர்வையும் எடுத்துச் சொல்கின்றன இவை.

1998

# 11

## விந்தனின் சிறுகதைகள்

- சிட்டி & சிவபாதசுந்தரம்

*கல்கி பத்திரிகையில் சாதாரண தொழிலாளியாகச் சேர்ந்து, பின்னர் எழுத்தாளராக மலர்ந்த விந்தன், அதிலிருந்து விலகிச் சொந்தமாக மனிதன் என்ற பெயரில் ஒரு இதழை நடத்த முன்வந்தது, அவருடைய துணிச்சலையும் இலக்கியக் கொள்கையையும் பிரதிபலித்தது.*

*ஏற்கெனவே தம்முடைய எழுத்துகளால் தாம் ஒரு தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்தவர் என்றும், முதலாளித்துவத்தை வெறுப்பவர் என்றும், மனிதாபிமானத்துக்காக உழைக்கவேண்டிய கடமை உண்டென்றும் காண்பித்துக் கொண்டதால், விந்தனுடைய பத்திரிகைக்கு முற்போக்குக் கொள்கையை ஆதரிக்கும் சில எழுத்தாளர்களின் ஆதரவும் படைப்புகளும் கிடைத்தன.*

*இலக்கிய ரீதியில் சிறுகதையின் வடிவத்தைப் பல்வேறு உத்திகளுடன் கையாண்டு சமுதாய உணர்வுடன் மேற்கொள்ளும் பணி, மனிதன் பத்திரிகையில்தான் ஆரம்பமாயிற்று என்று சொல்லலாம்.*

*மனிதனின் மனசாட்சி உறுத்தி, சமுதாயத் தீமைகளைக் களைய அவன் வெகுண்டு எழுவதற்காகச் சிறுகதையைத் திட்டமிட்டுப் பயன்படுத்தும் பழக்கத்தை முதலில் தோற்றுவித்தவர் விந்தன் என்று சொல்லலாம்.*

*கோபமுற்ற இளைஞன் என்ற சமுதாய விளைவைத் தமிழ் இலக்கியத்தில் தோன்றச் செய்யும் அளவுக்குத் தம்முடைய கதைகளில் அவர் ஒரு ஆவேசத்தைத் தோற்றுவித்தார்.*

அவருடைய ஆவேசம் மனிதன் இதழ் ஒன்றில் பின்வருமாறு வெடித்தது :

'உலக இலக்கியங்களிலே, உலக மொழிகளிலே, எத்தனையோ விதமான புதுமைகள், புரட்சிகள் தினம் தினம் பூத்துக் குலுங்கிக் கொண்டிருக்கின்றன. ஏன் நம்மை அடுத்திருக்கும் கேரள நாட்டின் மலையாள இலக்கியங்களிலும் ஆந்திர நாட்டின் தெலுங்கு இலக்கியங்களிலும்கூட அவற்றை நாம் பார்க்கிறோம். பார்த்துப் பெருமூச்சு விடுகிறோம். அப்படியிருக்கத் தமிழும் தமிழ்நாடும் மட்டும் பழமை என்னும் குட்டையில் ஏன் இன்னும் மட்டை போல் ஊறிக் கொண்டிருக்க வேண்டும்?

காரணம் இருக்கிறது. ஆம், காரணம் இருக்கத்தான் இருக்கிறது. அன்றிலிருந்து இன்றுவரை சில சைத்தான்கள் தமிழ்நாட்டு இலக்கிய பீடத்தைப் பற்றிக்கொண்டு நாசம் புரிந்து வருகின்றன. அந்தச் சைத்தன்களைச் சுற்றிச் சனியன்கள் கூடிக் கொம்மாளம் அடிக்கின்றன. இதுகளுக்குப் புதுமையும் தெரியாது; புடலங்காயும் தெரியாது.

எதையெல்லாமோ புதுமை புதுமை என்று கூறிக்கொண்டு அபத்தங்களை, அலங்கார வார்த்தைகளை அள்ளி வீசி, குடும்பக் கதைகள் என்ற பேரிலே ஜீவனற்ற நபும்சக இலக்கியங்களைப் படைத்துக் குப்பைகளைக் குன்றுகளாகவும் கோபுரங்களாகவும் உயர்த்திக் காட்டி உபாதானம் பெறுகின்றன.'

விந்தனின் இந்த ஆவேசத்தில் வெடித்த பல சிறுகதைகள் வாசகரின் மன நிம்மதியைக் குலைக்கும் சம்பவங்களைக் கொண்டிருந்தன. சிந்திக்க வைத்தன.

கருவுற்ற பெண் ஒருத்தியால் வீட்டுக்குப் பணிவிடை செய்ய இயலவில்லை என்ற காரணத்துக்காக அவளுடைய மாமியார் அவளைத் தாய்வீட்டுக்கு அனுப்புகிறாள்.

கணவன் தன்மீது கருத்தாக இருக்கும்பொழுது, தான் இவ்வாறு வெளியேற்றப்படுவதைப் பற்றி அந்தப் பெண் சிந்திக்கிறாள். வீட்டிலிருந்த பசுவின் பால் வற்றியபோது அதுவும் வெளியேற்றப்பட்டதைப் பற்றி நினைவுகூர்கிறாள். அந்தப் பசுவினால் பயனில்லை என்று உணர்ந்ததைப்போல, தானும் இனி வீட்டு

வேலைகளைச் செய்ய முடியாதவள் என்ற காரணத்துக்காக வெளியேற்றப்படுவதாக அவள் கருதுகிறாள்.

விற்கப்பட்ட பசுவுக்குப் பதிலாக வேறு பசுவை வாங்கிக்கொள்ள முடியும் என்பதைப் போல், தான் இறந்துவிட்டால் வேறொரு பெண் அந்த வீட்டின் மருமகளாக வரக்கூடும் என்று அஞ்சுகிறாள்.

ஓரளவு நனவோடை உத்தியைக் கொண்டிருக்கும் இந்த ஆரம்பகாலக் கதையிலேயே விந்தனின் திறமை வெளிப்படுகிறது. கதையின் தலைப்பான மாட்டுத் தொழுவம் என்ற பெயரும் ஒரு குறியீடாக அமைகிறது.

ஆத்மநாதன் இறந்துவிட்டபோது தவித்துப்போன குடும்பத்தாருக்கு ஆறுதல் சொல்லப்போனவன், அங்கே தன்னைப் போல் வந்தவர்கள் எல்லோருமே இறந்தவன் உயிருடன் இருந்தால் தாங்கள் அடைந்திருக்கக்கூடிய லாபத்தைப் பற்றியே பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்து வேதனையடைகிறான். வருந்துவது யார் - என்ற இந்தக் கதை சம்பவ ஒருமை கொண்ட நல்ல வடிவத்துடன் அமைந்திருக்கிறது.

மாதச் சம்பளத்தில் வேலை செய்பவர்கள் அன்றாடம் ஏற்படும் செலவுகளைச் சமாளிப்பதற்காகப் படும் அவஸ்தைகளை முதல் தேதி என்ற கதையில் விளக்குகிறார்.

வறுமையில் தவிக்கும் கணேசன் குழந்தைகளின் விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்கும், வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுப்பதற்கும், வீட்டு வாடகை கொடுப்பதற்கும் சம்பள தினமான அடுத்த மாத முதல் தேதியை நம்பிக் கொணடிருக்கிறார். முதல் தேதி வந்தவுடன் சம்பளம் முழுவதும் செலவாகி, மீண்டும் தேவைகளுக்காக அடுத்த மாதம் முதல் தேதியை எதிர்பார்த்திருக்க வேணடிய நிர்ப்பந்தத்தைப் பரிகாசத் தொனியுடன் விளக்குகிறார் விந்தன்.

குடிசைவாசிகளின் வாக்குகளைப் பெற்று சட்டசபை உறுப்பினராகப் பதவி பெற்ற அரசியல்வாதி, அந்த மக்களின் குடிசைகள் அகற்றப்பட்டபோது சட்டசபையில் அவர்களக்காக வாதாடச் செல்கிறார். ஆனால் அங்கே அவருக்கு மந்திரிப்பதவி

கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறதென்று கேள்விப்பட்டவுடன தம்முடைய எண்ணத்தைக் கைவிட்டுவிடுகிறார்.

தங்களுடைய பிரதிநிதியாகிய அவர் தங்கள் குறைகளைப் பற்றி ஏன் எடுத்துரைக்கவில்லை என்று குடிசைவாசிகள் வந்து கேட்கும் போது அவர்தான் தனக்கும் தன் குடும்பத்துக்கும்தான் பிரதிநிதி என்று சொல்லி விரட்டிவிடுகிறார்.

யாருக்கும் பிரதிநிதி என்ற இந்தக் கதையைப் போலவே மற்றும் பல கதைகளிலும் விந்தன் வசதியற்ற மக்களுக்காகக குரல் கொடுக்கிறார்

பாட்டாளி மக்களுக்காகச் சிறுகதை இலக்கியத்தில் ஆரம்பத்தில் குரலகொடுக்க முன்வந்தவர்களில் விந்தனை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும்.

கலகி நிறுவனத்தில் இருக்கும்போதே அவர் சாதாரணத் தொழிலாளியாக ஆரம்பித்து, கலகி கிருஷ்ணமூர்த்தியின் கண்டுபிடிபபாகக் கதைகளும் கட்டுரைகளும் எழுதி, பின்னர் அவர் கொளகை மறறவர்களுக்குப் பிடிக்காத காரணத்தால அநத நிறுவனததிலிருந்து விலகினாலும், விந்தனின் நூல் ஒன்றுக்குப் பாராட்டுரை எழுதியவர் கல்கிதான் பின்னர் தனியாக மனிதன் பத்திரிகையை நடாதத் துணிந்தபோது விந்தனின் மனிதபிமான உணர்ச்சியையும் துணிவையும் மெச்சி அந்த இதழில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதியவர் பேராசிரியர் மு. வரதராசனார்.

அதே சமயம் அந்த இதழின் கொள்கை முறபோக்கு ரீதியில் இருக்கக் கண்டு அதில் ஈடுபாடு கொண்டவர்களில் இரு இளைஞர்கள் புதுமைத் தமிழிலும், புதுமைப் பொருளிலும், புதுமை அமைப்பிலும், சிறந்த சிறுகதைப் படைப்பிலும் தமது முத்திரையைப் பதித்தார்கள். அந்த இரு இளைஞர்கள் சுந்தா ராமசாமியும் ஜெயகாந்தனும் ஆவர்.

# 12

## விந்தன்

- க. சமுத்திரம்

*'தமிழ் இலக்கியத்தில், பாட்டாளி வர்க்கப் படைப்பாலும், அவர்களுள் ஒருவராய் வாழ்ந்த நெறியாலும், எந்த எழுத்தாளனும் தொடாத இலக்கியச் சிகரத்தைத் தொட்ட வீச்சாலும், தக்காரும் மிக்காரும் இல்லாத தனிப்பெரும் படைப்பாளியான விந்தன், திறனாய்வாளர்களாலும் முட்டாள் வாசகப் பரப்பாலும், அமுக்கப்பட்டது போல், இந்த மணிமேகலையையும், இலக்கியப் பேச்சாளர்கள் அமுக்கி விட்டார்கள்.'*

*சரியாகப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு அதாவது 1983ஆம் ஆண்டு வெளியான எனது 'நெருப்பு தடயங்கள்' என்ற நாவலில் அதன் நாயகியும், தமிழ்ப் பேராசிரியையுமான, தமிழரசி இப்படி நினைப்பதாக எழுதினேன்....*

*கண்ணகியைவிட சிறந்த பாத்திரமான மணிமேகலைப் பாத்திரம், கண்ணகிக்கு வழிவிட்டு அமுக்கப்பட்டது போல், ஒரு குறிப்பிட்ட எழுத்தாளனை முதன்மை படுத்துவதற்காக விந்தன் இலக்கிய உலகில் ஓரளவு மறைக்கப்பட்டார் என்ற என் கருத்தைத்தான் தமிழரசி பிரதிபலித்தாள்.*

*இந்த நாவலுக்கு முன்னுரை எழுதிய டாக்டர் மா. ராமலிங்கம் (எழில் முதல்வன்) அவர்கள் இதைக் குறிப்பிட்டு, யாரும், யாரையும் அமுக்கி விட முடியாது .. திறமான புலமையெனில் எத்தனை பேர் சேர்ந்து அமுக்கினாலும் தன்னை வெளிப்படுத்திக் கொண்டுவிடும் ஆற்றல் அதற்கு உண்டு... என்றார்.*

*முனைவர் எழில் முதல்வன் அவர்கள், சுட்டிக் காட்டியது முழு உண்மை இல்லையானாலும் பாதிக்கு மேல் உண்மைதான்.. இன்று*

விந்தனின் படைப்புகள் மறுவாசிப்பு செய்யப்படுகின்றன. அவரை மக்கள் எழுத்தாளர் என்ற தகுதியான முத்திரையுடன், தோழர் மு. பரமசிவம் அவர்கள், அவரது வாழ்க்கை வரலாற்றை எழுதியிருக்கிறார். இப்போது விந்தன் மலரும் வெளியாகிறது.

விந்தன் அவர்களிடம் இளம் படைப்பாளியாக நான் இருந்த காலந்தொட்டே ஒரு பிரமிப்பும், அவர் எனது இலக்கிய முன்னோர் என்ற எண்ணமும் என்னுள் ஏற்பட்டது. இவ்வளவுக்கும் அவரின் படைப்புகள்தான் எனக்குத் தெரியுமே தவிர, அந்தப் படைப்பாளி அல்ல... என்னைப் பொறுப்பாசியராகக் கொண்ட மத்திய அரசு திட்டக்குழுவின் **திட்டம்** என்ற பத்திரிகையில் கடைசி அட்டையில், விந்தன் அவர்களைப் பற்றித் தோழர் மு. பரமசிவம் எழுதிய கட்டுரையை பிரசுரித்தது எனக்கு இன்னும் நினைவுக்கு வருகிறது... அவர் காலமானபோது நான் கதை எழுதத் துவங்கினேன். இந்த வகையில் நான் இரண்டாவது விந்தன் என்ற உணர்வு ஏற்படுகிறது... என்றாலும் -

தமிழ் இலக்கியத்தின் மகத்தான படைப்பாளியான விந்தன் பேசப்பட வேண்டிய அளவிற்குப் பேசப்படவில்லை. மேட்டுக்குடி இலக்கிய நீரோக்களால் அவர் படைப்புகள் எரியூட்டப்படுகின்றன. ஆனாலும் அந்தச் சாம்பல் கூட அவரைச் சுட்டுப் பொசுக்குகிறது... 1983 ஆம் ஆண்டே மேற்குறிப்பிட்ட கருத்தை நான் சொல்வதற்குரிய சமூக வாசகத்தளம் எப்படிப்பட்டது..?

## முட்டாள்களின் சொர்க்கம்

சமூகச் சிந்தயைாளர் அ.மா.சாமி அவர்கள் தான் எழுதிய 'இந்திய விடுதலைப் போர்' செந்தமிழ் தந்த சீர் : என்ற நூலில் குறிப்பிட்டது போல், விடுதலைப் போராட்டத்தைப் பற்றிய முழுவீச்சு, தமிழ் இலக்கியத்தில் அந்தக் காலக் கட்டத்தில் இடம் பெற வேண்டிய அளவிற்கு இடம் பெறவில்லை விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்ட எழுத்தாளர்களை உள்ளடக்கிய மணிக்கொடி கூட விடுதலைப் போராட்ட தாக்கத்தைப் பதிவு செய்யவில்லை... தக்காரும், மிக்காரும் இல்லாத படைப்பாளியாகக் கருதப்படும் புதுமைப்பித்தன்கூட விடுதலைப் போராட்டத்தை எடுத்தேன, கவிழ்தேன் என்ற முறையில்தான் கொச்சைப்படுத்தியிருக்கிறார்.

அந்தக் காலத்து படைப்பாளிகள், தமது காலக்கட்டத்தில் நிகழ்ந்த மகத்தான போராட்டம் அவரின் மனதில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை எனபது என்னுள் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இந்தப் பாராமுக நீரோதனத்திற்கு மகாகவி பாரதியாரும் கல்கியுமே விதிவிலக்கு..

ஆனாலும் இன்றுகூட புதுமைப்பித்தனின இந்த வேண்டா வெறுப்பு அணுகுமுறை சுட்டிக்காட்டப்படுவதில்லை ,,, பேராசிரியர் கல்கி அவர்களின் படைப்புகளில்கூட 'பொன்னியின் செல்வன்,' 'சிவகாமி சபதம்' ஆகிய சரித்திர நாவல்கள்தாம் நிலை நிறுத்தப்படுகின்றன.

விடுதலைப் போராட்ட வேள்வியைச் சித்திரிக்கும் அவரது 'அலை ஓசை,' 'தியாக பூமி' போன்ற நாவல்கள் பேசப்படுவதே இல்லை... இப்போது கூட. சி.சு. செல்லப்பா அவர்கள் தாம் கலந்து கொண்ட விடுதலைப் போாாட்ட வேள்வியைச் சித்திரிக்கும் நாவலான பெரிதாகப பேசப்படவிலலை.

இதிலிருந்து நமக்குத் தெரிவது, தமிழ் இலக்கியவாதிகளும், வாசகப்பரப்பும் இன்னும் முட்டாளின் சொர்க்கத்திலேயே வாழ்கிறது. இலக்கியம் என்பது சமகால வெளிப்பாடுகளாக இல்லாமல் நித்தியத்துவ நெறிகளை விளக்கும் படைப்பாக இருக்க வேண்டுமென்ற தவறான அணுகுமுறையே நிலவி வருகிறது.

இந்தப் பின்னணியில் விந்தனையும், அவரது படைப்புக்களையும், அணுக வேண்டியதுள்ளது தமிழ் சமூக இலக்கிய சக்திகள் முட்டாள் சொர்கக வாசிகளுக்கு மாற்றாக உருவாகியிருக்கும், முற்போககு படைப்பாளிகள் மூலம் விநதன் வெளிப்படுத்தப்படுகிறார்.. காலப் போக்கில் பாட்டாளிக் கலாச்சாரம் மேலோங்கும்போது விந்தனும், இலக்கிய கான்ஸ்டேபிள்களை ஊடுருவி, இலக்கிய முதல்வர் ஆவார்... இதில சந்தேகமில்லை...

**பன்முகத் தன்மை**

மு பரமசிவம் அவர்களின் விந்தன் பற்றிய வரலாற்று நூலைப் படித்தபோது, விந்தனில் ஒன்றிவிட்டேன்.... கிட்டததட்ட என்னுடைய சுபாவமே அவருக்கு இருநதிருப்பதாக அனுமானிக்கிறேன்... ஆனாலும் மத்திய அரசுப் பணியில் நான் இருந்ததால் விந்தனைப்

போன்ற லௌகீக வாழ்க்கை எனக்கு ஏற்படவில்லை... அதே சமயம் விந்தனுக்குரிய பன்முகத் தன்மை, என்னிடம் மட்டுமல்ல, இதர சக படைப்பாளிகளிடமும் இல்லையென்றே கருதுகிறேன்

ஒரு வேளை அவரை, மேலாண்மை பொன்னுச்சாமியுடனும், தேனி சீருடையானுடனும் ஒப்பிடலாம். ஆனால் இவர்களுக்கு இருக்கும் மகததான இயக்கம், விந்தனுக்குப் பின்பலமாக இருக்கவில்லை.

அவனருளாலே அவன்தாள் வணங்கி - என்பதுபோல் மேட்டுக்குடி படைப்பாளிகளின் ஆதரவுடன்தான் விந்தன் மேட்டுக்குடிக் கலச்சாரத்தைச் சாடியிருக்கிறார்... பாமர மக்களைத் தட்டி எழுப்பிய திராவிட இயக்கம்கூட விந்தனைப் படைப்பு ரீதியாகக் கண்டு கொள்ளவில்லை..

ஆனாலும் விந்தன் வறுமை, சிறுமை, தனிமை போன்ற துயரக் குவியல்களை நேர்மை, சுயமரியாதை, போன்ற தார்மீக ஆயுதங்களால இழுத்தெறிந்து, துலங்கியிருக்கிறார்...

இதற்குக் காரணம் ஒரு பாட்டாளியாக, ஆலைத் தொழிலாளியாக வாழ்க்கையைத் துவக்கி, அச்சுத் தொழிலாளியாக, பத்திரிகை ஆசிரியராக. இலக்கிய வாதியாகவும் போலிகளை அடையாளப் படுத்தும் கட்டுரையாளராகவும், திரைப்பட வாதியாகவும் பன்முகமாக இயங்கி இருக்கிறார்..

இவரது புத்தகப் பூங்கா என்ற தமது பதிப்பகம் வெளியிட்ட 'ஒரு பிடி சோறு' என்ற சிறுகதைத் தொகுப்பைப் படிததுததான் ஆனந்தவிகடன ஜெயகாந்தன் அவர்களை அடையாளம், கண்டிருக்கிறது... இவரது மாத இதழுக்கு, 'மனிதன்' என்ற பெயர் வைத்திருப்பதிலிருந்தே இவரது மனித நேயததைப் புரிநது கொள்ளலாம்.

ராஜாஜி அவர்கள் மொழியாக்கம் செய்த பஜ கோவிந்தத்திற்கு மாற்றாக, இவர் எழுதிய பசி கோவிந்தம் இவரது துணிச்சலைக் காட்டும்... பல்வேறு திரைப்பட வாய்ப்புகளைப் பயன்படுத்தாமை இவரது சுயமரியாதையைச் சுட்டிக் காட்டும்

எல்லாவற்றிற்கும் மேலாக,

விந்தனின் படைப்புகள் விஞ்சி நிற்கின்றனவா அல்லது விந்தனா - என்று ஒரு பட்டி மண்டபமே நடத்தலாம்... என் வாழ்க்கையே ஒரு செய்தி என்று அண்ணல் காந்தி சொன்னது போல், விந்தனின் பன்முக வாழ்க்கையே அவரது படைப்புகள்...

கடலே இணை என்பது போல் விந்தன் நடைக்கு விந்தன் நடையே இணை..., புதுமைப்பித்தன் படிப்பாளிகள் மகிழ, எள்ளல் நடையைக் கொடுத்தார்... விந்தனோ பாமர மக்களுக்கும் புரியும் அளவிற்கு எள்ளல் நடையை எளிமைப்படுத்தினார்.

அவரது சிறுகதைத் தொகுப்பான 'நவீன விக்கிரமாதித்தன்' இதற்கொரு உதாரணம்... கலைஞர் அவர்களையும், சாவி அவர்களையும் நண்பர்களாக்கிவர் விந்தன்..

ஆனாலும் தனது வீடு ஏலத்தில் போகிற நிலமை ஏற்பட்டபோது, அப்போதும் முதலமைச்சராக இருந்த கலைஞரிடம் சொல்லத் தயங்கியவர் என்று தினமணிக் கதிரின் அப்போதைய துணை ஆசிரியரான திரு.சி.ஆர். கண்ணன் அவர்கள் பத்தாண்டுகளுக்கு முன்பு என்னிடம் தெரிவித்தார்.

இவரது ஒரு பக்க சிறுகதையான **நடக்காதது**. ஓராயிரம் கருத்துகளை உள்ளடக்கியது.

பொதுவாக இவரது படைப்புக்கள், தோழன் தோழனுக்குச் சொல்வதைப் போன்றது... தெருவிலே நடக்கும் பாமர மக்கள் நடையை சிறிது தளர்த்தியோ, அல்லது நிறுத்தியோ தத்தம் கஷ்டங்களை அல்லது மகிழ்ச்சியான சங்கதிகளை எப்படிப்பட்ட முகபாவத்துடன் ஏற்ற இறக்க குரலில் அந்தக் குரலுக்குரிய மொழி அடர்த்தியில் பேசுவார்களோ, அப்படிப்பட்ட நடை விந்தனது மொழி நடை....

இந்த மொழி நடையை இருபத்தொன்றாம் நூற்றாண்டிலும், அதற்குப் பிறகு வரும் பல்லாண்டு, பல்லாண்டு நூற்றாண்டுகளிலும் புரிந்து கொள்ளலாம்.. இந்த வகையில் இவர் இயற்றமிழில் ஒரு பாரதி...

## இலக்கிய அணுகுமுறை

விந்தனின் இலக்கிய அணுகுமுறையைப் படித்ததும் நான் ஆச்சரியப்பட்டேன்... நானே நான் பேசியதைக் கேட்பதுபோல்

ஒலித்தது... ஆனாலும் அவரைப் போல இவ்வளவு குத்தலாக என்னால் சொல்ல இயலும் என்பது சந்தேகம்... இதோ அவரது பேனா பேசுகிறது... வாசகர்களை விழித்து இப்படிக் கூறுகிறது...

இன்று வரை சில சைத்தான்கள் தமிழ்நாட்டு இலக்கியப் பீடத்தைப் பற்றிக் கொண்டு நாசம் புரிந்து வருகின்றன... எதையெல்லாமோ புதுமை, புதுமை, என்று கூறிக் கொண்டு அபத்தங்களை, அலங்கார வார்த்தைகளை அள்ளி, அள்ளி வீசி, குடும்பக் கதைகள் என்ற பேரிலே, ஜீவனற்ற இலக்கியங்களைப் படைத்துக் குப்பைகளைக் குன்றுகளாகவும், கோபுரங்களாகவும் உயர்த்திக் காட்டி, உங்களிடமிருந்து அவை உபாதானம் பெற்று வருகின்றன.. இந்தச் செயலற்றதனத்தைக் கண்டு நீங்கள் சிரித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும் இருந்தாலும் மேற்படி உபாதானத்தை நீங்கள் தொடர்ந்து செய்து வந்தால் தமிழ்மொழி வளராது... தமிழ் இலக்கியமும் செழிக்காது...

விந்தன் அவர்கள் கூறுவது முற்றிலும் உண்மைதான்... விந்தன் என்ற கோபுரத்தை உயர்த்திக் காட்ட முற்பட்டால் அவர் குறிப்பிட்ட குப்பைக் கோபுரங்கள் தானாய் தரைதட்டும்... இதனால் விந்தன் மேன்மைப்படுவதோடு மக்கள் இலக்கியமும் மேன்மைப்படும்... இந்த இரண்டும் ஒரு இலக்கிய நாணயத்தின் இரு பக்கங்கள்.

1998

# 13

## பாரதி பாதையில் விந்தன்

- தி,க,சிவசங்கரன்

*இன்றைய தமிழ் இலக்கியத்தைப் பாரதி பாதையில் வளர்த்த எழுத்தாளர்களில் விந்தனுனுக்கு ஒரு முக்கிய இடமுண்டு. பாரதியின் லட்சியங்களில் விந்தன் ஊறித் திளைத்திருந்தார் என்பதை அவரது படைப்புகள் காட்டுகின்றன.*

'ஏழையென்றும். அடிமையென்றும் எவனுமில்லை ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்ப திந்தியாவில் இல்லையே,
வாழி கல்வி செல்வமெய்தி மனமகிழ்ந்து கூடியே
மனிதர்யாரு மொரு நிகர் ஸமானமாக வாழ்வமே.'

*இது பாரதியின் மணிவாக்கு. இதைத் தமது இதயநாதமாகக் கொண்டிருந்தார் விந்தன். இந்தக் கோட்பாட்டில் சமரசம் எதுவும் செய்து கொள்ளாத சிறந்த எழுத்தாளனாக அவர் திகழ்ந்தார்.*

*'மனிதன்! ஆ! அந்தச் சொல் எத்தனை பெருமைக்குரியது!' என்றார் மாக்சிம் கார்க்கி. மனிதனின் பெருமையை- உழைப்பாளி மக்களின் உயர்வைப் பாடிய எழுத்துக்களே. விந்தனின் படைப்புக்கள்.*

*உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்யும் விந்தன், வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்கிறார். இதற்காக நையாணடி என்னும் வலிமை மிக்க ஆயுதத்தை ஏந்துகிறார். இந்த ஆயுதம் அவரது வெற்றிக்கு அடிப்படையாக விளங்குகிறது.*

*எல்லோரும் ஒன்றென்னும் காலத்தை, பொய்யும் ஏமாற்றும் தொலைகின்ற காலத்தை, இனி நல்லோர் பெரியோர் என்னும்*

காலத்தை, கெட்ட நயவஞ்சகக்காரருக்கு நாசம் வரும் காலத்தை விந்தன் எப்போதும் விரும்பினார்; அந்தக் காலத்தை உருவாக்கும் பணியில், தமது எழுத்துத் திறனை அர்ப்பணித்தார்.

இன்றைய முற்போக்குத் தமிழ் இலக்கியத்தின் முன்னோடிகளில் ஒருவராக விளங்கும் விந்தன், 1916 செப்டம்பர் 22இல் பிறந்தார்; 1975 ஜூன் 30இல் சென்னையில் மறைந்தார்.

59வயது நிரம்பு முன்பே மறைந்த விந்தன், 150க்கு மேற்பட்ட சிறுகதைகள், 6 நாவல்கள், எண்ணற்ற கட்டுரைகள், குட்டிக்கதைகள், பசி கோவிந்தம் என்ற கவிதை நூல் முதலியவற்றை எழுதியுள்ளார்

1942இல் கல்கி பத்திரிகையில் அச்சுக்கோக்கும் தொழிலாளியாகச் சேர்ந்த விந்தன், தமது எழுத்துத் திறமையாலும், கல்கி ஆசிரியர் ரா. கிருஷ்ண மூர்த்தியின் ஆதரவாலும் கல்கியின் உதவி ஆசிரியரானார் அங்கே சுமார் பத்தாண்டுக் காலம் (1942-1952) பணியாற்றினார். இந்தக் கால கட்டத்தில் தமது சிறுகதைகள் வாயிலாகவும், கல்கியில் எழுதிய பாலும் பாவையும் என்ற நாவல் வாயிலாகவும், பல்லாயிரக கணக்கான வாசகர் உள்ளததில ஒரு தனியிடத்தைப் பிடித்துக் கொண்டார்.

1952க்குப் பிறகு கல்கியிலிருந்து விலகி, சினிமாத்துறைக்குச் சென்றார்; ஆனால், விடுதலை வேட்கை நிரம்பிய அவருக்கு, அது ஒத்துக் கொள்ளவில்லை.

1953-1954 வாககில் ‘மனிதன்’ என்ற சொந்தப் பத்திரிகையை (இலக்கிய இதழை) ஆரம்பித்தார்; கவிஞர் தமிழ ஒளி, ஜெயகாந்தன் முதலியோர் அவரது முயற்சிக்குத் துணை நின்றனர். விஜய பாஸ்கரனின் சரஸ்வதி, ரகுநாதனின் சாந்தி ஆகியவை வெளிவந்த ஒரு முக்கியமான காலகட்டம் இது

1952க்குப் பிறகு தமிழ்நாட்டில் முற்போக்கு இலக்கியம செழிக்கத் தொடங்கியது எனினும, முற்போக்கு இலககிய இதழ்களுக்குப் போதிய ஆதரவு கிடைக்கவில்லை, குமுதம் விகடன், கல்கி முதலிய பத்திரிகைகளின் கையே மேலோங்கி இருந்தது (இன்றும அதே நிலைதான) இந்தச் சூழ்நிலையில ‘மனிதன்’ நிறுத்தப்பட்டதில் வியப்பில்லை

சொந்தப் பதிப்பகம் தொடங்கிச் சில நூல்களை வெளியிட்டார், விந்தன். ஜெயகாந்தன் சிறுகதைத் தொகுப்பை முதன் முதலில் வெளியிட்ட பெருமை அவரைச் சாரும்.

சிறிது காலத்தில் பதிப்பகத்தையும் மூட வேண்டியதாயிற்று. வேலையில்லாத் திண்டாட்டம் அவரை வாட்டிற்று. எனவே, 'சாவி' ஆசிரியராக இருந்த 'தினமணி கதிரில் உதவி ஆசிரியராகச் சேர்ந்தார். அங்குச் சில ஆண்டுகள் கழிந்தன. 58 வயதில் ஓய்வு பெற நேர்ந்தது; 1974இல் ஓய்வு பெற்றார். அதன் பின்னர் சில மாதங்களில், 1975 ஜூனில் விந்தன் காலமானார்.

இந்த விவரங்களை இங்குக் குறிப்பிடுவதற்குக் காரணம், விந்தனின் வாழ்க்கை நமக்கெல்லாம் ஒரு படிப்பினையாகவும் எச்சரிக்கையாகவும் விளங்குகிறது.

## விந்தன் - புதுமைப் பித்தன்

இலக்கியத் துறையைப் பொறுத்தமட்டில், புதுமைப் பித்தன் (1906-1948) வாழ்க்கைக்கும் விந்தன் வாழ்க்கைக்கும் (1916-1975) இடையே பல ஒற்றுமைகள் உள்ளன.

புதுமைப்பித்தன் கோயங்காவின் தினமணி, டி.எஸ் சொக்கலிங்கத்தின் தினசரி ஆகியவற்றில் (1934-1944இல்) வேலை பார்த்தார். விந்தன், கல்கி, தினமணி கதிர் ஆகியவற்றில் பணியாற்றினார்.

புதுமைப்பித்தன் சினிமாத் துறையில் சில காலம் (1944-1948) ஊடாடினார். பாகவதர் - பானுமதி நடித்த 'ராஜமுக்தி' போன்ற ஒன்றிரண்டு படங்களுக்கு வசனம் எழுதினார். 'பார்த்திபன் கனவு' போன்ற சில படங்களுக்கு வசனத்துடன் பாடல்களும் விந்தன் எழுதினார்.

பாரதியை மிகவும் நேசித்த இவ்விரு படைப்பாளிகளும், சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் பாரதியின் ஜீவாதார லட்சியங்களில் பற்றுக் கொண்டவர்கள்; விளம்பரம் விரும்பாதவர்கள். புதுமை, பரிசோதனை, தனித்தன்மை ஆகியவற்றை விரும்பியவர்கள்.

சமுதாயத்தில் காணப்படும் அநீதிகள், அக்கிரமங்கள், ஏற்றத் தாழ்வுகள், இழி தகைமைகள், புன்மைகள், போலித்தனங்கள்

இவற்றைத் தமது படைப்புகள் மூலம் அம்பலப்படுத்தியவர்கள்; இதற்காகத் தமது எழுத்துக்களில் அங்கதம் (நையாண்டி) என்னும் சுவையைச் சிறப்பாகக் கையாண்டவர்கள்.

'நாட்டு மக்கள் நலமுற்று வாழவும், நானிலத்தார் மேனிலை எய்தவும், இலக்கியம் பயன்பட வேண்டும் என்ற கொள்கை உடையவர்கள். இவர்களது அழகியல் கோட்பாடு, சமுதாயத்தோடு நெருங்கிய தொடர்புடையது; சமூக - பொருளாதார உறவுகளோடு பின்னிப் பிணைந்தது.

வேறு விதமாகச் சொன்னால் இன்றைய சமுதாயத்தை நோய் பிடித்த சமுதாயமாக இவர்கள் கருதினார்கள்.

சாதி மத பேதங்கள், பொருளாதார ஏற்றத் தாழ்வுகள், அறியாமை, மூட நம்பிக்கை, மனிதனை மனிதன் சுரண்டுதல், ஏமாற்றுதல், வஞ்சித்தல், அடக்கி ஒடுக்குதல் - இவற்றை இந்தச் சமதாயத்தில் கண்ட போதெல்லாம் இவர்கள் குமுறினார்கள்; சீறினார்கள்; சிந்தித்தார்கள்; இதுவே இவர்களது ஆளுமையாக மாறியது.

இந்த ஆளுமையைத்தான் தமது படைப்புக்களிலே வெளிப்படுத்தினார்கள்.

இவர்கள் கலையுள்ளம் படைத்தவர்கள்; கலை நயமும் நுட்பமும் தெரிந்தவர்கள். எனவே தமது உணர்வுகளுக்கும், சிந்தனைகளுக்கும், தத்துவங்களுக்கும், தரிசனங்களுக்கும், கலை வடிவம் தந்து, நம்மையெல்லாம் கவருகிறார்கள்.

தமது இலக்கியக் கொள்கை பற்றி விந்தன் கூறுகிறார்;

'போலியைச் சுட்டெரிக்கும் புதுமைகளை, வாழ்க்கையை அலசி அலசிப் பரிசீலிக்கும் ரசாயனங்களை, சமுதாயத்தின் புற்று நோய்களுக்கு மின்சார சிகிச்சை அளிக்கும் குரூர வசீகரங்களைப் படம் பிடித்துக் காட்டி, மனித உள்ளத்தில் எங்கோ ஒரு மூலையில் செய்வதறியாது ஏங்கிக் கிடக்கும் மனிதாபிமானத்தைத் தட்டி யெழுப்பும் உயிரோவியங்களை, அந்த அபிமானத்திற்கு விரோதமாயிருக்கிற, இருந்து வருகிற மனித மிருகங்கள் மேல் வெறுப்பைக் கக்கி, உங்கள் நல்வாழ்விற்கு வழி தேட முயலும் நவயுகக் கதைகளை, இன்று போல நீங்கள் என்றும் வரவேற்று

வாழ்த்தி, தமிழை வளப்படுத்த வேண்டும் - தமிழ் நாட்டை மேம்படுத்த வேண்டும். இதுவே என் எண்ணம்; இதுவே என் இருபது வருட கால எழுத்து.'

'விந்தன் கதைகள்' என்ற நூலில் தமது இலக்கிய நோக்கம் பற்றி, மேற்கண்டவாறு அவர் பிரகடனம் செய்துள்ளார்.

'சமுதாய விரோதி' என்ற தமது சிறுகதைத் தொகுப்பில் விந்தன் இவ்வாறு கூறுகிறார் :

'ஒரே வார்த்தையில் சொல்வதானால், நம் உழைப்புக்கேற்ற மதிப்பு - அந்த மதிப்பைப் பெறுவதற்குத்தான். நாம் இன்று கடவுளுடன் போராடுகிறோம்; மதத்துடன் போராடுகிறோம்; கலையுடன் போராடுகிறோம் இந்தக் கடுமையான போராட்டத்தில் நாம் வீழ்ந்தாலும் சரி, நம் சந்ததிகளாவது வாழ வேண்டும்' - என்று உறுதியுடன் முழங்குகிறார் விந்தன்.

எனவே, போர்க் குணம் மிக்க மனிதாபிமான எழுத்தாளர், கொள்கைப் பிடிப்புள்ள பேனா வீரர், பாரதியின் சீரிய வழித் தோன்றல் என்று நாம் விந்தனைப் பாராட்டலாம்;

'விந்தனுடைய படைப்புக்களில் புதுமைப் பித்தனை விட மிக அதிகமான அளவிற்கு ஒரு சத்திய ஆவேசமும், சமுதாய உணர்வும் இருப்பதைக் காண முடியும்' என்று விமர்சகர் எஸ். தோதாத்ரி கூறுகிறார். இது ஒரு சரியான மதிப்பீடு என்பதில் ஐயமில்லை.

'முல்லைக்கொடியாள்,' 'ஒரே உரிமை,' 'சமுதாய விரோதி;' 'விந்தன் சிறுகதைகள்' ஆகிய தொகுப்புக்களைப் படித்துப் பாருங்கள்; தோதாத்ரி கூறுவது உண்மையென விளங்கும்.

புதுமைப்பித்தனை விட மிக அதிகமான அளவுக்குச் சத்திய ஆவேசமும், சமுதாய உணர்வும் கொண்டவராக விந்தன் இருப்பதற்குக் காரணம் என்ன?

விந்தன் ஒரு பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்; உழைப்பாளர் குடியில் பிறந்தவர்; பள்ளியில் அதிகம் படிக்காதவர்; உழைப்பாளியாக - அச்சுத் தொழிலாளியாகத் தமது வாழ்வைத் தொடங்கியவர்; உழைப்பாளி மக்களை எப்போதும் நேசித்தவர்; அவர்கள் எல்லா வகையிலும் உயர வேண்டும் என்று சதா கனவு கண்டவர்;

தொழிலாளர்களின் உரிமைப் போராட்டங்களை ஆதரித்தவர். (**வேலை நிறுத்தம்** ஏன்? - என்ற அவரது நூல் குறிப்பிடத்தக்கது.)

உழைப்பாளர்களின் வாழ்வும் தாழ்வும், தமது வாழ்வும் தாழ்வும் எனக் கருதியவர்.

> "அய்யா! பொய்யும் புரட்டும் இல்லாத லோ சர்க்கிளே எனக்குப் போதும். அவர்கள் வாழ்ந்தால், நானும் வாழ்கிறேன், அவர்கள் செத்தால் நானும் சாகிறேன்"

- இது விந்தனின் வாக்குமூலம்.

இத்தகைய கோட்பாட்டு உறுதியும் போக்கும் புதுமைப்பித்தனிடம் இல்லை. காரணம், அவர் மத்தியதர வர்க்க அறிவு ஜீவிக் குடும்பத்தில் பிறந்தவர். ஒரு தாசில்தாரின் மகன். நெல்லை இந்துக் கல்லூரியில் பி.ஏ பட்டம் பெற்றவர்; அவரது சர்க்கிள் பெரும்பாலும் 'ஹை சர்க்கி' ளாகவே இருந்தது.

விந்தனுக்கு முன்னோடியாகப் பல விதத்தில் புதுமைப்பித்தன் விளங்கினார் என்றாலும், விந்தனைப் போலவே அவரும் ஒரு 'விமர்சன - எதார்த்தவாத எழுத்தாளர் (Critical Realist) என்ற போதிலும், விந்தனைப் போன்ற சார்புநிலை - உழைப்பாளி வர்க்கத்தைச் சார்ந்து நிற்கும் நிலை - அதன் விமோசனத்திற்காகப் போராட வேண்டும் என்ற நிலை - புதுமைப்பித்தனுக்குக் கிடையாது. இந்த வகையில், கொள்கை ரீதியில், புதுமைப்பித்தனை விட விந்தன் மேம்பட்டவர், தீவிரமானவர் என்று தயங்காமல் கூறலாம்.

வேறு விதமாகச் சொன்னால், பாரதியார், பாரதிதாசன், வ.ரா., புதுமைப்பிதத்ன் ஆகியோரின் உன்னத மரபுகளுக்குச் சிறந்த வாரிசாக விந்தன் விளங்குகிறார்; இதுவே விந்தனின் பெருமையாகும்; தனிச் சிறப்பாகும்.

## பாராட்டு

விந்தனின் இலக்கியக் கொள்கையுடன், அவரது எழுத்துத் திறனும் உயர்வாகவே இருந்தது. எனவே தான் கல்கியும், மு.வ.வும், கி. சந்திரசேகரனும், க நா சு.வும் அவரைப் பாராட்டியுள்ளார்.

"வாசகர்களின் மன அமைதியைக் குலைக்கக்கூடிய இயல்பு வாய்ந்த கதைகள்தான். உண்மையான இலககியம் என்று தற்காலத்து

இலட்சிய புருஷர்களும், இலக்கிய மேதாவிகளும் சொல்கிறார்கள். இது உண்மையானால், விந்தனுடைய சிறுகதைகள் உண்மையான இலக்கியம் என்பதில் ஐயமில்லை" என்று "முல்லைக் கொடியாள்" முன்னுரையில் 'கல்கி' கூறுகிறார்.

"விந்தன் படைக்கும் பாத்திரங்கள், பெரும்பாலும் 'அப்பாவி'களே. அவர்களுக்குச் சமூகத்தின் மேல் வயிற்றெரிச்சல் தோன்றுவதேயில்லை. ஆனால் நமக்கு மட்டும் வயிற்றெரிச்சல் தோன்றுகிறது.

'நாயோடு போட்டி போட்டுப் பிழைக்கும் சோலையப்பன், மாம்பழம் விற்று வயிறு வளர்க்கும் அம்மாயி, விளக்கெண்ணெய் வியாபாரம் செய்யாத நாடார் கடை மாணிக்கம் பிள்ளை இவர்களுடைய மனங்கள் எல்லாம், அமைதியான மனங்கள். ஆனால் அவர்களைப் பற்றிப் படிக்கும் மனங்கள், புரட்சி மனங்களாக மாறுகின்றன"

என்று 'ஒரே உரிமை' மதிப்புரையில் மு வ. எழுதுகிறார்

"ஆழ்ந்த மனச் சுழல்களில் நம்மைச் செருகும் தன்மை பெற்றவை இங்குள்ள கதைகளில் சில. ஒரு முறைக்கு இரு முறையாக அவைகளின் கருத்து நம்மைத் துடிக்க வைப்பதற்குக் காரணம் அதுவே அபிப்பிராயத்தின் தொனி விசேஷம் (Suggestion) சில சமயம் நம் உள்ளங்களைத் தொட்டு விடுகிறது"

என்று சமுதாய விரோதி' என்னும் தொகுப்பின் மதிப்புரையில் கி. சந்திரசேகரன் குறிப்பிடுகிறார்.

மேற்கண்ட மூவரின் கூற்றுக்கள் முழுக்க முழுக்க விந்தனின் இலக்கியக் கொள்கையை அங்கீகரித்து எழுந்தவையல்ல; ஆனால் விந்தனின் கலைத் திறத்தால், எழுத்து வன்மையால் வசீகரிக்கப்பட்டவை.

இத்தகைய திறமை சான்ற எழுத்தாளன், பாரதி பாதையில் நவயுக இலக்கியம் படைத்த எழுத்தாளன், தன் காலத்திலேயே புறக்கணிக்கப்பட்ட கொடுமை எவ்வாறு நிகழ்ந்தது?

வணிக நோக்கில் வளர்க்கப்படும் இன்றைய கலை - இலக்கியச் சூழல், இதற்கு ஒரு முக்கியக் காரணம் அல்லவா?

*இத்தகைய ஒரு மோசமான சூழலுக்குப் புதுமைப்பித்தன்களையும் விந்தன்களையும் நாம் பலி கொடுத்துக்கொண்டே இருக்க வேண்டுமா? இன்னும் எவ்வளவு காலத்திற்கு இந்தத் தொடர்கதை நீடிக்க வேண்டும்? இதற்கு முற்றுப் புள்ளி வைக்க நம்மால் முடியாதா?*

*இக்கேள்விகளுக்கு விடை காண்பது நம் அனைவரின் பொறுப்பாகும்.*

- (செம்மலர் - டிசம்பர் '82)

# 14

## விந்தன்

### - அருள்திரு டாக்டர் தி. தயானந்தன் பிரான்சிஸ்

*மக்கள் எழுத்தாளர் விந்தன் அவர்களை நேரில் கண்டறிந்தவன், அவரோடு பழகியவன் என்ற முறையில் இந்தக் கட்டுரையைச் சில இனிய நினைவுகளோடு தொடங்குகின்றேன்.*

*1954ஆம் ஆண்டு ஜூலை மாதம் என்று நினைவு. பச்சையப்பன் கல்லூரியில் டாக்டர் மு.வ., பேராசிரியர் அ.ச.ஞா., அ.மு.ப ஆகியோரிடம் பயின்று வந்த காலம். அந்தக் கல்லூரியில் சேர்வதற்கு முன்பே பொன்னி, காதல், தேன்கூடு, பிரசண்ட விகடன் போன்ற இதழ்களில் எழுதியிருந்த சில சிறுகதைகளை* **மஞ்சள் கயிறு** *என்னும் தலைப்பில் ஒரு நூலாக வெளியிட்டிருந்தேன்.*

*அப்போதே என்னுடைய இலட்சிய எழுத்தாளர்களாக நான் ஏற்றுக் கொண்டிருந்த திரு. விந்தன், திரு. ஜெகசிற்பியன் ஆகிய இருவரும் சேத்துப்பட்டுப் பகுதியில் வாழ்கின்றார்கள் என்பது தெரிந்திருந்ததால் இருவரையும் அந்தச் சிறிய சிறுகதைத் தொகுப்பு நூலோடு சந்திக்கலானேன்.*

*விந்தன் அவர்களின் வீட்டுக் கதவைத் தட்டவேண்டிய அவசியம் எனக்கு ஏற்படவில்லை. வாசலிலேயே நின்று கொண்டிருந்த அவர், 'வணக்கம்' தெரிவித்த, என்னை ஏற இறங்கப் பார்க்கும்போதே என்னை அறிமுகப்படுத்திக்கொண்டேன்.*

*எனக்கு வேலூர் என்பதைத் தெரிவித்ததுதான் தாமதம். உடனே,*

*'வேலூரா, உங்கள் ஊரில் உள்ள விக்டோரியா பிரசில் நான் வேலை பார்த்திருக்கிறேனே! உள்ளே வாருங்கள்' என்று என்னை*

அவர் அறைக்கு அழைத்துச் சென்றார். ஒரு பெரிய எழுத்தாளர், தாம் ஒரு காலத்தில் அச்சுக்கோக்கும் தொழிலாளியாக இருந்ததை என்னிடம் தெரிவித்தபோது எனக்கு வியப்பு மேலிட்டது.

அவர் தம்மைப்பற்றி அறிவித்த செய்தி அவருடைய பண்பார்ந்த வெள்ளை உள்ளத்தையும், போலித்திரைகளால் மறைக்கப்படாத மனத்தையும் முகமூடி ஏதுமில்லாமல் இயல்பான சிரிப்போடு காணப்பட்ட அவருடைய முகத்தையும் நான் பார்த்து மகிழ்ந்தவனாய் அவரோடு உரையாட ஆரம்பித்தேன். சுருக்கமான உரையாடல்.

அடுத்த மாதத்தில் வரவிருக்கும் மனிதன் பத்திரிகையைப் பற்றிப் பேசினார். என்னுடைய *மஞ்சள்கயிறு* நூலை வாங்கிப் புரட்டிப் Tôój Õ® hÓ . 'விமர்சனம் எழுதுகிறேன்' என்று கூறினார்.

அந்தப் பத்திரிகை தொடர்பாகப் புரசையிலிருந்த கோல்டன் அச்சகத்திற்குப் புறப்படுவதற்கு அவர் தயாரானபோது விடைபெற்றுக் கொண்டேன்.

தொடர்ந்து இரண்டுமூன்று முறை சந்திப்புகள். வேலை வில்லவன் என்ற அக்கால புனைபெயராலேயே அவரிடம் அறியப்படலானேன். ஏறத்தாழ பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு அவர் தினமணிகதிரில் பணியாற்றிய வேளையில் அப்போது அவருடைய உடன் ஊழியர்களாக இருந்த எழுத்தாள நண்பர்கள் இதயன், பி.ஏ.தாஸ் ஆகிய இருவர் வாயிலாக என்னைப்பற்றி அவர் தெரிந்து கொள்வதுண்டு. அவர்கள் மூலமாக என்னுடைய வாழ்த்துக்களை அவருக்குத் தெரிவித்து வந்தேன்.

திரு. விந்தன் அவர்கள் ஆஸ்துமா நோயினால் பாதிக்கப்பட்டிருந்ததையும், அவர் இறந்துவிட்ட செய்தியையும் திரு. பி.ஏ.தாஸ் வாயிலாகத் தெரிந்துகொண்டேன். அதற்கு முன்பே திரு. ஜெகசிற்பியனும், திரு. இதயனும் காலமாகிவிட்டார்கள்

எண்பதுகளின் தொடக்கத்தில் அமுதசுரபி இதழில் 'எனது பார்வையில் விந்தன் நூல்கள்' என்னும் கட்டுரையைக் கண்டபோது ஆர்வத்தோடு அதை வாசித்து மகிழ்ந்தேன். மு. பரமசிவம் என்பவர் அதை எழுதியிருந்தார்.

அமுதசுரபி அலுவலகத்தோடு தொடர்பு கொண்டு அவருடைய முகவரியைக் கேட்டு வாங்கிப் பாராட்டுக் கடிதம் ஒன்றை அவருக்கு அனுப்பி அவரைச் சந்திக்க விரும்புவதாகத் தெரிவித்திருந்தேன்.

அதன் விழைவுதான் நண்பர் பரமசிவம் எழுதி 1983ஆம் ஆண்டில் கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் ‘பூக்கூடை பதிப்பகம்’ என்னும் பெயரோடு வெளியிட்ட **மக்கள் எழுத்தாளர் விந்தன்** என்ற நூல். இந்த நூலின் உள்ளடக்க வைப்பு முறை கருத்துத் தெரிவிப்பு ஆகியவை மிகச் சிறப்பாக அமைந்திருந்ததை விமர்சனங்கள் வெளிப்படுத்திக் காட்டின.

தொடர்ந்து விந்தன் நாவல்கள் என்னும் ஆய்வு நூலைப் பரமசிவம் வெளிக் கொணர்ந்தபோது மக்கள் எழுத்தாளனின் கொள்கைத் திறம் படைத்த படைப்புகள் தமிழ் வாசகர்களிடம் மறு அறிமுகம் பெற்றன.

புதிய தலைமுறையினர் பாலும் பாவையும் நூலை வாசித்தறியும் வாய்ப்பினை ‘ராணி முத்து’ வழங்கியது. தொடர்ந்து விந்தன் நூல்களின் மறுபதிப்புக்கள் வர ஆரம்பித்தன.

மு. பரசிவம் முயற்சியால் வெளிவந்த ‘*விந்தனும் விமர்சனமும்*, என்னும் நூலில், விந்தனைப் பற்றிப் பல அறிஞர்கள், எழுத்தாளர்கள் கருத்துக்களை அவர் தொகுத்து வழங்கியுள்ளார். அவருடைய அரிய முயற்சியின் விளைவாகவே ‘விந்தன் கட்டுரைகள்’ என்னும் நூலைக் கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் வெளிக்கொணர்ந்துள்ளது.

விந்தனுடைய கதைகள் என்றாலும் சரி, கட்டுரைகள் என்றாலும் சரி. அவை கனமான கருவையோ கருத்தையோ கொண்டவையாக இருக்கும். வாசகர்களோடு நேர்த்தொடர்பு கொள்ளும் முறையில் எழுதும் ஆற்றலை அவர் பெற்றிருந்தார்.

இக்காலத்தில் செய்தித் தொடர்பு வல்லுநர்கள் எடுத்துரைக்கும் நேர்த்தொடர்பு அல்லது ஆளுமைத் தொடர்பு எத்தகையது என்பதை அவர் அக்காலத்திலேயே புரிந்து கொண்டிருக்கிறார்.

அவருடைய சிறுகதை நூல்களுக்கும், புதினங்களுக்கும் அவர் எழுதிய முன்னுரைகள் ஒவ்வொன்றும் ஆற்றல் வாய்ந்தவையாக

அமைந்தன. தம்முடைய வாசகர்கள் யாவரையும் நடுத்தர மக்களாகவே அவர் கருதி அவர்கள் மனத்தில் இருப்பதைப் புரிந்துகொண்டு அவர்களுக்கு அதிகமாகத் தேவைப்படுகின்றவைகளையும் அவர்களைச் சிந்திக்க வைக்கக் கூடியவைகளையும் அவர்களுக்கு உரிமையோடு உணர்த்திக் காட்டிடும் வகையில் தம் முன்னுரைகளை அவர் எழுதியுள்ளார்.

விந்தன் கதைகள் 1956இல் வெளிவந்தபோது அந்நூலுக்கு அவர் எழுதிய முன்னுரையில் இப்படிக் கூறுகிறார்:

> "இலக்கிய உலகில் பொதுவாக ஓர் அபிப்பிராயம் என்ன அபிப்பிராயம் என்கிறீர்களா? - உங்களால் லேசான விஷயங்களைத்தான் தெரிந்துகொள்ள முடியுமாம், புரிந்து கொள்ள முடியுமாம்! உண்மையான வாழ்க்கையில் பட்டும் படாமல் ஒட்டியும் ஒட்டாமலிருக்கும் செளஜன்யம் மிக்க கதைகளைத்தான் உங்களுக்குப் பிடிக்குமாம்; ருசிக்குமாம்!

'ராஜாமணி ஊஞ்சலைப் பிடித்துக்கொண்டு நின்றான்; சூடாமணி கேணியில் ஜலம் இறைத்துக் கொண்டிருந்தாள்; ஒரு கணம் இருவர் பார்வையும் பட்டுத் தெறித்தன'

என்பது போன்ற பீடிக்கையுடன் திடீரென்று ஏற்படும் திடீர் காதல்களும், திடீரென்று ஏற்படும் திடீர்க் கல்யாணங்களும் நிறைந்த லைட் மேட்டர்ஸைத்தான் நீங்கள் சுவைப்பீர்களாம், ஹெவி மேட்டர்ஸ் என்றால் எடுப்பீர்களாம், ஓட்டம்!

அதற்கெல்லாம் காரணம் என்னவாம் தெரியுமா? உங்களுக்கு அவ்வளவு தூரம் 'இலக்கிய ஞானம்' கிடையாதாம். பக்கங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தெரியுமே தவிர, விஷயத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தெரியாதாம்!"

இப்படிச் சொல்கிறார்கள் ஐயா, அவர்கள் இப்படிச் சொல்கிறார்கள்! என்னால் இதை நம்ப முடியவில்லை; உஹூம் - நம்பவே முடியவில்லை!

எது எப்படியிருந்தாலும், என்னைப் பொறுத்தவரை நீங்கள் அப்படி இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. இலக்கியத்தில் நான் அப்படிப்பட்ட பாகுபாட்டையும் வகுத்துக் கொள்ளவில்லை.

ஏனெனில், பழைய பாசி பிடித்த வழுக்குப் பாதையை விட்டு விலகிப் புதிய பாதையிலே நான் நடக்க ஆரம்பித்ததும், என்னைத் தொடர்ந்து வருவதை நீங்கள் நிறுத்திக் கொண்டு விடவில்லை; அஞ்சி நடுங்கி ஓடி விடவும் இல்லை!

பார்க்கப் போனால் உங்களைப் பற்றிக் குறை கூறித் திரியும் மகானுபாவர்கள் இதுவரை உங்களுக்காக என்னத்தைச் செய்து குவித்துவிட்டார்கள்?''

(விந்தன் கதைகள் பக். 5,6,7)

அவர் தம்மைப் பொறுத்தவரையில் என்றைக்கும் ஏழை எளியவர்கள், உழைப்பாளி வார்க்கத்தைச் சார்ந்தவர்கள் ஆகியோருள் ஒருவர் என்பதையும் அவர்கள் மீது தமக்கு அன்பும் பற்றும், பாசமும் நம்பிக்கையும் உண்டு என்பதையும் தம்முடைய படைப்பு ஒவ்வொன்றிலும் முத்திரையிட்டுக் காட்டியுள்ளார்.

தடம் பதித்த எழுத்தாளர்கள் வரிசையில் விந்தன் சேர்க்கப்படும்போது சிறப்பாக அவர் பதித்துள்ள தடம் இதுதான் என்பதை நாம் கூறியாக வேண்டும். கல்கி இதழில் முல்லைக் கொடியாள் என்ற முதல் சிறுகதை தொடங்கி இறுதிக் காலம்வரை அவர் எழுதிய கதைகள் யாவும் இதற்குச் சான்றுகள்.

"ஐயா பொய்யும் புரட்டும் இல்லாத லோசர்க்கிளே எனக்குப் போதும். அவர்கள் வாழ்ந்தால் நானும் வாழ்கிறேன். அவர்கள் செத்தால் நானும் சாகிறேன்'' என்று தம்முடைய எழுத்துப் பணிக்கான உந்துதலும் உற்ற களமும் எவை என வெளிப்படையாக எடுத்துச் சொன்னவர் அவர். அவர் தம்முடைய இலட்சிய எழுத்தாளராக மார்க்சிம் கார்க்கியை ஏற்றுக் கொண்டதில் வியப்பில்லை. (ஓ. மனிதா...)

மார்க்சிம் கார்க்கி, "நான் எழுதத் தொடங்குவதற்கு முதற்காரணம் என்னை அழுத்திக் கொண்டிருக்கின்ற சாரமற்ற வாழ்க்கை என்னை நிர்பந்தித்தது; இரண்டாவது காரணம், என்னுள் காட்சிக் கருத்து வடிவங்கள் நிறைந்திருப்பதால் என்னால் எழுதாமல் இருக்க முடியவில்லை, என்று கூறுகின்றார். விந்தனுக்கு இதே நிர்பந்தமும், காட்சிக் கருத்து வடிவங்களின் பெருக்கமும் இருக்கவே செய்தன.

எழுத்தாளர்கள் ஜமீன்தார்களையும் பணக்காரத் தம்பதிகளையும் மேட்டுக் குடியினரையும் மட்டுமே கதாபாத்திரங்களாகக் கொண்டு கதைகள் எழுதி வந்த காலத்தில் விந்தன் நாற்பதுகளின் தொடக்கத்தில் ஏழை எளியவர்கள் ஒடுக்கப் படுகின்றவர்கள், ஒதுக்கப்படுகின்றவர்கள், தொழிலாளர்கள் ஆகியோரைப் பற்றிய கதைகளை எழுத ஆரம்பித்தார்.

முல்க்ராஜ் ஆனந்த், கே.ஏ.அப்பாஸ் போன்றவர்கள் மட்டுமே ஆங்கிலத்தில் தொட்டுக் காட்டி வந்த சில சமுதாய உண்மைகள் அக்கால தமிழ்ப் படைப்பிலக்கியத்தில் தீண்டத்தகாதவையாக ஒதுக்கி வைக்கப்பட்டன. ('கல்கி' கூறும் காரணம்) தேசிய இலக்கியம், மதுவிலக்குப் பிரச்சார இலக்கியம், தாசி ஒழிப்பு இலக்கியம் என்ற பெயரில் கதைகள் வந்துகொண்டிருந்தன.

மக்கள் எழுத்தாளர் விந்தன்தான் தமிழில் தலித் இலக்கியத்தின் தந்தை-முன்னோடி என்று கொள்ளத் தகுந்தவர் என்று நான் துணிந்து கூறுவேன்.

அவர் 1963 ஆம் ஆண்டில் தம்முடைய 'ஏமாந்துதான் கொடுப்பீர்களா' என்ற சிறுகதைத் தொகுதிக்கு எழுதிய முன்னுரையில் தம்மைபற்றிக் கூறுவது இங்கே நம் கருத்துக்கு உரியதாகும்.

> 'இப்போதெல்லாம் எழுத்தாளர்களில் பலர் ஏழை எளியவர்களைப் பற்றிச் சிந்திக்கிறார்கள் - எழுதுகிறார்கள். ஹை சர்க்கிளுக்கு அப்பாற்பட்டு நிற்கும் இலக்கிய உலகத்தில் ஓரளவுக்கு மதிப்பும் மரியாதையும் பெறுகிறார்கள். அவர்களுக்கெல்லாம் வழிகாட்டியாய் இருந்தவர்களில் அடியேனும் ஒருவன் என்ற முறையில் இப்போது நான் பெருமைப்படுகிறேன்; அந்தப் பெருமையால் ஏற்பட்ட மனநிறைவுடன் நான் அவர்களை வரவேற்கிறேன்; அவர்கள் வாழ, வளர, வாழ்த்தும் கூறுகிறேன்."

'அவர் படைத்துள்ள பாத்திரங்கள் தலித் என்ற கருத்தின் பெருவட்டத்திற்குள் அடங்கக் கூடியவர்கள். அரிஜனங்களைப் பற்றி மட்டுமல்லாமல் அத்தகையரோடு ஒடுக்குதலுக்கு ஆளாகி வந்தவர்களை ஓரினப்படுத்தி அவர்களைப் போராட வேண்டியவர்களாக அதே நேரத்தில் போராடத் தெரியாதவர்களாக அவர் காட்டியிருக்கிறார்.

இரண்டு சிறுகதைகள் இங்கே எடுத்துக்காட்டுக்குக் குறிப்பிட விரும்புகின்றேன். ஒன்று ஒரே உரிமை. இரண்டாவது கதை புது அடிமை முன்னையது நாற்பதுகளிலும் பின்னயது ஐம்பதிலும் எழுதப்பட்டவை.

'நான்' போட்டுத் தம்மை ஒரே உரிமை என்று கதையில் எழுதியிருக்கிறார் விந்தன்.

ஒரு தலித்தைக் கிராமத்திலும் நகரத்திலும் சந்திக்கிறார். நகரத்தில் அவர் கண்ணெதிரே அவன் எச்சிலை எடுத்து உண்பதைக் கண்டுவிடுகிறார். அடுத்து, அவனுக்கு உதவும் வகையில் ரொட்டி மிட்டாய் வைத்து விற்கும் கடை அமைத்துத் தருகிறார். எதிர்பார்த்தபடி வியாபாரம் நடக்கவில்லை. காரணம்? அவர் சோலையப்பனைச் சந்திக்கும்போது எழும் உரையாடல்கள் மூலம் அதைத் தெரிந்துகொள்ளலாம்.

'என்ன இத்தனை நாளாக ஒன்றும் விற்கவில்லையா?'

'எப்படிங்க விற்கும்?'

'ஏன், இந்தக் கிராமத்திலே ரொட்டி, மிட்டாய் தின்பவர்கள் யாரும் இல்லையா?'

'இல்லாம என்னங்க? அதோ அந்த முதலியாரு ரொட்டிக்கடை இருக்குங்களே, அதிலே தினம் தினம் எம்மா வியாபாரம் ஆவுது!'

'பின்னே என்ன? உன்னுடைய கடையிலே மட்டும் ஏன் வியாபாரம் ஆகவில்லை?'

'என்ன இருந்தாலும் நான் பறையன் பறையன் தானுங்களே? என் கடையிலே யாராச்சும் ரொட்டி வாங்கணுமின்னா அவங்களும் பறையர்களாகத்தானே இருக்கணும்?.... பறப்பயனுக்கு இங்கே என்னடா ரொட்டிக்கடைன்னு! என்னை அடியா அடிச்சுப் போட்டு இந்தக் கடையையும் காலி பண்ணாம இருந்தாங்களே அதைச் சொல்லுங்க!'

'சரி... அப்படியென்றால் நீ இப்போ என்னதான் செய்கிறாய்?'

'இது உங்க கடை; இதிலே போட்டிருக்கிற பணம் உங்க பணம். நீங்களே இந்தக் கடையை எடுத்துக்குங்கோன்னு சொல்றேன்!'

'இதென்னடா வேடிக்கையா இருக்குதே! கடையாவது வைச்சுப் பிழைத்துக் கொள்வதற்குக் கூடவா உனக்கு உரிமை இல்லை?'

'ஏதுங்க? யோசித்துப் பார்க்கப்போனா எனக்கு இருப்பது ஒரே உரிமை தானுங்களே'

'அது என்னடா ஒரே உரிமை?'

'வேறே என்னங்க, தற்கொலை செய்து கொள்ளும் உரிமைதானுங்க அது!'

இந்த உரையாடலுக்குப் பிறகு கதையை இப்படி முடிக்கிறார் விந்தன்.

'அவன் கண்களில் நீர் சுரந்தது. பாவம், அதற்குக் கூட உரிமை இல்லை, என்னும் விஷயம் அவனைப் போன்ற அப்பாவிகளுக்கு எப்படித் தெரியும்?'

இந்தத் தலித் கதையில் அப்பாவி தலித்தை ஆசிரியர் அறிமுகப்படுத்துகிறார். ஒதுக்கப்படுகிற, அவமதிக்கப்படுகிற, ஆளுமை ஏற்கப்படாத அப்பாவி தலித். ஒடுக்குதலை வாய்மூடி ஏற்றுக் கொள்வதோடு தன்னைத் தானே தரக்குறைவாக மதித்துக் கொள்கிற தலித். டீக்கடையில் மற்றவர்களைப் போல டீ வாங்கிக் குடிக்க அவனுக்கு உரிமை கிடையாது. ரொட்டிக் கடை வைத்து விற்கவும் உரிமை கிடையாது. 'யோசித்துப் பார்க்கப் போனா எனக்கு இருப்பது ஒரே ஒரு உரிமை தானுங்க' என்கிறான்.

அந்த யோசனை ஆழ்ந்து சொல்லவில்லை. நம்பிக்கையை நோக்கிச் சொல்லவில்லை; இழிவையும் இழப்பையும் ஏற்றுக் கொள்ளத் தூண்டுகிறது.

விந்தன் இந்தக் கதையை எழுதிய காலத்தில் இருந்த நிலை அது. யோசனை நெறிப்படுத்தப் படாத காலம். சமுதாய நல நாட்டம் கொண்ட சீர்திருத்த வாதிகளால் மட்டுமல்ல, இலக்கியப் படைப்பாளர்களாலும் கூட, 'நீ உரிமைகளோடு பிறநதவன். விலங்கை ஒடித்தெறியப் போராடு - உரிமை வாழ்வுக்காகப் போராடு, என்ற உந்துதலைத் தர அவனுக்கு யாரும் இல்லை. (மாதவையா - சத்தியாந்தன்)

அப்பாஸ் மற்றும் விந்தன் கதைகள் வாசகர்களிடையே ஏற்படுத்திய தாக்குதல்கள் பலன் தராமற் போகவில்லை. சமுதாய அறநிலை சார்ந்த சிந்தனைகளுக்கு வழி சொல்லாமற் போகவில்லை.

அப்பாவிகள் எனப்படும் போராடத் தெரியாத - போராட விரும்பாத மக்கள் தங்களுக்காகப் போராட அவர்களுக்கு ஆற்றலூட்ட வேண்டும். (Empowment) என்ற சிந்தனையும் செயல்திறனும் இன்று நாட்டில் பெருகி வருகின்றன. இது, அன்றே நடைபெற வேண்டுமென்று விந்தன் விரும்பிய கனவுதானே?

இந்தக் கதையைத் தலைக்கதையாகக் கொண்டு 1950இல் வெளிவந்த விந்தனின் இரண்டாம் கதைத் தொகுதியாகிய 'ஒரே உரிமை' நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ள டாக்டர் மு.வ. கூறுவார் :

> 'சமூகத்தை விந்தன் சிற்சில இடங்களில்தான் நேராகத் தாக்குகிறார். பல இடங்களில் அவர் அம்பு தொடுப்பதே இல்லை. இன்றிருக்கும் நிலைமையை எடுத்துக்காட்டி பேசாமல் கதை சொல்கிறார். அவர் படைக்கும் பாத்திரங்களும் பெரும்பாலும் அப்பாவிகளே. அவர்களுக்குச் சமூகத்தின் மேல் வயிற்றெரிச்சல் தோன்றுவதே இல்லை. ஆனால் நமக்கு மட்டும் வயிற்றெரிச்சல் தோன்றுகிறது.'

வயிற்றெரிச்சல் மூலமாகத்தான் சீர்திருத்தங்களும் மாறுதல்களும் புரட்சிகளும் தோன்ற வேண்டுமானால் இன்னும் இன்னும் அதிகமாக நமக்கு வயிற்றெரிச்சல் தோன்றியாக வேண்டும். அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரும் வயிற்றெரிச்சலும் இரட்டைக்குழல்கள் அல்லவா?

இக்கதையோடு விந்தனின் அவன் கேள்வி என்ற மற்றொரு கதையும் சேர்த்துப் படிக்க வேண்டும். அந்தக் கதையில் வரும் கண்ணுச்சாமிக்கு ஏழு வருஷச் சிறைத் தண்டனை கிடைக்கிறது. இதைக் கேட்டதும் அவன் இடி இடி என்று சிரித்துக் கொள்கிறான்.

'நல்ல வேடிக்கை ஐயா, இது! எனக்கு வைச்ச வக்கீல் என்னடான்னா, நான் தற்கொலை பண்ணிக்கிறதுக்காகக் குளத்திலே விழலேங்கிறதை நிரூபிக்கிறதுக்காக இத்தனை நேரமும் கரடியாக் கத்தினாரு; சர்க்கார் கட்சி வக்கீல் என்னடான்னா, நான் தற்கொலை

பண்ணிக்கிறதுக்காகத்தான் குளத்திலே விழுந்தேன் என்பதை நிரூபிக்கிறதுக்காக இத்தனை நேரமும் படாத பாடு பட்டாரு.

ஆனா, நான் என்னத்துக்காத் தற்கொலை பண்ணிக்கப் போனேன்? என்கிறதைப் பற்றி மட்டும் யாருமே விசாரிக்கலையே? இல்லை. நான் கேட்கிறேன்! இந்தக் கோர்ட்டுங்க எல்லாமே குற்றத்தை மட்டுந்தான் விசாரிக்குமா? குற்றத்துக்குக் காரணம் என்னன்னு விசாரிக்கவே விசாரிக்காதா?' (முதல் தேதி - பக் 87)

மற்றைய கதை புது அடிமை 'முதல் தேதி' என்னும் சிறுகதைத் தொகுதியில் இடம் பெற்றுள்ள கதை.

இந்தக் கதைக்குக் களம் தேட விந்தன் வானுலகிற்குச் செல்கிறார்.

'பசி, பிணி, மூப்பு, அற்ற ஆனந்த வானுலகிலே சுயசிரம ஜீவிகள் இருவர் சந்தித்தனர். அவரில் ஒருவன் நீக்ரோ, இன்னொருவர் இந்தியன், என்று கதை ஆரம்பிக்கிறது.

நீக்ரோ அமெரிக்க நாட்டைச் சேர்ந்தவன். அவனுக்கும் இந்தியனுக்கும் ஒற்றுமை : அடிமை குபேர நாட்டிலும் புண்ணிய பூமியிலும் அடிமை வாழ்வு.

அமெரிக்க அடிமை சொல்கிறான்;

'ஒரு காலத்தில் பணம் படைத்த பாதகர்கள் ஆடு மாடுகள் போல் சந்தையில் விலை கொடுத்து எங்களை வாங்கிக் கொண்டிருந்தார்கள்.'

'எங்களை எல்லாம் விலை கொடுக்காமலேயே வாங்குகிறார்களே' என்கிறான் இந்தியன்.

உரையாடல் தொடர்கிறது.

அங்கு அடிமைகளைத் தேடிக் கொண்டு பணம் படைத்தவர்கள் வருவார்கள். இங்கு அவர்களைத் தேடிக் கொண்டு இவர்கள் போவார்கள். அங்கே அடி உதை விழும். இங்கு இன்னும் அதிகமாக 'ஐயோ என்னை அடிப்பதால் உங்கள் கை வலிக்குமே ஆண்டே!' என்ற கதறல்.

*பழங்கால மேனாட்டவர்கள் அடிமைகளைச் சிங்கம் புலியோடு சண்டையிட வைத்து வேடிக்கை பார்ப்பார்கள். இங்கே? இந்தியன் சொல்கிறான் :*

*'இதே மாதிரி எங்களுடைய முதலாளிகளும் எங்களைச் சண்டையிட வைப்பதுண்டு.*

*'மிருகங்களோடு அல்ல. மனிதர்களோடு... காரணம் பாழும் பசிதான் பசியா? அதைப் பற்றிக் கேள்விப்பட்டதில்லையே! என்கிறான் நீக்ரோ. அவர் பழைய அடிமை இந்தியன் கூறுவான் :*

*'நான் புது அடிமை! ஏனெனில் உனக்கு இருந்த அந்தச் சோற்று நம்பிக்கைகூட எனக்கு இல்லையல்லவா?'*

*இந்தக் கதையின் எள்ளல் வீச்சில் மிகைப்படுத்தல் இல்லாமற் போகவில்லை. ஆனால் அடிமைத்தனம் இருவகைத்தது என்ற அடிப்படை உண்மை தெளிவாகப்படுகின்றது.*

*கொத்தடிமை பற்றி இக்கதையில் பேசுகிறார் விந்தன். விந்தன் ஓயாமல் படித்துவரும் உலகம் என்னும் புத்தகம். நாள்தோறும் புதிய புதிய உண்மைகளை அவருக்கு உணர்த்திக் கொண்டே இருக்க வேண்டும்! என்று விந்தன் வாழ்த்தி வரம் கொடுத்ததா டாக்டர் மு வ, உலகம் என்னும் புத்தகத்தை நிலைபிறழாத ஒரே நோக்கோடு பயின்று வந்தவர் விந்தன், ஆகையால் அவருடைய தடப்பதிப்பு அழிக்கவும் பெயர்க்கவும் முடியாத வகையில் அமைந்துள்ளது.*

*இந்தியர் என்ற பொதுச் சொல்லில் இந்திய அடிமை குறுக்கப்படுகிறார்கள். தலித்துக்கள் என்போர் பள்ளு, பறை, அருந்ததியர் என மூன்றடுக்கால் குறுக்கப்படுவோர் மட்டுமல்ல, அவர்களைப் போன்று அவர்களோடு சேர்த்தெண்ணப்படும் பலருமாவர் என்பது இக்கதையில் தெரிவிக்கப்படுகின்றது!*

*இந்தச் சாபக்கேட்டுக்குக் காரணம் வருணாச்சிரமத்தர்மம் என்று விந்தன் எங்கும் கூறியதில்லை. மாறாக வர்க்கபேத அமைப்பையே அவர் சாடுகிறார். பணக்காரன், ஏழை மற்றும் ஹைசர்க்கிள், லோசர்க்கிள், சுரண்டுகிறவன் என்பதுதான் அவருடைய இருகூறுகளைக் கொண்ட சமுதாய வடிவம்.*

கடந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் திருவாங்கூரிலும் நாஞ்சில் பகுதியிலும் நிலமற்ற ஏழைக்கூலி மக்கள் **சாம்பவர்** என்றாலும் **சாணார்கள்** என்றாலும் ஒன்றாகவே கருதப்பட்டார்கள். அவர்களின் பெண்கள் மேலாடை அணியக் கூடாதிருந்தது. இந்தத் தலீத்துக்கள் சார்பில் கிறிஸ்தவ மிஷனெரிகள் தலைமையில் upper cloth Movement நடைபெற்று வெற்றியைத் தேடித் தந்தது.

விந்தன் கதை ஒட்டுமொத்தமாகப் புதிய இந்திய அடிமைத்தனத்தைக் குறிக்கிறது. கடைசி அடிமை விடுதலை பெறும்வரை அவர் இந்தியனை புதிய அடிமை என்று கூறுவதை நிறுத்தத் தயாராக இல்லை - பூவுலகிலும் சரி, வேறு உலகிலும் சரி - என்றே கூறத் தோன்றுகிறது.

ஒடுக்கப்பட்ட - ஒதுக்கப்பட்ட மக்களை மட்டுமல்லாமல், நோகடிக்கப்பட்ட, நொந்து போன மக்களைப் பற்றியும் எழுதியவர் விந்தன்.

உழைப்பவர்கள் நோகடிக்கப்பட்டு நொந்து போனபின் அவர்கள் நிலை என்ன என்பதைப் பல கதைகளில் எடுத்துச் சொல்கிறார்.

மனித யந்திரம் என்னும் கதையில் கைகால் இயங்க முடியாத அளவுக்கு நோய்வாய்ப்பட்டு வேலையை இழக்கும் தொழிலாளியைப் பற்றிக் கூறும்பொழுது,

'கேவலம் ஒரு மெஷின் வேலை செய்வதற்கு லாயிக்கில்லாமற் போனால் அதைப் பழுது பார்க்க ரூபாய் ஆயிரம் வேண்டுமானாலும் எந்த முதலாளியும் செலவழிக்கத் தயாராயிருக்கிறான். ஆனால், வாழ்நாட்கள் முழுதும் தன்னிடம் நாயாயுழைத்த ஓர் ஏழைத் தொழிலாளி வேலை செய்வதற்கு லாயக்கில்லாமற் போனால், அவனுக்காக ஒரே ஒரு ரூபாய் செலவழிக்கக்கூட மனம் வருவதில்லை!

மனிதன் என்ன, யந்திரத்தைவிட அவ்வளவு மட்டமானவனா?

இரும்பு யந்திரத்தை வேண்டுமானால் மனிதன் நினைத்தால் சிருஷ்டித்து விடலாம்; மனித யந்திரத்தை மனிதன் நினைத்தால் சிருஷ்டித்து விட முடியுமா?'

என்று எழுதுகிறார்.

அதே வகையில் டயர் தேய்ந்துவிட்டால் ரீடிரேடு செய்ய முடிகிறது. ஆனால் மனிதன் ரிடையர்டு ஆகிவிட்டால்... என்ற கேள்வியை எழுப்புகிறார். **மாடும் மனிதனும்** என்னும் கதையில் மாணிக்கம் பிள்ளையின் மயிலைக் காளைகளுக்கு கோமாரி நோய் வருகிறது. அதே நேரத்தில் முனியனுக்கும் மூன்று நாளாகக் காய்ச்சல்; அவன் இறந்து விடுகிறான்.

அவன் இறந்தும் போகிறான். 'சரி விடு கழுதையை' என்று சொல்லிக் கொண்டு இன்னொருவனை வேலைக்கு அமர்த்துகிறான்.

இதற்குள் மாடுகள் இரண்டும் செத்துவிடுகின்றன. மாணிக்கம் பிள்ளையின் மனைவி, 'முப்பது வருஷமா வேலை செய்த முனியனே போய்விட்டானே? மாடு போனா என்னவாம்? என்கிறார். அதற்கு அவர் சொல்வார் :

"மனுஷன் முதல் இல்லாமல் வருவான். மாடு முதல் இல்லாமல் வருமா?"

என்று கொதிப்புடன் கூறுகிறார்.

அவர் இந்தக் கதைகளை எழுதிய காலத்தில் தொழிற்சாலைகளில் தொழிலாளர் நலம் கருதிய ஆயுள்காப்பீடு, கிராட்டிவிட்டி (தமிழ் : ஓய்வூதியம்) போன்றவை சரியாக வரையறுக்கப்படாத ஒரு காலம் என்பதை மனத்தில் கொண்டு இக்கதைகளை வாசிக்க வேண்டும். இந்த வரிசையில், எத்தனைபேர் என்ற கதையில் மனிதனையும் மிருகத்தையும் ஒப்பிட்டுக் காட்டும் கதையும் குறிப்பிடத்தகுந்தவை.

பங்களாவைக் காவல் செய்வதற்கு ராஜபாளையம் நாய்கள் இரண்டை வாங்கித் தீனி போட்டு வளர்ப்பதற்குத் தேவைப்படும் பணத்தைவிட குறைந்த செலவில் பெரியசாமி, சின்னசாமி என்ற இருவரை வேலைக்கு அமர்த்திக் கொள்வது உசிதம் என்று வைரவன் செட்டியார் கருதுகிறார். அப்படி அந்த இருவரை வேலைக்கு அமர்த்திக் கொண்டதற்கு மேலும் சில காரணங்கள் உண்டு. அவற்றை இப்படி எடுத்துக் காட்டுகிறார் விந்தன்.

> நாய்க்கு என்ன தெரியும்? எஜமானனைக் கண்டால் வாலைக் குழைக்கவும், அன்னியரைக் கண்டால் குரைக்கவும் தான் தெரியும். எஜமான் காரில் ஏறும்போதும், இறங்கும்பேதும்

*கதவைத் திறந்துவிட முடியுமா? ஹாரன் சத்தம் கேட்டதும் அலறியடித்துக் கொண்டு ஓடிவந்து பங்களாவின் கேட்டைத் திறந்துவிட அதற்குத் தெரியுமா? 'இரவில் தூங்குகிறாயோ, உன்னை வேலையிலிருந்து நீக்கிவிடுவேன்' என்றும், 'நின்ற இடத்திலேயே நிற்காமல் போறாயோ! விரட்டிவிடுவேன்' என்றும் நாயைப் பயமுறுத்த முடியுமா?*

*இப்படிப் பல செளகரியங்களை உத்தேசித்துதான் அவர் பெரியசாமியையும் சின்னசாமியையும் தமது பங்களாவில் காவல் காக்க வைத்துக் கொண்டார்.*

*(விந்தனும் விமர்சனமும் பக்கம் 37) இந்தக் கதையை எழுதிப் பல ஆண்டுகளுக்குப் பின் தினமணியில் பணியாற்றிய போது ஓ* **மனிதா** *என்ற கதைத் தொடரை விந்தன் எழுதிய போது பறவைகளையும், மிருகங்களையும் தகுந்த இடத்தில் நிறுத்திக் காட்டி மனிதனைப் பார்த்து அவைகள் கேள்விகளைக் கேட்க வைக்கிறார்.*

*ஓ மனிதா, எனக்குள்ள இந்த தைரியமும் தன்னம்பிக்கையும் உனக்கு ஏன் இல்லை - என்று கரிச்சான் குருவி கேட்கிறது. விபத்தில் சிக்கிய ஒருவருக்கு கை கொடுத்த அந்தப் பெண் வேண்டுமானால் என்னைக் கழுதை என்று இகழட்டும். மற்றவர்களுக்கு அப்படிச் சொல்ல என்ன அருகதை இருக்கிறது எனக் கழுதை கேட்கிறது.*

*இத்தகைய பதினாறு கதைகளை விந்தன் எழுதியிருக்கிறார்.*

*சில மிருகங்கள் மனிதர்களின் பார்வையில் தகுதிக்கு மீறிய உயர்வை - சில மனிதர்களைக் காட்டிலும் மேம்பாடுடைய நிலையைப் பெறுவதைக் கோபத்தோடு குறிப்பிட்டுக் காட்டும் விந்தன், மிருகங்கள் - பறவைகள் ஆகியவை அவனைப் பாராட்டத் தயாராக இல்லை. அவனைப் பார்த்துச் சிரிக்கின்றவையாகவும், அவனுக்கு அறிவு கற்பிக்கும் தகுதி படைத்தவையாகவும் இருப்பதை விந்தன் சுட்டிக் காட்டியுள்ளார்.*

*காட்டு மலர்களைப் பாருங்கள், காகங்களை கவனித்துப் பாருங்கள். அவை விதைப்பதும் இல்லை அறுப்பதுமில்லை. அது கவலை கொண்டு வாழ்வதுமில்லை என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறிக் காட்டிய நெறியைச் சார்ந்து விந்தன் அக்கதைகளை எழுதியுள்ளார் என்று கூறலாம்.*

அல்லல்படுகிறவர்கள், நொந்துபோனவர்கள் வரிசையில் விந்தனுடைய பல கதைகளைச் சேர்த்து விடலாம்.

தேற்றுவார் யார், கருவேப்பிலைக்காரி, கவலையில்லை, பொன்னையா போன்ற கதைகள் இவற்றுள் குறிப்பிடத்தகுந்தவை இவை யாவுமே தலீத் கதைகள் என்பதில் ஐயம் இருக்க முடியாது. நொந்து நொடிந்து போனவர்கள் வரிசையில் பெண்கள் இருப்பதை விந்தன் காணத் தவறவில்லை. அவருடைய **மாட்டுத் தொழுவம்** என்ற கதையே இதற்குச் சான்று.

ஆயிரம் ஆயிரம் பெண்கள் சார்பில் ஒரு சகோதரியை விந்தன் இந்தக் கதையில் பேசவிடுகிறார். அவள் தம் வாழ்க்கை வரலாறு முழுவதையுமே சுருக்கித் தந்து விடுகிறாள். ஆடுமாடு வாங்கும் போது நடக்கும் பேரத்தைப் போன்ற கல்யாண பேச்சைத் தொடர்ந்து திருமணம் நடைபெறுகிறது. அவளை மணந்து கொண்டவர் தனக்கு ஏதாவது காரியம் ஆக வேண்டியிருக்கும்போது அவளுடன் பேசுவார். அப்படிப் பேசும் போதும் அவருடைய பேச்சில் அன்பைக் காண முடியாது. அதிகாரத்தைத்தான் காண முடியும்.

இரண்டு பிள்ளைகளுக்குத் தாயாகிறாள் அவள். மாமியார் கொடுமை உட்படப் பல துன்பங்களைச் சகித்துக்கொள்கிறாள். எதற்காக? வயிற்றுச் சோற்றுக்காகவா? இல்லை. அதைப்பற்றி நாய்கூட கவலைப்படுவதாகத் தெரியவில்லை. பின் எதற்காக? பெண்ணாய்ப் பிறந்ததற்காக!

அவர்கள் வீட்டுப் பசுமாட்டுக்கும் அவளுக்கும் ஓர் ஒப்புமை. பிரசவத்திற்குப் பிரசவம் - அந்தப் பசுமாட்டைக் கிராமத்திற்கு ஓட்டிவிடுவர்கள் பால் மரத்துப் போன அந்தப் பசுமாட்டுக்கு யாராவது தண்டத்தீனி போட்டுக் கொண்டிருப்பார்களா? இவளுடைய மாமியாரும் பிரசவத்திற்குப் பிரசவம் - இவளைப் பிறந்தகத்திற்கு அனுப்பி வைப்பாள். இவள் கூறுவாள் :

மாடு இப்போது சினையாகத்தான் இருக்கிறது. நாளை அதைக் கிராமத்துக்கு ஓட்டி வைக்கப் போகிறார்கள். பெற்றுப் பிழைத்தால் திரும்பி வரும். வந்தால் மீண்டும் பாலைக் கறந்து குடிப்பார்கள். வராமல் செத்தொழிந்தால் வேறு மாடு வாங்கிக் கொள்வார்கள். நானும் நாளைக்குப் போகிறேன். பெற்றுப் பிழைத்தால் திரும்பி வருகிறேன். வராமல் செத்தொழிந்தால் என்ன பிரமாதம்? அவர்

வேறு கலியாணம் செய்து கொள்வார். இப்படிக் கூறிய பின் அந்தப் பெண் வாசகர்களைப் பார்த்துக் கேட்கிறாள்.

இப்பொழுது நீங்களே சொல்லுங்கள். நான் வாழ்வது மனிதத் தொழுவமா? அல்லது மாட்டுத் தொழுவமா?

நாற்பதுகளின் இறுதி எழுதப்பட்ட கதைதான் இன்று அடுத்தடுத்து கருத்தரிப்புகள் உடலையும் சுகத்தையும் குறைத்துக் கொள்வதும் கொடுமைகளினூடே பிரசவத்தை எதிர் நோக்கி நிற்பதும், பிரசவத்தின்போது செத்துப் பிழைப்பதும் எத்தனை எத்தனையோ குடும்பங்களில் இருக்கத்தானே செய்கின்றன.

மாட்டுத் தொழுவம் - மனிதத் தொழுவம் என்ற நிலையிலிருந்தது. இன்று பெண்கள் முழுவிடுதலை பெற்று விட்டார்களா?

பெண்ணியம் பேசப்படுகிற இக்காலத்தில், குடும்பச் சூழல்களில் அப்பாவிப் பெண்களின் நிலையை ஊன்றிப் பார்க்க உந்துதல் தருகிறார் விந்தன்.

பேராசிரியர் கல்கி 1946ஆம் ஆண்டில் விந்தனின் முல்லைக் கொடியாள் நாலுக்கு அளித்த அணிந்துரையை நம்மை மனத்தில் வைத்து கொண்டுதான் இப்படி எழுதியிருக்கிறார்.

> விந்தன் கதைகளைத் தமிழ் மக்கள் ஆர்வத்துடன் வரவேற்றுப் படித்து மேலும் மேலும் கோபமும் ஆத்திரமும் அடைவார்களென்றும், அதன் பலனாகச் சமூகத்திலுள்ள அநீதிகளையும் கொடுமைகளையும் ஒழிக்க ஊக்கங் கொள்வார்கள் என்றும் நம்புகிறேன்.

(முல்லைக்கொடியாள் பக். 7)

விந்தன் காலத்தில் எழுதத் தொடங்கிய சிலர் சிலபல கட்டங்களில் பத்திரிகைகளின் கட்டாயம் மற்றும் வணிக நோக்கு காரணமாக ஆபாசப் படைப்புகளையும் வர்ணனைகளையும் விளக்கங்களையும் எழுதத் தவறவில்லை. ஆனால் விந்தன் இக்கால இரசிகர்களின் பார்வைக்கு ஆபாசமாகத் தோன்றக் கூடியவைகளை மிக நாசுக்காகவும் அறிவுறுத்தலைக் காரணமாக வைத்தும் எழுதிக் காட்டினார்.

'மாலை ஆறரை மணி ஆகிவிட்டால் அம்மாக்கண்ணு என்ற அந்தப் பெண் தெருக்குழாயில் குளிக்க வருவாள். அந்தக் குழாய்க்குப் பக்கத்திலுள்ள பாலத்துச் சுவரின் மேல் அப்புக்குட்டனும், ஆண்டியப்பனும் உட்கார்ந்துவிடுவார்கள். எதற்கு? கவர்ச்சியைக் காணத்தான்

பக்கத்தில் யாரும் இல்லை என்று தெரிந்ததும் ரவிக்கையைக் கழற்றிக் கசக்கிக் காயப்போட்டுவிட்டு இடுப்பில் கட்டிக் கொண்டிருந்த புடவையைத் தளர்த்தி மார்பு வரை ஏற்றிக் குளித்தாள். குளித்தபின் அதன் ஒரு பகுதியை அவிழ்த்துத் துவைத்தாள். துவைத்த பகுதியின் ஒரு முனையை அருகில் இருந்த ஒரு மரத்தில் கட்டிச் சற்றுக் காற்றாடவிட்டு விட்டுத் துவைக்காத பகுதியுடன் அவளே இன்னொரு மரமாக நின்றாள்.

இந்தக் கவர்ச்சிக் கட்டத்திற்காகக் காத்திருந்த இரண்டு போக்கிரிகளும் விசிலடித்துக் கொண்டே பாலத்தைவிட்டுக் கீழே குதித்தார்கள். அப்போது அவள் நினைப்பாள்.

இன்னொரு புடவை இருந்தால் இந்தப் பாவிகளின் கண்களுக்கு இப்படி விருந்தாக வேண்டாம். எங்கே வாங்க முடிகிறது? வாங்கினால்தான் அவர் விட்டு வைபபாரோ? உடனே எடுத்துக் கொண்டு போய் விற்று குடித்துத் தீர்த்து விடுகிறார். நாளொன்றுக்கு பத்துப் பைசா வீதம் சேர்த்தான் விளைவாக ஏழுமாதம் கழித்து அவளால் ஒரு புதுப்புடவை வாங்க முடிகிறது.

அவளுடைய நான்கு குழந்தைகள் பழைய புடவையைத தலைக்கு ஒரு துண்டாகக் கிழித்து கட்டிக்கொண்டு குதிக்க ஆரம்பிக்கிறார்கள். ஆனந்தக் கண்ணீர் வடித்தவளாக அவள் பிறந்த மேனியாய புதுப்புடவையை எடுக்கப் போனபோது வைத்த இடத்தில் அதைக் காணவில்லை.

ஆம்; ஜெயிலிலிருந்து திரும்பிய அவள் கணவன்தான் அதை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டான்.

அந்த வழியே வந்த அப்புக் குட்டனும் ஆண்டியப்பனும் குடிசைக்குள் எட்டிப் பார்க்கிறார்கள். விந்தன் எழுதுகிறார்.

'எந்த அறைகுறைக் காட்சிக்காக இத்தனை நாளும் அவர்கள் அந்தப் பாலத்துச் சுவரின் மேல் உட்கார்ந்து தவமிருந்தார்களோ...

அந்தக காட்சியைப் பரிபூரணமாகப் பார்த்தபோது அவர்கள் ஏன் அப்படி முகத்தைச் சுளிக்க வேண்டும்? அப்போதெல்லாம் உறங்கிக் கொண்டிருநத அவர்கள் மனிதத்தன்மை இப்போது விழித்துக் கொண்டதோ?

காந்திய வாதி என்ற கதையில் போலி காந்தீய வாதியான தோல் மணங்குடி துளசிரங்கராயர் என்பவரைத் தோலுரித்துக் காட்டி விடுகிறார்.

ஊர்க் குழந்தைகளுக்குப் பட்டாசு தானம் செய்கிறேன் என்று அவர் வைப்பாட்டிகள் குழந்தைகளுக்குக் கொடுக்கிறார். அவருடைய சுயரூபத்தை குப்புலிங்கம் என்ற பாத்திரத்தின் வாயிலாக விந்தன் வெளிப்படுத்திவிடுகிறார்.

நான் எட்டிப் பார்த்தேன். என்ன ஆச்சரியம். ஏழெட்டுப் பெண்களுக்கு நடுவே எங்க ஊர் காந்தி எழுந்தருளியிருந்தார் மேலே ஒரு துண்டும் கீழே ஒரு துண்டும் வழக்கமாக இருக்கும் பாருங்கள். அவற்றைக் கூட மறந்து அவர் எளிமையின் உச்சிக்கே போய், வாய்மையையும் தூய்மையையும், பண்பையும், பாரம்பரியத்தையும் அங்கே வளர்ததுக் கொண்டிருந்தார்.

விந்தனின் கதைகள் அவர் வாழ்ந்த சமுதாயக் காலக் கட்டத்தைப் பின்னணியாக வைத்து வாசிக்கப்பட வேண்டியவை ஆகும். அது முதலாளித்துவ சமூகம் அடக்குமுறைகள் உள்ளான வர்க்கத்தினர்களின் போராட்டம் பெருகிக் கொண்டிருந்த காலம் இதை ஆய்ந்து விந்தன் சிறு கதைகளுக்குத் தாமரை இதழில் 1978ஆம் ஆண்டில் விமர்சனம் எழுதிய திரு.எஸ். தோதாத்ரி கூறியிருப்பது நம் சிந்தனைக்கு உரியதாகும்.

> ‘இந்தக் காலப்பகுதியை சமூக இயல் அடிப்படையில் காணும் பொழுது வர்க்க முரண்பாடுகள் தீவிரமான காலம் என்று கூறலாம். இந்த முரண்பாடுகள் தமிழகத்திலும் தீவிரம் பெற்று விளங்குகின்றன. இவற்றைத் தமிழ்ச் சிறுகதை ஆசிரியர்கள் எந்த அளவிற்கு சுவீகரித்துக் கொண்டிருக்கின்றனர் என்பதைக் காணும் பொழுது விந்தனின் ஸ்தானம் நமக்குத் தெளிவாக விளங்கிவிடும்.

(விந்தனும் விமர்சனமும் பக். 29) எந்த விதத்தில் பார்த்தாலும் நாற்பதுகளிலிருந்து, தம்முடைய கதைகளுக்கான அசைக்க முடியாத அடித்தளமாக வைத்து, 'வாழ்ந்தால் லோ சர்க்கிள் - ஏழை எளியவர்களோடு வாழ்வேன். செத்தால் அவர்களோடு சாவேன்' என்ற உயிர்த்துடிப்பின் வேகம் குன்றாமல் எழுதி வாழ்ந்தவர் விந்தன் என்பது வரலாற்றுப் பூர்வமான உண்மையாகும்.

இந்த நூற்றாண்டின் தமிழ்ப்படைப்பிலக்கிய வரலாற்றில் அவர் ஒரு தனித்தடத்தைப் பதித்துள்ளதோடு அத்தடத்தின் வழியே உருவெடுக்கும் பெருவழி ஒன்றனையும் வரலாற்றில் ஏற்படுத்தியவர் அவர்.

அவருடைய படைப்புகள் பல - குறிப்பாக அவருடைய சிறுகதைகளுள் பெரும்பாலானவை இலக்கிய ரசிகர்கள், திறனாய்வாளர்கள் போன்றோரால் மட்டுமல்லாமல் சமூகவியல் மற்றும் பண்பாட்டியல் வல்லுநர்களாலும் காலகட்ட மற்றும் கருத்தவீச்சுகள் தொடர்புடைய பல்வகைப்பட்ட ஆய்வுகளுக்கு உட்படக் கூடியவை

விந்தனுடைய அதிமுக்கிய இலக்கியப் பங்களிப்பு அவருடைய சிறுகதைப் படைப்புகளிலேதான் உள்ளது. சில குட்டிக்கதைகள் சிலவும் ஓ மனிதா வரிசையில் எழுதப்பட்ட கதைகள் சிலவும் இப்பங்களிப்பில் அடங்கக் கூடியவை. ஆரோக்கியமான அங்கத வழங்குமுறையை அவற்றில் காண முடிகின்றது. சிறுகதைகளில் இம்முறையைத் தொடர்ந்து கையாண்டதன் விளைவாகத் தம்முடைய நாவல்களிலும் அதை அவரால் இயல்பாகவும், எளிதாகவும் கையாள முடிந்தது.

அவருடைய யதார்த்த அங்கதச் சித்திரிப்புகளைக் கண்ட ஆர் வி அவர்கள் அவரைக் **கோபக்காரக்கலைஞர்** என்று கூறுகின்றார்

'விந்தனுடைய நடையில் ஒரு நையாண்டிக் குரலும் ஒலிப்பதைக் கேட்கலாம். அது ஊசி குத்துவதுபோல் நறுக்கென்று தைக்கிறது. சமயத்தில் ஒட்டும் போடுகிறது. புதிய கலைஞர்கள் அவர் சென்ற ஒற்றையடித்தளத்தில் நடந்து அதைச் செம்மைப்படுத்துவது அவர்களுக்கும் நல்லது. சமுதாய நன்மைக்கும் வழியமைத்த கலைச்சிறப்பு சேரும்' என்கிறார்.

விந்தன் எழுதிய ஆறு நாவல்களுள் **பாலும்பாவையும்** மட்டும் தனித்த சிறப்புடையதாய் விளங்குகிறது. இதனை ஒரு குறுநாவல் அல்லது நீண்ட சிறுகதை என்றும் கூட கூறலாம். எழுத்துச் செல்வர் வல்லிக்கண்ணன் அந்நாவலைப் பற்றி இவ்வாறு கூறுகின்றார் :

'பார்க்கப் போனால், பாலும் பாவையும் நாவலில் சொல்லப்பட்டுள்ள கதை சாதாரணமான, பழைய விஷயம்தான். காதல் என்று மயங்கி ஒரு பெண் தன்னலக்காரன் ஒருவனுடன் ஓடிப் போகிறாள். அவள் தன்னுடைய நகைகளை எடுத்து வருவாள் என எதிர்பார்த்த காதலன், நகைகள் அணியாது வந்த காதலியை ஓர் ஊரின் ஓட்டல் அறையில் விட்டுவிட்டு ஓடிவிடுகிறான்.

கைவிடப்பட்ட அபலைப் பெண் தனது எதிர்கால வாழ்க்கைக்காக எந்த ஆணையும் காதலிக்கத் தயாராகி, அடுத்த அறைக்கு வந்து சேர்ந்த ஒரு ஏழைப் புத்தக விற்பனையாளனோடு காதல் வளர்க்கத் துணிகிறாள். அவளிடம் அனுதாபம் கொள்ளும் அந்த இளைஞன், தன்னைக் காத்துக் கொண்டு, அவளுக்கு உதவிபுரிய விரும்புகிறான். இம்முயற்சியில், அவன் அவனது பெற்றோரால் பழிவாங்கப்படுகிறான். அவளைக் கைவிட்ட பணக்காரக்காதலன் வேறு பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்கிறான்

அவள், முதன் முதலில் அவளிடம் ஆசை கொண்ட இளைஞன் தனக்குப் பாதுகாப்பு அளிப்பான் என்று எதிர்பார்க்கிறாள். ஆனால், அவனோ கெட்டுப்போன பாலும், கெட்டுப் போன பாவையும் விலக்கி ஒதுக்கப்பட வேண்டிய விஷயங்கள்தான் என்று ஞானம் பெற்று, அவளை வெளியே தள்ளுகிறான். அவள் கடலில் இறங்கி தற்கொலை செய்து கொள்கிறாள்.

'இந்தக் கதையை விந்தன் வளர்த்திருக்கிற விதம் புதுமையானது. கதை மாந்தரை அறிமுகப்படுத்துகிற வகை புதுமையானது. அவர்களைப் பழகவிட்டு, உரையாட வைக்கிற போக்கு ரசமானது, சுவையானது. இடை இடையே அவர் சுட்டிக் காட்டுகிற உண்மைகள் சிந்தனைக்கு உணவு. அங்கங்கே அவர் பொறித்துள்ள சிந்தனை மணிகள், அறிவின் - அனுபவத்தின் ஒளிச் சுடர்கள்.'

(விந்தனும் விமர்சனமும் பக். 46, 47)

இக்கதையின் முடிவு சோக முடிவாக இருப்பதால் விந்தன் எவ்வளவுதான் தீவிரமாகக் கருத்துக்களைக் கூற முயன்றாலும் சமுதாயத்தைத் தாக்கி இருந்தாலும் ஆண்களால் மாசுபடுத்தப்பட்ட பெண்ணுக்குத் தற்கொலையைத் தவிர வேறுவழியில்லை என்ற பழைய புளித்துப் போன தத்துவத்திற்கு சப்பை கட்ட முன்வநதிருக்கிறார் என்று விந்தனைச் சிலர் விமர்சிக்கவே செய்தனர். என்றாலும் விந்தன் தம்முடைய முன்னுரையில்...

> 'பெண் குலத்தை மாசுபடுத்துவதற்காக நான் இந்தக் கதையை எழுதவில்லை. தூய்மைப் படுத்துவதற்காகவே எழுதியிருக்கிறேன். இந்தக் கதையில் வரும் அகல்யாவிடம் எவ்வித வெறுப்பும் எனக்கு இல்லை. அவர் பணக்கார வர்த்தகத்தைச் சேர்ந்தவள் என்று குறிப்பிடும்போது மட்டும், எனக்கு அந்த இனத்தின் மேல் இயற்கையாக உள்ள வெறுப்பை ஓரளவு காட்டியிருக்கிறேன்.'

(விந்தனும் விமர்சனமும் பக் 51, 52)

'இன்றைய உலகத்தில் நாம் காண்பது என்ன? பொருள் இல்லாவிட்டால் காதல் புகைகிறது அல்லது காதலாகள் மயானத்தில் புதைந்து விடுகிறார்கள்' - விந்தன் மேலும் ஆணின் ஆதிக்கமும் இன்றையச் சமுதாயச் சீரழிவுக்கு சிறப்பாகப் பெண்களின் விபரீத முடிவுகளுக்குக் காரணமாகிறது. இதை விந்தன் கூற வரும்பொழுது,

> 'இதில்கூட சமூகத்தில், ஆணுக்கு ஒரு நீதி, பெண்ணுக்கு ஒரு நீதி என்ற அநியாயப் போக்குதான் வளர்கிறது. காதலில் தோல்வி கண்ட ஆண், வேறு ஒரு பெண்ணைக் கல்யாணம் செயது கொண்டு, சுகமாக வாழ அனுமதிக்கப்படுகிறான் ஆனால் காதலனால் கைவிடப்பட்டு, காதலில் தோல்வி கண்ட பெண், கெட்டுப் போனவள் என்று பலராலும் பழிக்கப்படுகிறாள் அவளுக்குப் புது வாழ்வு சித்திப்பதற்கு வாய்ப்புகளும் வசதிகளும் இலலாமலே போகின்றன. அவள் சமூக மனிதர்களால் வெறுத்து ஒதுக்கப்படுகிறாள்; மேலும் கெட்டுப் போவதற்கு - அல்லது செத்து ஒழிந்து போவதற்காக - தூண்டப்படுகிறாள்.

(விநதனும் விமர்சனமும் பக். 52, 53)

அகல்யாவுக்கு ஏற்பட்ட இழிவும், இழப்பும் மற்ற பெண்களுக்கு ஏற்படக்கூடாது, அவர்கள் அறிவிழக்காமல் தற்பாதுகாப்போடு வாழ வேண்டும். பெண்ணினத்தின் பெருமையைப் பேணிக் காக்க வேண்டும் - இந்த அறிவுரையும் அறைகூவலும் பாலும் பாவை நூலிலிருந்து வெளிப்படவே செய்கின்றன.

திருவாரூர் தங்கராசுவின் 'ரத்தக் கண்ணீர்' மற்றும் டாக்டர் மு.வ. வின் 'அகல்விளக்கு' ஆகிய இரண்டு படைப்புகளிலும கதாநாயகர்கள் வாயிலாக ஆணினத்திற்கு வலியுறுத்தப்படுகின்ற உண்மையே அகல்யாவின் மூலமாகப் பெண்ணினததிற்கு வலியுறுத்தப்படுகிறது என்று கொள்ளலாம்.

எல்லா நாவல்களுமே இநதப் பாணியில் முகாரி ராகத்தோடு முடிய வேண்டிய அவசியம் இல்லை. புரட்சிக் கருத்துக்கள் செயல்வடிவம் பெறுவதைக் காட்டும் முடிவுகளைக் கொண்ட நாவல்கள் சிங்கார வேலர், வ ரா. ஆகியோரின் காலத்திலிருந்தே வெளிவந்துள்ளன. பால் கெட்டுப் பேனால் அதைக் கொட்டிவிட வேண்டியதுதான் என்ற சமையலறைக் கருத்து ஒரு புறமிருக்க, மன்னிக்கும் மனப்பான்மை உடையவன்தான் மனிதன் என்ற உயர்ந்த கொள்கையை வலியுறுத்துவதாய் அமைந்தது.

டி கே.எஸ் அமைப்பின் மனிதன் என்னும் நாடகம் சிதம்பரம் காவல் நிலையத்தில் கற்பழிக்கப்பட்டு விதவையும் ஆகிவிட்ட பத்மினி என்ற பெண்ணுக்கு மறுமணம் நடந்திருப்பது ஒருவேளை இலக்கியப் படைப்பாளர்களின் கற்பனைகளுக்கு அப்பாற்பட்டதாகவும தோன்றலாம். பாவை என்பவளுக்கு பால்போன்ற வெள்ளை மனமும் பாலுக்குள்ள ஊட்டச்சத்தும தேவை என்பது உண்மை

அதே நேரத்தில் சில சிதைவுகளே அவளைச் சீரழிதது மாயததுவிடும் என்று சொல்லிவிட முடியாது. ஆண் பெண கற்பு பற்றிப் பேசும்போது டாக்டர். மு வ இருபாலாரின் திருமணத்திறகு முந்திய வாழ்க்கையை விட திருமணத்திற்குப் பிந்திய வாழ்க்கையிலேயே கற்பு என்பது நிலைநிறுத்தப்பட வேண்டிய ஒன்றாகிறது என்கிறார்.

இந்த நோக்கிலெல்லாம் சமுதாயத்தைப் பாக்கத் தவறியவர் அல்ல விநதன். சில அழுத்த நிலைகள ஒட்டி அவர் பாலும

பாவையில் அவர் காலத்துச் சமுதாயத்தைப் படம் பிடித்துக் காட்ட முயன்றிருக்கிறார். அதில் அவருக்கு முழுவெற்றி கிடைத்துள்ளது என்பது உண்மையே ஆகும்.

இப்பொழுது விந்தன் நம்மோடு வாழ்ந்து கொண்டிருந்தால் அவருக்குப்பிரியமான நடுத்தர வர்க்கம். உயர் நடுத்தரவர்க்கமாக மாறி வருவதையும் இவ்விரு வகுப்பைச் சார்ந்தவர்களும் வாழ்க்கை முன்னேற்றங்களைச் சுலபமான வழிகளில் ஒல்லும் வகையிலெல்லாம் பயன்படுத்திக் கொண்டு அடைந்துவிடத் துடிப்பதைக் கண்டு, தம்முடைய அங்கத மொழியில் இந்த எலி ஓட்டங்களைப் படம் பிடித்துக் காட்டுவார் என்று நான் எண்ணிப் பார்ப்பதுண்டு.

சீட்டுக் கம்பெனிகள், பல கோடி பல இலட்சம் மற்றும் தங்கம் வெள்ளி பரிசுகள் இவையெல்லாம் அவருடைய எழுத்தில் பந்தாடிக் காட்டுவார் இல்லையா? இப்படி எல்லாம் சிந்தனை ஓடும் அவர் அன்று எழுதிய எழுத்துக்களாலேயே இன்றையச் சூழலில் நமக்கு அறைகூவல்களையும் அறிவுறுத்தல்களையும் வழங்கிக் கொண்டிருக்கிறார்.

அவர் பதித்துள்ள தடம் வலுவானது. அவர் நிறுவியுள்ள பாதை நீண்டு செல்வது.

1998

15

# மாட்டுத் தொழுவம்

**- ஸ்வீட்லின் பிரபாகரன்**

*மக்கள் எழுத்தாளர் விந்தன் அவர்களிடம் நான் பேசிப் பழகவில்லையென்றாலும் அவரின் எழுத்துக்கள் மூலம் அவர் எனக்கு நன்கு பரிச்சயமானவர்.*

*மக்களின் உள்ளுணர்வுகளை, ஆணாயிருந்தாலும் சரி, பெண்ணாயிருந்தாலும் சரி, பாத்திரப் படைப்பின் மூலம் வெளிப்படுத்திக் காட்டுபவர் விந்தன் அவர்களே*

*எழுத்தாளரின் எழுத்துக்களை வைத்து எழுதுபவர் ஆணா, பெண்ணா என்று அடையாளம் கண்டு கொள்ள முடிகின்றது. ஆனால் விந்தன் அவர்கள் ஆணாக இருந்தாலும் பெண்களின் மன உணர்வுகளை மாட்டுத் தொழுவம் கதை மூலம் படம் பிடித்துக் காட்டியிருக்கின்றார். இக்கதையில் வரும் நாயகி, தானே தன் கதையைச் சொல்வது போல் அமைந்துள்ளது.*

> *அன்பில்தான் பிறக்கிறோம், அன்பில்தான் வளர்கிறோம். ஆனால் எல்லோருமே அன்பில் வாழ முடிகிறதா? இல்லை. அப்படி வாழ முடியாத தரித்திர தேவதைகளில் நானும் ஒருத்தி என்று ஆரம்பமே இப்படியாக அமைகின்றது.*

*பிறந்ததிலிருந்து அன்பையே கண்ட அவளுக்கு, புகுந்த வீட்டில் அன்பு பாலைவனமாகிப் போனதை அவளால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. மாமியார், மாமனார் நாத்தனார், கொழுந்தன், கணவன் என்று கணவர் வீட்டுக்காரர்களின் எண்ணிக்கை அதிகமிருந்தாலும், அவர்களில் ஒருவரின் அன்புகூட இவளுக்குக் கிடைக்காமற் போனதில் இவளுக்கு ஏமாற்றமே. யாரோட அன்பு*

இல்லையெனினும் கணவரின் அன்பு கிஞ்சித்தும் இல்லாதது வருத்தமே.

கணவர் வீட்டாரைப்பற்றிச் சொல்லும் பொழுது தன் வீட்டாரையும் சேர்த்தே சொல்கிறாள்.

> தெரிந்த ஊரைவிட்டு, பிறந்த வீட்டைவிட்டு, பெற்ற தாயைவிட்டு, வளர்த்த தந்தையை விட்டு, தெரியாத ஊருக்குள் நுழைந்தேன்; பிறக்காத வீட்டுக்குள் புகுந்தேன்; பெற்ற தாயின் பிரிவுக்குப் பதில் வாய்த்த மாமியின் கொடுமையைக் கண்டேன்; என்னை விட்டுக் காரியம் செய்ய விடாத தந்தைக்குப் பதில் எடுத்ததற்கெல்லாம் என்னையே காரியம் செய்யவிடும் மாமனாரைக் கண்டேன். இவர்கள் மட்டுமா?
>
> தினந்தோறும் காலை இரண்டு மணிக்கே எழுந்து, நான் அடுப்பைக் கட்டிக் கொண்டு அழ வேண்டுமென்பதற்காக, அடுத்த ஊரிலுள்ள கலாசாலையில் படிக்கும் இரண்டு மைத்துனன்மார், மாமியார் தினசரி என்னுடன் மல்லுக்கு நிற்பதற்குச் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுப்பதற்காக ஒரு மைத்துனியும் இருந்தாள். மாடும் ஒன்று இருந்தது. ஆனால், அவர் மட்டும் என்னிடம் அன்பாயிருந்திருந்தால் இத்தனை துன்பங்களும் என்னை ஒன்றும் பாதித்திருக்காது. பாதித்திருக்கவும் முடியாது

என்று கூறுகிறேன்.

கணவனின் அன்புக்காக ஒவ்வொரு நிமிடமும் ஏங்குகிறாள். பாறையில் நீர் வந்த கதையாயிருந்தது. பாறையில் நீர் சுரக்குமே தவிர, இவளது கணவனின் நெஞ்சுப் பாறையில் மறந்தும்கூட அன்பு சுரந்ததே யில்லை.

ஆனால் கணவனின் அன்புமட்டும் அவளுக்குக் கிடைத்திருந்தால் மற்றவைகள் அவளுக்குத் துச்சமாக இருந்திருக்கும். கணவனின் அன்பும் இல்லாதது அவளுக்கு எல்லாமே பூதாகாரமாகத் தோன்றுகின்றது.

> **'அன்பிலா ரெல்லாந் தமக்குரியர் அன்புடையார்**
> **என்பும் உரியர் பிறர்க்கு'** *(குறள் 72)*

என்று வள்ளுவர் கூறும் அன்புடைமைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்பவள் தலைவி.

மனைவி என்பவள் அன்பு காட்டுவதில் தாயாகவும், அறிவுரை கூறுவதில் ஆசானாகவும் இருக்க வேண்டும். கணவனுக்கு எண்ணெய் முழுக்காட்டிக் குளிப்பாட்டுதலையும், அவனுக்கு வெற்றிலை கொடுக்க, அவன் அவள் கைக்கு முத்தம் கொடுத்த அன்புக் காட்சியையும் கவிஞர் பாரதிதாசன் குடும்ப விளக்கில் சுவைபட எழுதியுள்ளார்.

பாவேந்தர் பெண்ணுரிமையை வேண்டியவர். அதனால் அவருடைய படைப்புகள் எல்லாவற்றிலும் ஆணைவிடப் பெண்ணை உயர்ந்தவளாக - சிறந்தவளாக - அறிவுடையவளாக, ஆற்றலுள்ளவளாகப் படைத்துள்ளார்.

குடும்பத்தில் தலைவன், தலைவி என்னும் இருவரும் சிறப்புடையவராயினும் அகத்தலைமை பெண்ணுக்கு உரியதாக அமைகிறது குடும்பம் ஒளிபெற வேண்டுமானால் குடும்பத்தலைவி விளக்காக ஒளிர்தல் வேண்டும் என்றும் அவர் கூறுகின்றார்.

மாட்டுத் தொழுவத்தில் வரும் கதாநாயகிக்கு பாவேந்தா கூறும் குணங்கள் அத்தனையும் ஒட்டுமொத்தமாக இருந்தாலும் அவளை அவ்வீட்டார் சிறிதும் மதித்தாரில்லை.

இலக்கியங்கள் பெண்மையை உயர்த்தலாம். காவியங்கள் பெண்மையைப் புகழலாம். சான்றோர்கள் பெண்மையைப் பாராட்டலாம். ஆனால் அதே பெண்மை சீரழிய விடலாமா?

இன்றைய பெண்கள் சமூகத்தின் அழகுணர்வுகளுக்கு மட்டுமே அடிமைகள் அல்ல. பெண்களை வெறும் அலங்காரப் பொருட்களாக நினைத்துப் பலர் தங்கள் வியாபாரங்களுக்காக விளம்பரங்களில் பயன்படுத்துவது சரியல்ல.

பாரதி, பாரதிதாசன் அவர்களைப் போன்றே டாக்டர் மு. வரதராசனார், திரு.வி.க. போன்றோர் பெண்களை உயர்வாக மதித்தவர்கள் என்பதற்கு அவர்கள் எழுதிய எழுத்துக்களே சான்று கூறும்.

பெண்கள் போற்றுதற் குரியவர்களாகவும், புகழுதலுக் குரியவர்களாகவும் இருந்தாலும் ஆண்மை, பெண்மையை

ஆட்டிப்படைக்கவே விரும்புகின்றது. ஆணுக்குச் சரிநிகர் சமானமாகப் பெண்கள் இருக்கும் இக்காலக்கட்டத்திலும் பெரும்பாலான பெண்கள் அடிமை வாழ்க்கையில் உழன்று கொண்டிருக்கின்றனர்.

பெண்கள் இந்நாட்டின் கண்கள். பெண்கள் நாட்டுத் தலைவியர்களாக, வழக்கறிஞர்களாக மருத்துவர்களாக, பேராசிரியர்களாக விஞ்ஞானிகளாக, விமான ஓட்டிகளாக, உலக சாதனை புரிபவர்களாக உயர்ந்துள்ளனர்.

ஆனால் சமூகம் இன்னும் உயராமல் தாழ்ந்தே இருக்கின்றது. அதனால் பெண்களின் வாழ்க்கை துன்பம் மிக்கதாக உள்ளது.

பெண்கள் ஆண்களின் அடக்கு முறைகளாலும் அவர்களை அடிமைகளாக எண்ணும் எண்ணத்தாலும் பற்பல துன்பங்ளுக்கு ஆளாகின்றனர்.

துணிச்சலான பெண்கள் எதிர்த்து நின்று போராடுகின்றனர். துணிச்சலில்லாத பெண்கள், நமக்கு ஏன் இந்த வீண் வம்பு என நினைத்து எல்லாவற்றையும் சகித்துத் தமக்குள்ளேயே புழுங்கிக் கொண்டு வாழ்நாளைக் கழிக்கின்றனர்.

மாட்டுத் தொழுவத்தில் வரும் நாயகி கணவனின் அன்பு இல்லாமலே இரண்டு குழந்தைகளுக்குத் தாயாகிறாள். இப்பொழுது மூன்றாவது குழந்தையை வயிற்றில் சுமந்து கொண்டிருக்கிறாள். அவளால் வேலை செய்ய முடியவில்லை. இதை அவளே இப்படிச் சொல்கிறாள் :

> 'மாதம் ஆக, ஆக எனக்கு வேலை செய்ய முடியவில்லையே என்ற குறை. மாமியாருக்கோ வேலை செய்யவில்லையே! என்ற குறை. இந்தக் குறைகளுக்கு இடையே எனக்கு ஏழாவது மாதம் நடந்து கொண்டிருந்தது. எல்லாப் பெண்களும் முதல் பிரசவத்துக்குத்தான் பிறந்தகம் செல்வது வழக்கம். இந்த விஷயத்தில் மட்டும் என் மாமியாருக்கு வேறு யாருக்கும் இல்லாத விசாலமான மனம். அவள், பிரசவத்துக்குப் பிரசவம் என்னைப் பிறந்தகத்துக்குத்தான் அனுப்பி வைப்பாள்.

அதே கதிதான் எங்கள் வீட்டு மாட்டுக்கும், பிரசவத்துக்குப் பிரசவம் அதையும் கிராமத்துக் ஓட்டி விடுவார்கள். நியாம்தானே? பால்

மறத்துப் போன அந்த மாட்டுக்கு யாராவது தண்டத்தீனி போட்டுக் கொண்டிருப்பார்களா?

அதனுடைய நிலைதான் என்னுடைய நிலையும் வீட்டுக் காரியங்களையோ என்னால் இப்பொழுது செய்ய முடிவதில்லை. பின் ஏன் எனக்கு வெட்டிச் சோறு?

இதோ, அப்பாவுக்குக் கடிதம் எழுதி அவரும் என்னை அழைத்துக் கொண்டு போக வந்துவிட்டார். பெற்றுப் பிழைத்தால் திரும்பி வருவேன். பழையபடி வீட்டுக் காரியங்களையும் கவனித்துக் கொள்வேன். அவரும் என்னைக் கவனித்துக் கொள்ள வேண்டிய விதத்தில் கவனித்துக் கொள்வார் வராமல் செத்தொழிந்தால் என்ன பிரமாதம்? அவர் வேறு கல்யாணம் செய்துகொண்டுவிடுவார்.

அவ்வளவுதான்; இப்பொழுது நீங்களே சொல்லுங்கள். நான் வாழ்வது, மனிதத் தொழுவமா? இல்லை. மாட்டுத் தொழுவமா?

கதை முடிவை, படிப்பவர்கள் தீர்த்துக் கொள்ளும்படி விட்டுவிடுகிறார். கதைபடிப்பதற்கு கதைமாதிரியல்ல. வாழ்க்கையில் தமக்கு, அதாவது படிப்பவர்களுக்கு நடப்பது போலவே கதை தத்ரூபமாக அமைந்துள்ளது.

விந்தன் அவர்களின் கதையைப் படிப்பதில் நாட்டம் ஏற்படுவதற்குக் காரணம் நாமும் கதாபாத்திரங்களாகிவிடுவதுதான்.

ஒரு பெண்ணின் நினைவுகளை - உணர்ச்சிகளை ஒரு ஆணால் இவ்வளவு தத்ரூபமாக எப்படி எழுத முடிகின்றது என்று நான் வியந்துதான் போனேன்

விந்தன் வாழ்ந்த காலத்தில் இப்படிப்பட்ட பெண்கள் இருந்தது போலவே இன்னும் இப்படிப்பட்ட பெண்கள் இருக்கவே செய்கின்றார்கள். இவைகள் மாற காலமும் - சமுதாயமும்தான் பதில் சொல்ல வேண்டும்.

1998

16

# விந்தன் சிறுகதைகளில் பெண்கள்

- மங்கையர்க்கரசி மயில்வாகனன்

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டு இலக்கியங்களுள் சிறிய வடிவாலும், சீரிய அமைப்பாலும் தனக்கெனத் தனி இடத்தைப் பெற்றுவிட்ட கலைவடிவம் சிறுகதை ஆகும்.

சிறுகதை எழுதுகின்ற எழுத்தாளர்கள் எண்ணற்றவர்கள் இருப்பினும், நம் எண்ணத்தில் நிலைத்து நிற்பவர்கள் மிகச் சிலரே. அச்சிலருள் ஒருவர், உண்மை ஒளி வீசும் சிறுகதைகளைப் படைத்த வி. கோவிந்தன் என்ற விந்தன் ஆவார்.

விந்தன் உழைப்பாளி மக்களிடையே பிறந்து வளர்ந்து உழைத்துப் பண்பட்டவர். எனவே, ஏழை எளியவர் வாழ்க்கையிலுள்ள மன மகிழ்ச்சியினை, துயர உணர்வுகளை எளிய தமிழ் நடையில் சித்திரிக்க அவரால் முடிந்தது.

அவர் கதைகளில் ஏழைக் குடியானவன், ஆலைத் தொழிலாளி, ரிக்ஷா வண்டிக்காரன், சுமை கூலிக்காரன் ஆகியோரின் சுக துக்கங்கள் கலைநயத்துடன் கூறப்பட்டிருக்கும்.

தொழிலாளிகளையும், பாட்டாளிகளையும் சுரண்டி வாழ்கின்ற பணக்கார வர்க்கத்தின் அநீதியும் கொடுமையும் குறிப்பிடப்பட்டிருக்கும்.

வறுமையை அடித்தளமாக்கி வாழ்க்கையோடு போராடும் பெண்களின் அவல நிலை எடுத்துரைக்கப்பட்டிருக்கும்.

பலதரப்பட்ட மாந்தர்களைப் படைத்துத் தம் கதையில் உலவவிடும் விந்தன் கதைகளில், பெண்கள் எங்ஙனம் சித்திரிக்கப்பட்டுள்ளனர் என்பதை அவரது 'முல்லைக் கொடியாள்' தொகுப்பின் வாயிலாக இக்கட்டுரையில் காணலாம்.

முல்லைக் கொடியாள் தொகுப்பில் மொத்தம் 25 சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன. அவற்றில் 13 கதைகளில் குறிப்பிடத்தக்க வகையில் பெண்கள் படைக்கப்பட்டுள்ளனர். அவர்களைத் திருமணமாகாத இளம்பெண்கள், திருமணமான பெண்கள் என இருவகைப்படுத்தலாம்.

## இளம்பெண்கள்

முல்லைக்கொடியாள், மாலினி, கேதாரி, சொக்கி, உமா, நீலா எனும் ஆறு பெண்களும் திருமணமாகாத இளம்பெண்களாவர். இவர்களுடைய சொற்களையும், செயல்திறனையும் அடிப்படையாகக் கொண்டு இவர்களை நாணமிகுந்த நாட்டுப்புறப் பெண், அமைதியும், காரிய சாதனையும் கொண்டவர்கள், துணிச்சல் மிக்க புதுமைப் பெண்கள் என மூன்று பிரிவுகளுக்குள் அடக்கலாம்.

## நாணமிக்க நாட்டுப்புற நங்கை

முதல் கதையான முல்லைக்கொடியாளில் கள்ளமற்ற வெள்ளை உள்ளங் கொண்ட நாட்டுப்புற நங்கையைப் படைத்துள்ள விந்தன், கதையில் அவளது பெயரைக் குறிப்பிடவேயில்லை. தனக்கு உதவி செய்ய வந்த பட்டணத்து இளைஞன், 'உன் பெயா என்ன?' என்று வினவும்போது, பெயரில் என்ன இருக்கிறது? என்று அவள் கூறும் பதில், ஆசிரியர் நமக்குக் கூறும் பதிலாகவே தெரிகிறது.

அவன், 'நீ... காதலிக்கவில்லையா?' என்று கேட்டதற்கு, 'எங்க ஊரிலே காதல் எல்லாம கல்யாணத்துக்கு அப்புறந்தான்' என்று வெட்கத்துடன் அவள் உரைக்கும் பதில், கண்டதும் காதல் கொள்கின்ற வெகுளித்தனமாகப் பேசும் வெள்ளை உள்ளத்தின் இயல்பை அறியாத பட்டணத்து இளைஞர்களுக்குச் சரியான பதிலடியாய் விழுகிறது.

தமிழகக் கிராமங்களில் நாம் காண்கின்ற சராசரிப் பெண்களின் மாதிரிப்படைப்பாக (Typical Character) இடம பெறுகிறாள் முல்லைக் கொடியாள்

## அமைதியும், காரிய சாதனையும் கொண்டவர்கள்

மாலினி என்ற கதையில் வருகின்ற பாரிஸ்டர் பராங்குசத்தின் ஒரே மகள் மாலினியும், அன்பின் அடையாளம் என்ற கதையில் வரும் உமாவும், தங்கள் விருப்பத்தை வெளிப்படையாக எவரிடமும் தெரிவிக்காதவர்கள்; தந்தையின் மனப்போக்கை அறிந்தவளாய், தான் விரும்பியவனை விரும்பாதது போல் நடந்து, தன் காரியத்தைச் சாதித்துச் கொள்கிறாள்.

உமாவோ, தன் காதலனையே கணவனாக அடைய வேண்டுமென்பதற்காகத் தன்னைப் புலியிடமிருந்து காப்பாற்றிய வீரமிக்க இளைஞன் எனக் காதலனைப் பற்றிப் பொய் கூறி, அவனை மணந்து கொள்ளத் தந்தையிடம் சம்மதம் பெற்றுவிடுகிறாள்.

இவர்கள் இருவரது செயல்கள் வாயிலாக, மாலினி, உமா போன்ற பெண்கள் தங்கள் வாழ்வில் ஏற்படும் சிக்கல்களை அமைதியான முறையில் தீர்வு கண்டு எளிதில் அவற்றினின்று விடுபட்டு விடுவார்கள் என ஆசிரியர் உணர்த்தியுள்ளார்.

## புதுமைப் பெண்கள்

'வாழப் பிறந்தவன்' என்ற கதையில் வரும் கேதாரி, சொக்கி கதையில் வரும் சொக்கி, சித்தப்பா எனுங் கதையில் இடம் பெறம் நீலா ஆகிய மூவரும் வாழ்க்கையை எதிர்த்துப் போராடும் போர்க்குணம் கொண்டவர்கள். எதிர்க்கின்ற துணிச்சல் மிக்கவர்கள்.

உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த இருளப்பன் மகள் கேதாரி வறுமையைப் போக்க வயலில் பாடுபடும் இளம்பெண். தன் திருமணத்திற்குப் பணம் கேட்டு முதலாளியிடம் அவமானப்பட்டுக் குறுகிப்போன தந்தையின் சார்பில் முதலாளி மகனிடம், துணிச்சலாகப் பேசுகிறாள்.

'என்னமோ, உங்களுக்கு உழைக்க எங்களுக்கு உசிரு இருக்க வேணுமில்லே? அதுக்காவ சம்பளம் கொடுக்கறீங்க? நாங்க வாழவா சம்பளம் கொடுக்கிறீங்க?' என்று அவள் கேட்கும் கேள்வி சுரண்டும் வர்க்கத்தினருக்குக் கொடுக்கும் சாட்டையடியாக விழுகிறது.

பாடுபடும் ஏழைகள் மீது முதலாளிக்கு அன்பு இருக்க வேண்டும் என்று கூறும் கேதாரி மானத்தோடு காலந்தள்ள விரும்பும் பெண்ணாகப் படைக்கப்பட்டு இருக்கிறாள்

காதலையே பெரிதென எண்ணிப் பெற்றவர்களைத் துறந்து காதலன் முருகேசனுடன் வந்து விட்டாள் சொக்கி. தன் தந்தை கையில் கத்தியுடன் முருகேசனைத் தேடி வர, தமிழ்நாட்டுப் பெண்களுக்கென்றே இயற்கையாயமைந்த குணத்தினால், முருகேசனைப் பின்னால் தள்ளிவிட்டு,

'அப்பா, நான் சொல்றதைக் கேளுங்கப்பா! நீங்க என்ன தப்பு பண்ணினாலும் இனிமே கெட்ட பால் நல்ல பாலா ஆகப் போறதில்லே! அவரைக் கொன்னுட்டா யாருக்கு நஷ்டம்? எனக்குத்தானே? நான் கஷ்டப்பட்டா உங்களுக்குக் கஷ்டமாயிராதா, அப்பா?' என்று உருக்கமுடன் கேட்கிறாள்.

அவள் கேள்வி தந்தையின் ஆத்திரத்தைத் தணிக்கிறது. தன் அறிவினால் உணர்ச்சியை வென்று விடும் ஆற்றல் மிக்க பெண்ணாகத் தோன்றுகிறாள் சொக்கி.

தாய், தந்தையை இழந்த அநாதைப் பெண் நீலா, தன் மாமன் மகனை மணக்க விரும்புகிறாள். அவளை வளர்க்கும் சித்தப்பாவோ, வேறு வரன் பார்க்க, தனக்கு அந்த வரனை மணந்து கொள்ள விருப்பமில்லை எனத் தைரியமாகக் கூறிவிடுவதுடன், பலர் முன்னிலையில், தான் மாமன் மகனை மணக்க விரும்புவதையும் தெரிவிக்கிறாள்.

இம்மூன்று பெண்கள் வாயிலாகவும், மென்மையான இயல்பு கொண்ட பெண்கள், தங்களுக்குப் பிரச்சினை என்று வந்தால் ஆவேசம் கொண்டு பொங்கி எழுவதற்குத் தயங்க மாட்டார்கள். பிறர் உதவியை நாடாது, தங்கள் பிரச்சினையைத் தாங்களே தீர்த்துக் கொள்ளும் ஆற்றல் அவர்களுக்கு உண்டு என்பதைக் காட்டியுள்ளார் விந்தன்.

## திருமணமான பெண்கள்

விந்தன், திருமண வாழ்வில் ஈடுபட்ட பின்னர், வறுமையில் உழலும் பெண்களாக, தங்க வளையல் எனும் கதையில், அஜ்ஜா, பத்தினித் தெய்வம் கதையில் முத்தம்மா இன்ப துன்பம் கதையில் பரிமளா, சந்தோஷமாய் முடியும் கதையில் தனகோட்டி ஆகியோரைப் படைத்துள்ளார். இவர்கள் நால்வருமே குறள்வழி வாழும் குலப் பெண்டிர்.

தன்னைக் கயவன் ஒருவன் பொருளாசை காட்டிக் கடத்திச் செல்லும்போது,

'சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும் மகளிர்

நிறைகாக்கும் காப்பே தலை' - எனும் வாய்மொழிக்கு இலக்கணமாக, கற்பே பெரிது என்னும் உயரிய கொள்கையுடன் தன் உயிரை விடுகிறாள் முத்தம்மா.

காலாகாலமாக, கயமைக்குப் பலியாகும் பெண்களின் அவலநிலை முத்தம்மா மூலம் சித்திரிக்கப்படுகிறது.

குடிகாரன் ஒருவனுக்கு மகளாகப் பிறந்தாலும் அஜ்ஜா சிறந்த பண்புகள் கொண்டவள். தன் கணவன் தனக்காக வாங்கி வந்த தங்க வளையல்கள் திருட்டுப் பணத்தில் வாங்கியவை எனத் தெரிந்தவுடன், அவன் மனதை மாற்றக் கடிதம் எழுதிவிட்டு, எங்கோ சென்று விடுகிறாள்.

அவன் திருந்தியவுடன் அவனோடு இணைகிறாள். வறுமையில் செம்மை கொண்டு திகழும் அஜ்ஜா,

**களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்து**
**ஆவது போலக் கெடும்'**

என்பதை அறிந்தவளாக வருகிறாள். முக அழகோடு அக அழகும் அஜ்ஜாவை அணி செய்கிறது.

தான் காதலித்தவனை மறந்து, தன் தங்கையின் நல்வாழ்விற்காக, நான்கு குழந்தைகளின் தகப்பனுக்கு இளையாளாக வாழ்க்கைப்பட்ட பரிமளா, தந்தையின் பாரத்தைக் குறைத்து, தன் மனதையும் பக்குவப்படுத்திக் கொள்கிறாள்.

'பார்க்கப் போனால், இந்த உலகமே என்னத்திற்கு? என்று எனக்குத் தோன்றுகிறது. அது இருக்கத்தானே நாம் வாழ்க்கை என்று ஒன்றை ஆரம்பித்துவிடுகிறோம்? அந்த வாழ்க்கையில் காதலென்றும் சாதலென்றும் கதைத்துக் கொண்டு கண்ணீர் விடுகிறோம்? இன்பமென்றும் துன்பமென்றும் எண்ணி இன்னலுறுகிறோம்? எல்லாவற்றுக்கும் காரணம் நம்முடைய கற்பனைதான். இந்தத் தொல்லை தொலைவதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அந்த வழி துன்பத்தையும் இன்பமாகக் கருதுவதே' என அவள் தோழிக்கு எழுதும் கடிதவரிகள் அவளது மனநிலையைத் தெற்றெனப் புலப்படுத்துகிறது.

**'இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகும்தன்**
**ஒன்னார் விழையும் சிறப்பு'**

எனும் குறளுக்கு இலக்கணமாய்ப் பொலிகிறாள் பரிமளா.

திருமணத்திற்குப் பின் வளமாக வாழும் பணக்காரப் பெண்களாகப் பொன்னையா என்ற கதையில் பத்மாவையும் விதி வென்றதா என்ற கதையில் எஜமானியம்மா ஒருத்தியையும் விந்தன் படைத்துள்ளார்.

இவர்கள் இருவருமே சாதி வெறி கொண்டவர்களாக வருகின்றனர். இருவருள்ளும் பத்மா தன் கணவனின் கௌரவத்தைக் காப்பாற்ற பணத்தைக் கொடுத்து தன் சாதி வெறியை மறைத்து விடுகிறாள். இதனால் பெண்புத்தி பின்புத்தியல்ல என்று கணவனால் பாராட்டப்படுகிறாள்.

மற்றவரோ மனிதப் பண்பே இல்லாமல் தன் வீட்டில் நாள் முழுவதும் உழைத்துக் களைத்து வரும் குப்பனுக்குக் கூழ் ஊற்றுகிறாள்; கழுதை என்று அவனை ஏசுகிறாள்; குப்பையில் போடவேண்டிய வாடிப் போன வெற்றிலையைக் குப்பன் மனைவிக்குக் கொடுக்கிறாள்.

இவர்களைத் தவிர, நாத்தனார் என்ற கதையில் வரும் கந்தசாமியின் அக்கா கங்கம்மா, தம்பி மனைவி வஞ்சியைக் காரணமின்றித் தொல்லைப்படுத்துவதாக ஆசிரியர் படைத்துள்ளார்.

**முடிவுரை**

விந்தன் படைத்துள்ள பெண்களை நோக்குமிடத்து, பெண்கள் நிலை பற்றி விந்தன் கொண்டிருந்த சமூகப் பார்வை புலனாகின்றது.

வறுமையில் வாழும் குடும்பங்களில் பெண்களின் திருமணம் பெரிய பிரச்சனையாகத் திகழ்வதையும், வளமான வாழ்வு வாழும் பெண்கள் அதிகார உணர்வு கொண்டு, தாங்கள் பிறரைவிட மேல் என்ற ஆணவ நிலையில் இருப்பதையும், இளைய தலைமுறைப் பெண்கள் உறுதி கொண்ட நெஞ்சினராய், பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய் விளங்குகிறார்கள் என்பதையும் விந்தன் முல்லைக் கொடியாள் தொகுப்பின் வாயிலாகத் தெளிவுறுத்தியுள்ளார்.

1998

# 17

# செந்தமிழ் நாட்டிலே விந்தன் - சிறுகதை - ஆய்வு

- திருமதி டாக்டர் கஸ்தூரிராசா

*தமிழறிஞர் மு. பரமசிவம் அவர்கள், மக்கள் மறந்துவிட்ட கோவிந்தன் என்ற படைப்பாளியைப் பாட்டாளிகளின் தோழன். நினைவுக்குக் கொண்டு வருகின்ற இந்த நல்ல பணியை மேற்கொண்டுள்ளார். அவருக்கு முதலில் நன்றியினைக் கூறிக் கொள்கிறேன்.*

*முல்லைக்கொடியாள் என்ற சிறுகதைத் தொகுப்பிலுள்ள அனைத்துச் சிறுகதைகளையும் ஆராயின், காலம், இடந்தராததால் ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல 'செந்தமிழ் நாட்டிலே' என்ற சிறுகதையை ஆராய முனைகிறேன்.*

## சிறுகதை இலக்கணம்

*தொல்காப்பியம் சிறுகதையைப், பொருளொடு புணராப் பொய்மொழி என்று குறிப்பிடுவதை அனைவரும் அறிவர்.*

*'சுவையான ஒரு நிகழ்ச்சி அல்லது சூழ்நிலை அமைப்பு, கவர்ச்சியான ஒரு காட்சி, நெருங்கிப் பின்னப்பட்ட சிறு நிகழ்ச்சிகள், ஒருவரின் தனிப்பண்பு, ஒருசிறு அனுபவம் அறவுணர்வால் விளைந்த ஒரு சிக்கல் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்று நல்ல சிறுகதையின் அடிப்படையாக அமையலாம்' என்கிறார் டாக்டர் மு.வ. அவர்கள்.*

*'செந்தமிழ் நாட்டிலே' என்ற சிறுகதை, நம் நாட்டின் சூழ்நிலையையும், அறம் அழிவதையும், நடப்பியல் உண்மையையும் மிகத் தெள்ளிதின் விளக்குகிறது.*

*சிறுகதை, நாவல், திரைக்கதை, வசனம், பத்திரிகை எனப் பல்வேறு துறைகளிலும் தன் முத்திரையைப் பதித்தவர் விந்தன் அவர்கள். செந்தமிழ் நாட்டிலே என்ற சிறுகதை நம்மிடையே வாழ்ந்த ஒருவரின் வாழ்வைப் படம் பிடித்துக் காட்டுவதைப் படித்தவர் நன்கு உணர்வர்.*

**கதைச் சுருக்கம்**

*வயிற்றுப் பிழைப்பைக் கேவலமாக நினைக்கும், கொள்கைக்காக வாழும் எழுத்தாளர் சதானந்தம் அவர்கள், சூரிய கிரகணத்தன்று கடலில் முழ்கியதாகவும், அவர் இறந்ததால் அவரது குடும்பத்தாருக்குப் பத்திரிகையாசிரியர்கள் தரும் மரியாதை, விளம்பரங்கள் இவைகளைக் குறித்து அங்கதச் சுவையுடன் குத்தலாக எடுத்துக்காட்டுகிறார் விந்தன் அவர்கள்.*

*கதையின் முடிவில் ஆசிரிரே ஒரு பாத்திரமாக வெளிப்பட்டு, சிக்கலை அவிழப்பதாகக் கதை முடிகிறது. அதாவது, ஆசிரியருக்கு (நண்பன்) ஒரு தந்தி வருவதாகவும் அதில் சதானந்தம் தன்னை நேரில் பார்க்க அழைப்பு விடுத்ததாகவும் அமைந்துள்ளது.*

*சதானந்தம் அவர்கள், தமிழ்நாட்டில் பிழைக்க முடியாமல் வடநாட்டுக்குச் சென்று 'வக்ரநாத்ஜி என்று தம் பெயரை மாற்றிக் கொண்டு, இந்தியில் நாவல்கள் எழுதி அவை தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு வெளிவருகின்றன என்று அவர் கூறுவதிலிருந்து, சதானந்தம் இறக்கவில்லை என்ற உண்மை வெளிப்படுவதோடு நம் நாட்டின் அவலமும் சேர்ந்து மனத்தை நெகிழவைக்கிறது.*

*இக்கதையைப் படிக்கும்போது நமக்கு மறைந்த மகாகவியின் நினைவுவர, இந்த ஐயத்தை, விந்தன் அவர்களே நீக்கியும் விடுகிறார்.*

*சதானந்தமும் நண்பரும் (விந்தன்) உரையாடும் உரையாடலிலிருந்து ஒரு பகுதி.*

**'அமரகவி பாரதியார் கூட ஒரு வேளை உங்களைப் போல் தான் எங்கேயாவது இன்னும் யாத்திரை செய்து கொண்டிருப்பாரோ?'**

*'அவர் அப்படிச் செய்திருந்தால்தான் இன்னும் ஜீவிய வந்தராயிருக்கலாமே' என்றார் அவர்.*

அதைக்கேட்ட எனக்கு 'நாமும் கடலில் மூழ்கிவிட்டால் என்ன?' என்று தோன்றிற்று. (பக்கம் - 47)

என்று கதையை முடிக்கிறார் விந்தன் அவர்கள்.

மனிதன் வாழும்போது சமுதாயம் அவனை வாழ வைக்காத நிலையை, மனத்தைத் தொடக்கூடிய வகையில் எழுதியுள்ள பான்மை விளங்குகிறது.

**நடை**

எளிய தமிழிலே, தெளிவான, உணர்ச்சிக் கொந்தளிப்பான முறையில் அவரது நடை அமைந்துள்ளது.

கவிஞர்கள், தமிழறிஞர்கள் உயிரோடு இருக்கும் போது வறுமையில் இருக்கின்றார்கள்; அவர்கள் மறைந்த பின்பு அவர்கள் சந்ததியர்களைப் பற்றி எழுதிப் பத்திரிகையாளர்கள் பணம் சேர்ப்பதை மிகச் சுவையாக எழுதியுள்ளார்.

திரு. சதானந்தம் அவரைப் பற்றிக் குறிப்பிடுகையில்,

'எத்தனையோ பத்திரிகாசிரியர்கள் அவருடைய கதை கட்டுரைகளை நிராகரித்து விட்டார்கள்...

பாமரமக்கள் அவருடைய எழுததைப் பாராட்டுவதோடு நின்றுவிட்டனர். பணக்காரர்கள் அதைக்கூடச் செய்யவில்லை... இதனாலெல்லாம் திரு சதானந்தம் தம்முடைய வாழ்நாளில் பட்ட துன்பமும் துயரமும் கொஞ்சமன்று. எழுத்தையே மூலதனமாகக் கொண்ட அவர், வேறு தொழில் ஏதாவது செய்து வாழ்வதற்கும் தகுதியற்றவராயிருந்தார்' (பக்கம் 142-143) என்று படைப்பாளிகள் படும் பாட்டினை மிகத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார் விந்தன் அவர்கள்.

திரைப்படத்தைப் பார்ப்பதைப் போன்ற உணர்வு ஏற்படும் வகையில் அவர் உரையாடலை அமைத்துள்ளார்.

> 'தூக்கி விடுவாரின்றித் துன்பக் கேணியில் நெடுநாட்கள் நீந்திக் கொண்டிருந்த அவருடைய மனைவி கடைசியில் ஒருநாள் களைத்துப் போனாள். முடிவு என்ன?

முழுகிப் போனாள்... இரண்டு குழந்தைகளை வைத்துக் கொண்டு சதானந்தம் பட்ட பாடு கொஞ்சம் நஞ்சமல்ல.

அப்போதெல்லாம் அவனைக் கவனிக்காத தமிழுலகம் இப்பொழுதோ? (பக்கம் 144)

என்று நம் நாட்டின் நிலைமையை விளக்குகிறார்'

## நாடு - அவலம்

கடலில் மூழ்கிவிட்டார் என்றவுடனே மக்கள் கண்ணீர் வடித்தனர். ரசிகர்கள் கூட்டம் கூட்டி, சதானந்தம் சகாயநிதி திரட்டி அவரது குடும்பத்தார்க்கு அனுப்பி வைத்தனர். அவரது நடையிலேயே, மக்களின் மன இயல்பினைப் பார்ப்போம்.

'அன்று அவர் பெயரைச் சொல்லி அவரே பிழைக்க முடியவில்லை; இன்றோ அந்த மனிதனின் பெயரைச் சொல்லி எத்தனைபேர் பிழைக்கின்றனர்' (பக்கம் 146) என்ற அவரது எழுத்துக்கள் உண்மையைத் தெற்றென விளக்குகிறது.

## முடிவுரை

ஆழ்ந்து சிந்தித்துத் தெளிவாகத் தம் படைப்பின் மூலம் கவிஞர்கள், படைப்பாளிகள், ஏழைகள் இவர்களின் வாழ்வில் படும் துன்பத்தைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். இக்கதை மூலம், நம் நாட்டில் வாழும் பணக்காரர்கள், படித்தவர்கள் இவர்களின் உள்ளப்பாங்கு, மேதாவித்தனம், நன்கு விளக்கி, எழுத்தையே தொழிலாகக் கொண்ட தமிழறிஞர்கள் தம் வாழ்வில் படும் துயரங்களை இவரைவிட இனி ஒருவர் சித்திரிக்க இயலாது என்ற வகையில் எழுதியுள்ளார்.

இவர் பல்லாயிரக்கணக்கான எழுத்தாளர்களில் ஒருவர் அல்லர். லட்சத்தில் ஒருவர். இலக்கணத்துக்கு இலக்கணமானவர் என்பது வெள்ளிடைமலை.

1998

# 18

## கண்திறக்குமா

- நீல. பத்மநாபன்

*மோகன லட்சியங்களும் உயர்ந்த குறிக்கோள்களும் ஒரு கட்டத்தில் இல்லாவிடில் இன்னொரு கட்டத்தில் எல்லா மனிதர்களிடமும் ஆட்சி செலுத்துகின்றன. ஆனால் எல்லோருடையவும் எல்லா லட்சியங்களும் சாட்சாத்கரிக்கப்படுகின்றவா?*

*லட்சியவாதிகளாய் வாழ்வை ஆரம்பித்தவர்கள் எத்தனை பேர்கள் இறுதி மூச்சு வரை அந்த லட்சியங்களுக்காகப் போரடிக்கொண்டு இருந்திருக்கிறார்கள்.*

*குறிப்பிட்ட குறிக்கோள் எதுவும் இல்லாதவர்கள் சுகமாய் - அனாயாசமாய் வாழ்ந்து கொண்டிருக்கும்போது, லட்சியச் சிலுவைகளைச் சுமக்கிறவர்கள் ஒவ்வொரு சுவடியிலும் அனுபவிக்கும் சித்ரவதைகள் கொஞ்சநஞ்சமா?*

*இன்றைய அரசியல், சமூகப் பொருளாதாரத் துறைகளில் மட்டுமின்றி, கலை இலக்கியங்களிலும் உயர்ந்த லட்சிய வாதிகளாய்ப் பேசித் திரிந்தவர்கள் தன் இருத்தலை நிலை நிறுத்திக் கொள்ள எப்படி எப்படியெல்லாம் மறு அவதாரங்கள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நித்தம் நித்தம் கண்டு கொண்டுதானே இருக்கிறோம்.*

*இங்கே விந்தனின் **கண் திறக்குமா?** நாவலில் வரும் செல்வம், இந்த 242 பக்க நாவலில் 236வது பக்கம் வரை தன் லட்சியத்திலேயே, கொண்ட கொள்கையிலேயே காலூன்றி நிற்கிறான். ஆனால் 237ஆவது பக்கத்தில் தன் லட்சியத்திற்கு முழுக்குப் போட்டு விட்டு மறு அவதாரம் செய்து விடுகிறான்.*

அந்நிய ஆட்சியின் அடிவருடியாய் ஒரு காலத்தில் இருந்த பாரிஸ்டர் பரந்தாமனைப் போன்றவர்கள் எத்தனை எளிதில் ஆட்சி அமைப்புக்கு ஏற்றவாறு கோலத்தை மாற்றிக் கொண்டு அமைச்சர் பதவி வரை பெற்று விடுகிறார்கள் என்பதையும் காண்கிறோம்.

பணம் பண்ணுவது மட்டுமே இந்தச் சந்தர்ப்பவாதிகளின் குறிக்கோள் என்று சொல்லிவிடமுடியாது. இன்றைய வாழ்வில் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை இந்த மூவாசைகளை விடவும் அசிங்கமான - கொடுமையான இன்னொரு ஆசை பலரையும் பேயாய்ப் பிடித்தாட்டிக் கொண்டிருக்கிறது. இந்த நான்காவது ஆசை எது என்பதை இந்நாவலின், கீழ் குறிப்பிட்டிருக்கும் பாரிஸ்டர் பரந்தாமனின் சொற்களிலிருந்து (பக்கம் 191-192) கண்டு கொள்ளலாம்.

'இந்த ஜனநாயகம், சுதந்திரம் என்பதெல்லாம் ஒரு சிலர் பேரும் புகழும் அடைவதற்கும், பட்டமும் பதவியும் பெறுவதற்கும்தான் உபயோகமாயிருக்குமே தவிர, மக்களின் நல்வாழ்வுக்கு வழி காட்டுவனவா யிருக்காது!

எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் இந்த அரசியல் என்பதே வெறும் பித்தலாட்டம்தான்.

மக்கள் உண்மையிலேயே நல்வாழ்வு பெற விரும்பினால் தங்களைத் தாங்களே நம்ப வேண்டுமே தவிர வேறு எதையுமே, எவரையுமே நம்பக் கூடாது. நாமும் அப்படித்தான்; நம்முடைய நல்வாழ்வுக்கு நம்மை நாமே நம்ப வேண்டும்.

அப்படி நம்பிக்கொண்டு ஏழைகளைப் பற்றி என்ன வேண்டுமானாலும் பேசலாம்; என்ன வேண்டுமானாலும் எழுதலாம்.

எதைப் பற்றிப் பேசினாலும் சரி, எதைப் பற்றி எழுதினாலும் சரி - கருமத்தில் மட்டும் கண்ணாயிருக்க வேண்டும்.

அந்தக் கருமம்தான் பயணத்தையும் பதவியையும் தேடுவது; பேரையும் புகழையும் நாடுவது. இவற்றை நேரான முறையில் அடைவது முடியாத காரியம். எனவே, பித்தலாட்டம் செய்வதில்தான் அவற்றைச் சுலபமாக அடைய முடியும்.'

'ஆனால் அதைப் பித்தலாட்டம் என்று சொன்னால் அவ்வளவு நன்றாயிராதல்லவா? அதற்காகத்தான் அதை ராஜதந்திரம் என்று சொல்வது.'

இத்தகைய மணிமொழிகள், ஏனைய சில விந்தன் நாவல்களில்போல் இநநாவலிலும் நெடு நீளத்தில் காணப்படுகின்றன. கதாபாத்திரங்கள் எல்லோரும் கொஞ்சம் அதிகமாகவே பேசுகிறார்கள்; ஏன், எப்போதும் இப்படி பேசிக் கொண்டே இருக்கிறார்கள் என்று நாம் நினைக்கும் அளவுக்கு!

எல்லோரும் உலகின் கோணங்களை, ஏற்றத்தாழ்வுகளை, தாண்டல்களை, அரசியல் மோசடிகளை, இப்படி சமகால சமூகப் பிரச்னைகளை ஒரு தார்மீகக் கோபத்துடன் இங்கே அலசுகிறார்கள். இவர்கள் எல்லாம் அவரவர்களுக்கென்று ஒரு தத்துவம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் பேச்சில் தீவிரமும் இருக்கிறது; அதிகமாய் பட்டுக்கொள்ளாமல் விலகி நின்று நையாண்டி செய்யும் பாணியும் இருக்கிறது. எது காரிய கௌரவத்துடன் பேசப்படுகின்றது, எது கிண்டல் செய்யப்படுகிறது என்று வாசகர்களையும் திணறடிக்கும் அளவுக்கு இவை ஒன்று கலந்து இருக்கின்றன

க.நா.சு சொல்லும் கட்டுரைக் கதை விந்தன் கதை சொல்லும் பாணிக்கும் மிக அருகில் வருகிறது. அதிகமாய் பட்டுக்கொள்ளாதிருத்தல், நையாண்டி - இப்படியெல்லா மிருப்பினும் சில வேளைகளில் உள்ளே துளைக்கும் விகடாலங்காரத்திற்கும் குறைவில்லை. மாதிரிக்கு, 'கண் திறக்குமா?' நாவலில் (பக்கம் 229ல்) சில வரிகள் :

'சில தேச பக்தர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஒரு நாள் இருபத்திநான்கு மணி நேரமும் தேசத்துக்காகவே உழைக்கிறார்கள். அதிலும் உள்ளூரில் இருந்து கொண்டே உழைக்கிறார்களா என்றால் அதுவும் இல்லை; அடிக்கடி வெளியூர் செல்கிறார்கள் - எப்படி? கால் நடையாகவா? - இல்லை.'

'ரயிலில் ஏறிக்கொண்டு ஓடுகிறார்கள்; ஆகாய விமானத்தில் ஏறிக்கொண்டு பறக்கிறார்கள்; காரில் ஏறிக்கொண்டு அலைகிறார்கள் - இத்தனைக்கும் அவர்கள் உடம்பு கொஞ்சமாவது இளைக்கிறதா? -

கிடையாது; கிடையவே கிடையாது. அதற்குப் பதிலாக நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகப் பருத்துக்கொண்டே வருகிறது; அவர்களுடைய குடும்பமும் எந்தவிதமான கவலையுமின்றித் தழைத்துக் கொண்டே வருகிறது; அதற்கு வேண்டிய செல்வமும் பெருகிக்கொண்டே வருகிறது - அது எப்படி? -

'வரும்படியில்லாமல் இப்படியும் ஒருவன் வாழ முடியுமா? இப்படியும் ஒருவன் தேசத் தொண்டனாயிருக்க முடியுமா?

- இதுதான் எனக்குப் புரியாத புதிராயிருந்தது!

'தலைவர்களைக் கண்டால் விழுந்தடித்துக் கொண்டு போய் மாலை போடுவதும் அவர்கள் ஏதாவது சொல்வதற்கு முன்பே கை தட்டுவதும் தவிர நமக்கு இநத அரசியல் உலகத்தில் வேறு என்ன தெரிந்து தொலைக்கிறது?

'ஆகவே, வரும்படி உள்ள தேச பக்தனாக வாழ எனக்கு வழி தெரியவில்லை.'

இந்த நாவலின் நான் என்ற கதாநாயகன் செல்வம் கூட ஸ்நான அறையை நோக்கி விறுவிறுவென்று நடந்து (பக் 227) லட்சியத்திற்கு முழுக்குப்போட்டு விட்டு, பணம் பண்ணும் வித்தையில் இறங்கிவிட்ட போதிலும், பூணூலை அறுத்தெறிவதுடன், தன் அப்பாவுக்கு ஒரு சூத்திரத்தியிடம் பிறந்த மகளை - முறைக்கு தன்னுடைய ஒரு சகோதரியை (செங்கமலம்) கெடுத்தவனின் (சிவகுமாரன்) அப்பாவைக் (குற்றாலிங்கம்) கொல்லவும அஞ்சாத - கடைசி வரை லட்சியத்தைக் கைவிடாத பாலு (ஐயர்)வையும் இங்கே சந்திக்கிறோம். (இதற்கு முன்பே சிவகுமாரனை வேறு வீராங்கனை யொருத்தி வெட்டி வீழ்த்தி விடுகிறாள்)

வாய்ப்பு கிடைக்கும் இடத்திலும் அல்லாமலும் காதலை ஈவிரக்கமின்றி விமாசித்த அநதக் காலத்து எழுததாளர்களில் விந்தனைப் போல் வேறு யாராவது உணடா என்று தெரியவில்லை. ஆனால் **பாலும் பாவையும்** காதலும் கல்யாணமும் முதலிய நாவல்களில் அமர்க்களமாய் இயங்குவதுபோல் இந்தக் 'கண்திறக்குமா'' விலும் காதலானது இயஙகத்தான் செய்கிறது.

காதலை ஒரு பிரச்னையாகவும் கல்யாணத்தை ஒரு லட்சியமாகவும் கருதாத மணியைப போன்றவர்கள் காதலும்

கல்யாணமும், பாலும் பாவையும் முதலிய நாவல்களில் போல் இந்தக் கண்திறக்குமா?விலும் வருகிறார்களே! ஆனாலும் இந்த நாவலிலும் செல்வம் - சந்தியா லட்சியக் காதலும் வரத்தான் செய்கிறது, காதலும் கல்யாணமும் பாமா - மோகன் போல்!

காதலும் கல்யாணமும் நாவல் முன்னுரையில் (காதல் வாழ்க!) க.நா.சு. சொல்லியிருப்பது இங்கே இந்தக் கண்திறக்குமா? செல்வம் - சந்தியா காதலுக்கும் பொருந்தும்.

'மற்ற லட்சியங்கள் எல்லாம் என்னவானாலும் காதல் என்கிற லட்சியம் இருக்கிறதே, அது எழுத்தாளர்கள் உலகில் உள்ள அளவும் மறையாது என்றுதான் தோன்றுகிறது அந்த லட்சியம் அஸ்தமித்துவிட்டால் தமிழ் நாவலாசிரியர்கள் சரிததிரக் கதைகளோ, சமூகக் கதைகளோ எழுத முடியாமல் போய்விடும் என்பது வெளிப்படையாகவே தெரிகிற ஒரு உண்மையாகும்.

'நான் இரண்டாவது பெண்டும் படைத்தவன். ஆகவே எனக்கே காதல் விஷயம் தெரியும எனறு சொல்லுகிற தமிழ் நாவலாசிரியனும்.

'வால்மீகி பெண்டில்லாதவர் - அவருக்கே விஷயம் தெரியும்

'என்று சொல்லுகிற முதுகிழ இலக்கியாசிரியரும் ஒரு சில விஷயங்களையேனும் (காதலைப்பற்றி) இந்த நாவலைப் படித்துத் தெரிந்து கொள்ளலாம் என்று எனக்குத் தோன்றுகிறது. காதல் வாழ்க!'

இந்தக் 'கண் திறக்குமா?' நாவல் 1956ல் நூல் வடிவம் (முதற்பதிப்பு) பெற்றிருப்பதாய்த் தெரிகிறது. அதற்கு முன்பு பொன்னி பத்திரிகையில் நக்கீரன் என்ற புனை பெயரில் தொடராய் இந்த நாவலை விந்தன் எழுதினாராம். அது சம்பந்தமாய் கல்கியுடன் நடந்த ஒரு சம்பாஷணையை நூல் முன்னுரையில் (வயிறும் வாழ்வும்) விந்தன் நாடகீயமாகச் சொல்லியிருப்பது அன்றைய (இன்றையவும்தான்) பத்திரிகை ஆசிரியர் என்ற முதலாளி - எழுத்தாளன் எனற தொழிலாளி உறவைப் பற்றித் தெரிநது கொள்ளவும். மேலே சிந்திக்கவும் உதவும்.

'கல்கி காரியாலயத்தில் வேலை பார்க்கும் நீங்கள் வேறெந்தப் பத்திரிகைக்கும் கதையோ கட்டுரையோ எழுதக்கூடாது என்ற

விஷயம் உங்களுக்குத் தெரியுமா? என்று தமக்கே உரித்தான கம்பீரத்துடன் அவர்கள் (கல்கி) கேட்டார்கள்.

தெரியும்! என்றேன் நான்.

சரி, இந்தப் பத்திரிகையில் வெளியாகியிருக்கும் தொடர்கதை யாருடைய தொடர்கதை?

தெரியாது!

உங்களுடைய தொடர்கதை என்று பலர் எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்களே, அதற்கு என்ன சொல்கிறீர்கள்?

அவர்கள் ஒரு வேளை என்னுடைய விரோதிகளாயிருக்கலாம்!

இல்லை. உங்களுடைய அபிமானிகள்தான் அப்படி எழுதியிருக்கிறார்கள். அத்துடன் கல்கியில் ஏன் அவர் தொடர்கதை எழுதக்கூடாது என்றும் கேட்டிருக்கிறார்கள்.

அவர்கள் நாசமாய்ப் போகட்டும்! என்று மனத்துக்குள் சபித்துக் கொண்டே நான் பலிபீடத்தில் நிற்கும் ஆடுபோல் நின்றேன்.

இத்தகைய புயலுக்கும் பூகம்பத்துக்கும் என்னை உள்ளாக்கி, நண்பர் திரு முருகு சுப்பிரமணியம் அவர்களைப் பொன்னி வாசகர்களிடம் திண்டாட வைத்த கதையே கண் திறக்குமா? கதை; அதற்காக நான் எடுத்த அவதாரமே நக்கீரன் அவதாரம்!

ஏன் எடுத்தேன்? காலமெல்லாம் என்னைத் தொழுது, கடைசியில் இரணியன் கையிலோ முதலையின் வாயிலோ சிக்கிக் கொண்டே பக்தனைக் காப்பாற்றவா? இல்லை, என்னை நானே காப்பாற்றிக் கொள்ளத்தான்!'

இன்றும்,

நம் தமிழ்ப் பத்திரிகைகளில் வேலை பார்க்கும் எழுத்தாளர்கள் மட்டுமல்ல, அல்லாத எழுத்தாளர்களும் இத்தகைய கொத்தடிமைத் தனத்திலிருந்து அடியோடு சுதந்திரம் பெற்றுவிட்டார்கள் என்று சொல்ல முடியுமா?

1982

# 19

## விந்தனின் பாலும் பாவையும்

### - பூவை எஸ். ஆறுமுகம்

*மதிப்புக்கு உகந்த விந்தன் அவர்களுக்கு, இதயம் தோய்ந்த அஞ்சலிகள்.*

*உங்களுடைய முதல் நவீனம் பாலும் பாவையும்! அதைப் படித்து முடித்து, சகோதரி சரளா உங்கள் முன்னே முகம் காட்டத் துணிவு கொள்ளாவிட்டாலும், அகம் காட்டி, அதில் புறத்தையும் காட்டி உங்களுக்குக் கடிதம் எழுதத் துணிந்திருக்கிறாள். அந்தச் சகோதரியின் துணிச்சலை எந்த அப்பாவியும் பாராட்டாமல் இருக்க மாட்டான்.*

*சரளாவின் திருமுகம் கிடைக்கப் பெற்ற நீங்கள் மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறீர்கள். மரபை ஒட்டிய பண்பாடு! நன்றியும் கூறியிருக்கிறீர்கள்!*

*உங்களுடைய நாவலை மனத்திண்மை மாறாமல், பெண் ஒருத்தி படிப்பதென்பதோ, படித்த பிறகு உங்களுக்குத் தன் கருத்தை வெளியிடுவதென்பதோ லேசுப்பட்டகாரியமா, என்ன?*

*ஒருமுறை என்ன, ஓராயிரம் தடவை வேண்டுமானாலும் நீங்கள் நன்றி சொல்லலாமே?....*

*தமிழ்ச் சமுதாயத்திலே மாதவன் போற்றிடும் பெண்குலத்தை மாசுப்படுத்துவதற்காகத் தாங்கள் இப்புதினத்தைத் தயாரித்திருக்கிறீர்கள்!*

*சரளாவின் கட்சி இது. கட்சி என்று எழுதுவதைவிட, குற்றச்சாட்டு என்றே எழுதிவிடுவதுதான் பொருத்தம்.*

இல்லை. இல்லை. பெண் குலத்தைத் தூய்மைப்படுத்தவே நான் இக்கதையை எழுதியிருக்கிறேன்!

பெண்ணுடன் போட்டி போட்டுக் கொண்டு, நீங்கள் கச்சை கட்டிப் பேசியிருக்கிறீர்கள். உங்கள் பேச்சிலே பயம் தொனிக்கிறது! - நீங்கள் உணர்வீர்களோ, என்னவோ? - நான் உணருகிறேன். உங்களுடைய அந்தப் பயம் வாழட்டும்! ஏனெனில், அந்தப் பயம்தான் உங்களுக்கு அகல்யாவைப் பற்றி - அதாவது, இருபதாம் நூற்றாண்டைச் சார்ந்த பதில் வெட்டு அகல்யாவைப் பற்றி எழுத உங்களுக்குள் துணிச்சலை வழங்கியிருக்கிறது. அந்தத் துணிச்சலையும் வாழ்த்தத்தான் வேண்டும்!

அகல்யா! - சிரிப்புக்குரிய ஓர் அபலை. காதலை நம்பி, வாழ்க்கையைக் கைகழுவவிட்ட பைத்தியக்காரி!

கனகலிங்கம்! அனுதாபத்துக்கு.ிய ஓர் அப்பாவி! வாழ்க்கையை நம்பி, உயிரைக் கை நழுவ வி.ட்டவன்!

உறங்குவது போலும் சாக்காடு என்கிறார்கள் அனுபவசாலிகள். அந்தத் தூக்கத்தில் அகல்யாவையும் கனகலிங்கத்தையும் கட்டுண்டிருக்கச் செய்து விட்டீர்கள் நீங்கள். உங்களுக்கு எவ்வளவோ வேலை மிச்சம். நல்லவர்கள் வாழ்வதில்லை! என்ற அபாய அறிவிப்பு வரிகளுடன் நீங்களும் கோழித் தூக்கம் போட ஆரம்பித்துவிட்டீர்கள்.

உங்களது இந்தத் தூக்கம்தான் எனக்கு விழிப்புச் சக்தியைக் கொடுத்திருக்கிறது. வாழ்க, உங்கள் உறக்கம்!

சந்தேகமே இல்லை! கனகலிங்கம் அப்பாவிதான். முப்பது நாட்களுக்குக் கிட்டும் முப்பது ரூபாயச் சம்பளத்தினால் ஆறுதல் கனியாவிட்டாலும், அந்தப் புத்தகக் கடையில் தான் விரும்பியதை இனாமாகப் படிக்க முடிந்ததில் அவன் பெரிதும் தேறுதல் பெற்றான். காதலைக் கட்டுக்கதை என்றும், அந்தக் காதலை, கதைகளிலும் காவியங்களிலும் படித்து அனுபவிப்பதோடு நிறுத்திக் கொள்ள வேண்டுமென்றும் உணரக் கூடிய அளவுக்கு அவனுக்குப் பரிபக்குவம் அளித்திருக்கிறீர்கள். இந்த லட்சணத்தில் அவனுக்கு இதயம் வேறு இருந்து தொலைத்தது. உள்ளமோ வெள்ளை.

அதனால்தான், வாழ்க்கைக்குக் காதலை உயிர் நாடியென மதித்த அகல்யா, காதலை இழந்ததுடன் நிற்காமல், கற்பையும் இழந்து, என்னைப் போனறவர்களை உங்களைப் போன்ற இதயமுள்ளவர்கள்தான் ஆதரிக்க வேண்டும் என்று பீடிகை போடத் துணிகின்றாள் போலும்! நப்பாசையின் தோள்களை நைந்த ஆசை பற்றுவதற்கு முன்னமேயே, அவர்களுக்குள் காதல் மறுபிறவி எடுத்து விடுகிறது.

காதல் எனும் பசியை அடக்கித் தூங்க வைக்கக் காசு பணம் குவிக்க வேண்டுமென்று தவம் இருக்கிறான் கனகலிங்கம்.

ஒன்றியாகப் போனவன், கலைஞான புரத்திலிருந்து திரும்புகையில், ஒன்றில் ஒன்றாகத் திரும்புகிறான். ரயிலடியில், அவனுடன் அகல்யாவைக் கண்ட அவனது முதலாளி, அவனைத் தவறுபடக் கருதிவிடுகிறார். வந்தது ஆபத்து! அவனே தன் தமையனாரின் மகளைக் கெடுத்தவன் என்று தீர்மானித்து, அவனை வேலையை விட்டு நீக்கியதோடு திருப்தி கொள்ளாமல், அவனை ஆள் வைத்துக் கொன்று உலகத்தை விட்டே நீக்கிவிடுகிறார்!

அகல்யாவைக் கெடுத்தவனோ இந்திரன்! ஆனால், ஆள் மாறாட்டம் உம்மைப் பழவினையின் உருவத்தில் வந்து சிரிக்கிறது.

பாலும் சரி, பாவையும் சரி, கெட்டு விட்டால் பயனில்லை.

என்று சமுதாயத் தத்துவம் சமையற்காரன் மூலம் அவள் காதுகளில் ஒலிக்கிறது! உடனே, அவளது கண்கள் திறக்கின்றன!

எளிய முறையிலே அவளைச் சாகடித்து விட்டீர்கள்! எழுத்தாளர்களின் தலைவலியை மிக எளிதில் போக்கவல்லது ஆயிற்றே ஆழி? செத்துத்தான் சமூகத்தின் அனுதாபத்தைப் பெற வேண்டுமானால், அந்தப் பாழும் அனுதாபம் எனக்கு வேண்டவே வேண்டாம்! என்று வீரம் பொழிந்த அகல்யவை நீங்கள் ஏன் அவ்வளவு துரிதப்பட்டுக் கொன்று போட்டீர்கள்? உங்களுக்குக்கூட அவள்பால் இரக்கம் பிறக்கவில்லையா?

நான் உன்னைக் காதலிக்காமல் கொல்லுவதைவிட காதலித்தே கொன்று விடலாமென்று நினைக்கிறேன்.

என்று உங்கள் கனகலிங்கத்தைப் பேச வைத்தீர்களே. அதன் நிமித்தம்தான் அவளுக்கு வாழ்விலிருந்து விடை கொடுத்தீர்களா?

அநத விடையிலே, சமூகப் பிரச்சனைக்கு விடை கிடைக்கவில்லை; விடைதான் கிடைத்திருக்கிறது.

என் ஆழ்ந்த அனுதாபங்கள் அகல்யாவுக்கு உரியனவாகுக! ஏன், தெரியுமா? அவள் செத்துப் போனாளே என்பதற்காகவா? - அன்று, அருமை மிகுந்த இந்தத் தமிழ் மண்ணில் அவள் பிறந்தாளே என்பதற்காக!

ஒரு காலத்தில் சொர்க்கத்திற்கு இருந்த மதிப்பு காதலுக்கு இருக்கிறது. இரண்டும் கற்பனையே என்றாலும், காதலைக் கைவிட நம்மால் முடிவதில்லை!

அமிர்தம் என்ற என்னுடைய சிறுகதைத் தொகுப்பிற்குத் தாங்கள் அருளிய முன்னுரையின் இடையிலே தலைகாட்டும் வாசகம் இது.

காதலை எழிற் கனவுக்கு நான் அடிக்கடி ஒப்பிட்டுப் பார்ப்பது வழக்கம். நம் இருவருடைய காதல் விளக்கங்களும் ஏறக்குறைய ஒரே குரலில்தான் ஒலிகாட்ட, ஒலி கூட்ட முடியும். சொர்க்கத்திற்கு கனவுக்கும் நடுவில் அகப்பட்ட அகல்யா, இந்திரனிடம் அகப்பட்டு ஏமாந்து, அப்பால், கனகலிங்கத்தினிடம் அகப்பட்டு அனுதாபப் பொருளாகிறான்!

இந்த அனுதாபமே கதைக்குக் கருப்பிண்டம் என்பது என் எண்ணம்.

இந்த அனுதாபம்தான் கதையின் பிரதானப் பாத்திரம்! அனுதாபத்தின் இருவேறு கிளைகள் தாம் அகல்யாவும் கனகலிங்கமும்!

அகல்யாவின் துயரக் கதையைக் கேட்டு வருந்தும் கனகலிங்கம், அவள் பேரில் அனுதாபம் கொண்டு, அதன் விளைபயனாக நம்முடைய அனுதாபத்தையும் சுவீகரித்துக் கொள்ள முயன்றான். அவன், உத்தமன்!

கற்பனை மெருகிழந்த தன் துயரப் பெருங்கதையைச் சொன்ன அகல்யாவுக்கு வாழ ஆசை துடிக்கிறது. எனவே. கனகலிங்கத்தையே தன்னுடைய உயிர்ப்பிடிப்பாகப் பற்றக் கனவு காண்கிறாள்; அதுவே சொர்க்க மெனவும் மகிழ்கிறாள். சமுதாயத்தின் அனுதாபத்தை அடைய வேண்டுமென்பதற்காகச் சாக விரும்பாத

அவள், தசரதகுமாரனாலும் கைவிடப்பட்டு நடுத்தெருவிலே நிற்கும் நிலையில், அடக்கடவுளே! பாலும் பாவையும் ஒன்றென்று எண்ணியா நீ என்னைப் படைத்தாய்?

என்று நெட்டுயிர்க்கின்றாள்.

அடுத்தகணம், யார் இடம்அளிக்காவிட்டமாலும், இந்த உலகத்தைவிட இரண்டு பங்கு பெரிதான கடல்கூடவா நமக்கு இடமளிக்காது? என்ற ஞானம் அவள் உள்ளத்தில் பளிச்சிடுகிறது. ஒரு முறை இந்திரனுடைய அன்புக்குப் பத்திரமான அகல்யா, இப்போது கடலின் அன்புக்கும் பாத்திரமாகி விடுகிறாள்!

கதை மிகச் சிறிது; ஆனால், உலகமோ மிகப் பெரிது. அதனால்தான் இந்தப் பரந்த உலகிலே இந்தச் சின்னக் கதை பலருடைய நினைவுப் பொருளாக இன்னமும் காட்சி கொடுத்துக் கொண்டு வருகிறது. நன்றாக நடந்து வந்த ஒருத்தி வழுக்கி விழுந்துவிடுகிறாள்.

இந்திரன் நல்லவன் அல்லன் என்றாலும், கெட்டிக்காரன். ஊரைச் சுற்றுவதற்கு உதவும் லைசென்ஸாகவும் பர்மிட்டாகவும் தரிசனம் தர அவளது கழுத்தில் தாலியைக் கட்டினான். குறிக்கோளை முடித்துக் கொண்டான். ஆனால் அப்போது தடம் புரண்ட குறிக்கோளுடன் அபலை ஒருத்தி தவிப்பதைப் பற்றி அவனால் கவலைப்பட முடியவில்லை. அவனுக்குத் திருமணம் நடைபெறுகிறது. அவனுடைய அவளுக்காக இரங்குகிறாள் அகல்யா.

கனகலிங்கத்தின் உதவி ஒத்தாசைக்கும் சோதனை வந்தவுடன், குறுக்கிட்டு நின்ற பழைய தசரத குமாரன் அவளுக்கு அடைக்கலம் தருவதாகக் கையடித்துச் சொல்லுகிறான். கடைசியில், சமையற்காரன் ஒருவன் பாலையும் பாவையையும் ஒன்றாக்கி உவமை பேசப் போக, அவள் அக்கணமே கைவிடப்பட்டுக் கடலிடைச் சங்கமம் ஆகின்றாள்! இதுதான் கதை! அல்லவா?

உங்களை ஒரு கேள்வி கேட்கப் போகிறேன். அகல்யா கனகலிங்கம் ஆகிய இவ்விருவரில், உங்கள் மனத்தை நிறைக்கும் உருவம் யாருடையது?

என்ன, யோசிக்கிறீர்களே?

*இவ்விருவரையும் மேலே அனுப்பி விட்டதன் மூலம், உங்களுடைய அனுதாபத்துக்கு இவர்கள் இருவரும் இலக்காகவில்லையென்று ஏன் கருதமுடியாது? - நான் அப்படித்தான் கருதுகிறேன்!...*

*மனித மனம் சலனம் நிறைந்தது; சபலம் நிரம்பியது. காதல் என்னும் போர்வை மூலமாகத் திரிந்த அகல்யாகவுக்குக் காமமே மிஞ்சியிருந்திருக்க வேண்டும்! கெட்டவள் என்று தெரிந்தும், தன் இடத்தில் தங்கப் புகலளித்து, பிறகு, நெஞ்சிலும் இடம் கொடுக்க எண்ணியிருந்த கனகலிங்கத்தின் எதிர்பாராத மரணத்தின் சூழ்ச்சியைப் பற்றி ஏற்கெனவே ஊகித்ததாக எண்ணும் அவள் முன்கூட்டியே அந்த விபத்தைத் தடுத்திருக்கக் கூடுமே?*

*நான் அப்பொழுதே நினைத்தேன்; நீங்கள் தான் அந்தக் கொலைகாரனை அனுப்பியிருப்பீர்களென்று! நீங்கள் நாசமாய்ப் போக!*

*என்று நாகரிகமான சாபம் கொடுத்ததுடன் அவள் கனகலிங்கத்தின் உயிரின் மீதும் உள்ளத்தின் மேலும் வைத்த காதலின் கதை சுபம் பெற்றுவிடுகிறதா?*

*இதயம் பெற்றிருந்தவனை இழந்த கோலம் மாறுவதற்குள்ளாகவே, அவள் தசரத குமாரனைப் பின்தொடர வேண்டியவள் ஆகிறாளே? அகல்யாவிடம் நமக்குக் கனிவும் பச்சாதாபம், பரிவு, பாசம் போன்ற சகல உணர்ச்சிகளும் இந்த இடத்தில்தான் நம்மைவிட்டுப் பிரிகின்றன. பிரிந்து, அகல்யாவின் கழலடிகளில் தஞ்சம் புகுகின்றனவா? அன்று! கடலில் குதித்துத் தற்கொலை செய்து கொள்ளுகின்றன!*

*வாழ்வுக்கு உதவி கேட்ட இந்தக் காதல் பைத்தியம் பெண்களின் பெயரால் வற்புறுத்தப்படும் கற்பின் பெயரால் சாக விரும்பாதவளென நீங்கள் வரம்பு வகுத்து, இறுதியில் தெய்வத்துக்குப் பதிலாக நீங்களே சூத்திரதாரியாக ஆக்ட் பண்ணி அவளைக் கொன்றிருக்கிறீர்கள்! பாவம், அகல்யா...! பாவமே அகல்யா!...*

*'எல்லாவற்றையும் வேடிக்கையாகக் கருதுவதால்தான் என்னால் உயிர்வாழ முடிகிறது'*

*என்கிறான் கனகலிங்கம். காதலினால் சாண் வயிற்றைத் திருப்திப்படுத்த முடியாதென்று இந்திரனால் பாடம் படித்துக்*

கொடுக்கப்பட்ட அகல்யாவின் கதையைக் கேட்ட பிறகே, அவன் இவ்வாறு சொல்கிறான். நெருங்கி வந்தவளிடமிருந்து விலகும் கனகலிங்கம்,

'வேண்டாம்! பசி தீர்ந்துவிட்டால், நானும் இந்திரனைப்போல் ஓட்டம் பிடித்தாலும் பிடித்துவிடுவேன்!'

என்றும் அறிவிக்கிறான். அவள் ஒட்டி ஒட்டி வரும் போது, அவனோ எட்டி எட்டிப் போகிறான். சிறு சலசலப்பு. ஐயோ, பாவம்! உலகம் தெரியாத அபலை அவள்! காதல் உண்மையென்று நம்பினாள். அந்தக் காதலுக்காகத் தன்னை ஒருவனுக்கு அர்ப்பணித்தாள். அவன் அவளைக் கைவிட்டான். அதற்காக அவள் செத்துப்போக விரும்பவில்லை, வாழ விரும்புகிறாள். ஆண்களுக்கு மட்டும் அந்த உரிமையை அளிக்கும் சமூகம் பெண்களுக்கு மட்டும் அந்த உரிமையை அளிக்க மறுக்கிறது! இது அக்கிரமந்தானே? என்ற கணநேர மௌனச் சிந்தனை அவனது தயாள சிந்தையின் கதவுகளைத் திறந்துவிடுகிறது.

அகல்யா, அகல்யா! நான் உன்னுடைய மனத்தைப் புண்படுத்திவிட்டேனா, என்ன? சொல்லு! அகல்யா, சொல்லு! என்று அவன் குழைகிறான். இந்நிலை, சலனத்தின் விளைவா? அன்பு பண்பின் பணியா?

சமுதாய வீதியிலே, தடம் புரண்டவள் அகல்யா! ஆனாலும், அவள் இதயத்தை அடியோடு இழந்துவிடவில்லை.

'ஆம்; அன்று நீங்கள்தான் என்னைக் காதலித்துக் கொள்வதாகச் சொன்னீர்கள். ஆனால் இன்றே, நான் உங்களைக் காதலித்துக் கொன்றுவிட்டேன்!'

என்று அவள் தன்னுள் சொல்லிக் கொள்ளும்போது, அவள் என் இதயத்தைத் தொட்டுவிட்டாள்.

ஆனால்...?

'ஐயோ! ஆண்களுக்கு ஒரு நீதி, பெண்களுக்கு இன்னொரு நீதியா? இந்த அக்கிரமத்துக்கு இன்னும் என்னைப்போல் எத்தனைப் பெண்கள் பலியாக வேண்டும்? உங்களுடைய இதயத்தில் ஈரம் இல்லையா? அந்த ஈரமற்ற இதயத்தை

*எங்களுடைய கண்ணீராவது நனைக்கவில்லையா? - சீர்திருத்தம், சீர்திருத்தம் என்று வாய் ஓயாமல் அடித்துக் கொள்ளும் இளைஞர் உலகம் இந்தக் கொடுமையை இன்னும் எத்தனை நாட்களுக்குச் சகித்துக் கொண்டிருக்கப் போகிறது?'*

*உச்சக் கட்டத்தில், பகுத்தறிவுப் பாணியில் அவள் பேசும் செயற்கைத் தன்மையுடைய இந்த வசனம், அவள் நெஞ்சறிந்து ஏற்றுக் கொண்ட பழியைத் துடைக்கவல்லதா? ஊஹூம்!*

*கெட்டவளுக்கு அடைக்கலம் கொடுப்பதன் மூலமே ஒருவன் நல்லவன் ஆகிறான்! இது அண்ணலின் கருத்து. இந்நிலையிலே, கனகலிங்கத்தை நீங்கள் ஏன் அதற்குள் சாகடித்தீர்கள்? நுண்ணிய கட்புலம் அமைத்து எண்ணிப் பார்க்குங்கால், கனகலிங்கம் ஒரு மின்னலெனவே தோன்றி மறைகிறான்.*

*இறந்தும் உயிர்வாழும் பாத்திரப் படைப்பாக ஆக்கவா கனகலிங்கத்தை நீங்கள் இவ்வாறு ஆக்கியிருக்கிறீர்கள்?*

*நல்லவர்கள் வாழ்வதில்லை - நானிலத்தின் தீர்ப்பு! என்ற வாசகத்தை மெய்யாக்க வேண்டிய நீங்கள் இவ்விருவருக்கும் விண்ணுலக யாத்திரைக்கு டிக்கெட் வாங்கிக் கொடுத்திருக்க வேண்டும்! அதனால்தான், முடிவுகூட முன்னைய இலக்கிய மரபை ஒட்டிப் பழமைப் பாணியிலேயே அமைந்து சப்பென்று போய்விட்டது!*

*உங்கள் கொள்கைகளுக்கு உகந்த ரீதியில் பாத்திரங்களை உருவாக்கி, அவர்கள் வாய்வழியே சமுதாயச் சிக்கல்களை அலசிப்பார்க்க முயன்ற நீங்கள், முடிவில் அகல்யாவின் இறந்த காலத்துக்கும் எதிர் காலத்துக்கும் ஊடாக சிக்கலைத் தீர்த்து வைக்கும் வகையில் உங்கள் பணியை ஏற்று, அகல்யாவின் எஞ்சிய வழ்வைக் கனலிங்கத்தின் அன்புக்கரங்களில் ஒப்படைத்திருக்கும் பட்சத்தில், இவ்விருவரது குணச்சித்திர அமைப்புகளும் முழுமையடைந்திருக்கக்கூடும்! நீதி தேவனின் மயக்கம் தெளிந்து, நீதியுள்ள சமுதாயச் சித்திரம் உருவாகியிருக்கும்!*

*பெண் குலத்தைத் தூய்மைப்படுத்துவதற்காகவே நீங்கள் இதை எழுதியதாக வாதம்புரியும் உங்கள் பேச்சிலும் தர்க்க ரீதியான*

நியாயம் இருந்திருக்கும்! அன்புப் புரட்சியின் உண்மைக் குரலையும், வீரம் செறிந்த காதல் தத்துவத்தின் மனக்கனவையும் நான் உய்த்துணர்ந்து அனுபவிக்கவும் முடிந்திருக்கும்! சமுதாய நீதியையும், (Social Justice), சமுதாய சீர்திருத்தத்தையும் (Social Reform), படிப்பினைத் தீர்ப்பையும் (Moral Judgement) வழங்கிய பெருமை உங்களை வந்தணைந்திருக்கும்!

வாழ்க்கைக்கு உரித்தான பொருளுக்கு ஓர் உரைகல்லாக அகல்யாவும் கனகலிங்கமும் அமைந்திருப்பதாக நீங்கள் திருப்திப்படுவீர்களானால், அகல்யா- கனகலிங்கத்தின் கதை அரைகுறைக் கதைதான்! ஆமாம், அரைகுறைக் கதையேதான்!

காரணம் இதுதான் : அவர்களின் கனவு நிறைவு பெறாமல் நிற்பதைப் போலவே, உங்களுடைய அருமையான கதையும் நிறைவு பெறாமல் நிற்கிறது!

அகல்யாவும் கனகலிங்கமும் பாத்திர அமைப்பின் பண்பிழந்த பாத்திரங்களாகவே (Characterless Characters) அரைகுறைப் பிண்டங்களாகவே தரிசனம் தருகிறார்கள்!

பாலும் பாவையும் கதையில் உங்களுடைய கிண்டல் பாவமும், நம்பிக்கை வறட்சியும் தோய்ந்த எழுத்து நடையை நான் மனம் பிணைத்து அனுபவித்தேன்.

சமுதாயத்தின், யார்த்தமான சித்திரம்,

பொருளாதார ஏற்றத் தாழ்வுகள்,

கடவுளின் பெயரால் செய்யப்பெறும் மோசடிகள்,

இலக்கியக் கலையுலகின் நடைமுறைப் போக்கு

இப்படிப்பட்ட சூழல்களிலே உங்கள் பேனா சுழலும்போது உங்கள் தனித்தன்மையைப் புரிந்து கொள்கிறேன். ஆனால் உங்களுக்கே உரித்தான குறிக்கோள் தன்மையை (ideal Self) இந்த நெடுங்கதையில் இனம் காண இயலாமற் போய்விட்டது!

இன்னும் ஒரு பிழை :

அகல்யாவிலிருந்து சமையற்காரன்வரை எல்லோருக்குமே நீங்கள் இரவல் குரல் கொடுத்திருக்கிறீர்களே, ஏன்?

*உங்கள் நோக்கு புதிது; போக்கு, பழசு!*

*உங்கள் கரு அற்புதம்; உரு குறைப்பிரசவம்!*

*ஆத்ம விசாரம் இருக்கும் அளவுக்கு*
*ஆத்ம விசாரணை இல்லையே...?*

*கதையிலே பிரச்னை - சமுதாயப் பிரச்னை இருக்கிறது; அப்பிரச்சினைக்கு உரிய தீர்வு சமுதாயரீதியாக அமையவில்லையே? இன்னொன்றையும் நான் சுட்டிச் சொல்லத்தான் வேண்டும்! - உங்கள் கதையில் இடம்பெறும் அந்தப் பிரச்னை கூட, ரொம்பவும் புதியதென்றும் என்னால் அங்கீகரிக்கவோ, பிரகடனப்படுத்தவோ இயலவில்லைதான்!*

*வையம் பேதைமையற்றுத் திகழ வேண்டுமென்று எதிர்பார்த்து பெண்களின் அறிவை வளர்க்க இக்கதையை ஒரு கருவியகப் பயன்படுத்த நினைத்து நீங்கள் இவ்வளவு பக்கங்களை எழுதியிருக்கிறீர்களென்றே வைத்துக் கொள்வோம்!*

*நம் தமிழ்ச் சமுதாயம் இப்படித்தான் அமைந்து இருக்கிறதென்பதை நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், நம் சமூகம் இப்படி இப்படி அமைந்தால்தான், இத்தகைய தவறுகளிலிருந்து அகல்யாவைப் போன்ற அபலைகள், தமிழ் அபலைகள் நல்ல விடிவு கண்டு வாழ வழி பெறுவார்கள் என்ற ஓர் ஊகத்துக்குரிய தார்மீக அடிப்படையையாவது நீங்கள் கோடி காட்டியிருக்க வேண்டாமா?*

*நீங்கள் சமுதாயத்திற்கு - நம் அருமைத் தமிழ்ச் சமுதாயத்திற்கு ஒரு நல்ல வழிகாட்டியாகவும் ஆகியிருக்க வேண்டும் அல்லவா?*

*விந்தன் என்ற பெயரைக் குறிப்பிடும்போது, ஓ! பாலும் பாவையும் விந்தனா? என்று இன்றும் நண்பர்கள் பலர் கேட்பதை நான் கேட்டிருக்கிறேன். அதனால்தான். நான் காணும் பாலும் பாவையும் விந்தன் அவர்களை அந்த நண்பர்களுக்கு இக்கடிதத்தின் வழியே அறிமுகம் செய்ய வேண்டியவன் ஆனேன்!*

உமா - 1957

# 20

# எனக்குப் பிடித்த புத்தகம்
# பாலும் பாவையும்

**- கலைப்பித்தன்**

*சுவையான புத்தகம் எப்படி இருக்க வேண்டும்? எழுதுகோல் கண்ணீர் வடிக்கும்போது புத்தகம் சிரிக்கிறது என்றர் அத்தார் என்பவர்.*

*எந்தப் புத்தகம் ஆக்கியோரின் இரத்தத்தால் ஆக்கப்பட்டிருக்கிறதோ அந்தப் புத்தகமே எனக்கு விருப்பம் என்றார் ஜெர்மன் தத்துவ ஞானி நீட்சே*

*சிந்தனையைக் கிளறும் சிறப்பு மிகும் கருத்துக்களை விந்தை மனிதர் விந்தன் அவர்கள் எழுதிய பாலும் பாவையில் பார்க்கிறோம். நவீனத்தின் கரு இதோ.*

*கனகலிங்கம் என்ற இளைஞன் சென்னையில் ஒரு புத்தகக் கடையில் பரமசிவம் என்பவரிடம் முப்பது ரூபாய் சம்பளத்தில் வேலை பார்க்கிறான். கலைஞான புரத்தில் நடக்கும் அகஸ்தியர் விழாவிற்குப் புத்தகங்களை விற்று வருமாறு கனகலிங்கத்தை அனுப்புகிறார் பரமசிவம்.*

*அங்கு அவன் நள விலாஸ் என்ற உணவு விடுதியில் தங்கியிருக்கிறான். அப்போது அதே நளவிலாஸில் தங்கியுள்ள அகல்யா என்ற கல்லூரி மாணவியைச் சந்திக்கிறான். அவளோ இந்திரன் என்பவனை நம்பி ஓடி வந்து அவனால் கைவிடப்பட்டவள் என்பதை அறிகிறான்.*

*விழா முடிந்து கனகலிங்கம் அகல்யாவோடு சென்னைக்குத் திரும்புகிறான். கனகலிங்கம் அகல்யாவுடன் வந்ததைப் பரமசிவமும் பார்த்துவிடுகிறார். கனகலிங்கத்தை வேலையிலிருந்து நீக்கிவிடுகிறார். ஏன்? அகல்யாவின் சித்தப்பா தான் பரமசிவம்.*

கனகலிங்கம் கார் விபத்தில் இறந்துவிடுகிறான்; அகல்யா தன் பெற்றோர் தங்கியிருக்கும் இடத்தைத் தன் சினேகிதி வாயிலாக அறிந்து அவர்களைப் பார்க்கச் செல்கிறாள். அங்கு அவள் சித்தப்பா பரமசிவம் ஒரு காரோட்டிக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்து கனகலிங்கத்தைச் கொல்லச் சொன்னதாக அவளது அப்பாவிடம் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டுவிடுகிறாள். வழியில் அவளுக்குத் தெரிந்த தசரத குமாரன் அவளுக்கு வாழ்வளிப்பதாக அழைத்துச் சென்று அவளை விரட்டிவிடுகிறான். அகல்யா கடலோடு சங்கமமாகி விடுகிறாள்.

விந்தனது எழுத்துக்கள் சிந்தனை ஊசிகளாக மாறி கருத்தை ஆழமாகத் தைக்கின்றன. புத்தகக் கடையில் இருக்கும் கனகலிங்கத்திடம் அதோ ஓர் எழுத்தளர் வருகிறார். அவர்கள் உரையாடலைக் கேட்போம் :

'. ...உங்களுக்கு என்ன வேண்டும்!' என்று விசாரித்தான் கனகலிங்கம்.

'என்றும் சாகாத நூல் ஒன்று, இயற்றியிருக்கிறேன்; அதைப் புத்தகமாக வெளியிட வேண்டும்.'

வந்தவர் தாம் சொல்ல வந்ததை முடிக்கு முன்பே, 'அதிருக்கட்டும், ஆசிரியர் செத்து விட்டாரா? இல்லையா?' என்று கேட்டான் கனகலிங்கம்.

வந்தவருக்குத் தூக்கிவாரிப் போட்டது. 'ஏன்?' என்று நாக்குழறக் கேட்டார்.

'இங்கே செத்துப் போன நூலாசிரியர்களின் நூல்களைத்தான் வெளியிடுவது வழக்கம்.'

'அப்பொழுதுதான் அந்த நூலுக்கு ஒரு தனி மகத்துவம் இருக்குமென்றா?'

'அதெல்லாம் ஒன்றுமில்லை; எங்களுக்கு வேண்டியது எங்களிடம் இல்லாத மூளை! அதைத் தவிர வேறொன்றும் செலவழிக்காத ஆசிரியருக்கு நாங்கள் அனாவசியமாகப் பணம் கொடுக்க விரும்புவதில்லை'

*'அப்படியானால் நீங்கள் செத்துப் போனவனிடமிருந்தா காகிதம் வாங்குகிறீர்கள்?' என்று ஆசிரியர் எரிச்சலுடன் கேட்டார்.*

*'கொடுக்கத் தயாராகயிருந்தால் வாங்கத் தயாராயிருக்கிறோம்' - என்றான் கனகலிங்கம் அமைதியாக.*

*'ரொம்ப சரி, உங்களுக்கு என்னுடைய நூல் கிடைக்காது. அஸ்திதான் கிடைக்கும்?' - என்று சொல்லிவிட்டு எழுத்தாளர் துப்பாக்கியிலிருந்து கிளம்பிய ரவையைப் போலக் கிளம்பினார்.*

*'முடிந்தால் அதையும் பணமாக்குவோம்!' என்றான் கனகலிங்கம்.*

*அப்பொழுது வந்த கடை முதலாளி பரமசிவம் சொல்கிறார். 'ஏண்டா, உனக்கு நான் எத்தனை தரம் சொல்வது? நம்முடைய பாலிஸியை இப்படியா வருவோர் போவோரிடமெல்லாம் சொல்லிக் கொண்டிருப்பது....'*

*'எங்கேயாவது கெட்ட பால் நல்ல பாலாகுமா ஸார்? எடுத்துச் சாக்கடையில் ஊற்ற வேண்டியது தானே! - என்கிறான் தசரதகுமரனது சமையற்காரன். இதைக் கேட்ட தசரதகுமாரன், அகல்யாவும் கெட்டுப் போனவள்தானே என்று எண்ணி, அவளை வெளியே விட்டுக் கதவைச் சாத்திக் கொள்கிறான்.*

*இதைப் புரிந்து கொண்ட அகல்யா, 'அட கடவுளே! பாலும் பாவையும் ஒன்றென்று எண்ணியா என்னை நீ படைத்தாய்?' என்று நெட்டுயிர்த்தாள்.*

*நல்லவர்கள் வாழ்வதில்லை நானிலத்தின் தீர்ப்பு என்று கதையை முடிக்கிறார் விந்தன். நம் கண்களிலிருந்து கண்ணீர் வடிகிறது.*

*உண்மைக் காதலின் தத்துவத்தை விளக்குவது பாலும் பாவையும். அது கடுகு உள்ளங்கொண்டவர்களைச் சாடுகிறது. குத்தித் தைத்து இரணமாக்கும் ஈட்டி முனை அது. ஆம் ஜெர்மன் கவி சொன்னதுபோல் பாலும் பாவையும் விந்தனது இரத்தத்தால் ஆன நூல்தான்.*

ஆனந்தவிகடன் - 1961

21

# விந்தனின் பசிகோவிந்தம்

**- விடுதலை கி. வீரமணி**

*அந்தக் காலத்து முடியாட்சி இருந்தால் அது வேறு விஷயம். மன்னனை வசப்படுத்திக் கொண்டு, வர்ணாசிரம கர்மத்தை தர்மம் என்று சொல்லிக் கொண்டு, 'படித்தால் நாக்கை அறுத்து விடுவேன்; மூக்கை நறுக்கி விடுவேன்!'*

*என்று உன்னைப் பயமுறுத்தலாம். இப்போது அப்படி பயமுறுத்த முடியாது. அதனால்தான் சொல்வதைக் கொஞ்சம் நாசூக்காகச் சொல்லியிருக்கிறார், ஆசான்! அவருடைய பல்லக்கைச் சுமக்கும் உனக்கு ஏன் படிப்பு?*

*அட மூடா! படிக்காதே; படித்தால் அவருடைய பல்லக்கைச் சுமக்க நீ மறுத்துவிடுவாய்! எதையும் பகுத்தறிந்து பேச ஆரம்பித்து விடுவாய்! உனக்காக சாக வழி காட்டும் ஆசான் இல்லை. சொர்க்கத்துக்குச் செல்ல வழிகாட்டும் ஆசான் நடக்க முடியுமா?*

*என்னை ஆக்கும் பகவான், என்னை அழிக்கும் பகவான் உங்களைக் காப்பதுபோல் என்னையும் ஏன் காக்கவில்லை? என்று நீ கேட்டால் அவரால் பதில் சொல்ல முடியுமா?*

*- இப்படி ஆத்திகபுரியில் அறிவுக்கணை என்ற குண்டுகளைப் போட்டார் புரட்சி எழுத்தாளர் நண்பர் விந்தன் அவர்கள்!*

*பசி கோவிந்தம்*

*என்ற அவரது நூல் பஜகோவிந்தப் பண்டிதர்களின் பராக்குகளைச் சுக்கல் சுக்கலாக உடைத்தெறிந்த அறிவுக் கருவியாகும்!*

**சரணம் சரணம் சரணம்**
**பசியே பக்தி சரணம்!**

..........................

**சரணம் சரணம் சரணம்**
**முக்தியே மரணம் மரணம்!**

*என்று முடித்த 30 எழுத்து வீச்சுகளும் அறிவின் வீச்சுச் சுடர் ஆகும்!*

*சாதாரண அச்சுக் கோக்கும் தொழிலாளியாக அவர் வாழ்க்கைத் துவங்கிய நிலை புதிய உலகத்திற்கான வார்ப்படங்களை உருவாக்கும் சம்மட்டியாக, உலைக்களமாக அவரது எழுத்தாற்றல் அமைந்தது என்றால் அது எவ்வளவு வியப்புரிக்குரிய சாதனை!*

*புதுக்கோட்டை பொன்னியில் - கண் திறக்குமா? -நக்கீரன் என்ற புனை பெயரில் அவர் எழுதியபோதே அவரைப் பார்க்காமலே ஒரு பாசம், பற்று, மரியாதை எல்லாம் எனக்குண்டு!*

*கூலிக்கு எழுத்தை விற்று, ஜாலிக்குத்தான் வாழ்க்கையே என்ற முடை நாற்ற எழுத்தாளர்கள் மொய்க்கும் இந்தப் புரையோடிய சமூகத்தில் விந்தனைப் போன்ற லட்சிய எழுத்தாளர்கள் தனித்தன்மை கொண்டு காரிருள் நீக்கிய கதிரொளி ஆவர்! வளர்க அவர் புகழ்.*

1982

# விந்தன் சிறுகதைகள்

- சா. கந்தசாமி

விந்தன் சமூகத்தின் பொருளாதார நிலையில் மிகவும் பிற்பட்டிருக்கும் மககளைப் பற்றித் தார்மீக நோக்கில் எழுதியவர். ஆனால் சீர்திருத்தம் முற்போக்கு என்று எந்தக் கட்சியின் சித்தாந்தத்தோடும் தன் எழுத்தை இணைத்துக் கொள்ளாதவர்.

கசிந்துருகவும் - கண்ணீர் சிந்துதலுமின்றி ஏழ்மையை ஏழ்மையாக - அப்பாவித் தனத்தை அப்பாவித்தனமாக - கொடூரத்தைக் கொடூரமாகக் கொஞ்சம் அழுத்திச் சொன்னவர் இவர்.

ஏழைகள் எல்லோரும் நல்லவர்களாகவும், பணமில்லாதவர்கள் எல்லோரும் அப்பாவிகளாகவும், நீதிக்கும் நேர்மைக்கும் அதி முக்கியத்துவம் கொடுக்கிறவர்களாகவும். அதனால் வாழ்க்கையை இன்னும் ஏழ்மையிலும் - துன்பத்திலும் ஆழ்த்திக் கொள்கிறவர்களும் - பணக்காரர்கள் எல்லோரும் கொடுமைக்காரர்களாகவும் ஏழைகளை சுலபமாக ஏமாற்றி, தம்மை வளம்படுத்திக் கொண்டவர்களாவும் - வாழ்க்கையைப் பிரித்துக் காண்பது விந்தனின் தத்துவமாகிவிடுவதால் - கதைகள் பலவீனமடைந்து விடுகின்றன. இயற்கையை இழந்து விடுகின்றன.

உண்மையானதும் இயல்பானதுமான வாழ்வு அகல - பொய்யானதும் - செயற்கையானதுமான ஒரு வாழ்க்கை கதையாகிறது. இதனால் வாழ்வின் பல்வேறு வீச்சுக்களையும் காண முடியாமல் போய் விடுகிறது. அது மட்டுமல்ல, ஒரு கதை மாதிரியே இன்னொரு கதை அமைந்து விடுகிறது. அதைத் தொடர்ந்து மற்றொன்று.... ஒரே ஐடியா பல்வேறு படங்களில் வேறு பட்ட மனிதர்களின் மீது ஏற்றி

வைக்கப்படுகிறது இங்கு முக்கிய மல்ல; பேச்சும் நடை முறையும் முக்கியமல்ல.

அவன் உணர்வதும், உணர்ந்து அதை வெளிக்காட்டிக் கொள்ளும் விதமும் முக்கியமல்ல, ஐடியா தான் முக்கியம். அதை ஊதிப் பெருக்க வைப்பதுதான் முக்கியம். இப்படி ஊதி ஊதிப் பெருக்க வைக்கையில் கதை என்பதும் நழுவ, ஐடியாவே மிஞ்சுகிறது.

இன்று பிரதான பிரச்சினையாக இருக்கும் கருத்து நாளை தன் பிரதானத்தை இழக்கையில், எல்லாம் பின்னுக்குப் போய் விடுகிறது. சரித்திரம் ஒவ்வொரு கணமும் சொல்லித் தரும் பாடம் இது.

ஆனாலும், ஒவ்வொரு தலைமுறையிலும் - ஒவ்வொரு மொழியிலும் ஐடியா எழுத்தாளர்கள் தோன்றிக் கொண்டுதான் இருக்கின்றார்கள்; இவர்கள் எழுத்துக்கு வரவேற்பும் பாராட்டும் இருந்து கொண்டுதான் இருக்கின்றது.

ராஜாஜி - பழமையைப் போற்றி நீதியை உணர்த்தும் ஐடியா எழுத்தாளர்; நல்லது சோதனைக்கு உள்ளாகும், கடைசியிலே வெல்லும் என்னும் இலட்சிய வாதத்தில் நம்பிக்கை உள்ளவர். இந்த இலட்சியத்தை நிலை நாட்டக் கஷ்டப்பட்டுக் கதைகள் எழுதிக் கொண்டு இருந்தவர். இவர் தான் அகாடமிகளால் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் எழுத்தாளர்.

ராஜாஜி போன்றவர்களின் ஐடியாவுக்கு முற்றிலும் மாறாக எழுதும் விந்தன் போன்றவர்களுக்கு அங்கீகாரம் ஏதும் இல்லை. ஆனாலும் - இவர்கள் மக்களின் நம்பிக்கைக்கு உகந்தவர்களாக இருந்து வருகிறார்கள்.

ஒரு கதை, வசதியும் வசதியின்மையும் நிறைந்த ஒரு குடும்பத்துச் சிறுவர்களின் மூலந் தொடங்கி - சோகத்திலும் ஆசாபங்கத்திலும் எரிச்சலிலும் முடியும் கதை.

குழந்தைகளின் குதூகலம். வாழ்வின் அதல பாதாளத்திற்குத் தகப்பன் செல்லுகையில், தன்னுடைய வேட்கை நிறைவேறி விடும் என்ற கற்பனையில் அமிழ்ந்து போகும் சிறுவனின் நோக்கில் சொல்லப்படும் கதை.

ஆனால் கதை, போகப் போக சிறுவன் நோக்கில் அகன்று முதலாளி என்னும் அம்சம் கதையைப் பிடித்துக் கொள்கிறது. முதல்

இழை அறுந்து போக தத்துவச் சரட்டில் வழக்கமான கதையாகக் கதை தொடங்குகிறது. சமூக விமர்சனமாக முடிவடைகிறது.

மணி சினிமா, பீச், ஹோட்டல் - ஒன்றையும் காணாதவன். ஆனால் அவன் நண்பன் தகப்பனாரோடு ஒரே நாளில் வரிசையாக சினிமா பார்த்துவிட்டு, பீச்சுக்குப் போய் காற்று வாங்கி விட்டு, ஆடும் குதிரையோடு வந்து பெருமை அடித்துக் கொள்கிறான்.

மணிக்கு இவற்றையெல்லாம் காண வேண்டும், அனுபவிக்க வேண்டும் என்ற ஆசை வருகிறது. ஆனால் இவனோ தகப்பனையே காணாதவன். அம்மாவை 'அப்பா எங்கே' என்று கேட்டால், வேலைக்குப் போயிருக்கிறார் என்பாள் ஒரு சமயம். ஊருக்குப் போய் இருக்கிறார் என்பார் இன்னொரு சமயம். அப்பா இறந்து போயிட்டார் என்று இவன் தொந்தரவு தாங்காமல் சில சமயம் சொல்லுவாள்.

மணி அம்மாவை பீச்சுக்குக் கூட்டிக் கொண்டு போகச் சொன்னான். அவளோ பீச்சு இருக்கும் பக்கம்கூடத் தெரியாது என்று அழுதாள். இரவில் கணவனிடம் பிள்ளையின் கோரிக்கையைச் சொன்னாள். 'எனக்கு எங்க நேரம், காசு கிடைக்கிறது; இருக்கட்டும்' என்றான்.

விடியற்காலையில் அவர் வேலைக்குப் போய்விட்டார்; மணி விளையாடிக் கொண்டிருந்தான்.

அம்மா! பூச்சாண்டி வந்து என்னைப் பிடிச்சுக்கிட்டானே! என்று திடீரென்று கத்தினான்.

ஐயோ!. என்னடா, கண்ணு! என்று கதறிக் கொண்டே தாயார் வாசலுக்கு வந்தாள்.

முகத்தில் தாடியும் மீசையும் வளர்ந்து பார்ப்பதற்கு விகாரமாயிருந்த ஒரு தரித்திர உருவம் மணியை ஆசையுடன் கட்டிப்பிடித்துக் கொண்டிருந்தது.

மணியைப் போல் அவன் தாயாரும் அந்த உருவத்தைக் கண்டு பயந்துவிடவில்லை; முக மலர்ச்சியுடன், 'இதுதாண்டா. உன் அப்பா' என்றாள்.

'நிஜமாகவா, அம்மா! என் அப்பாவா, அம்மா!' என்றான் குழந்தை ஆச்சரியத்துடன்.

'ஆமாண்டா! ஆமாம்!' என்றாள் அவள் 'அப்படீன்னா. இனிமே நான் அப்பாவோட சினிமாவுக்குப் போவேன், ஹோட்டலுக்குப் போவேன், பீச்சுக்குப் கூடப் போவேன் என்று பொங்கி வந்த சந்தோஷத்தில் அடுக்கிக் கொண்டே போனான்.

மாணிக்கம் பிள்ளை அவனுடைய சந்தோஷத்தில் பங்கெடுத்துக் கொள்ளவில்லை. 'அந்தப் பாவிதான் எனக்கு வயசாயிடுச்சுன்னு என்னை வேலையிலிருந்து தள்ளிட்டானே!' என்றார்; இரண்டு சொட்டுக் கண்ணீரை உதிர்த்துக்கொண்டே.

'என்ன?' என்று திடுக்கிட்டுக் கேட்டாள் அவருடைய மனைவி.

'ஆமாண்டி, ஆமாம்!' என்றார் அவர் அலுப்புடன்.

'தயா விசயமா கொஞ்சம் நஞ்சம் பணம்கூடக் கொடுக்கலையா' என்று கேட்டாள்.

'அது கூடக் கேட்டுப் பார்த்தேனே! இத்தனை வருசமா உனக்கு நான் வேலை கொடுத்து ஆதரிச்சதற்கு நீ தாண்டா எனக்கு ஏதாச்சும் கொடுத்துட்டுப் போகணும் என்கிறானே!' என்கிறார்.

குழந்தைகளின் ஆசா பாசத்தோடு தொடங்கி, முதலாளி தொழிலாளியின் இளமையை மட்டும் சுரண்டவில்லை, அவனுடைய மகிழ்ச்சி - பிள்ளையின் குதூகலம் எல்லாவற்றையும் சுரண்டிக் கொண்டு சக்கையாகியதும் வீசியெறிகிறான் என்பதை அப்பாவித் தனத்தின் மீது ஏற்றி வைத்து, கதையாக்கி இருக்கிறார் விந்தன்.

இது விந்தனின் புத்திசாலிதனமான கதை. இந்தப் புத்திசாலித்தனத்தைத் தாங்க வலுவின்றி, கதை தொய்ந்துவிடுகிறது.

துயரத்தில் அமிழ்ந்துவிடாமல் வாழ்க்கையைக் கிண்டல் பண்ணுவது - எள்ளி நகையாடுவது விந்தன் கதைகளில் ஓர் முக்கிய அம்சம். இந்த அம்சம் பல கதைகளுக்குப் பலத்தைத் தருகிறது. அழகைத் தருகிறது. பிரச்சாரத் தன்மையைக் கொஞ்சம் குறைத்துக் காட்டுகிறது.

இம்மாதிரியான கதைகளுக்கு ஜனரஞ்சகமான பத்திரிகைகளில் இடம் கிடைப்பது அரிதுதான். ஆனால் விந்தன்

கதைகள் பலவும் கல்கி பத்திரிகையில் வெளியாகி ஏராளமானவாகளின் மன அமைதியைக் குலைத்தது.

நல்லது மட்டுமே வெல்லும எனபதல்ல - கெட்டதும் வெல்லும் - கடைசியில் நல்லவனும் துன்பததில் அமிழ்ந்து போக முடியும் என்ற தத்துவத்தைச் சொலலி வாசகர்களை எச்சரிததது

சரித்திர பூர்வமாகப் பார்க்கையில் விந்தன், தன் காலத்து எழுத்தாளர்கள் பலரின் தததுவச் சரட்டிலிருநது மாறுபட்டுக் காட்சி தரவே செய்கிறார்.

நான்கு பெண்களைப் பெற்ற ஒரு தகப்பனின் கதை. முதல் பெண்ணை மூன்றாநதாரமாக ஒரு முதியவனுக்குக் கொடுத்து அவள் அமங்கலியாக வந்துவிட்ட பின் - இரண்டாவது மகளை இரண்டாந்தாரமா ஒரு இருமல் வியாதிக் காரனுக்குக் கொடுத்த பின்னால் - மூன்றாவது பெண்ணையாவது வரதட்சணை இல்லாமல் நல்ல இடம் கிடைக்காதா என்று தவித்துக் கொண்டு இருக்கும்போது வழிப்போக்கனாக ஒரு தேசபக்தன் வருகிறான் சிறையிலிருந்து திரும்பி ஓர் இரவு தங்கிச் செல்லும் அவன் பின்னால் தேச பக்தி விலை போகாததும் விமானப் பணியில் சேர்நது விடுகிறான்.

ஜேம்ஸ் தாம்ஸன் இந்தக் குடுமபத்தோடு நட்போடு இருக்கிறான் ரங்கா என்ற இவரது மூன்றாவது பெண் மேரி ரோஸியாகி - கிறிஸ் முறைப்படி விவாகம் நடக்கிறது.

இந்த வைபவத்தைப் பற்றிக் கேள்விப்பட்ட எங்கள் உறவினர் யாவரும் என் மீது வசை மாறிப் பொலிந்து கொண்டே, நான் இறந்து விட்டதாகப் பலித்துப் புண்ணிய ஸ்நானம் செய்துவிட்டார்கள்.

ரொம்ப சரி; செத்தால் தலை முழுகத்தானே அவர்கள் இருக்கிறார்கள்? பின், உறவினர் எதற்கு?

பொருளாதார ஏற்றத் தாழ்வு சமூக உறவுகளை எவ்வளவு தூரம் பாதிக்கிறது - என்பதுதான் கதை. இதனை விந்தன் அப்பாவித்தனமான தந்தையின் நோக்கில் புத்திசாலித்தனமாகச சொல்லியிருக்கிறார்.

விந்தன் கதைகள் சந்தோஷத்தில் முடிந்தாலுஞ் சரி, துக்கத்தில் முடிந்தாலும் சரி - வாசகர்களை மன உளைச்சலும் அதிருப்தியும் அடையச் செய்யும் கதைகள்.

கதா பாத்திரங்கள் வஞ்சிக்கப்படும் போதும் - ஏமாற்றப்படும் போதும் - அவர்கள் குமுறுவதில்லை. பாமரத் தன்மையோடு அதனை ஏற்றுக் கொண்டு விடுகிறார்கள். அங்கீகரித்துக் கொள்கிறார்கள்; தாங்கள் ஏமாற்றப்பட்டோம் என்கிற எண்ணமே இல்லாது. அதோடு கூட வஞ்சித்தலை புகழ்ந்துகொண்டேகூட இருக்கிறார்கள்.

ஒரு கதை.

பொன்னையா.

அப்பாவித்தனம் கொண்ட பொன்னையாவை ஜில்லா போர்டு தலைவர் தர்மலிங்கம் பணம் கொடுத்து ஏமாற்றி விடுகிறார். அந்தப் பரிதாபத்திற்கு உரியவனோ. அதனைப் புரிந்து கொள்ளாமல் மகாராஜவாகப் புகழ்ந்து கொண்டாடுகிறான்.

பொன்னையா தாழ்ந்த ஜாதிக்காரன். அவன் குடிசையை வெள்ளம் அடித்துக்கொண்டு போய்விட்டது; தெருவில் குடியிருக்கிறான். ஒருநாள் அவனுக்கு ஒரு யோசனை தோன்றுகிறது; ஒண்டுக் குடுத்தனம் இருந்தால் என்னவென்று,

ஜில்லா போர்டு தலைவர் - எல்லோரும் ஒரு குலம் என்று பேசுகிற தர்மலிங்கம், தனக்கு வீடு கொடுக்கலாம் என்ற நம்பிக்கையோடு சென்று வீடு கேட்கிறான். அவரோ ‘நாளை வா’ என்கிறார். இவனும் மறுநாள் செல்கிறான்.

‘ஏண்டா, பொன்னையா! எத்தனை நாளைக்கு நீ என் வீட்டுத் திண்ணையில் பொங்கித் தின்று கொண்டிருக்க முடியும்? இந்தா, இந்த ஐம்பது ரூபாயைக் கொண்டு போய் உனக்கென்று ஒரு வீட்டைக் கட்டிக் கொள்!

பொன்னையா பணத்தை வாங்கிக்கொண்டு போய் தன் மனைவி சின்னியிடம் கொடுத்தான்.

‘ஐயோ சாமி, இத்தனை பணம் உனக்கு ஏது?’ என்று திடுக்கிட்டுக் கேட்டாள் சின்னி.

‘ஐயா தான் கொடுத்தாரு’ என்றான் பொன்னையா.

‘மவராஜர்! இந்த ஏழைகளுக்கு இவ்வளவு பணம் கொடுத்தாரே, அவரு மனுசர் இல்ல; தெய்வம்!

'தெய்வந்தான்! இல்லேன்னா, என்னை உன் வாயிலே இருந்து காப்பாத்தியிருக்க முடியுமா?' என்றான் பொன்னையா சிரித்துக்கொண்டே.

அந்தப் பணம் மனமுவந்து கொடுத்த பணமல்ல; மனைவி சொன்ன யோசனையின் பேரில் தம் மானத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காகக் கொடுத்த பணம்; தன்னை எப்பொழுதுமே தாழ்த்தப்பட்டவனாக வாழச் செய்யும் பணம் அது என்பது ஏழை பொன்னையாவுக்கு எப்படித் தெரியும்?

இதே மாதிரியான கதைதான் 'யாருக்குப் பிரதிநிதி?' 'கருவேப்பிலைக்காரி,' 'ஒரே உரிமை', 'ஓர் அதிசயம்.'

முல்லைக் கொடியாள், ஒரே உரிமை - சிறுகதைத் தொகுப்புகளிலிருந்து, பிற்காலக் கதைகள் மாறுதல் உற்று இருப்பது, இரண்டு ரூபாய் - விந்தன் கதைகள் - இவைகளைப் பார்க்கையில் பளிச்சென்று தெரிகிறது.

விந்தன் ஆரம்ப காலத்தில், முப்பது நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் மனிதர்களின் பாமர குண விஷேசத்தைக் கொஞ்சம் மிகைப்படுத்திக் காட்டினார். படிப்பு - விஞ்ஞானம் தொழில் உறவு - பணத்தின் மீது பொதுவாக எல்லோருக்கும் ஏற்பட்ட வேட்கை - சமூக உறவுகளைப் பாதித்து பாமரத்தன்மையை அழித்து விட்டபடியால் - விந்தன் கதைகளில் வரும் மனிதர்கள், கற்பனை மனிதர்களாகிவிட்டார்கள்.

பாமரத்தன்மை கொண்ட மனிதர்களின் இன்றைய பிரச்சனை, என்ன நடந்து கொள்கிறான் என்பதைக் கவனிக்கையில், விந்தன் கதைகள் தொடர்பை இழந்து விடுகின்றன. இதனாலே, பாமரத் தன்மையை உதறித்தள்ள வேண்டிய அவசியம் இவருக்கு ஏற்பட்டு விட்டது. இதனை விடிந்தன் கதைகள் - இரண்டு ரூபாயும் தெளிவாக்குகின்றன. ஆனால், இவைகளின் கலையழகு என்பது இன்னும் தேய்ந்துவிடுகிறது. ஐடியா - வெறும் கிண்டலாக மட்டுமே அமைந்து விடுகிறது.

சிறுகதையை இலக்கிய உருவம் என்பதற்கு மேலே கருத்தைச் சொல்லும் ஒரு சாதனமாக ஏற்றுக் கொண்டபடியால் இது தவிர்க்க முடியாத அம்சமாகி விடுகிறது.

*கலை என்பது பிரச்சாரத்தில் அடிபட்டுப் போகிறது.*

*அரசியல் பிரச்சாரந்தான் இப்படி அடிபட்டுப் போகும் என்பதல்ல; எல்லா வகையான பிரச்சாரமும் இப்படியே அடிபட்டுப் போகிறது.*

*கலைஞன் குரல் அழுநதி அடக்கமாக ஒலிக்கையில் பிரச்சாரத்திற்கு வலுவும் சாசுவதத்தன்மையும் கிடைக்கிறது.*

*சுந்தர ராமசாமியின் உழவு மாடும் கோயில் காளைக்கும் கிடைத்திருப்பது போல - இதை விட்டுக் கலைஞன் குரல் தூக்கலாகத் தூக்கலாக கலை என்பது நழுவி விடுகிறது; பிரசாரம் தங்க.*

*விந்தன் கதைகள் சமபவக் குவியல் அல்ல; சம்பவங்ளை மேலும் கீழுமாக மாற்றி மறுபடியும் எழுதும் கதைகள் அல்ல. ஐடியா கதைகள் - கருத்துக் கதைகள்; திரும்பத் திரும்ப வெவ்வேறு மனிதர்களின் மீது ஏற்றி எழுதக் கூடிய கதைகள். கருத்தை ஒரே நோக்கில் - நேராக அலங்காரமின்றி சொல்லுபவை. விந்தன், ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் பல தமிழ்ச் சிறுகதை ஆசிரியர்களைவிட மிகவும் குறிப்பிடத் தக்கவராகவே இருக்கிறார்.*

கண்ணதாசன - 1970

23

# எனக்குப் பிடித்த கதை

**- தமிழ்வயான்**

*பத்து ஆண்டுகளுக்கு முன்னே பாலும் பாவையும் கல்கியில் தொடர்கதையாக வந்து கொண்டிருந்தபோது அதைப் படிக்கத் தொடங்கி வெளியான பிறகுதான் எனபது இன்னும் என் நினைவில் இருக்கிறது*

*பொழுது போக்காகப் பத்திரிகைகளைப் புரட்டிக் கொண்டு வந்த என்னை, அதற்கென்றே காலத்தை ஒதுக்கி வைக்க வேண்டிய அவசியத்தை உண்டு பண்ணிவிட்டது என்றால் மிகையாகாது. விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிலாவது வளர் கதைகளைப் படிககும் பழக்கத்தை ஏற்படுத்தி விட்ட பெருமை, முதல் முதற்கண் பாலும் பாவைக்கே உரித்தாகும்!*

*அப்பொழுது வங்காளத்தில் ஏற்பட்ட வகுப்பு வெறிக் கலவரத்தின் காரணமாகப் பல பெண்கள் பலாத்கார முறையில் கற்பழிக்கப்பட்டு, பரிதாபத்திற்குரிய நிலையில் இருந்ததைப் பொறுக்காத அணணல் காநதியடிகள, அவர்களுடைய கணவன்மாரிடம், அவர்களை மீண்டும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சொன்னதை அடிப்படையாகக் கொண்டு, அகல்யாவை உருவகப்படுத்தி நம்மை ஒப்புவமை நோககச் செய்திருக்கிறார் இதன் ஆசிரியர் விந்தன் என்பது தெளிவாகிறது. வாரந்தோறும் எழுதிவரும் வரப்பிரசாதம் பெற்றதன் பயனாகத் தான் விந்தன் அவர்கள் பாலும் பாவையும் கதையை இதழுக்கு இதழ் விறுவிறுப்புக் கூட்டி, அரிய சம்பவங்களைப் பிணைத்து, சீரிய கருத்துக்களை வழங்க முடிந்தது என்று நினைக்கத் தோன்றுகிறது.*

பால் கெட்டு விட்டால் அது பயனற்றுப் போகிறது. வெளியே கொட்டத்தான் வேண்டும். காரணம், வேறு வழி இல்லை. பாவை ஒருத்தி கெட்டுப் போனாள் என்றால், அவளுக்கு வாழ்வு இல்லை. அவள் சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட வேண்டியவளாகிறாள். அவளுக்கு மறுமலர்ச்சி இல்லை. மன நிறைவும் இல்லை! அப்படியே மடிய வேண்டியதுதான் அவளது விதி! பொன்னுக்கும் பொருளுக்கும் உள்ள மதிப்புக்கூட இந்தக் காலத்தில் பெண்ணுக்கு, அவளுடைய கற்புக்குக்கூட இல்லை என்று கூறும்பொழுது யாரைப் பார்த்துக் குறை சொல்வது என்பதுதான் பெரும் பிரச்னையாகி விடுகிறது.

அந்தப் பிரச்சினையை அலசிப் பார்க்க, பாலும் பாவையும் கதையைச் சிறிது நினைவிற்குக் கொண்டு வந்தால்தான் புரியும்.

அகல்யா ஒரு கல்லூரி மாணவி. பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவள். கவலை என்றால் என்ன என்பதையே அறியாது வளர்ந்து விட்ட ஒரு அழகுப் பாவை. கலாசாலையில் படிக்கும் பொழுதே, அவளது காதலைப் பெற இளைஞர்கள் இருவர் போட்டியிடடனர். அவளும் அவர்களை வளைய வருகிறாள்.

அழகால் கவர்ந்த இளவல், தசரத குமாரன் தன்னோடு நெருங்கிப் பழகக் கூச்சப்பட்டதால் அவளை ஒதுக்கி, தன் மன நிலை அறிந்து, இதயத் துடிப்பை எடை போட்டு, இனிய பேச்சால் உறவாடிய இளவல் இந்திரனின் காதலுக்குத் தன்னை உடைமையாக்குகிறாள்.

சென்னை கலாசாலையிலே வளர்ந்த இந்திரன் - அகல்யாவின் காதலுக்குப் பரீட்சை வைப்பதற்காக - கலாசாலை, தன் படிப்பை முடித்துக் கொண்ட அவர்களை வெளியே வாழ்த்தியனுப்பி வைக்கிறது.

பெற்றவர்கள் அவர்களது காதல் பரீட்சைக்கு முற்றுப் புள்ளி வைக்கவே, இருவரும் டிக்கட்டு இல்லாத பிரயாணிகளாகத் தம் காதல் பயணத்தைத் தொடங்கி விடுகின்னனர். அனுமதியில்லாத பிரயாணத்துக்கு அவசியப்படும்படியான பொருளாதாரம் இல்லாததைக் கண்ட இந்திரன் அகல்யாவைக் காசில்லாமல் காதலிக்க முடியாது என்று கூறி, இடையிலேயே கைவிட்டு விடடுச் செல்கிறான்.

இந்திரனால் ஏமாற்றப்பட்டு அபலை அகல்யா, தான் திரும்பிச் செல்ல முடியாத பாதையில் வந்து விட்டதை எண்ணி எண்ணி

*வருந்துகிறாள்; திகைக்கிறாள், தேம்புகிறாள்,திக்குத் திசை தெரியாமல்! அவளது அபயக் குரலை ஏற்றுக் கொள்ள வந்த ஆண்டவனாக, கனகலிங்கம் அவள் முன்னே காட்சியளிக்கிறான்!*

*அகல்யா, அவனிடம் வழுக்கி தன் விழுந்த வரலாற்றை ஆதியோடந்தமாகக் கூறித் தன்னை வாழ வைக்கும்படி தன்னை ஏற்கும்படி கெஞ்சுகிறாள்.*

*அவளது துயர வரலாற்றைக் கேட்டு அவளிடம் அனுதாபமே கொண்ட கனகலிங்கம், அவளது பிடிவாதம் அதிகரிக்கவே அவளது கோரிக்கைக்கு உடன்படுகிறான்.*

*புத்தகங்களை விற்பனை செய்து வர ஏவப்பட்ட கனகலிங்கம், கலைஞானபுரத்திலே தனக்கு விபரீதம் காத்திருக்கும் என்று சற்றும் எதிர்பார்க்கவில்லை. கலைஞான புரத்தில் விழா முடிந்ததும் கனகலிங்கம் அகல்யாவுடன் ஊர் திரும்புகிறான்.*

*வந்ததும் வராததுமாக வேலை பறி போன செய்தி கனகலிங்கத்தை வரவேற்கிறது; அகல்யா, தான் வேலை செய்து வரும் முதலாளியின் சகோதரனுடையமகள் என்பதை அறியாமல் அவளைக் கடத்திக்கொண்டு வந்த குற்றத்திற்காக, உண்டி கொடுத்து வந்தவரின் உறவையும், அதன் காரணமாக ஏற்பட்ட நண்பனின் நல்லுறவையும், இழக்க வேண்டியவனாகிறான் கனகலிங்கம்.*

*.... காதலிக்காமல் கொல்வதை விட காதலித்தே கொன்று விடலாம் என்று சொன்னவனைத் தானே காதலித்துக் கொன்று விட்டுத் துர்ப்பக்கியத்தை தான் அடைகிறாள் அகல்யா அங்கே! இனி விதி விட்ட வழி என்று நடக்கிறாள்... அங்கும் ஒரு திருப்பம், தசரத குமாரன் உருவில் காத்திருக்கிறது! நம்பிப் போகையில், பொங்கும் அலைகடல்தான் சாசுவதம் என்று அங்கே ஐக்கியமாகிறாள்.*

*இது தான் கதை...*

*அவள் படித்திருந்தும், அறிவிருந்தும், சிந்தனா சக்தி, பகுத்தறிவு, உலக அனுபவம் ஆகிய இவை இல்லாத காரணத்தால் தன்னுடைய கடமை, திறமை இவைகளை உணராது உணர்ச்சிக்கு அடிமையாகி உழலும் போது அகல்யாவின், பால் இரக்க உணர்ச்சி ஏற்படத்தான் செய்கிறது. அதே தவற்றைச் செய்த இந்திரன் ஏற்றம் பெறுவதைக் கண்டு ஆத்திரப்படாமல் இருக்க முடியவில்லை.*

*சிறுகதையை மையமாகக் கொண்டு, கற்பனைக் கருத்து, சம்பவம் இவைகளை விறுவிறுப்பு கூட்டி, ஒருங்கே பிணைத்து அவைகளுக்கு உருவமும், உயிரோட்டமும் கொடுத்து, பாலும் பாவையும் வளர் கதையாக ஆசிரியர் விநதன் அறிமுகப்படுத்தி இருப்பதை, நான் விமர்சனம் என்று எழுதிக்கொண்டே போகத் தூண்டியது. சிறப்பாக விந்தன் அவர்கள் தனக்கேதான் வகுத்துக் கொண்ட தனித்தமிழ் நடையாகும் என்பதை மறக்க முடியாது!*

குமுதம் - 1965

24

# முல்லைக்கொடியாள்

**சாவி**

*இன்று எத்தனையோ புதுப்புது எழுத்தாளர்கள் தோன்றி எவ்வளவோ விதமான சிறுகதைகளையும் நவீனங்களையும் சிருஷ்டி செய்கிறார்கள். ஆனாலும் அவைகள் எல்லாம் உண்மை இலக்கியஙகளா? உண்மையான இலக்கியங்கள் தோன்ற வேணடுமானால் அதற்கு வாழ்க்கையில் உண்மையான அனுபவமும் வேணடும். உதாரணமாக, பாட்டாளிகளின் கஷ்டங்களைக் கதைகளில் புகுத்தவும், அந்தக் கஷ்டங்களைக் கதையாகச் சொலலும்பேது கதையின் லட்சணம் கெடாமலும் கையாளுவதற்கு மிகுந்த திறமை வேணடும்*

*ஏர்பிடித்து நிலத்தை உழும் குடியனவனைப் பற்றியும், இயந்திரத்துடன் இயந்திரமாக வேலை செய்யும் ஆலைத் தொழிலாளியைப் பற்றியும், நெற்றி வியர்வை நிலத்தில் சொட்ட பாரம் இழுக்கும் வண்டிக்காரனைப் பற்றியும் எவ்வளவோ எழுத்தாளர்கள் கதை எழுதுகிறார்கள். ஆனாலும் அவைகளில் பாட்டாளிகளின - ஏழை மக்களின் - கஷ்ட நஷ்டங்கள் உண்மையாகக் கூறபபட்டுள்ளனவா?*

*பாட்டாளிகளின் குறைகளை உள்ளது உளளபடி எழுத்தின் மூலம படம் பிடித்துக் காண்பிக்கும் எழுத்தாளர் யாராவது இருககிறாாகளா என்றால பேஷாக இருக்கிறார். அவர்தான் ஸ்ரீ வி கோவிந்தன் எனப்படும் விந்தன் என்று தயங்காமல் கூறலாம்*

*தொழிலாளர்களின வாழக்கையில் அடங்கியுள்ள அரிய விஷயங்களைக் கொண்டு எழுதப்பட்ட அருமையான புத்தகம்தான் முல்லைக் கொடியாள் என்னும் சிறுகதைத் தொகுதி.*

தமிழுக்காக உழைத்துத் தலை நரைத்துப் போன ஸ்ரீ வ.ரா. அவர்கள், விந்தனைப் பற்றி ஒரு சமயம் கூறிய சில வார்த்தைகளை இங்கே குறிப்பிட விரும்புகிறோம்.

கல்கி பத்திரிகையில் விந்தன் என்ற பெயரில் ஒருவர் கதை எழுதுகிறார். அந்தக் கதைகள் பெருவாரியாகப் பாட்டாளிகளின் இருதய வேதனையையும் சுக துக்கங்களையும், சமூக முன்னேற்றத்திற்கு வேண்டிய மறு மலர்ச்சிக் கொள்கையையும் உடையவை. படிக்கும்போது என் உள்ளம் உருகுகிறது' என்று கூறினார்.

விந்தன் அவர்கள் சமூக முன்னேற்றத்தையும் பாஷையின் அழகையும் மனதில் வைத்துக் கையண்டிருக்கும் நடை இனிமையாகவும், எளிமையாகவுமிருக்கிறது. சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்னும் கொள்கையை முழுமையும் கடைப்பிடித்திருக்கிறார். மனித சமுதாயத்திற்கு வேண்டிய பல உயர்ந்த நோக்கங்களையும் சிந்திக்கத் தக்க கருத்துக்களையும் ஸ்ரீ விந்தன் தமது கதைகளில் அடக்கியிருக்கின்றார்.

'மனித யந்திரம்' என்ற கதையில் வரும் சில அருமையான வரிகளைப் படித்துப் பாருங்கள்.

கேவலம் ஒரு மெஷின் வேலை செய்வதற்கு லாயக்கில்லாமற் போனால் அதைப் பழுது பார்க்க ரூபாய் ஆயிரம் வேண்டுமானாலும் எந்த முதலாளியும் செலவழிக்கத் தயாராக இருக்கிறான். ஆனால், வாழ்நாள் முழுமையும் தன்னிடம் நாயாக உழைத்த ஒரு ஏழைத் தொழிலாளி வேலை செய்வதற்கு லாக்கியக்கில்லாமற் போனால் அவனுக்காக ஒரே ஒரு ரூபாய் செலவழிக்கக் கூட மனம் வருவதில்லை. மனிதன் என்ன யந்திரத்தை விட அவ்வளவு மட்டமானவனா?

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல் இருநூறு பக்கங்கள் கொண்ட இப்புத்தகத்தின் மேன்மையை விளக்க மேற்கண்ட பத்து வரிகளே போதுமானது.

வெள்ளிமணி - 1947

25

# விந்தன் ஓர் பேனா ஆயுதவாதி

- கவி. கா. மு. ஷெரீப்

எழுத்தைத் தொழிலெனச் சொல்வோருண்டு. கலையெனக் கொள்வோரும் உண்டு. எழுத்து வலிமை மிக்க ஆயுதம் எனக் கூறுவதே பொருந்தும்.

போர் வீரனை விட புனிதமான நல்ல தொண்டினைச் சிறந்த எழுத்தாளனால் செய்யவியலும்.

ஆம், போர் வீரன், தனது நாட்டிற்காக வாள் ஏந்துபவனே. எழுத்தாளனோ உலகத்திற்காக எழுதுகோல் தாங்குவோனாவான்.

ஆக்ரமிப்பைத் தடுப்பவன் போர் வீரன். ஆக்ரமிக்கின்ற எண்ணத்தையே அழிக்க வல்லது எழுத்தாளன் வன்மை.

தனக்காக, தன் சுக வாழ்விற்காக எழுதுகோல் பிடிப்பவன் எழுத்தாளன் அல்லன்.

போர் வீரனுக்கு உடல் வலிவும், உள்ளத்தின் வலிவும் தேவை. நல்ல எழுத்தாளனுக்கு, உள்ளத் துணிவு ஒன்றே போதும்.

தனது எழுத்து, சமுதாயத்தின் விதியை நிச்சயிக்கின்ற சக்தி உடயதென எண்ணிப் பேனா எடுப்பவனே பயனுடைய எழுத்தாளன்.

தனது அல்லது தன் குடும்பத்தினரின் பசியைப் போக்க நினைத்து, மக்களின் கீழ்த்தர உணர்விற்கு விருந்து படைக்கின்ற எழுத்தாளனை விட, பசிக்காக விபச்சாரம் செய்கின்ற தாயை மேலானவளென்பேன்.

நண்பர் விந்தன் அவர்களை இருபத்து ஐந்து ஆண்டுகட்கு முன்னிருந்தே அறிவேன்.

அவர்தம் பாலும் பாவையும் நவீனம், படித்தோர் மத்தியிலே ஒரு கலகலப்பை உண்டு பண்ணிய புதுமைப் படைப்பு. அந்த நவீனத்தின் எழுதது நடை நண்பர் விநதனை நல்லதொரு எழுத்தாளனாக்கிற்று!

நண்பர் விந்தன் அவர்களால் நல்ல நவீனங்களை ஈயமுடியும் என்ற எண்ணத்தைப் பாலும் பாவையும் உண்டாக்கிற்று.

சமுதாயத்தின் அடித்தளத்திலிருந்து எழுகின்ற எழுத்தாளனே தேவை. வெறும் பள்ளிப்படிப்பு எழுத்தாளனால் வேறு மொழி நவீனத்தை - சிறு கதையை மாரீசம் செய்யவே முடியும், முடிகின்றதெனும் உண்மையை மெய்யாக்கிற்று

விந்தன் அவர்கள் நவீனங்களை, சிறு கதைகளைப் படைத்தளிக்கின்ற எழுத்தாளனாகவே வாழநதிருக்க முடியும் அவ்வழி வருமானத்தில் எளிய தூய மன நிறைவுடைய வாழ்வு வாழந்திருக்க முடியும்

ஆனால் அவர் தம் மனத்திற்குச் சிறிதும் பொருந்தாத மாரீசமே முதலும் முடிவுமான சினிமாத் தொழிலை நம்பி அதில் எழுத்துப் பணி புரியப் புகுந்து சென்று சிக்கிக் கொண்டார்.

அத்தொழிலில் தன்னைச் சிறந்த வசன கர்த்தாவாகவும், நல்ல பாடலாசிரியராகவும் காட்டிக் கொள்ள அவரால் முடிந்தது. இந்த அளவில் நிதானமாக நின்றிருந்தால் கூட நீண்ட நாள் அத்தொழிலில் அவர் நிலைத்திருக்க இயலாது. காரணம், காதாநாயகன், கதாநாயகி, இயக்குநர் போன்றார்களே யன்றி, கதாசிரியனையும, வசனகர்த்தாவையும், பாடலாசிரியனையும் அடிக்கடி தள்ளி ஒதுக்கிப் புதுமை காண விழைகின்ற உலகம் சினிமா உலகம் அங்கு சென்றோருக்கு தானும படம் எடுக்க வேண்டும் என்ற ஆசையை, ஆவலை உண்டாக்கிக் கெடுப்பதே அத் தொழிலிற்குரிய மோகினித்தனம

நண்பர் விந்தன் அவாகளின் மனப்போக்கு, சினிமாத்தொழிலில் நீண்டநாள் தாக்குப் பிடிகக்கும் பக்குவம் பெற்றவராக அவரை ஆக்கிவிட முடியவில்லை. எனவே அவர் அத்தொழிலைக் கைவிட வேண்டியதாயிற்று.

கொள்கை வழியில் சஞ்சிகைகள் நடத்தவியலா நாடு தமிழ்நாடு நண்பர் விந்தன் பெற்றிருந்த அனுபவம் இதை அவருக்கு உணர்த்தவில்லை போலும. மனிதன் என்ற பெயரில் திங்கள் ஏடு

ஒன்றை நடத்தலானார். மனிதனை மனிதனாக வாழவைக்க முனைந்த மனிதன் ஏட்டை, மனித உருவிலிருந்தோரின் கண்கள் காண அஞ்சின.

எழுத்தாளனே, நீ ஏதேனும் சில்லரை சேர்ந்திருந்தால், அதைப் போக்கிவிடும் நினைப்புனக்கு உண்டானால், நல்ல கருத்துக்களைக் கொண்ட ஏடு ஒன்றைத் துவக்கு என்பது அனுபவம் உடைய யாரோ கூறிய அறிவுரையாகும். இந்த அறிவுரையை மீறி, கருத்துப் பேழையாக மனிதன் ஏட்டை விந்தன் துவக்கினார்! ஆம், துவக்கினார், துவண்டார், மெலிந்தார், வாடினார்; முடிவில் நோய்க்காளானார்.

நல்ல மக்களையும் மனைவியையும் கொண்ட அவரை அவர்தம் நல்ல எழுத்துக்களே உண்டுவிட்டன.

அவருக்கென அக்காலத்தே நிறைய வாசகர் உண்டு, அவருடைய எழுத்தை விரும்பும் எண்ணற்ற வாசர்களில் எத்தனை பேர் இன்று வரை நினைவில் கொண்டுள்ளனர் என்பது தெரியாது. எழுத்தாளனின் உடலை மட்டுமின்றி, உயிரையும் உண்ணத் துடிப்பவர்தாமே வாசக வட்டத்தினர் என நினைக்குமளவிற்கு,விநதனை மறந்துவிட்ட வாசகர்களிடையே ஒரு பரமசிவம் என்பாரைக் காண முடிகின்றது.

இந்தப் பரமசிவம், மக்கள் மறந்துவிட்ட விந்தனை நினைவுக்குக் கொண்டு வருகின்ற நல்ல பணியை மேற்கொண்டுள்ளார்.

ஆம், அழியா நினைவாக விந்தன் பற்றி நூல் ஒன்றை வெளியிட உள்ளார் என்பதை நினைக்கும்போது, மன மகிழ்வு தோன்றுகிறது

விந்தன் எழுதுகோலை ஆயுதமாக - அதுவும் நற்காரியங்கட்குப் பயன்படுத்துகின்ற நல்லாயதமாகவே ஏந்தி வாழ்ந்தவர். அவர்தம் நினைவை புதுப்பித்தளிக்கின்ற திரு.மு. பரமசிவம் அவர்களை மனிதத் தன்மையுடைய மாண்புடையார் என்பேன்.

எழுத்தாளனே! இதயம் பெறுவாயாக!

1982

# 26

## விந்தனை வணங்குகிறேன்!

- டி.கே. சீனிவாசன்

*வலிவை வளர்த்துக் கொள்ளும் வழிவகைகளை அமைத்துக் கொள்ளுபவர்கள் மட்டுமே வாழுகிறார்கள்; திறமைகளை மட்டும் பெருக்கிக் கொள்ளுபவர்கள் தேய்ந்து போகிறார்கள்.*

*ஆதாயத்துக்காக ஆட்களைத் தேடுவோர் ஆற்றலைப் போற்ற மாட்டார்கள். அவர்களுக்கென்று எவருமே இல்லாததால் எத்தனையோ எழுத்தாளர்கள், கலைஞர்கள், கவிஞர்கள் அடிக்கடி நினைவுப்படுத்தப்பட்டும் நிலைபெறாமல் போய்விட்டார்கள். மறைந்து போன நாட்களோடு இவர்களையும் இணைத்து மறந்துவிடுகின்றனர் மக்கள்.*

*பொன்னைக் குவித்துக் கொள்ளுபவர்களால் புகழை வளர்த்துக் கொள்ள முடிகிறது; மற்றவர்கள் மக்கிப் போகிறார்கள்.*

*இலக்கிய உலகில், உருவாக்குபவனைவிட உரை சொல்லுபவன் உயர்வாக மதிக்கப்படுகிறான். ஊரே அவனைச் சுற்றிக் கூடுகிறது.*

*எவரெவரோ எப்போதெப்போதோ எழுதிப் போட்டவை அனைத்தையும் தம மூளையில் திணித்துக் கொண்டு படிப்போரின் தேவைக்கேற்ப எழுதுவோரும், கேட்போரின் வேட்கைகேற்பப் பேசுவோரும் - இன்றையத் தமிழ் இலக்கியத் தாரகைகள்!*

*இரவு பகலாக மூளையைக் குழப்பிக் கொண்டு எண்ணங்களுக்கு எழுத்துருக் கொடுத்தவன் எங்கேயோ ஒரு மூலையில் தள்ளப்பட்டிருக்கிறான்.*

*அடுத்தவன் உழைப்பை எடுத்துக் கொண்டு அதை வாணிபம் செய்பவன் வளமோடு வாழுகிறான்*

*விதைத்து வளர்த்த உழவன் ஒடுங்கி வாழுகிறான்!*

விளைச்சலை விற்றுப் பிழைக்கும் வணிகன் வளமையைக் குவித்துக் கொள்ளுகிறான.

பட்டுப் போய் விடுவார்களோ என்று சில எழுத்தாளர்களைப் பற்றி நாம் கவலைப்படும்போது, மேலே காணும் சிந்தனைகள் நம்மை எட்டிப் பார்க்கின்றன.

படிப்பதற்காக நேரத்தை ஒதுக்கிய காலம் ஒன்றிருந்தது இப்போது அப்படி இல்லை; நேரத்தைப் போக்குவதற்காக நூல்கள் தேடப்படுகின்றன.

அந்தந்தக் காலத்துக்கு ஏற்றபடிதான்

இலக்கியங்கள் உருவாக்கப்படுகின்றன

பழைய புத்தகக்காரனிடம் கால்பங்கு விலையாவது பெற்றுவிடலாம் எனற நம்பிக்கையூட்டும் புத்தகங்கள் சில; எடைக்குப் போட்டாலும் ஏதாவது கிடைக்கும் என்று சமாதானப்படுத்திக் கொள்ள உதவுபவை சில. இந்த நாட்டில் இலக்கியம் இப்படித்தான் வளருகிறது, இந்தக் காலத்தில்,

அறிவு எனனும் அலமாரியில் அடுக்கி வைக்கும் தகுதி பெற்றவை ஒரு சில; படித்து முடித்த பிறகு மறுபடியும் புரட்டிப் படிக்கத் தூண்டும் பத்து வரிகளாவது உள்ள புத்தகங்கள் சில இப்படிப்பட்ட நூலகளை மட்டுமே உருவாக்குவோர் ஒரு காலத்தில் வாழ்நத நாடுதான நம் தமிழ்நாடு

அப்போது உருவாகி வாழ்ந்த எழுத்தாளர் தான் திரு விந்தன்.

அவரை நான பார்த்ததில்லை; அவருடைய எழுததுக்களை ஓரளவு படித்திருக்கிறேன

இயல்பான நிகழ்ச்சிகளை இலக்கியமாக்கிக் காட்டுவதில் வல்லவர் அவர்; நமக்கே அவை நிகழ்ந்திருக்கும; அவதிப் பட்டிருப்போம்; அவருடைய எழுத்துகளால் அவற்றைப் படிக்கும் போது நம்மையறியாமலே அவற்றை அனுபவிக்கிறோம்.

மனிதனுடைய செயல்கள்தாம் செக்கு மாடுகள்போல் இயங்குகின்றனவே தவிர அவனுடைய சிந்தனைகள் மாறிக் கொண்டுதான் இருக்கினறன அவனைக் குறுக்கிடும் ஒவவொன்றும்

அவன் எண்ணங்களை அலைக்கழிக்கத்தான் செய்கிறது. தொடர்ச்சி இல்லாமல் துண்டு துண்டாக அவை சிதைந்து போவதால் அவற்றால அவனிடம் எந்த வித மாற்றத்தையும் ஏற்படுத்த முடிவதில்லை.

இடைப்படுகிற மனிதர்களும் சூழ்நிலைகளுங்கூட எவரிடமும் மாறுதல்களை ஏற்படுத்திவிட முடிகிறது என்றால் எழுதத் தெரிந்தவர்கள் பேனாக்களால் எவ்வளவோ மாற்றங்களை ஏற்படுத்திவிடலாம்.

தனிப்பட்ட ஏற்றங்களுக்காக எழுதுவோர் பலர், சமுதாய மாற்றங்களுக்காக எழுதுவோர் சிலர் - இல்லை ஒருசிலர்.

எழுதுவோர் அனைவருக்கும் ஒரே குறிக்கோள்- ஒத்த குறிக்கோள் - இருந்தால் உலகம் எவ்வளவோ உயர்ந்திருக்கும்

வாழ எழுதுவோரின் எண்ணிக்கை வளருகிறது - வாழ வைக்க எழுதுவோர் குறைகின்றனர் - கொஞ்சங் கொஞ்சமாக மறைகின்றனர்.

மறைபவர்களைவிட மறைக்கப்படுவோர்தாம் அதிகம்.

அப்படிப்பட்டவர்கள் பட்டியலில் இருப்பவர்தான் திரு.விந்தன்.

தம்மை மறந்து அடுத்தவர்கள் வாழ்வில் தம்மை இழந்தோர் எப்போதும் என் வணக்கத்துக்கு உரியவர்கள்.

திரு. விந்தனை நான் வணங்குகிறேன்!

1982

27

# விந்தன் கோபக்காரக் கலைஞன்

- ஆர். வி.

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட சிறுகதைகளுக்கு இன்னும் உயிர் இருக்கிறதா?

இருக்கிறது என்று சொன்னால் அந்தக் கதைகள் இப்போது படித்தாலும் வாழ்க்கையைப் பிரதிபலிப்பதாகவும் படிப்பவரின் மனத்தில் ஒருவித பாதிப்பை ஏற்படுத்துபவையாகவும் இருந்தாக வேண்டும்.

அந்த அளவுப்படி விந்தன் எழுதிய சிறுகதைகள் இன்னும் துடிப்போடு உயிர் வாழ்கின்றது என்று அழுத்தந் திருத்தமாகக் கூறிவிடலாம்.

ஆமாம்; கிட்டத்தட்ட மூன்று தலைமுறைக் காலமாக எழுத்தாளர் விந்தன் எழுதிய கதைகள் உயிரோடுதான் இருக்கின்றன; ஆனால் அந்தக் கதைகளைப் படைத்த விந்தன் தான் இன்று நம்மிடையே இல்லை.

அவர் இல்லாத குறையை இந்தக் கதைகளிடையே அவர் வாழ்வதை அறிந்து ஆறுதல் பெறலாம்.

இன்று அவருடைய சிறுகதைகளை மீண்டும் படிக்கும்போது தலைமுறை இடைவெளி, ரசிகர்களின் மனவளர்ச்சி, அறிவாற்றல் ஆகியவற்றின் காரணமாக அங்கங்கெ சில குறைகள் நமக்குத் தோன்றலாம். மொழி வளம், நடை, உத்தி, கருப்பொருள், ஆட்சி இவற்றில் எல்லாம் நாம் இன்று வெகுதூரம் மாறுபட்டும் வேறுபட்டும் வந்திருக்கிறோம். இன்றுள்ள வாழக்கை நிலை அதற்குக் காரணம்.

ஆனால் முன்னேறி வந்திருக்கிறோம் என்று துணிந்து கூற எனக்கு அவ்வளவாகத் துணிச்சல் இல்லை.

நாற்பது, ஐம்பது, அறுபகளில் தோன்றிய படைப்புக்களின தரம் இப்போது கணித்தாலும் இனறுள்ள தரத்தைக் காட்டிலும் பல படி உயர்ந்திருந்ததாகத்தான் காணப்படுகிறது.

மொழி நயத்தில், நடையில், பாணியில் விரும்பத்தக்க அளவு முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகத் தோன்றினாலும் உள்ளடக்கத்தில பண்பிலும் நோக்கிலும் இலக்கிலும் இலக்கியத் தரம் தாழ்ந்துதான் போயிருக்கிறது.

விந்தன் அந்தப் பழைய தலைமுறையைச் சேர்ந்தவர்.

யானை படுத்தாலும் குதிரை மட்டம் என்பது போல்தான் அவர் எழுத்து இலக்கிலும் பண்பிலும் இலக்கியத் தரத்தைக் கீழே போக விடாமல் கட்டிக் காப்பது ஒரு படைப்பாளியின் கடமை என்பதை அவர் எழுத்து நிச்சயமாக உணர்த்துவதை நாம காண்கிறோம்.

இன்று நம் சமூக வாழ்வில் உயர் குறிக்கோள் எதுவும் இல்லை அமைதியான முறையில் நிலையான மாற்றத்தை உண்டாக்க வழி வகை காணாமல், அடித்துப் பிடித்துக் கொண்டு அடாவடித்தனமாக, இருப்பவனை இழுத்துத் தள்ளிவிட்டு, புதுவகையான ஏற்றத் தாழ்வுகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் சமுதாயச் சீர்கேடு ஒரு புறம்; அதன் காரணமாகப் பண்பாட்டு அடிப்படைகளிலும் ஒரு பார்வைத் தெளிவற்ற குழப்பம் நிலவி வருகிறது. இவற்றைத்தான் இன்றைய படைப்புகளிலும் பிரதிபலிக்கக் காண்கிறோம்.

ஆனால் விந்தன் ஒரு லட்சியப் பற்றும் உறுதியான போக்கும் படைத்த ஒரு தலைமுறையைச் சேர்ந்த படைப்பாளி. அதனால் சமுதாயச் சீர்கேடுகளை அவரால் தெளிவாகச் சுட்டிக்காட்ட முடிந்தது சமுதாயத்தில் மலிந்து, கிட்டித்து ஒட்டிப் போய்க் கிடக்கும் ஏற்றத் தாழ்வுகளை அவரால் எடுத்துக்காட்ட முடிந்தது. சமுதாய வளர்ச்சிக்குக் குந்தகமான அநீதிகளை, அவலங்களை இனம் கண்டு அடையாளம் காட்டுகிற திறம் அவர் எழுத்துக்கு இருந்தது.

ஒரு சமுதாயம் மானத்தோடும் மதிப்போடும் நீடித்து நிலைக்க, பணத்துக்குக் காட்டும் முக்கியத்துவத்தைவிட நல்ல

பண்புக்கும் ஒழுக்கத்துக்கும் கொடுக்க வேண்டிய மதிப்பே முக்கியமானது என்பதை அனைவரும் அறிவார்கள். சுவாமி விவேகானந்தா, மகாத்மா காந்தி போன்றவர்கள் எளிய வாழ்வையும் தியாக உள்ளத்தையும் வற்புறுததிக் கூறியிருக்கிறார்கள். அதை அலட்சியப் படுத்திவிட்டு, எப்படியும் எல்லாவற்றுக்கும் பணம்தான் முக்கியம் என்று வந்துவிட்டால் அடிப்படையான மனிதத் தன்மை, மனிதாபிமானம் ஆகியவை போய்விடும். அப்புறம் பாரதியார் பாடியபடி கண் இரண்டையும் விற்றுச் சித்திரம் வாங்குகிற கதைதான்.

எனவே, இலக்கியப் படைப்பாளி பொறுப்பு வாய்ந்தவன்.

அவன் பணத்துக்கும் பதவிக்கும் அல்லது பகட்டுக்கும் பின்னால் பல்லைக் காட்டிக் கொண்டும் வாலையாட்டிக் கொண்டும் ஓடுகிற பிராணி அல்ல. அவையெல்லாம் அவனுக்குப் பின்னால் ஓடி வர வேண்டும்.

எதிர்கால வளத்தைக் கண்டு அவற்றைச் சமுதாயத்துக்கு எடுத்துககாட்டி அழைத்துப் போகும் சமுதாயச் சிற்பி அவன். மற்றப் பண்புகளையெல்லாம் விட எப்படியும் பணம் பண்ணிவிடுவதுதான் வாழ்வின் உயர் சாதனை எனறு கருதுகிற கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்தவன் அல்ல அவன்

இன்று பச்சைப் படுமோசமான விபசாரிகூட பணத்தின் காரணமாகச் சமூகத்தில் எல்லா விதமான தகுதிகளும் படைத்தவள் மாதிரி சபைக்கு முன்னே வந்துவிடுகிறாள்; சம்சாரிகள் சங்கத்துக்கு விளக்கேற்றி வைக்கவும், தர்ம விளக்கம் செய்யவும் வந்து விடுகிறாள்.

கள்ளக் கடத்தல்காரர்கள் ஆட்சியில் இருப்பவர்களையே பணத்தைக் கொண்டு ஆட்டிப் படைக்கிறார்கள்.

சமுதாய விரோதமான காரியங்களில் ஈடுபட்டுப் பணம் பண்ணத தெரிந்த கருப்புச் சந்தை வியாபாரிகள், கள்ளச் சாராயச் சீமான்கள், சுரண்டல் கலையில் வல்லவர்களான தொழிலதிபர்கள்,

கீழ்த்தர உணர்ச்சிகளைக் கிளறி விட்டு அதைக் காசாக்கிக் கொண்டு வேஷம் போடுகிற பத்திரிகை முதலைகள், படத்தொழில் திமிங்கலங்கள் போன்றவர்கள்

ஆட்டைக் கடித்து மாட்டைக்கடித்து ஆளையே கடித்த விழுங்கும் அரசியல் சூதாடிகள்

காசுக்கு ஆசைப்பட்டு எழுத வரும் எழுத்தாளர்கள் போன்றவர்கள் காலமாக இருக்கிறது இது. இவர்கள் தான் இன்றையச் சமுதாயத்தை ஆட்டிப் படைக்கிறார்கள்.

ஆனால் விந்தன் பணத்துக்கும் பதவிக்கும் பின்னால் ஓடாத, சென்றுவிட்ட தலைமுறையச் சேர்ந்தவர்; அந்தப் பரம்பரையின் பொறுப்பையும் பெருமையையும் அறிந்துணர்ந்த படைப்பாளி சிறுமைகளைக் கண்டால் சீறி விழுகிற வர்க்கத்தைச் சேர்ந்த சிற்பி. நீதியும் நேர்மையும் கொண்ட சமுதாயத்தைப் பற்றிக் கனவு காணும் கலைஞர்களிலே அவர் ஒருவர்.

அவர் ஏழையாகவே பிறந்து, வளர்ந்து மறைந்துவிட்டவர் என்றாலும் எண்ணத்திலே உயர்ந்து நின்ற சிந்தனையாளர் அவருடைய ஆகிருதி வானளாவி உயர்ந்து தோன்றாமல், இருக்கலாம். ஆனால் ரோஜாவாகவே எல்லாப் பூக்களும் இருந்துவிட்டால் என்ன மகத்துவம் இருக்கிறது?

அவர் மகிழம்பூவாக இருந்துவிட்டுப் போகட்டுமே. மகிழம்பூவுக்கும் பல சிறப்புக்கள் உண்டு. அளவில் சிறியது; வாட வாட மணம் பெருக்கி மணப்பது. ஆக - மணத்திலும் குணத்திலும் மகிழ்ச்சி தருகிற மலர் அவர் என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

விந்தனுக்கு நீதியற்ற சமுதாயத்தின் மீது ஒரு கோபம். அந்தக் கோபத்தில்சில உண்மைகள் அவர் கண்ணில்படாமல் தப்பிவிகிற நிலைகளும் உண்டு. பணம் படைத்தவர்களிலே மனிதப் பண்பு மிக்க சிலரும் உண்டு. ஏழை மனிதரிடையே கொடிய நெஞ்சம் படைத்த நன்றியற்றவர்களும் உண்டு. ஒட்டு மொத்தமாக அவர்களை அடியோடு நல்லவர்களாகவோ, கெட்டவ்களாகவோ கருதிவிட முடியாது. விந்தன் கதைகளில் அத்தகைய விதி விலக்குகளைக் காண முடியாது.

அவருடைய திருஷ்டியில் பணம் படைத்தவன் பொல்லாதவன் தான்; ஏழை யோக்கியமானவன்தான். மறந்து கூட அவர் பார்வையில் இதற்கு மாறுபாடாக எதுவும் பட்டதில்லை.

அவருடைய கோபம் அவர் பார்வையைச் சில சமயங்களில் மறைத்தாலும் கலை வடிவத்துக்குச் சில அதிசயோக்திகள் அதாவது

மிகைபடச் சொல்கிற அல்லது காட்டுகிற தன்மையும அவசியம என்பதும் உண்மையே.

விந்தன் ஒரு படைப்புக் கலைஞர்தான என்பதை உறுதிப்படுத்தும் சொற்செட்டும் வீரியமும் படிக்கும் போது நம்மைக் கவருகின்றன.

பேச்சுத் தமிழைக் கொச்சையாக்காமல் நாசூக்காகக் கையாளுகிறார்.

இரண்டே வரிகளில் இயற்கைச் சூழ்நிலையைப் படம் பிடித்துக் காட்டிவிடுகிறார்.

இரண்டே வார்த்தைகளில் இதயத்தில் ஓடும் ராகச் சாயைகளை உணர்த்திவிடுகிறார்.

அவர் கதைகளிலிருந்து எடுத்துக்காட்டாக எத்தனையோ இடங்களை எடுத்துக் கூறலாம்.

விந்தனுடைய நடையில் சொற்செட்டோடு ஒரு நையாண்டிக் குரலும் அங்கங்கே ஒலிப்பதைக் கேட்கலாம். அது ஊசி குத்துவது போல் வேண்டிய இடத்தில் நறுக்கென்று குத்துகிறது, தைக்கிறது; சமயத்தில் ஒட்டும் போடுகிறது.

இன்றைக்கு ஓகோகோ என்று கொண்டாடும்படி தூக்கிவிட்டுக் கொண்டிருக்கிற சிலருடைய பாணியும் நடையும் இன்னும் பத்தாண்டுகள் போனால் பல்லை இளிக்கும்படி போய்விடும். இதை எங்கே வேண்டுமானாலும் போய் நம்மால் சொல்ல முடியும். காரணம் அவை இன்றையப் போலி வாழ்க்கையை ஆதாரமாகக் கொண்டு அவற்றைக் கலைப் பொருளாகக் காட்டிக் காசாக்க முற்படுகின்றன; போலித்தனங்களைப் பெருமைப்படுத்துகின்றன.

இன்றைய வாழ்க்கையின் அடிமட்டப் பிரச்னைகளைத் தொட்டுக் காட்டாமல், அவற்றைப் பற்றிய பிரக்ஞையே இல்லாமல் வேறு எதை எதையோ போட்டு மூடிவிட்டு, பம்மாத்துகள் செய்கின்றன.

ஆனால் விந்தன் போன்ற கலைஞர்களின் படைப்புகள் சின்னஞ் சிறியவைகளாக இருந்தாலும் இத்தனை நாட்கள் உயிர்த்

துடிப்போடு வாழ்ந்துவிட்டன. இனியும் வாழும், அடிப்படைப் பிரச்னைகள் அமைதி பெறாதவரை அந்த உயிர்த்துடிப்பு அடங்க வழியே இல்லை.

புதிய கலைஞர்கள் அவர் சென்ற எளிய ஒற்றையடித் தடததில் நடந்து, அதைச் செம்மைப்படுத்துவது அவர்களுக்கும் நல்லது; சமுதாய நன்மைக்கும் வழி அமைத்த கலைச் சிறப்பும் சேரும்.

1982

28

# விந்தனின் ஒரே உரிமை

**- மு. பரமசிவம்**

*நீண்ட நெடுங்காலமாகச் சமூகத்தில் நிலவிவரும் சாதிப்பாகுபாடு, தீண்டாமை போன்ற கொடுமைகளுக்கு இரையாகி அடக்கி ஒடுக்கப்பட்டுக் கிடக்கும் ஏழை எளிய மக்கள், சுதந்திரமாகவும் சுயமரியாதையோடும் வாழ்வதற்கு ஏற்றத்தாழ்வற்ற பொருளாதாரச் சமத்துவ, சமூக அமைப்பே ஏற்புடையது என்கிற எண்ணமுடைய விந்தன், தமது படைப்புகள் அனைத்திலும் அக்கருத்தைப் பரவலாக வெளிப்படுத்தியுள்ளார்.*

*சிறப்பாக 'ஒரே உரிமை' என்கிற சிறுகதையில் தீண்டாமை என்னும் தீயினுக்கு இலக்காக அக்னிப் பிரவேசம் செய்ய ஆற்றல் அற்று, உயிர் விடவும் உரிமையின்றித் தீண்டாமை என்னும் தீயில் தினம் தினம் வெந்து வேதனையை அனுபவித்துக் கொண்டிருக்கும் ஒருவனை அறிமுகப்படுத்தி வாசகனின் அனுதாபத்தைத் தூண்டுகிறார்.*

*ஒரு கிராமத்தில் எச்சில் சோற்றுக்கு நாயுடன் போராடிக் கொண்டிருக்கும் சோலையப்பன் பேரில் அனுதாபம் கொண்ட ஒரு மனிதாபிமானி, அவனுடைய வாழ்க்கையைக் கேட்டறிந்து வருத்தமடைகிறார். மீண்டும் அவன் வயிற்றுச் சோற்றுக்கு நாயுடன் போராடி மனிதன் என்னும் உறவிற்கு இழுக்குத் தேடாவண்ணம் அவனுக்கு வேலை வாயப்பை உண்டாக்கித் தருவதாக வாக்களிக்கிறார்.*

*காந்தியத்தில் நம்பிக்கை கொண்ட அந்த மனிதாபிமானி, சோலையப்பனுக்கு வாக்களித்தபடி கிராமத்துக் கடைவீதியில் சிறிய*

கடை ஒன்றை வாடகைக்கு எடுத்து, பட்டணத்திலிருந்து ரொட்டி, மிட்டாய் போன்றவைகளை வாங்கி வைத்து சோலையப்பன் ரொட்டிக்கடை என்கிற பெயர் பலகையை மாட்டியதோடு அவனுக்கும் புதிய சட்டை தைத்து மாட்டினார்.

நியாயமான விலைப்பட்டியலை எழுதி, கடை முன் தொங்க வைத்தார். கடையைச் சோலையப்பனிடம் ஒப்படைத்து விட்டு, அவன் மனிதனாக வாழ்வதற்கு வழிகாட்டிவிட்ட மனநிறைவுடன் பட்டணம் செல்கிறார்.

சில தினங்களுக்குள்ளாகவே சோலையப்பன் பட்டணத்திற்குக் கடிதம் எழுதி அந்த மனிதாபிமானியை அவசரமாக வரச் செய்கிறான்.

அவசரமாகக் கிராமத்துக்கு வந்தவர் கடையில் எந்தப் பொருளும் விற்பனையாகாமல் வாங்கி வைத்தது வைத்தபடியே இருப்பதைக் கண்டு ஆச்சரியத்துடன், 'ஏன் விற்பனையாகவில்லையா?' என்று கேட்டபோது சோலையப்பன் சொன்னான் :

'என்ன இருந்தாலும் நான் பறையன் பறையன்தானுங்களே? என் கடையிலே யாராச்சும் ரொட்டி வாங்கணும்னா அவங்களும் பறையர்களாத் தானே இருக்கணும்?

'அவங்களுக்குத்தான் கூழுக்கே பஞ்சமாச்சுதுங்களே, அவங்க எங்கே ரொட்டி, கிட்டி வாங்கப் போறாங்க? வந்தா ஒசந்த சாதிக்காரரு தான் வரணும்.

'அவங்க எங்கிட்டே எங்கேயாச்சும் வருவாங்களா? ஆனா, ஒண்ணு மட்டும் சொல்லணுங்க; அந்த மட்டும் அவங்க என் கடைக்கு வராம இருந்ததோடு நின்னாங்களே!

'பறப்பயலுக்கு இங்கே என்னடா ரொட்டிக்கடைன்னு என்னையும் அடியா அடிச்சுப் போட்டு, இந்தக் கடையையும் காலி பண்ணாம இருந்தாங்களே, அதைச் சொல்லுங்கோ!'

சோலையப்பனின் பதில், அவர் மனத்தில் நெருப்பைக் கொட்டியது போன்று எரிச்சலை உண்டாக்கியது. 'ஏன், உனக்கு அதற்குக் கூடவா உரிமையில்லை?' என்றார் அவர்.

'எனக்கு இருப்பது ஒரே உரிமைதானுங்க; தற்கொலை செய்து கொள்ளும் உரிமைதானுங்க அது!' என்றான் சோலையப்பன்

அநத ஒரே உரிமை கூட அவனைப் போன்ற அப்பாவிகளுக்கு இல்லை என்னும் விஷயம் அவனுக்கு எப்படித் தெரியும்? - என்று அவர் வாய் முணுமுணுத்தது; கண்களில் நீர் சுரந்தது

தீண்டாமை எவ்வளவு கொடுமையானது என்பதை நகரத்தில் வாழ்பவர்கள் நன்கு அறிந்திருக்க மாட்டார்கள், அப்படி அறிந்திருந்தாலும், நாகரிகம் என்னும் பெயரால் அதை வெளிப்படுத்தமாட்டார்கள். ஏனெனில் அசல் எது, நகல் எது என்று ஆராய்ந்து பார்க்காமல் எதையும் முற்போக்கு என்கிற போர்வையில் மூடி மறைப்பதே நகரத்தில் வாழும் மக்களின் 'நற்பண்பு' ஆகும்!

படித்தவர்கள் பணக்காரர்களுக்குத் துணையாக இருபபதும், பணக்காரர்கள் படித்தவர்களுக்குப் பாதுகாப்பளிப்பதும் பட்டண நாகரிகமாகும் இவர்களுக்கிடையே அடக்கி ஒடுக்கப்படுபவர்கள் ஏழை எளியவர்களே ஆவார்கள்!

அதனால்தான் 'இந்தியாவின் உயிர் கிராமத்தில் இருக்கிறது!' என்றார் காந்தியடிகள் அவரின் கருத்தை அடியொட்டியே விந்தனும் தம் இலட்சியத்தைப் பரப்புவதற்கு ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுத்தார். முடிவு? கிராமத்தில் காந்தியம் தோற்றதுபோலவே விநதனின் இலட்சியமும் தோற்றது!

அரிஜன் என்பவர்கள் கடவுளின் குழந்தைகள் என்று பரவலாகப் பேசப்பட்ட போதிலும் அந்தக் குழநதைகள் சாதாரண மனிதனாகக் கூட மதிக்கப்படாத காலத்தில், கிராமத்து மக்களால் தீண்டத தகாதவன் என்று ஒதுக்கப்பட்ட சோலையப்பன என்கிற தொழிலாளியின் பேரில் ஒரு மனிதாபிமான அன்பு காட்டி ஆதரித்தது ஏன்?

'நீரோடை நிலங்கிழிக்க நெடுமரங்கள்
நிறைந்து பெருங்காடாக்கப் பாம்புக்கூட்டம்
போராடும் பாழ்நிலத்தை அந்த நாளிற்
புதுக்கியவர் யார் அழகு நகருண்டாக்கி? '

என்று பாவேந்தர் பாரதிதாசன் பாடினாரே அந்த வர்க்கத்தை அடையாளம் காட்டுவதற்கு; ஆனாலும் அந்த மனிதனின் ஆசை நிராசையாகி இலட்சியம் தோற்றுவிட்டது!

தீண்டாமையை முன்வைத்துப பேசப்படும் இக்கதையில், சுற்றிச் சூழ்ந்துள்ள மூடபபழக்க வழக்கஙகளையும் ஒவ்வொரு நிகழவுகளிலும் வெளிப்படுத்துகிறார் ஆசிரியர். சான்றுக்குச சிலவற்றைக் காணலாம் :

ஒருவன் நண்பன் வீட்டில் விருநது சாப்பிட்டு முடிந்த கையோடு எச்சில் இலையை எடுத்தபோது நண்பனின் மனைவி என்ன காரியம் செய்துவிட்டீர்கள்? என்று வருந்துகிறாள். ஏன்?

'அன்னதானம் செய்வதிலுள்ள புணணியமனைத்தும் எச்சில் இலையை எடுத்துப் போடுவதில்தான் அடங்கியிருக்கிறது' என்பது அந்த அம்மாளின் நம்பிக்கை. என்னுடைய செய்கையால் அந்த மகத்தான புண்ணியம் தனககுக் கிடைக்காமல் போய்விட்டதே என்பதில்தான் அந்த அம்மாளுக்கு எவவளவு வருத்தம்!

'உண்டுண் டுறங்குவதே யல்லாது வேறொன்றும் கண்டிலாத அடியார்கள், தங்களுக்கு இயற்கையாகவுள்ள சோம்பேறித்தனத்தால் புண்ணியத்தைச் சாக்காக வைததுக் கொண்டு, எச்சில் இலையை எடுத்துப் போகும் வேலையைக்கூட அன்னதானம் செய்பவர்கள் தலையிலேயே கட்டிவிட்ட தந்திரத்தை அந்த அம்மாள் இநத அணுகுண்டு சகாப்தத்தில்கூட அறியாமலிருந்தது எனக்கு ஆச்சரியமாய்த் தானிருந்தது

ஒரு பிடி சோற்றுக்கு வழியினறிச சோர்ந்து போய்ச் சுருண்டு கிடக்கும் சோலையப்பன்கள் வாழும் கிராமத்தில், வசதி படைத்தவர்கள் வருந்தி வருந்தி விருநது படைக்கும் மனிதர்களின் மனோபாவத்தையும் ஆசிரியர் எடுத்துச் சொல்ல மறக்கவில்லை

அரிஜனங்களுக்கு ஆலயத்தைத் திறந்துவிடறாங்கன்னு தர்மகர்த்தா சொன்னபோது, ஆாவத்தோடு சோலையப்பன் ஆலயத்துக்குப் போகவில்லை. காலங்காலமாகக் கடவுளைக் கண் குளிரக் காண்பதற்குத் தடையாக இருந்து வந்த கதவுகள் திறந்துவிட்டதே என்கிற மகிழ்ச்சியும் அவனுக்கு ஏற்படவில்லை, வாழ்க்கையில் ஒரு முறையாவது ஆண்டவனைச் சந்தித்து தனது குறைகளைச் சொல்லுவதற்கு வாய்ப்பு கிடைத்ததே என்கிற எண்ணமும அவன் மனத்தில் எழவிலலை; மாறாக அவன உளளத்தின் உணர்ச்சிகள் இப்படிததான் வெளிப்பட்டன :

'தர்மகர்த்தா ஐயா' வந்து என்னைக் கூப்பிட்டாரு; எப்பவோ ஒரு நாளைக்கு அபூர்வமாகக் கெடச்ச வேலையை விட்டுட்டு நான் எங்கே கோயிலுக்குப் போறது, சாமி? அந்த வேலையை எனக்கு அப்போ 'சாமி' மாதிரி இருந்தது; தினம் தினம் அதன் தரிசனம் கெடச்சாத்தானே எங்க வயிற்றுக்குக் கஞ்சி? அதாலே இன்னொரு நாளைக்குக் கோயிலைப் பார்த்துக்கலாம்னு நான் போகலே!'

விந்தனின் இத்தகைய அமைதியுமம ஆழமும் நிறைந்த எழுத்தைத்தான் டாக்டர் மு.வ. பாராட்டினார்; மனந்திறந்து பாராட்டினார்.

'விந்தன் எய்யும் சொல்லம்புகள் குறி தவறாமல் பாய்கின்றன. சமூகத்தை அவர் சிற்சில இடங்களில்தான் நேராகத் தாக்குகிறார் பல இடங்களில் அவர் அம்பு தொடுப்பதே இல்லை. இன்றிருக்கும் நிலைமையை எடுத்துக் காட்டி, பேசாமல் கதை சொல்கிறார். அவர் படைக்கும் பாத்திரங்களும் பெரும்பாலும் அப்பாவிகளே. அவர்களுக்குச் சமூகத்தின்மேல் வயிற்றெரிச்சல் தோன்றுவதே இல்லை; ஆனால் நமக்கு மட்டும் வயிற்றெரிச்சல் தோன்றுகிறது; ஆத்திரம் பொங்குகிறது.'

உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த சோலையப்பன், செய்யும் தொழிலே தெய்வம் எனறு நம்பி அநதத் தெய்வத்தின் தரிசனமே தனக்குத் தினம் தினம் கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறான் அதனால்தான ஆண்டவனை வணங்கி வழிடுவதன் மூலம் தன் வாழ்க்கை உயரும் என்று நமபுவதைவிட, உழைபபே உயர்வுக்கு வழி என்கிற உண்மையை உணர்கிறான.

அநத உணர்வை உற்சாகத்தோடு வாழ்ததி வரவேற்கவில்லை கிராமத்து மக்கள்: அவன் உழைப்பை உறிஞ்சி உயர்ந்தவர்கள் அவனை ஒதுககி வைததனர். வாழத் துடித்த அவனைச் சாதிவெறி மிகுந்த சமூகம் அவனைச் சாவதற்கே வழி காட்டியது!

நாடு விடுதலை அடைவதற்கு முன்பே, ஆசிரியர் விந்தன் அவர்களால் எழுதப்பட்ட 'ஒரே உரிமை' என்கிற இக்கதை, இன்னும் நாடு முழுவதும் நாம் காண்கிற கதையாகும்!

காலம் மாறிவிட்டது, கருத்து மாறிவிடடது, மனிதனும் மாறிவிட்டான் என்று கவிதைகள் பாடபபட்ட பேதிலும், இன்றும் தீண்டாமையும் சாதி வெறியும் மாறவில்லை என்பதே உண்மையாகும

'இருட்டறையில் உள்ளதா உலகம் – சாதி
இருக்கின்ற தென்பானும் இருக்கின்றானே...'

*என்று இடி முழக்கம் போல் முழங்கினார் பாவேந்தர்.*

*இத்தகைய உணர்வுகளை உள்ளடக்கியதுதான் விந்தனின் ஒரே உரிமை என்கிற சிறுகதை.*

*விந்தன் எதையும் கற்பனையாக எழுதவில்லை; நாட்டு நடப்புகளையே எழுதியுள்ளார் என்பதற்கு எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது ஒரே உரிமை.*

*விந்தன் கதைகள் அனைத்தும் பத்திரிகைகளில் வெளிவந்த கதைகளே எனினும், படிப்பவர்கள் மனத்தில் சமூக உணர்வுகளைப் பதிய வைக்கக்கூடிய கதைகளாகும்!*

*விந்தன் கதைகளைப் படித்துப் பேராசிரியர் கல்கி சொன்னார். மிகவும் அனுபவித்து சொன்னார்.*

> *'விந்தன் கதைகளைப் படிப்பதென்றாலே எனக்கு எப்போதும் மனதிலே பயம் உண்டாகும்; படித்தால் மனதிலே என்னென்ன விதமான சங்கடங்கள் உண்டாகுமோ, எப்படிப்பட்ட வேதனைகளுக்கு ஆளாக நேருமோ என்றுதான் பயம்!*
>
> *'அவருடைய கதாபாத்திரங்கள் அனுபவிக்கும் கஷ்டங்களுக்கெல்லாம் நாம்தான் காரணமோ என்று எண்ணி எண்ணித் தூக்கமில்லாமல் தவிக்க நேரும்.'*
>
> *'அவ்விதம் வாசகர்களின் மன அமைதியைக் குலைக்கக் கூடிய இயல்பு வாய்ந்த கதைகள்தான் உண்மையான இலக்கியம் எனறு தற்காலத்து இலக்கிய புருஷர்களும் இலக்கிய மேதாவிகளும் சொல்கிறர்கள்*
>
> *'இது உண்மையானால் விந்தனுடைய சிறுகதைகள் உண்மையான இலக்கியம் என்பதில் சிறிதும் ஐயமில்லை!'*
>
> *விந்தனின் சிறுகதைகளின் சிறப்புக்குக் கல்கியின் பாராட்டே சிகரமாகும்!*

தமிழ்ச் சிறுகதை நேற்றும இன்றும - 1992

கல்கி
மு.வ.
கி. சந்திரசேகரன்
கா. அப்பாத்துரையார்
க. கைலாசபதி
கா. சிவத்தம்பி
சாலை இளந்திரையன்
அகிலன்
எஸ். தோத்தாத்ரி
வல்லிக் கண்ணன்
சிட்டி-சிவபாதசுந்தரம்
சு. சமுத்திரம்
தி.க.சி.
தி. தயானந்தன் பிரான்சிஸ்

ஸ்வீட்லின் பிரபாகரன்
மங்கையர்க்கரசி மயில்வாகனன்
திருமதி கஸ்தூரி ராஜா
நீல. பத்மநாபன்
பூவை எஸ்.ஆறுமுகம்
கலைப் பித்தன்
விடுதலை கி. வீரமணி
சா. கந்தசாமி
தமிழ் வயான்.
சாவி
கவி. கா. மு. ஷெரீப்
டி.கே. சீனிவாசன்
ஆர்.வி.
மு. பரமசிவம்